# சமுத்திரம் கட்டுரைகள்



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❋❋❋

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❋❋❋

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சமுத்திரம் கட்டுரைகள்

-சு. சமுத்திரம்

ஏகலைவன் பதிப்பகம்
9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041.
✆: 4917594

நூல் : சமுத்திரம் கட்டுரைகள்
முதற் பதிப்பு : டிசம்பர், 1999.
வடிவம் : "டெமி"
பக்கங்கள் : 187+13= 200
விலை : ரூ. 45-00
உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு :
ஏகலைவன் பதிப்பகம்
9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041.

ஒளி அச்சு:
ஏகலைவன், சென்னை - 41.

அச்சு:
பி.கே. ஆப்செட் பிரஸ்,
சென்னை - 600 013.

குகையாளப் பிறந்தவனே!
என்
குழந்தாய்! எழுந்திரடா!

சாதியான கொடிப்பாம்பு
சதி செய்யும் பாம்பு

தாழக் கிடப்பாரைத்
தற்காப்பதே தர்மம்

மானமாக இருந்தால்
மாளுங்கலி தன்னாலே!

- ஆன்மீகப் போராளி **வைகுண்டசாமி**

## எனது உயில் வரைவு...

வரலாற்றைத் திருப்பிய ஆன்மீகப் போராளியான வைகுண்ட சாமியின் சில கவித்துவ வரிகளை இங்கே திட்டமிட்டே எடுத்துப் போட்டிருக்கிறேன். அன்று அவர் சொன்னது இன்றும் நடைபெற வில்லை என்பதை நினைக்கும்போது, வேதனை ஏற்படுகிறது.

தனிப்பட்ட முறையில் என் வேதனைக்கு எந்தக் காரணமும் இல்லை. ஒரு பாட்டாளி வர்க்கத்தில் - அதுவும் காய்கறிகளை வண்டியில் ஏற்றிச் சென்று, மாடு தள்ளாடும்போது, அந்த மாட்டை விலக்கிவிட்டு தானே ஒரு மாடாகி, வண்டியை ஓட்டிய ஒரு பாட்டாளியின் மகன் நான். இப்போது எனக்கு தனிப்பட்ட முறையில் நிறைவான வாழ்க்கையே. நாடறிந்த எழுத்தாளன். ஆயிரக்கணக்கான தோழர்களின் அன்பைப் பெற்றவன். சொந்த வீட்டோடும், காரோடும், இனிமையான மனைவி, மக்களோடும் எந்தக் குறைவுமின்றி வாழ்கிறவன். ஆனாலும், நான் வேதனைப்படுகிறேன். காரணம்

இளமையிலிருந்தே என் மனதை ஆட்டுவிப்பது சமூகக காரணிகளே. அன்று, 'ஃபோர்த் பாம்' எனப்படும் ஒன்பதாவது வகுப்பு படிக்கும்போது, அப்போதைய அரசியல், சமூக நடவடிக்கைகளால் இந்தத் தமிழகம் எப்படி மனநோயாளி மாநிலமாக மாறக்கூடும் என்று நினைத்து வருந்தினேனோ, அந்த வருத்தம் என் விருப்பதிற்கு விரோதமாக நிறைவேறியிருக்கிறது. அன்று துவங்கிய சினிமாத்தனங்களும், தனிநபர் வழிபாடுகளும், லஞ்ச லாவண்யுங் களும் இன்று, பல்கி பரவி இருக்கிறது.

அன்றாவது, எங்கள் தலைமுறைக்கு ஒரு சமூகப் பிரக்ஞை இருந்தது. இன்றைய இளைய தலைமுறையைப்போல் நாங்கள் கணிப்பொறி வகையறாக்களிலும், பொது அறிவிலும், திறமையான வர்கள் அல்ல. ஆனால், எங்களுக்குத் தாய்மொழியான தமிழில் பிழையின்றி எழுதவரும். தமிழ்வழி கல்வியில் படித்தாலும், கல்லூரிக் காலத்திலேயே ஆங்கிலத்தில் தேறி நன்றாக எழுதவரும். ஆனால், இன்றைக்கு ஒரு பட்டதாரி மாணவருக்கு மூன்று வரி தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுத முடியவில்லை. அன்று சினிமா நடிகர்-நடிகைகள் மானத்தை பெரிதாக நினைத்தார்கள். இன்றோ முதலிரவைவிட வெளிப்படையான காட்சிகளைப் பார்க்கிறோம். தமிழ் செத்துச் செத்து, ஒரு புதுத் தொலைக்காட்சி தமிழ் உருவாகி வருகிறது அந்தக் காலத்து வேசிகள் எப்படி மாடங்களில் நின்று சீவி சிங்காரித்து கை ஆட்டுவார்களோ, அப்படிப்பட்ட அறிவிப்பாளத் தனங்கள் இருக்கின்றன. பெண்ணியம் வலுப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில்கூட, பாவப்பட்ட பெண்கள் அவர்கள் விருப்பத்திற்கு விரோதமாக, தொழில் ரீதியில் கொச்சைப்படுத்தப் படுகிறார்கள்.

எந்த மாநிலத்திலாவது கட்-அவுட்கள் பெரிதாக இருந்தால் அங்கே தமிழர்கள் வசிக்கிறார்கள் என்று அர்த்தம். இங்கே உள்ள தமிழன், அங்கே உள்ள தமிழனையும் சினிமாத்தனமாக்கி விட்டான். எந்த மாநிலத்திலும் நடிகர்களுக்கு சங்கங்கள் வைத்து, தோரணம் கட்டி, கற்பூர ஆராதனை செய்து, அவர்கள் காலடியில் மூளையை அடகு வைக்கும் முட்டாள்தனம் இல்லை. இங்கேதான் இந்த மாநிலம் ஒரு மனநோயாளி பூமியாகிவிட்டது. பெரியார், அண்ணா, கலைஞர் போன்றவர்கள் தத்தம் தகுதிகளால் தனிநபர் வழிபாட்டுக்கு உள்ளானார்கள். ஆனால், இன்றோ தகுதி இல்லாத ஒரு தலைவரைக்கூட, அவர் பேரை சொல்லி அழைக்க முடியாத அளவிற்கு அடிமைத்தனமான தொண்டர்களும், ஆணவத்தனமான தலைவர்களும் தோன்றி விட்டார்கள். குனிந்து விழுந்தால் இந்த ஆணவக்காரர்களுக்கு அல்லது காரிகளுக்கு கோபம் வரும் என்று அப்படியே தொப்பென்று விழுகின்றவர்களும், நமது பிரதிநிதிகளாக பல்வேறு அவைகளில் இருக்கிறார்கள். அன்று நான் கண்ட விபரீத நிலைமை, இப்போது விபத்தாகியிருக்கிறது. எந்த மண்ணை நேசிக்கிறேனோ அந்த மண்ணில் துகள்கள் கண்ணை உறுத்துகின்றன.

மேலே குறிப்பிட்ட சங்கதிகளிலிருந்து, நமது தமிழனை மீட்டு, பெரியவர் என்று வியக்காமலும், சிறியவர் என்று இகழாமலும் இருக்கவேண்டுமென்று நமது முன்னோர்களான கணியன் பூங்குன்றனும், வைகுண்டர், வள்ளலார் போன்றவர்களும் அறிவுறுத்தியதை, செயலாக்க வேண்டிய காலக்கட்டம் வந்துவிட்டதை காட்டுவதற்கே இந்த கட்டுரைத் தொகுப்பு. இந்தத் தொகுப்பு, பல தோழர்கள், கண் துஞ்சாது மெய்வருத்தம் பாராது எழுதும் ஆய்வுக் கட்டுரைகள் மாதிரியல்ல. சாமான்யர்களுக்காக ஒரு சாமான்யன் மேற்கொண்ட கருத்துப் பகிர்வே இது.

எனவே, இன்றைய தமிழனை மீட்டு நாளைய நல்லதோர், வல்லதோர் தாயகத் தமிழனை உருவாக்க இப்போதே முயல வேண்டும். இல்லையானால் எதிர்காலத்தில் தமிழகம் முழுவதும் குண்டர்களின் குண்டு கலாச்சாரத்திற்கு பலியாகலாம். இதற்கு ஒரு கலாச்சார புரட்சி தேவைப்படுகிறது. இல்லையானால் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தாயகத் தமிழனும், தமிழும் காணாமல் போய்விடுவார்கள்.

இதையே, வாழ்க்கையின் மாலைப் பொழுதில் உள்ள இந்த தாயகத் தமிழ்ச் சமுதாயத்தின் தொண்டனாக கருதும் நான், இன்றைய இளைய தலைமுறைக்கு ஒரு உயிலின் வரைவுபோல் எழுதி முடிக்கிறேன்.

எனது கட்டுரைகளை பிரசுரித்த-பிரசுரிக்கும் அத்தனை பத்திரிகைகளுக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

தோழமையுடன்,

சு. சமுத்திரம்.

# ஏகலைவன் வெளியீடுகள்

## சிறுகதைத் தொகுப்புகள்

1. ஒரு மாமரமும்,
 மரங்கொத்திப் பறவைகளும் ரூ. 40-00
2. கோரைப்புற்கள் ரூ. 35-00
3. ஈச்சம்பாய் ரூ. 35-00
4. ஆகாயமும் பூமியுமாய்... ரூ. 40-00
5. சிக்கிமுக்கிக் கற்கள் ரூ. 35-00

## நாவல்கள்

1. மூட்டம் ரூ. 30-00
2. பாலைப்புறா ரூ. 75-00

## கட்டுரைத் தொகுப்புகள்

1. எனது கதைகளின் கதைகள் ரூ. 45-00
2. சமுத்திரம் கட்டுரைகள் ரூ. 45-00
3. சு. சமுத்திரத்தின் சிறுகதை
 இயக்கம் (முனைவர் நளினிதேவி) ரூ. 35-00

## கிடைக்கும் இதரப் பதிப்பகங்கள்

**மணிவாசகர் பதிப்பகம்,**
8/7, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை - 600 108

**கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் (CLS)**
பார்க் டவுன், சென்னை - 600 003

**வானதி பதிப்பகம்,**
13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17

**விஜயா பதிப்பகம்,**
20, ராஜவீதி, கோவை - 641 001.

# சிப்பிகள்

1. ஆன்மிகப் போராளி வைகுண்டசாமி ........ 1
2. எனது முதல் படைப்பு ........ 9
3. எழுத்தாணி ஊர்வலம் ........ 14
4. உயிர்க்கொல்லி விளம்பரங்கள் ........ 19
5. வரலாற்றுப் பின்னணியில் பேராசிரியர் ........ 25
6. சீர்வரிசை முகமூடிகள் ........ 29
7. படைப்பாளியும் தாய்மொழியும் ........ 35
8. செல்லரிக்கும் கரையான்கள் ........ 41
9. மிளகாய்ச் சாதமும், மூங்கில் கம்புகளும் ........ 48
10. திரைப்பட அபத்தங்களும், ஆபத்துக்களும் ........ 55
11. போராளித் துறவி சாலய்யார்... ........ 66
12. அரவாணிகள் ........ 73
13. வீட்டைக் கட்டிப் பார் ........ 80
14. ஒரு மனநோய்ச் சிறுவனுக்காக... ........ 88
15. பெரியவரும், தோழரும் ........ 93
16. காரச் சுவையான கலந்துரையாடல் ........ 98
17. பாரதி என்ற மனிதன் ........ 104
18. அவ்வையாரான அழகிய நாயகி அம்மாள் ........ 110
19. முகடுகளிலும், அடிவாரங்களிலும் ........ 115
20. ஏட்டுச்சுரைக்காய் தீர்ப்புகள் ........ 122
21. வேரில் பழுத்த பலா ........ 128
22. தாழ்த்தப்பட்ட தமிழிசை ........ 147
23. உலகம்மை-என் அம்மை ........ 153
24. பதிவு பெறாத படைப்பாளிகள் ........ 162
25. திராவிட இயக்கப் படைப்பாளிகள் ........ 168
26. நான் கண்ட காமராசர்-அண்ணா-பெரியார் ........ 179

## ஆன்மீகப் போராளி

# வைகுண்டசாமி

இந்தியா முழுவதும் 80 சதவீத மக்கள் தீண்டாமை, தோன்றாமை, காணாமை போன்ற சாதியத் தீமைகளில் முடக்கப்பட்டிருந்த 18 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம். அண்ணல் அம்பேத்கார் பின்னர் குறிப்பிட்டதுபோல், சாதியும் - வர்க்கமும் ஒன்றான கொடுங் காலம். இந்தக் கொடுமைகளின் உச்சமாக விளங்கியது தென் திருவாங்கூர் சமஸ்தானம். இந்த உச்சத்தின் மையமாக கெட்டுப் போனது, இந்த சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்த கன்னியா குமரி. இந்தப் பகுதியில் இரணியல் போன்ற இடங்களில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் தாய் வேறு, சேய்வேறாய் அடிமைகளாக விற்கப்பட்டார்கள். நம்பூதிரி, நாயர்கள் போன்றோர் சொக்கத் தங்கத்திற்கு இணையான சுவர்னர்' என்ற மேட்டுக்குடியாகவும், வைகுண்டரின் 'அகிலத் திரட்டு அம்மானை' குறிப்பிட்டதுபோல், 'சாணான், இடையன், வணிகன், துலுக்கப் பட்டர், தோல் வணியன், சாதி வணிகன், பறையன், கம்மாளன், ஈழன், கருமறவன், பரவன், கவுண்டன்,

**அவர்ணர்கள் என்று இழிவாய் அழைக்கப்பட்ட பதினெட்டு சாதியினர், தோளில் துண்டு போடுவதற்கோ, காலணி அணியவோ, ஓட்டு வீடுகளைக் கட்டவோ, பெண்கள் தோளில் மாராப்பு போடவோ, தடை செய்யப்பட்ட காலத்தில்-**

**இவர்களுக்கு 'குகையாளப் பிறந்த என் குழந்தாய் எழுந்திருடா' என்று அத்தனை பேருக்கும் தலைப்பாகை கட்டி விட்டவர். 'தாழக்கிடப் போரை தற்காப்பதே தர்மம்' என்று முழங்கியவர். வள்ளலாருக்கு முன்பே அன்புக் கொடி கண்டவர்.**

சக்கிலியர் முதலிய பதினெட்டு சாதிகள் அவர்னர்கள் என்றும் அட்டவணைப் படுத்தப்பட்டிருந்தது.

இந்த இரண்டாவது வகை மக்களான அவர்னர்கள், முழங்காலுக்குக் கீழே துணி உடுத்தவோ, காலணி அணியவோ, ஓடு வேய்ந்த வீடுகளைக் கட்டவோ, குடை பிடிக்கவோ கூடாது. பள்ளிகளிலும், நீதி மன்றங்களிலும், ஆலயங்களிலும் இவர்களுக்கு முழு அடைப்பு. இவர்கள் பசுமாடு வளர்க்க லாகாது. சுவர்னர்களும், அரசாங்கமும் ஏவும் எந்த வேலையையும் கூலி இல்லாமலே செய்து முடிக்க வேண்டும். மேட்டுக் குடியினரிடம் 'தூங்கப் போகிறேன்' என்று சொல்லக் கூடாது. 'தரையில் விழப்போகிறேன்' என்றே சொல்ல வேண்டும். இந்தக் கொடுமைகளுக்கும் கொடுமையாக இவர்களது பெண்கள் இடுப்புக்கு மேலே எந்த ஆடையும் அணியலாகாது. இடுப்பிலோ செப்புக்குடம் ஏந்தலாகாது. எந்த நகையும் அணியக் கூடாது. இவை போதாது என்று இவர்கள் தாலிக்கு வரி, கையிலுள்ள தடிக்கு வரி, அரிவாளுக்கு வரி, தலைவரி, தாவர வரி, பெண்கள் மார்பகம் துளிர்த்தால் அதற்கும் வரி என்று வரிவரியாக வதைக்கப்பட்டார்கள். இந்த விதிகளை மீறுகிற ஒரு அவர்னரை, எந்த சுவர்னரும் வெட்டிக் கொல்லலாம்.

இத்தகையக் காலக் கட்டத்தில் எளிய குடும்பத்தில் பிறந்து, பனையேறித் தொழிலாளியாய் வாழ்க்கையைத் துவக்கிய ஒரு ஆன்மீகப் போராளி சுவர்னர்களான இந்தப் பதினெட்டு சாதி மக்களின் ஆண்களுக்கு தலைப்பாகை கட்டி விடுகிறார். பெண்களை தோள் சீலை அணியச் சொல்கிறார். இவர்களிடம் சாதி என்பது கொடிப்பாம்பு என்றும், 'எல்லோர்க்கும் **கொடிப்பாம்பு இருக்குதப்பா சத்ருவாய்... முச்சந்திக்குள் இருந்த பாம்பு உச்சம் பெற்று வருகுதய்யா...'** என்று அப்போதே எச்சரிக்கிறார். அனைத்து சாதி மக்களையும் தம் மக்கள் என்கிறார். கூனிக் குறுகிக் கிடந்த இந்த மக்களை **'குகையாளப் பிறந்த என் குழந்தாய்! எழுந்திரிடா!'** என்கிறார். 'அவனவன் செய்த முதலை அவனவன் வைக்க வேண்டும் - அதாவது சமஸ்தானத்துக்கு வரி கொடுக்கலாகாது' என்று சூளுரைக்கிறார். கும்பினி ஆட்சிக்கார வெள்ளையர்களை 'வெண்நீசன்' என்றும், திருவாங்கூர் மன்னனை 'கலிநீசன் - அனந்த நீசன்' என்றும் பிரகடனப்படுத்துகிறார். தாழக் கிடப்போரை தற்காப்பாதே தர்மம் என்றும் முழங்குகிறார். தன்னைச் சுற்றி அத்தனை அவர்ன சாதிகளையும் ஈர்க்கிறார். இவர்தான், வைகுண்ட சாமி என்று பின்னரும், முத்துக்குட்டி சாமி என்று முன்னரும் அழைக்கப்பட்ட மெய்யான வீரத் துறவி. இப்படிப்பட்ட போராளியைப் பற்றி எத்தனைப் பேருக்குத் தெரியும்? இதனால் இழப்பு அவருக்கா, இந்த சமுதாயத்திற்கா?

வரலாறு என்பது வெற்றி பெற்றவர்களால் எழுதப்படுகிறது என்றான் மக்கள் எதிரியாக விளங்கிய இட்லர். வரலாற்றில் உண்மையை மறைப்பதும் ஒருவிதப் பொய்யே என்றார் மனித நேயப் படைப்பாளியான லியோ டால்ஸ்டாய். இந்த இரண்டு எதிர்முனைகளுக்கும் இடையே மெய்யும், மெய்கலந்த பொய்யும், மெய்தவிர்த்த பொய்யுமாய் எழுதப்பட்டதே வரலாறு. இதனால்தான், ஜான் கந்தர், அண்ணல் காந்தியை 'நழுவும் ஆசாமி' என்றான். 1857ல் கல்கத்தாவில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம், முதல் சுதந்திரப் போராக வரலாற்றுச் சிறப்பு பெற்று, அதற்கு முன்பே வேலூரில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் இருட்டடிப்பு செய்யப்பட்டது. விடுதலைப் போர், வங்காள சந்நியாசிகளால் துவக்கப்பட்டது என்பது பொய் கலந்த மெய்யென்றால், இவர்களுக்கு முன்பே வாழ்ந்த வைகுண்ட சாமியைப் பற்றிய மௌனம் மெய்தவிர்த்த பொய்யாகும்.

இத்தகைய வரலாற்றுப் புதை மண்ணிலிருந்து வைகுண்ட சாமி போன்ற ஆன்மீகப் போராளிகளை மீட்டெடுத்து, சாதிக்குப் பலியாகும் இன்றைய சராசரித் தமிழனிடம் எடுத்துச் செல்ல வேண்டியது இப்போதையக் சட்டாயக் கடமையாகும். ஒரு லட்சியப் போராட்டத்திற்கான வரலாற்றில் இறுதிக் கட்டத்தில் வெல்கிறவர்களே அறியப்படுகிறார்கள். இதே லட்சியத்திற்காக, ஆரம்பத்தில் போராடியவர்கள் வரலாற்று வெள்ளத்தில் மூழ்கிப் போகிறார்கள். அப்படிப்பட்ட வெள்ளமும் இதற்கு ஏதுவாக, அதன் போக்கில் விடப்படாமல் விருப்பு, வெறுப்பு என்ற அணைகளால் கட்டப்பட்டு தேக்கப்படுகிறது.

இதனால்தான் ஒரு அம்பேத்காரை தெரியும் நமக்கு, ஒரு அயோத்தி தாசரையோ, இரட்டை மலை சீனிவாசனையோ அதிகம் தெரியாது. அண்ணல் காந்தியைத் தெரிந்த அளவிற்கு, ஒரு திலகரையோ, ஒரு வ.உ.சி.யையோ தெரியாது. பகத்சிங்கைத் தெரிந்த அளவிற்கு ஒரு வாஞ்சி நாதனைத் தெரியாது. திருத்தணிப் போராட்டத்தை நடத்திய மா.பொ.சிவஞானம் அவர்களைத் தெரியும். ஆனால் அவருக்கு முன்பே திருத்தணி தமிழகத்தோடு சேர வேண்டும் என்று வீடு வீடாக இயக்கம் நடத்திய மங்கலம் கிழாரைப் பற்றி எத்தனைப் பேருக்குத் தெரியும்? இது வரலாற்றுக் குற்றத்தோடு வரலாற்றைச் சரியாகப் புரிந்துகொள்ளாத குற்றமும் ஆகும். இந்தக் குற்றங்களால் மக்களுக்கு பரந்த அளவில் எடுத்துச் செல்ல முடியாதபடி முடக்கப்பட்ட போராளிகளில் வைகுண்டரும் ஒருவர்.

### சாமித்தோப்பு சாமி

கன்னியாகுமரியில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ள பூவண்டன் தோப்பில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவர்

இப்போது வைகுண்ட சாமி என்று பயபக்தியோடு கூறப்படும், அழைக்கப்படும் முத்துக்குட்டி சாமி. ஆரம்பத்தில் பெற்றோர்கள் இவருக்கு 'முடி சூடிய பெருமாள்' என்றுதான் பெயரிட்டார்கள். ஆனால் சுவர்னர்களும், அரசுப் பிரதிநிதிகளும் எளிய சாதியினர் இந்தப் பெயரை 'வைக்கலாகாது என்று இவரது பெற்றோரை அச்சுறுத்தவே, முடி சூடிய பெருமாள், 'முத்துக்குட்டி' ஆனார். 1809ஆம் ஆண்டில் பிறந்த இவர், இருபத்தி நான்கு வயது வரை ஒரு பனையேறித் தொழிலாளியாகவோ அல்லது சிறு விவசாயியாகவோ வாழ்ந்திருக்கிறார். இதற்குப் பிறகு சரும நோயால் அவதிப்பட்டு பெற்றோரால் திருச்செந்தூர் கொண்டு போகப்பட்டு, கடலுக்குள் காணாமல் போனதாகக் கூறப்படுகிறது. மூன்று நாட்களுக்குப்பிறகு கடலில் இருந்து 'விஞ்சை' (ஞானம்) பெற்று மீண்டு, பூவண்டன் தோப்பிற்குத் திரும்பியதாகக் கூறப்படுகிறது. அங்கே, கலிநீசன் ஆட்சி முடிய இரண்டாண்டுகள், பெண்ணடிமை ஒழிய இரண்டாண்டுகள், செங்கோலாட்சி மலர இரண்டாண்டுகள் என்று ஆறாண்டு காலம் தவமிருந்திருக்கிறார்.

### சிறையும்-எதிர்வினையும்

அந்தத் தவக் காலத்திலேயே தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட சாதி மக்கள் இவரை தரிசித்து, தலையில் தலைப்பாகையோடும், தோளில் சேலையோடும் புது மனிதர்களாய் மாறியிருக்கிறார்கள். இதனால் வெகுண்டெழுந்த மேட்டுக்குடியினரின் தூண்டுதலால் சுவாதித் திருநாள் மன்னன் 1836ஆம் ஆண்டு இவரைப் பிடித்து, திருவனந்தபுரத்திற்கு அருகே உள்ள சிங்காரத் தோப்பில் சிறை வைத்து, சித்தரவதை செய்வித்திருக்கிறான். இறுதியில் ஒரு கூண்டில் பசியோடு இருந்த புலியோடு இவரைத் தள்ளியதாகவும், ஆனால் முத்துக்குட்டி சாமியிடம் அந்தப் புலி மண்டியிட்டதாகவும் கூறப்படுகிறது. மன்னன் பயந்துபோய், இவரை நூற்றுப்பத்துநாள் சிறைவாசத்திற்குப் பிறகு சொந்த சாதி அல்லாத எந்தச் சாதியோடும் சேரலாகாது என்ற நிபந்தனையோடு விடுதலை செய்ததாகவும் அறியப்படுகிறது. இதுமுதல் முத்துக்குட்டி, **"வைகுண்ட சாமியானார்"**

சொந்த ஊருக்கு மீண்ட வைகுண்டர் மேலும் வேகமாகத்தான் செயல்பட்டிருக்கிறார். மன்னனின் அறிவுரைக்கு எதிர் வினையாகவே இயங்கி இருக்கிறார். மதத்தை அறிவுப் பூர்வமாகவும், ஞான ஒளியாகவும் எடுத்துக்கொண்ட மேட்டுக்குடி மக்கள், அதே மதத்தை இந்த தாழ்த்தப்பட்ட- பிற்படுத்தப் பட்டவர்களுக்கு உணர்வு மயமாக ஆக்கி இருப்பதை புரிந்து கொண்ட வைகுண்டர், ஆடுகோழி பலியிடுவது ஆயனுக்குத்

தேவையில்லை என்றும் பரம்பொருளுக்கு காணிக்கையோ, காவடியோ அவசியமில்லை என்றும் அறிவுறுத்தியிருக்கிறார். கடவுளை வேட்டையாடும் மாடன்களாகவும், பயமுறுத்தும் பேச்சியம்மாக்களாகவும் பார்த்துக் கொண்டிருந்த தாழக்கிடந்த மக்களை அதே மதத்தை மேட்டுக்குடியினர் போல் அறிவுப் பூர்வமாக அணுகச் செய்திருக்கிறார். பெரும்பாலான கிராமங்களில் நிழல் தாங்கல்கள் என்ற சிறு சிறு கோவில்களை நிறுவி, அங்கே தீபமேற்றி அந்தத் தீபத்தின் அருவ வழிபாட்டில் இந்த மக்களை ஈடுபடுத்தியிருக்கிறார். மேட்டுக்குடியினரே அரைகுறை ஆடையோடு ஆலயம் சென்று வழிபட்டபோது, இந்த ஏழை எளிய மக்கள் தலைப்பாகை கட்டி கோவிலுக்குள் சென்றது வைகுண்டரின் மிகப்பெரிய ஆன்மீகப் புரட்சியாகும். அதோடு இவர்களை ஒரு கொடியின் கீழ் கொண்டு வருவதற்காக காவி நிறத்தில் தீபம் பொறித்த அன்புக் கொடி ஒன்றையும் ஆக்கியிருக்கிறார். இவரது முறையில் வழிபடும் மக்கள், **“அன்புக் கொடி மக்கள்”** என்று இப்போதும் அழைக்கப்படுகிறார்கள். சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவி சாதிபேதமற்ற சமயக் கொடியை ஏற்றுவித்த வள்ளலாருக்கு முன்பே, வைகுண்டர், இப்படி ஒரு கொடியை உருவாக்கியது இன்றைய ஆன்மீகவாதிகளுக்கே தெரியாது.

**துவையல் பந்தி-முத்திரிக் கிணறு...**

மேட்டுக்குடியினர், கீழ்க் குடியினரை அமுக்காக்கியும், அந்த அமுக்கிலேயே ஆழ்த்தியும் கைகொட்டி நகைத்த காலத்தில் தூய்மையின் அவசியத்தை உணர்ந்த வைகுண்டர், துவையல் பந்தி என்ற ஒரு செயல் முறைமையை கொண்டு வந்திருக்கிறார். இதன்படி அத்தனை சாதியினரும், கடலில் நீராடி, மதியம் பச்சரிசி, பயிறு சாதத்துடன் ஒன்றாய் உண்டு-ஒன்றாய் உறவாடி இருக்கிறார்கள். இந்தப் பந்தி, வையம்பதி என்ற இடத்தில் வைகுண்டரின் தலைமையில் ஆறு மாத காலம் நடந்திருக்கிறது. இதனால் வெகுண்ட மேட்டுக் குடியினர் இந்தப் பந்தியில் கலந்து கொண்ட மக்களைச் சிதறடித்ததாகவும், இதையும் மீறி இந்தத் துவையல் பந்தி பல இடங்களில் நடந்துள்ளதாகவும் தெரிகிறது.

இன்று சமபந்தி போஜனம் தொலைக்காட்சி, பத்திரிகைகள் சாட்சியாக நடத்தப்படுகிறது. இதற்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே, இதைவிடச் சிறப்பான முத்திரிக் கிணறு என்ற இன்னொரு செயல்பாட்டு முறைமையை வைகுண்டர் கொண்டு வந்திருக்கிறார். இதன்படி, இவர் தவமிருந்த தாமரைப்பதிக்கு அருகே, ஒரு கிணறு வெட்டப் பட்டுள்ளது. ஊர்க் கிணறுகளில் எட்டிப் பார்க்கக்கூட உரிமை

இல்லாத அத்தனை எளிய மக்களும் இந்தக் கோவில் குளத்தில் குளித்து விட்டு, வைகுண்டரின் வேண்டுகோளின்படி கொண்டுவந்த அரிசி, பருப்பு வகையறாக்களை சமைத்து இவரது முன்னிலையில் ஒன்றாக உண்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.

இப்போது, தமிழக அரசு சாதியச் சண்டைகளை தீர்ப்பதற்கு சமத்துவபுரங்களை அமைத்து வருகிறது. கலைஞர் இதற்கு பெருமுயற்சி எடுக்கிறார். ஆனால், எங்கேயோ ஒரு மூலையில் ஒரு சாமானியனாய்ப் பிறந்த வைகுண்டரோ அனைத்து அவர்னர் சாதிகளும் ஒன்றாக ஒரே இடத்தில் வீடுகட்டி வாழ்வதற்கு வழி செய்திருக்கிறார். ஓடு வேய்ந்த வீடுகளை எளிய சாதியினர் கட்டக்கூடாது என்று மேட்டுக் குடியினரும், அவர்களுக்காகவே ஆட்சி செய்த அரசும் கொடிய சட்டத்தைப் போட்டிருந்தபோது, வைகுண்டர் இதற்கு சவால் இடுவதுபோல் முட்டம்பதி என்ற இடத்தில் அனைத்துச் சாதிகளையும் கொண்ட ஒரு குல குடியிருப்பை நிறுவியிருக்கிறார். ஆனாலும் யாது காரணத்தாலோ இந்த குடியிருப்புக்கள் பரவலாகவில்லை.

### தோள் சீலைப் போராட்டம்

எல்லாவற்றிற்கும் மேலாக எளிய சாதிப் பெண்கள் ஆடு மாடுகளைப்போல் இடுப்புக்கு மேல் எதுவுமின்றி அலைந்து கொண்டிருந்த காலத்தில் - அதுவும் அண்மையில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மேலாடை போட்டு வாழ்ந்த பெண்கள்கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்யாணமாகி விட்டால் மேலாடையை எடுத்துவிட வேண்டும் என்ற விதிவிலக்கில்லாத கொடூரச் சட்டம் இருந்தபோது, இத்தகையப் பெண்களுக்கு சுய மரியாதையைக் கொடுத்தவர் வைகுண்டர். இவருக்கு முன்பே மீட்பாதிரியார் ' போன்ற கிறிஸ்தவ மத போதகர்கள் அந்த மதத்தில் சேர்ந்த பெண்களை குப்பாயம் போட வைத்து, அதனால் எழுந்த தோள் சீலை போராட்டத்திற்கு தலைமை தாங்கியிருக்கிறார்கள்.

மூன்று கட்டங்களில் முப்பத்தேழு ஆண்டுகள் நடந்த கன்னியாகுமரி பகுதி பெண்களின் தோள் சீலை போராட்டத்தின் இறுதிக் கட்டம் அழுத்தம் பெறவும், எளிய சாதி இந்துப் பெண்கள் அதில் ஈடுபடுவதற்கும் வைகுண்டரின் தாக்கம் முக்கிய காரணம். நமது பெண்ணியவாதிகளுக்கும், பெண்ணிய இயக்கங்களுக்கும் தெரியாத இந்த தோள்சீலை போராட்டம் சிவகங்கை வரை வந்துள்ளது. எளிய சாதியைச் சேர்ந்த ஏராளமான ஆடவர்களும் பெண்களும் இதற்காக உயிர்ப் பலியானார்கள். நீதி மன்றங்கள்கூட இந்த தோள்சீலை

போராட்டத்திற்கு எதிராக தீர்ப்பளித்தபோது, கிறிஸ்தவ பாதிரிமார்களும், வைகுண்டரும் இந்தப் பெண்களுக்கு உடலுக்கு மட்டுமல்ல, உள்ளத்திற்கும் ஒரு மரியாதை கொடுத்திருக்கிறார்கள்.

வைகுண்டர் குறித்த புராணப் பொய்களையும் செவி வழிக் கதைகளையும் புறந்தள்ளி விட்டுப் பார்க்கும்போதுகூட, அவர் இப்போதைய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அப்போதைய அவர்னர்களுக்கு ஒரு சின்னமாக விளங்கி இருக்கிறார். இவரை, திருவாங்கூர் அரசு சிறைபிடித்தபோது வைகுண்டரைப் பகைக்க வேண்டாம் என்று சுவாதித் திருநாள் மன்னரிடம், வாதாடிப் போராடி, அதனாலேயே அந்த மன்னனால் சிறையில் வைக்கப்பட்டவர் பூவண்டன் என்ற இடையர் சாதியைச் சேர்ந்த பெருமான். இவர் அரசில் உயர்ந்த பதவி வ்கித்தவர். இதேபோல் தாமரைப் பதியில் 96 வளைவுகளைக் கொண்ட தத்துவக் கொட்டகையை அமைத்துக் கொடுத்தவர் முத்துக்குட்டி ஆசாரி என்பவர். 'சாரையோடு' வண்ணார்குல பிச்சையம்மாள், 'வடலீஸ்வரம்' வெங்கடாச்சல அய்யர், 'தென் தாமரைக்குளம்' கிறிஸ்தவரான அருமைநாயகம்', 'தொண்டைமான்' ராமலிங்கம், 'மணவாளன் குறிச்சி' கடவுள் செட்டியார், 'தச்சநல்லூர்' வெள்ளாளர் அழகப்பப் பிள்ளை, 'அரியநந்தல்' வீரய்யாத் தேவர், 'குறும்பர்' இனத்தின் குபேரன் போன்ற அத்தனை சாதி மாந்தர்களும் வைகுண்டரின் ஒரே சாதியில் இரண்டறக் கலந்த சமகாலத்து தொண்டர்கள்.

அருளாளர்களில் இரண்டு வகை உண்டு. முதலாவது சாதியை மறுத்தவர்கள். இரண்டாவது தன்னளவில் சாதியைத் தாண்டியவர்கள். பொதுவாக நமது அருளாளர்களான சங்காராச்சாரியார்களும், சாமி தயானந்த சரஸ்வதியும், இராம கிருஷ்ண பரமஹம்சரும், ரமண ரிஷியும் தங்கள் அளவில் சாதிகளைத் தாண்டியவர்கள். ஆனால் வைகுண்டரும், வள்ளலாரும் சாதியை மறுத்தவர்கள். அதற்காக பாடுபட்டவர்கள். இதனால் வைகுண்டர் சிறை வைக்கப்பட்டார். அப்போதைய மதவாதிகளால் கல்லடியும், சொல்லடியும் பட்டார். 'சாதி சமயம் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி' என்று செம்மாந்து சொன்ன வள்ளலாரை, தீவிர சைவர்கள் இன்று கூட ஏற்பதில்லை. இவரது திருவருட்பாவை மருட்பா என்று அறிவிக்கக் கோரி கடலூர் நீதிமன்றம் சென்றவர் யாழ்பாணத்துத் தமிழறிஞர் ஆறுமுக நாவலர்.

இந்த இரண்டு பெரிய ஆன்மீகப் போராளிகளும் இன்றைய சாதித் தமிழனுக்கு தேவைப்படுகிறது. இவர்களோடு, மேட்டுக்குடியான பாளைய அரசை பாஞ்சாலங்குறிச்சியில்

தாற்காலிகமாக மீட்டெடுத்த ஊமைத் துரைக்காக படையோடு சென்று கோட்டையில் ஏறி, அந்தக் கோட்டையைச் சுற்றி வெள்ளையர்கள் வைத்த வெடி மருந்தில் தனது உடம்பு முழுவதும் வெண்ணெயைத் தடவி வெடி மருந்துகளின் விபரீதங்களை தவிர்த்து உயிர்த் தியாகம் செய்த ஆதி திராவிட **வீரன் சுந்தரலிங்கத்தையும்**, சித்தர் மரபு வழியில் வந்த சாதிய மறுப்பாளர் **குணங்குடி மஸ்தான்**, சாஸ்திரக் கும்மி எழுதிய **வேதநாயகம் சாஸ்திரி**, தோள் சீலைப் போராட்டத்தை துவக்கிய **மீட் பாதிரியார்** சாதிப் பேரால் கையெழுத்துப் போட மாட்டேன் என்று பிரகடனப் படுத்திய தேவர் இனத்தைச் சேர்ந்த, அந்தக்காலத்து மதுரை ஜில்லா போர்டு தலைவரான **ராமச்சந்திரனாரையும்**, **தந்தை பெரியாரை** எடுத்துச் செல்வதுபோல் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

எத்தனையோ சிலைகளுக்கும், நினைவு மண்டபங்களுக்கும் கோடி கோடியாய் பணம் கொட்டும் அரசு, இந்தப் போராளிகளை குறும்படங்கள், கூத்துக்கள், வில்லுப்பாட்டு, வீதி நாடகம், நாட்டுப்புற இசை போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலம் சாதாரண மக்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும். ஆமாம் அறிமுகம் தான். ஆழப்படுத்தல் அல்ல. காரணம், இன்று சாதியின் பேரால் சண்டையிடும் 'தலைவாங்கி'த் தமிழனுக்கு இவர்களைப் பற்றித் தெரியாது. இது, இவனுடைய குற்றமும் அல்ல. இவர்களைத் தெரியப்படுத்தாத வரலாற்றின் குற்றம். நமது குற்றம். அரசின் குற்றம். இந்த முப்பெருங் குற்றங்களை நீக்குவதோடு, இதற்கு எதிர் வினையாய் ஆக்க ரீதியான செயல்களை அனைவரும் மேற்கொண்டால் சாதிச் சண்டைகள் போகிறதோ இல்லையோ குறைந்தது குறையும்.

இதன் முதல் கட்டமாக தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட **வள்ளலார் மனித நேயப் பேரவை** என்ற ஒரு அமைப்பு அண்மையில் சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் மூலம் வள்ளலாரை மட்டுமல்லாது, அவருக்கு முன்னால் வாழ்ந்த வைகுண்டர் முதல் பின்னால் வாழ்ந்த தந்தை பெரியார் வரை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே இதன் நோக்கம். என்றாலும், இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் எல்லாம் வல்ல அரசிற்கே பெரும் பொறுப்பு உள்ளது.

**தினமணி நாளிதழ்-1999**
(தலையங்க பக்கக் கட்டுரை)

# எனது முதல் படைப்பு

என் முதல் படைப்பு எது என்று கண்டுபிடிப்பது எனக்கே, சற்று சிரமமாக இருந்தது. பத்து வயதில், நானே எழுதி, நானே பாடி, நானே கேட்ட வில்லுப் பாட்டைச் சொல்வதா? அல்லது எஸ்.எஸ்.எல்.சி. படித்துக் கொண்டிருந்தபோது, நான் எழுதி, ஆணே பெண்வேடம் போட்டு, அரங்கம் ஏறிய நாடகத்தைச் சொல்வதா? அல்லது உயர்நிலைப் பள்ளி மலர்களிலும், கல்லூரி மலர்களிலும் எழுதிய கவிதை களைச் சொல்வதா? எது முதல் படைப்பு?

இந்த சிந்தனை, படைப்பு என்றால் என்ன? என்று இன்னொரு எண்ணத்திற்கு என்னை இட்டுச் சென்றது. பாடுபவை எல்லாம் எப்படிப் பாட்டாகாதோ, அப்படி எழுது பவை எல்லாம் எழுத்தாகாது. படைப்பு என்று வரும்போது, குறைந்தபட்சம் அது படைப்பாளி யிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும். அந்த தாக்கம் வாசகர்களிடமும் தாவ வேண்டும். எழுத்தாளன் எந்த உணர்வோடு எழுதுகின்றானோ அந்த உணர்வு படிப்பவனிடமும்

**இந்தக் கட்டுரையை சுருக்கி தினமணிகதிரில் முதல் பிரசவம் என்ற தலைப்பு வரிசையில் எழுதி இருந்தேன். முதல்வர் கலைஞருக்கு ஒரு அழைப்பு இதழை கொடுக்கச் சென்ற போது-**

**'வாருங்கள் அங்கே கல்யாணம், இங்கே கலாட்டா' என்று என்னை அழைத்தார். நான் பொருள் புரியாது திகைத்தபோது 'உங்கள் கட்டுரையைத்தான் சொல் கிறேன்' என்றார். இந்த மேதையின் சொல்லாடலுக்கு முன்னால் எனக்கு எந்த இலக்கிய கௌரவம் பெரிதாக இருக்க முடியும்?**

சு. 2.

ஏற்பட வேண்டும். "நல்லுணர்வு ஏற்பட்டால் நல்லிலக்கியம், நச்சுணர்வு ஏற்பட்டால் நச்சிலக்கியம்" என்றார் லியோ டால்ஸ்டாய். இதுதான் படைப்பிலக்கியத்திற்குச் சரியான அளவு கோல் என்று கருதுகிறேன். இந்த அளவின்படி மட்டுமல்ல, மனதில் சட்டென்று நினைவுக்கு வரும்படியும் தோன்றுவது எனது முதல் சிறுகதையான "அங்கே கல்யாணம் - இங்கே கலாட்டா" என்ற படைப்புதான். 1974-ம் ஆண்டு இறுதிவாக்கில் இது ஆனந்தவிகடனில் வெளியானது. இந்த சிறுகதைதான் என்னை 'உடனடி' எழுத்தாளனாக்க உதவியது.

இந்த சிறுகதையை எழுதும்போது நான் எழுத்தாளனாக மாறப் போகிறேன் என்று நினைத்ததில்லை. பத்துப்பேரோடு பதினோராவது நபராக ஒரு கதையை எழுதித்தான் பார்ப்போமே என்ற தோரணையில்தான் எழுதினேன். கதையைத் திருப்பி வாங்குவதற்கு தபால் தலைகளைக்கூட இணைக்கவில்லை. அந்தச் சிறுகதையை எந்த சூழலில் எழுதினேன் என்பதை நினைத்துப் பார்க்கும்போது, இதோ இந்தத் தருணத்திலும் இனிமையாக இருக்கிறது.

## எழுத்தாளச் சவால்

அப்போது நான், டில்லியில் வானொலி நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். உள்ளூரில் நான் ஏறெடுத்தும் பாராத வாரப் பத்திரிகைகள் அங்கே மிகவும் பிடித்துப் போயின. என்ன எழுதினாலும் தமிழை சுமந்து வருகின்றவை என்ற பாசம். ஆனாலும் இந்த பத்திரிகையில் வெளியான சிறுகதைகள் பெரும்பாலும் பிடிக்கவில்லை. பிடிபடவும் இல்லை. அப்போது டில்லியில் என்னுடன் பணியாற்றியவரும், எனது குடும்பத்தோழருமான செல்வராஜிடம், "ஒரு கதைகூட உருப்படியாக இல்லை" என்று அடிக்கடி அலுத்துக் கொள்வது வழக்கம். அவரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு, பிறகு பொறுமைக்கு எல்லை கட்ட விரும்பாதவர் போல், "சும்மா குறை சொல்வதில் அர்த்தமில்லை சமுத்திரம்! குறை சொல்வது எளிது. எழுதுவதுதான் கடினம். நீங்கள் உண்மையிலேயே இலக்கிய ஆர்வம் உள்ளவராய் இருந்தால், ஒரு கதை எழுதி பத்திரிகையில் வரவழைத்துக் காட்டுங்கள். அதற்குப் பிறகு பிறத்தியார் கதைகளைப் பற்றி விமர்சியுங்கள்" என்றார்.

நண்பரின் பேச்சு என்னுள் ஒரு வேகத்தை ஏற்படுத்தியது. அவர் என் திறமைக்கே சவால் இடுவதுபோல் இருந்தது. ஆரம்பப் பள்ளிக்கூட காலத்தில் வில்லுப் பாட்டாளியாகவும்.

கல்லூரிக் காலத்தில் கவிதை எழுதுபவனாகவும் இருந்தது, அப்போது என்னுள்ளே கும்பகர்ணனாய் முடங்கிக் கிடந்த கலைத்தன்மை துகில் களைந்து எழுதுவதுபோல் இருந்தது. சிறுகதை ஆசிரியனாக மாறவேண்டும் என்பதைவிட நண்பரின் சவாலுக்கு பதிலளிக்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

அன்று இரவே காகிதத்தை எடுத்துக் கொண்டேன். அந்த சமயத்தில் எனது சொந்த கிராமத்தில் நடந்த, நடக்கும் நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தேன். பெரும்பாலான ஏழை-எளியயவர்கள் எங்கேயோ இருக்கின்ற தலைவர்களுக்கு உயிரைக் கொடுக்கவும் தயார் என்பதைக் காட்ட, தங்களுக்குள்ளேயே அடித்துக் கொள்ளும் அவல நிலையை எண்ணிப் பார்த்தேன். கோவில் திருவிழாக்களிலும், கல்யாண காரியங்களிலும் கட்சி-அரசியல் புகுந்து, கிராம மக்கள் அடித்துக் கொள்வதை கண்ணால் கண்டவன் நான். மக்களை ஒன்று திரட்டி ஒருமைப்படுத்துவதற்காக எழுந்த திருவிழாக்களும், கல்யாணச் சடங்குகளும் கட்சி அரசியலின் பீடங்களாகிப் போனதை நினைத்து, கதை எழுதப் போவதை மறந்து, அந்தக் காட்சிகளிலேயே நினைத்தபடி இருந்தேன். அரைமணி நேர சிந்தனைக்குப்பின் நண்பரின் சவாலும் கதை எழுதுவதற்கே காகிதத்தை வைத்திருக்கிறேன் என்ற எண்ணமும் என்னுள் எழுந்தது. உடனடியாக எழுதினேன். மடைதிறந்த வெள்ளம்போல் வார்த்தைகள் வரிகளாயின. கதை இதுதான்.

குட்டாம்பட்டி என்ற சிறு கிராமம். அங்கே சண்முகம் என்ற வாலிபன் கல்லூரி வரைக்கும் கால் வைத்தவன். உள்ளூரில் ஆசிரியையாக வேலைபார்க்கும் அமுதா என்ற பெண்ணை நேசிக்கிறான். ஓரிருதடவை சந்திப்புக்கள் கூட நடக்கின்றன. இருவருமே சொந்தக்காரர்கள். இந்த இரு இளம் உள்ளங்களையும் இணைத்துவைக்க பெற்றோர்கள் தீர்மானித்து விடுகிறார்கள்.

பெண் வீட்டில் நிச்சய தாம்பூல விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வாழைக்குலை, வெத்திலை பாக்கு எல்லாம் வாங்கியாகி விட்டது. ரொக்கம், நகைநட்டு வகையறாக்கள் எல்லாம் முடிவாகி விட்டன. இதில் எந்த தகராறும் எழவில்லை. கல்யாணத் தேதியை நிச்சயிக்க வேண்டியதுதான் பாக்கி. எல்லோரும் நல்ல காரியம் ஒன்றிற்கு உடன்பட்ட திருப்தியோடு புன்னகைக்கின்றனர்.

திடீரென்று மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த ஒரு பி.யு.ஸி. பெயிலன் கல்யாண விழாவிற்கு நல்லார் கட்சித் தலைவர்

நல்லசிவம் தலைமைத் தாங்கவேண்டும் என்றான். உடனே பெண் வீட்டுப் பிள்ளையாண்டான் ஒருவன் இன்னொரு கட்சித் தலைவர் வெண்சாமரம் தலைமை தாங்க வேண்டும் என்றான். மாப்பிள்ளை பங்காளிகள், வெண்சாமரம் திருடன், அவன் கருமாந்திரத்திற்குத்தான் லாயக்கு என்றார்கள். பிள்ளை வீட்டார் சொன்னது நல்லார் கட்சி நல்லசிவத்திற்கே பொருந்தும் என்றனர் பெண் வீட்டுப் பங்காளிகள். வார்த்தைகள் தடிக்கின்றன. பிரச்சனை கௌரவப் பிரச்னையாகியது. தலைவர்களைத் திட்டிய பங்காளித் தொண்டர்கள் பிறகு ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்கிறார்கள். இரண்டு தலைவர்களும் வராமலே கல்யாணத்தை நடத்தலாம் என்று அய்யாசாமி தாத்தா சொன்னது மற்றவர்களின் காதில் விழுந்ததே தவிர, கருத்தில் விழவில்லை. நிலைமை அந்த அளவிற்குப் போனது.

மாப்பிள்ளை வீட்டார் போய்விடுகிறார்கள். அமுதா வீட்டுக்குள்ளேயே அழுகிறாள். காதலை மறக்க முடியாமலும் கல்யாணத்தை நினைக்க முடியாமலும் போன சண்முகம், இராணுவத்தில் சேர்ந்து தொலை தூரத்திற்குப் போய் விடுகிறான். ஒருமாதம் கழித்து எல்லாப் பத்திரிக்கைகளிலும் ஒரு பெரிய செய்தி வருகிறது. கிராமத்து மக்கள் அதைப் படித்துவிட்டு விக்கித்துப் போகிறார்கள். செய்தி இதுதான்.

''தலைவர் வெண்சாமரத்தின் மகளுக்கும், தலைவர் நல்லசிவத்தின் மகனுக்கும் திருமணம். சர்வகட்சித் தலைவர்கள் வாழ்த்து.''

இந்தச் சிறுகதை விரைவில் பிரசுரமாகும் என்று ஆனந்த விகடன் பத்திரிகை கடிதம் எழுதிய நாளிலிருந்து பிரசுரமாகும் நாளை எதிர்பார்த்திருந்தேன். மாதக்கணக்காக கதை பிரசுரமாக வில்லை. பிறகு நானே சலித்துப் போயிருந்த ஒருநாளில், டில்லியின் வி.ஜி.பி.யான பாக்யராஜ், "நீங்கதானே சமுத்திரம்" என்றார். எனக்கு ஆச்சர்யம். ஓரளவு பரிச்சயமான நண்பர். பெயர் தெரியாமல் போகுமோ? நான் அவரை நெருங்கியபோது இது உங்க கதையா? என்று பத்திரிக்கையைப் பிரித்துக் காட்டினார். நான் ஒரு கதை எழுதியிருக்க முடியாது என்று எப்படி அவருக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டு, அதுவே என் பெயரையே சந்தேகிக்க வைத்ததோ, அதுபோல் எனக்கும் ஒரு சந்தேகம். நம் கதைதானோ? நம் பெயர் தானா? என்று, சந்தேகமில்லை. என் கதைதான். என் பெயர்தான்.

இந்தக் கதையை நகைச்சுவையாக பலரும் ரசித்தபோது அப்போது டில்லியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் மூத்த செய்தியாளரான திரு. சீனிவாசன் அவர்கள் இந்தக் கதையில் ஒரு பொடி வைத்திருக்கிறீர்கள் என்று வாஞ்சையோடு சொன்னார். அன்றைய பொடிதான் எனது பல படைப்புகளில் வேட்டுகளாக வெடிக்கின்றன.

இந்தச் சிறுகதை வெளியானதும் பல சிறுகதைகளை எழுதி பல பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். அத்தனையும் பிரசுரமாயின. இப்போதும் பிரசுரமாகிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், "அங்கே கல்யாணம் - இங்கே கலாட்டா" என்ற சிறுகதையை என்னால் மறக்க இயலாது. காரணம், அது முதல் கதை என்பதால் அல்ல. அதில் நான் வைத்திருந்த சில நிலைகலன்களைத்தான் இப்போது என் படைப்புகளில் பயன்படுத்துகிறேன். அந்த சிறுகதையில் வந்த கிராமத்தின் பெயர் குட்டாம்பட்டி. இந்த குட்டாம்பட்டியையே, பழைமைப் பிடிப்பும், புதுமை நுழைவும் கொண்ட இன்றைய சராசரி கிராமமாக எடுத்துக் கொண்டு நாவல்களிலும் இதே ஊரையே குறிப்பிட்டு வருகிறேன். இதுபோல் நல்லது நினைத்து அதைச் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ள அய்யாசாமி தாத்தாவையும், பல சிறுகதைகளிலும் நாவல்களிலும் கொண்டு வந்திருக்கிறேன். மொத்தத்தில் இந்தக் கதையில் வந்த கிராமமும், கதா பாத்திரங்களும் சமூகப் பொருளாதார தாக்கத்தில் எப்படி மாறிவருகின்றனர் என்று காட்டுவது என் படைப்பிலக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

அடுத்து இந்த சிறுகதையில், ஓரளவு 'நஹற்ண்ழ்ங' கொண்டு வந்தேன். "சொந்தபந்தம் இல்லாத தலைவர்கள் கல்யாண வீட்ல சந்தித்து ஒருவரை ஒருவர் கட்டித் தழுவுறாங்க: நீங்க என்னடான்னா சொந்தக்காரர்களா இருந்தும் கட்சிபிரிந்து கருமாந்திரத்திலகூட கலந்துக்க மாட்டேங்கறீங்களடா" என்று அய்யாசாமி தாத்தா வேதனையோடு சொல்வது என் படைப்புக்களில் ஆதார சுருதியாக பத்தாண்டுகள்வரை இருந்தது.

மொத்தத்தில், குட்டாம்பட்டியையும், அய்யாசாமி தாத்தாவையும், கிராமிய நடையையும், ஓரளவு அங்கதச் சுவையையும் ஆக்கித்தந்த அந்த சிறுகதை, வாசகர்களுக்கு ஒரு சிறுகதை! எனக்கோ பெருங்கதை!

**சென்னை வானொலி நிலையம் - 15-1-1983**

# எழுத்தாணி ஊர்வலம்

சென்ற மாதம், கேரளத்தில் மலபார் பகுதியில் உள்ள திருவூரில், துஞ்சன்- எழுத்தச்சன் நினைவுவிழா நடைபெற்றது. மலையாள இலக்கியத்தில் தடம் பதித்த மக்கள் எழுத்தாளரான எம்.டி. வாசுதேவ நாயரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று கடந்த நீண்டகாலமாக எழுத்தச்சன் நினைவை இலக்கிய விழாவாகக் கொண்டாடி வருகிறது. அகில இந்திய அளவில் பிறமொழி எழுத்தாளர்களையும் வரவழைத்து, இலக்கியம் பற்றிய தேசிய கருத்தரங்கையும் நடத்துகிறது. இந்த ஆண்டு தமிழகத்திலிருந்து சிந்தனையாளர் வலம்புரிஜானும், நானும் கலந்து கொண்டோம். 'இலக்கியம் எதிரொலிக்கும் சுற்றுப்புற நயங்கள்' என்பது கருத்தரங்கின் தலைப்பு. எழுத்தாளர் சிவசங்கரி அவர்கள் தான் எங்கள் பயணத்திற்கு பரிந்துரைத்தவர்.

**மலையாள மொழியின் பிதா மகனாக கருதப்படும் எழுத் தச்சனின், நினைவில் அனைத்து மலையாளப் படைப்பாளிகளையும் ஒருசேர திரட்டுகிறார் சிறந்த படைப்பாளியான எம்டி. வாசுதேவ நாயர் அவர்கள்.**

**மகத்தான படைப்பாளியான கலைஞரும், திருவள்ளுவரையோ, தமிழ்த்தாயையோ, தொல் காப்பியரையோ அல்லது இவர்கள் மூவரையுமோ முன்னிலைப் படுத்தி மிகப்பெரிய தமிழ் வளாகத்தை உருவாக்கிட வேண்டும். வள்ளுவர் கோட்டம் இதற்கு மாற்றாகாது.**

### கம்பரைப் பின்பற்றி...

துஞ்சன்-எழுத்தச்சன் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மலையாள இலக்கியத்தின் பிதாமகன். இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் மலையாளத்தில் இலக்கியமாக்கியவர். இன்றும் இவரது இந்த இரண்டு படைப்புகளும் பயபக்தியோடு படிக்கப்படுகின்றன. அந்தக் காலத்தில் இவர் மலையாள மொழி இலக்கணத்திற்கு உட்படாத விதத்தில் இவற்கைக் கவிபாடியவர். இது மலையாளப் பண்டிதர்களுக்கு பிடிபடாமல் இருந்தது. தமிழ் இலக்கியத்தில் பல்வேறு புலவர்களின், மன்னர்களின் காலக் கட்டங்களை விஞ்ஞானப் பூர்வமாக அணுகி நிச்சயித்ததால், இன்றும் தமிழறிஞர்களிடையே வேண்டாதவராய் முணுமுணுப்பை ஏற்படுத்தும் பேராசிரியர் வையாபுரி பிள்ளைதான், எழுத்தச்சனின் மகாபாரதமும், ராமாயணமும், கம்பனின் கம்பராமாயண விருத்தப்பா இலக்கணத்தைப் பின்பற்றுபவை என்று குறிப்பிட்டார். இந்தக் கருத்தை, நான் கருத்தரங்கில் தெரிவிப்பதாக இருந்தேன். ஆனாலும் குறிப்பிடவில்லை.

தமிழன் உலகை ஆண்டவன், கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்தவன் என்று நம்முடைய பண்டிதர்கள் பேசிப்பேசி, நம்மை பிறமொழியினர், ஒரு 'மாதிரியாகப்' பார்க்காமல், 'ஒரு மாதிரிப்' பாாக்கும் நிலை ஏற்பட்டிருப்பதால் என் பங்குக்கும், இலக்கியக் குளத்தில் ஒரு கல்லை எடுத்துப் போட நான் விரும்பவில்லை... தமிழ் இலக்கியத்தைப் பற்றி, இந்திய மொழி அறிஞர்கள் குறிப்பாக அண்டை மொழி அறிஞர்கள் மூலத்தமிழை சுட்டிக்காட்ட ஒரு சூழலை உருவாக்காமல், நம்மை நாமே பிறமொழிகளைப் படிப்பது போல் கூச்சலிடுவதே இதற்குக் காரணம். இதனால்தான், இந்த உண்மையைக் கூட சொல்ல இயலவில்லை. அதேசமயம் சங்க இலக்கியத்தில், அன்றைய தமிழர்களான இன்றைய மலையாளிகள், பாதிக்குப் பாதி உரிமை கொண்டாடலாம் என்று குறிப்பிட்டேன். இது மலையாள இலக்கிய வாதிகளுக்கும் எனக்கும் ஒரு நட்புப் பாலத்தை அமைத்தது. பின்னர் பேசிய வலம்புரிஜானும் தனது அருமையான ஆங்கிலச் சொற்பொழிவில் இதைத்தான் குறிப்பிட்டார். இதனால் மலையாளப் படைப்பாளிகளே தமிழ்தான், தங்களுக்கும் மூல மொழி என்பதை எங்களிடம் பேசியபோது குறிப்பிட்டார்கள்.

## எல்லாப் படைப்பும் மக்களுக்கே...

எழுத்தச்சன் நினைவகம், ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில், மலைகள் மண்டிய திருவூரில் வியாபித்திருக்கிறது. இந்த நிலத்தை, கேரள அரசே தனியாரிடமிருந்து கையகப்படுத்தி கொடுத்துள்ளது. இந்த வளாகத்தில், உள்ளரங்கம், வெளியரங்கம், பன்மொழி நூலகம், இலக்கிய அருங்காட்சியகம் உள்ளன. இதில் எழுத்தச்சனின் எழுத்தாணி, அவர் எழுதிய ஏடுகளோடு பூமணக்க, புகழ் மணக்க ஒரு சிற்பக்கல் தளத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இலக்கிய விழாவின் இறுதி நாளில், இந்த எழுத்தாணி, கொட்டு முழக்கத்தோடு ஊர்வலமாகக் கொண்டு போகப்படுகிறது. ஊர்வல இறுதியில் ஒரு சின்னப்பிரசங்கம்.... நானும், வலம்புரிஜானும் ஓரிரு நிமிடங்கள் தமிழில் பேசினோம். இதேபோல் பிறமொழிப் படைப்பாளிகளும் தத்தம் மொழிகளில் பேசினார்கள். இந்த ஊர்வலத்தில் இந்து, கிறிஸ்துவ, இஸ்லாமிய எழுத்தாளர்களும், பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டார்கள். இது எழுத்தச்சனை கடவுளாக்கும் முயற்சியல்ல. மாறாக அவரை மக்களிடம் கொண்டு செல்லும் ஒரு ஊடகமென்று எம்.டி. வாசுதேவநாயர் எங்களிடம் தெளிவாக்கினார். எல்லாப் படைப்புகளும் மக்களுக்கே என்று சொன்ன கார்க்கீயின் மறுபதிப்பு முழக்கமாக இது எனக்கு தோன்றியது.

எழுத்தச்சனுக்கு ஏன் சிலை வைக்கவில்லை என்று நான் கேட்டபோது இப்படித்தானிருப்பார் என்று அனுமானிக்க முடியாதவருக்கு எப்படி சிலை வைப்பது என்று எம்.டி.வி, என்னை வினாவினார். உடனே, எனக்கு சிலை மயமான சென்னைக் கடற்கரைச் சாலைதான் நினைவிற்கு வந்தது கூடவே திருவள்ளுவர் சிலையில் பூணூல் உள்ளே இருப்பது போல் ஒரு அனுமானம் ஏற்படுவதாய் கவிஞர் கண்ணதாசன் அப்போது உருவான திருவள்ளுவர் சிலைப்பற்றி கருத்து தெரிவித்ததும் நினைவிற்கு வந்தது. மலையாள இலக்கிய வாதிகளைப் போல் அல்லாது, நாம் உருவங்களைப் பிடித்துக் கொண்டு, உயிர்ப்புகளை விட்டு விட்டோமோ என்றும் ஏண்ணத் தோன்றியது.

விழாவின் இறுதிநாளில், விழாக்குழுவின் அலுவலகத்தில் தனது வசதியான நாற்காலியில் எம்.டி.வி. உட்கார்ந்திருக்கிறார் பக்கவாட்டிலுள்ள ஒரு சின்ன நாற்காலியில் அமர்ந்தபடி கதராடை அணிந்த ஒரு பெரியவர் பேசிக் கொண்டிருக்கிறார். சிறிது தொலைவில் இலக்கியக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டம் துவங்குவதற்கு முன்பே வந்துவிட்ட அந்தப் பெரியவரை, 'இவர்தான் கேரள மாநில கலாச்சார மற்றும் மீன்துறை அமைச்சர் ராமகிருஷ்ணன்' என்று வாசுதேவநாயர் எங்களுக்கு அறிமுகம் செய்கிறார். நாங்கள் வியந்து போகிறோம்.

கலைஞருக்கு ஒரு பரிந்துரை....

தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள், மாற்றாராலும் கலைஞர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர். அவரது பெயருக்குப்பதிலாக அவரது பட்டமே எதிர்காலத்தில் நிலைத்து நிற்கும்.. நிற்க வேண்டும். தமிழ் இலக்கியத்தில் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்திய கலைஞர், எழுத்தச்சனுக்கு இருப்பது போன்ற, ஒரு தமிழ் வளாகத்தை நகர்ப்புறப்பகுதியில் பத்து ஏக்கர் பரப்பளவில் அமைக்க வேண்டும். இதில் திருவள்ளுவரையோ தமிழ்த்தாயையோ அல்லது தொல்காப்பியரையோ அல்லது மூவரையுமோ முன்னிலைப் படுத்த வேண்டும். எழுத்தச்சனின் எழுத்தாணியை, மக்களிடம் கொண்டு செல்வதுபோல் இவர்களை உருவகப்படுத்தி ஏடுகளோடு ஊர்வலமாக கொண்டு செல்ல வேண்டும். ஆண்டுதோறும் இலக்கிய விழா நடத்தி, அனைத்து தரப்பு தமிழர்களையும் திரட்ட வேண்டும். சாதி சமயங்களால் பிரிந்தும், இப்போது குட்டையைக் குழப்பும் மதவாத சக்திகளால் மிரண்டும் போயிருக்கும் தமிழர்களை, நம் முன்னோரின் பெயரால் ஒருமுனைப்படுத்த வேண்டும்.

தமிழக அரசு, இதற்காக படைப்பாளிகள், தமிழறிஞர்கள், கட்டிடக் கலை நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பலாம். எழுத்தச்சன் இலக்கிய வளாகத்திலுள்ள நவீனமான கட்டிடங்கள் கண்ணை மயக்குபவை. கருத்திற்கு நங்கூரம் பாய்ச்சுபவை. என்னைக் கேட்டால் எளிமையும், இனிமையும் கூடவே கம்பீரமும் கலந்த் அந்தக் கட்டிடங்களை தமிழகத்தில் நகலெடுக்கலாம்.

கலைஞர் கண்ட பூம்புகாரோ அல்லது வள்ளுவர் கோட்டமோ, நான் குறிப்பிடுகிற புதிய வளாகத்திற்கு மாற்றாகாது. தமிழக அரசு இந்த பரிந்துரையை ஏற்று ஆவண செய்தால் அது தமிழுக்குப் பெருமை. தமிழனுக்கும் பெருமை. இந்த இரண்டு பெருமைகளும் கலைஞருக்கே போய்ச் சேர வேண்டுமென்பதே என் விருப்பம். கலைஞர் தமிழர்களுக்கு விட்டுச் செல்லும் மிகப் பெரிய இலக்கிய பாரம்பரியமாக இதுவே அமையவேண்டும். இதுவரை, இந்த மலையாள பரிணாமத்தில், தமிழகத்தில் எதுவும் அமைய வில்லை. கலைஞர் இதை ஈடேற்ற வேண்டும்.

நவசக்தி வார இதழ்–1999.

# உயிர்க்கொல்லி விளம்பரங்கள்

மகாபாரத தர்மரையே விரட்டியடித்த கலியுகம் முடிந்து. அதைவிடக் கொடுரமான விளம்பரயுகம் தொடங்கி சுமார் அரைநூற்றாண்டு காலம் ஆகி விட்டதாக எனக்குத் தோன்று கிறது. 21-ஆம் நூற்றாண்டில் இந்த விளம்பரத் தாக்கம் ஒரு தாக்குதலாகவே ஆகப்போகிறது. வயிற்றிலுள்ள குழந்தைகூட 'வருக! குழந்தாய் வருக!' என்ற வரவேற்பு வளையைவப் பார்க்காமல் வெளியே வராதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அகப்பையில் இருந்து ஆகாய விமானம் வரை, ஜட்டியில் இருந்து சல்வார் கமீஸ் வரை விளம்பரங்களே தீர்மானிக்கின்றன. இதனால் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று என்ற விவ காரங்களுக்கும் பஞ்சமில்லை.

**பல விளம்பரங்கள் மக்களின் உயிருக்கே உலை வைக்கின்றன. இந்த விளம்பரத் தீயில் மக்கள் விட்டில் பூச்சிகளாகிறார்கள். மருந்துகளில் மூன்று மாத தற்காலிக சுகத்தை அளிக்கும் பொருட்களை கலப்படம் செய்து விற்பது அரசுக்கு தெரியுமா?**

**எய்ட்ஸ் நோயை குணப் படுத்த முடியும் என்று சூளுரைக் கிறார்கள். இதுவரை அப்படி ஒரு மருந்து கண்டு பிடிக்கப்பட வில்லை. இதன் தாக்கத்தை கட்டுப்படுத்துவதை குணப் படுத்தி விட்டதாக தம்பட்டம் அடிக்கிறார்கள்.**

### சேலையே செய்தியான கதை

எடுத்துக்காட்டாக, நான் சென்னைத் தொலைக்காட்சியில் செய்தி ஆசிரியராக இருந்தபோது, பல செய்தி வாசிப்பாளர்கள், குறிப்பாக பெண்கள் அளவுக்கு மீறிய ஆடை அலங்காரங்களோடு

தோன்றி வாசித்தார்கள். இந்த வாசிப்பில் நானும் பெருமிதப் பட்டேன். ஆனாலும் இந்தப் பெருமிதம் அதிகநாள் நீடிக்கவில்லை. கிராமங்களில், பெண் வாசிப்பாளர்கள் வாசித்த செய்திகளைவிட, அவர்களது ஆடை அலங்காரங்களைக் கவனிப்பதிலேயே மக்கள் குறிப்பாய் பெண்கள் கண்ணுங் கருத்தாக இருந்தார்கள். இவர்களுக்கு, இந்திய - பாகிஸ்தான் பிரச்சினையை விட, நியாயவிலைக் கடைகளின் அநியாயங்களைவிட, செய்தி வாசிப்பாளர்கள் அணிந்த புடவை டிசைன் மாதிரியும், காதணிகள் மாதிரியும், எப்படி, எங்கே வாங்கலாம் என்பதே பிரச்சினை. இதை நேரடியாகவும், ஒரு சர்வே மூலமும் கண்டுபிடித்தோம். ஏற்கனவே தொலைக்காட்சி சட்டவிதிகளில், நிகழ்ச்சியாளர்கள், நேயர்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையில் ஆடை அலங்காரங்களை கொள்ளலாகாது என்று இருக்கிறது. ஏட்டுச்சுரைக்காயாக இருந்த இந்த விதியை நான் புதுப்பித்து, சுற்றறிக்கையாக விட்டேன். இன்றைய விளம்பரங்களும் இந்த லட்சணத்தில்தான் உள்ளன.

எடுத்துக்காட்டாக, புதுடில்லியில், பல்கலைக்கழக அந்தஸ்தில் உள்ள இந்திய பொதுமக்கள் தொடர்பு நிறுவனத்தில், நான் பயிற்சி பெற சென்றிருந்தேன். (வேண்டாத அலுவலர்களை இப்படி பயிற்சிக்கு அனுப்புவது வழக்கம்) அப்போது விளம்பரத்துறைப் பேராசிரியர், நடந்த நிகழ்ச்சி ஒன்றை எடுத்துரைத்தார். ஒரு சோப்பு வியாபாரி, கிராமம் கிராமமாகச் சென்று, தனது சோப்பின் நியாயமான குணநலன்களை மக்களிடம் எடுத்துரைத்திருக்கிறார். அவருக்கு பேசிப் பேசி வாய் வலித்ததும், எழுதிஎழுதி கைவலித்ததும் தான் மிச்சம். திடீரென்று அவருக்குள் ஒரு அற்புதமான வியாபாரி உயிர்த்தெழுந்தார். மறுநாள் அவர் தயாரித்த சோப்பைப் பயன்படுத்தினால், பாலியல் உறவு பிரமாதமாக இருக்கும் என்று ஒரு பொய்யை அவிழ்த்து விட்டார். அவ்வளவுதான். விற்பனை பிய்த்து வாங்கிவிட்டதாம். இதேபோல், இப்போது வயாகரா மாத்திரைக்கு வந்திருக்கும் பவுசை சொல்ல வேண்டியதில்லை.

## உயிரைக் குடிப்பவை

உடைமைகள், ஆடைஅலங்காரங்கள் குறித்த விளம்பரங்கள் பெரும்பாலும் கையைமட்டுமே கடிக்கும். ஆனால் மருந்து - மாத்திரைகள் சம்பந்தப்பட்ட விளம்பரங்கள், உயிரையே குடித்து விடுகின்றன. நமது சித்தவைத்தியர்களும் தங்களது தொழில்

நுட்பம் தாங்கள் கட்டியிருக்கும் டைகளில் மட்டுமே இருப்பதுபோல், கலர்கலரான டைகட்டி இடையிடையே ஆங்கில வார்த்தைகளை வலுக்கட்டாயமாகத் திணித்து பல்வேறு மருந்துகளை பரிந்துரைக்கிறார்கள். இது அல்லாது, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு இடையே தீராத வியாதிகளை எல்லாம் தீர்த்து வைக்கும் மருந்து மாத்திரைகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. உண்மைதான், இந்த விளம்பர மாத்திரைகளை நம்பி விழுங்குகிறவர்களை இந்த மாத்திரைகள் விழுங்கிவிடுகின்றன. இதனால்தான், மத்திய சுகாதார அமைச்சகம், ஒரு மாதத்திற்கு முன்புகூட, இத்தகைய விளம்பரதாரர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தது. ஆனாலும் மத்திய அரசுக்கு இது முக்கியமான பிரச்சினையல்ல என்பதால், இதுகுறித்து மக்களே ஒரு போராட்டத்திற்கு ஆயத்தமாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டாயங்கள் குறித்து இனி பார்ப்போம்.

## மாரடைப்பு விளம்பரம்

தொலைக்காட்சிகளில், குறிப்பிட்ட ஒருவகை மாத்திரையை சாப்பிட்டால் நீரழிவு நோயில் இருந்து நோயாளி முற்றிலும் விடுபடலாம் என்ற விளம்பரம் நாள்தோறும் இன்னும் வந்து கொண்டுதான் இருக்கிறது. எனக்கு நெருங்கிய ஆன்மீகத் தோழர் ஒருவர், இதை நம்பி அந்த மாத்திரைகளை வாங்கி உட்கொண்டார். இதனால் அவரது கல்லீரல் பலமடங்கு வீங்கி, இதயத்தைத் தாக்கி மாரடைப்பே வந்துவிட்டது. எப்படியோ தப்பித்துவிட்டார். இவரைப்போலவே இதேமாத்திரைகளை வாங்கி உட்கொண்ட ஒரு நெய்வேலி நண்பருக்கும் இவரைப்போன்ற நிலைமை ஏற்பட்டதாம். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் செத்தாரா பிழைத்தாரா என்பது தெரியவில்லை. அண்மையில், தோழர் வலம்புரிஜான் அவர்கள் நடத்திய எய்ட்ஸ் விழிப்புணர்வு கூட்டத்தில் இந்தத் தகவலை அந்த விளம்பரத்தின் பெயரைச் சொல்லியே அறிவித்தேன். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட எழுத்தாளர் அனுராதா ரமணன், தானும் இந்த மாத்திரையை சாப்பிடத் துவங்கி இருப்பதாகவும், நான் சொன்னது நல்லதாய் போயிற்று என்றும் நன்றியுடன் குறிப்பிட்டார். அனுராதா ரமணனுக்கு ஆயுள் கெட்டியாக ஆனதில் எனக்கு மகிழ்ச்சி.

## வேலியே பயிரை மேயும் விளம்பரம்

இதைப்போல் இன்னொரு உடல்நல விளம்பரம். எய்ட்ஸ் நோயை முற்றிலும் குணப்படுத்திவிடலாம் என்று விளம்பரங்கள்

மூலம் பல மருத்துவர்கள் புறப்பட்டு இருக்கிறார்கள். இவர்களை கத்துக்குட்டிகள் என்றும், வசூல் மன்னர்கள் என்றும் மக்கள் ஒதுக்கிவிடுவார்கள். ஆனால், அரசு மருத்துவ அமைப்புகளே எய்ட்ஸ் நோயாளி ஒரு சிலரை குணப்படுத்தி விட்டதாக பகிரங்கமாக அறிவிக்கின்றன.

என்னால் திட்டவட்டமாக கூறமுடியும். எய்ட்ஸ் நோய்க்கு இன்னும் மருந்து கண்டுபிடித்த பாடில்லை. நமக்கு, நோய் எதிர்ப்பு சக்தியை கொடுத்தும், உடம்புக்குள் உட்புகும் பகையாளிக் கிருமிகளை கொன்று குவித்தும், உடல் நலத்தின் காவல் தெய்வமாக விளங்கும் நமது இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள், தங்களைப் போல் வேடம் போட்டு உள்ளே நுழையும் எய்ட்ஸ் கிருமிகளிடம் ஏமாந்து, அவற்றை 'நம்ம ஆளு' என்று நினைத்து உடம்புக்குள் விட்டு விடுகின்றன. இந்த சகுனிகளான எய்ட்ஸ் கிருமிகள், இறுதியில் வெள்ளை அணுக்களை வஞ்சகமாகக் கொன்று நோய் எதிர்ப்பு சக்தியை முற்றிலுமாக அழித்து, ஒருவர் உடம்பை பல்வேறு நோய்களின் கூடாரமாக மாற்றிவிடுகின்றன. மருத்துவ வரலாற்றிலேயே புதுமையாகவும், எந்த மருந்துப் பகைவனும் இல்லாததுமான இந்த நோயை முறியடிக்கும் மருந்துகளைக் கண்டு பிடிக்க ஆய்வுகள் நடக்கின்றனவே தவிர, ஆன்றபயன் ஏதும் இல்லை.

இந்தப் பின்னனியில், தம்பட்டம் அடித்துக் கொள்ளும் மருத்துவர்கள், எய்ட்ஸ் நோயாளிகளின் அவஸ்தையைக் குறைத்திருக்கலாம். ஆனால் அந்தநோயை அகற்றியிருக்க முடியாது. அதாவது எய்ட்ஸ் நோயின் அறிகுறிகளோடுதான் இந்த மருத்துவர்கள் போராடுகிறார்களே தவிர, அடிப்படையான நோய்க்கு எதிராக அல்ல. ஒரு நோயைக் குணப்படுத்துவது என்பது வேறு, கட்டுப்படுத்துவது என்பது வேறு.

இப்படிச் சொல்வதால் நான் சித்தமருத்துவத்தையோ அல்லது அலோபதி மருத்துவத்தையோ குறைகூறுவதாகாது. இருதரப்பு மருத்துவத்தின் மீதும் எனக்கு பெருத்த மரியாதை உண்டு. ஆனால் இப்படி மரியாதைக்குறைவான காரியங்களை பொறுப்பானவர்களே செய்யும் போது அதை, நாம் கண்டித்தாகவேண்டும். வலம்புரிஜான் அவர்கள் நடத்திய விழிப்புணர்வு கூட்டத்தில் கேள்விபதில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட, தகுதிவாய்ந்த ஒரு சித்தமருத்துவ வல்லுநரிடம், இதே கேள்விகளைத்தான் நான் கேட்டேன் அவரும், சித்த மருத்துவத்திலும் இதுவரை எய்ட்ஸ் நோயின் தாக்குதலை குறைக்க முடிகிறதே தவிர, கரைக்க முடியவில்லை என்றார்.

சட்ட மௌனம்

உடமைகளோடு விளையாடும் விளம்பரங்களையும் சுயதம்பட்டங்களையும் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் இப்படி உயிரோடு விளையாடும் விளம்பரங்களை, தம்பட்டங்களை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?. கேரளத்தில் ஒரு வைத்தியரின் மூலம் பல எய்ட்ஸ் நோயாளிகள் "குணமானார்கள்". இந்த நோய் தீர்ப்பு குணமான எய்ட்ஸ் நோயாளிகள் மூலமே விளம்பரப்படுத்தப்பட்டது. நோயிலிருந்து விடுதலை பெற்றதாக நம்பிய இந்த நோயாளிகள் மூன்று மாதத்திற்குப் பிறகு மீண்டும் பாயில் விழுந்தார்கள். விசாரித்துப் பார்த்ததில் ஸ்டெரிராய்ட் என்ற செயற்கை ஹார்மோனும், இதுமாதிரியான இதர சேர்க்கைகளும் மருந்துடன் கலந்து கொடுக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மருத்துவர் எய்ட்ஸ் நோயாளிகள் மீது வியாபாரம் செய்வதும் வீதிக்கு வந்தது. இந்தவகை மருந்தை உட்கொண்டால் எந்த நோயாளியும் மூன்று மாதம் ஒருவித குணமாயையில் இருக்கலாம். பிறகு பழைய கதைதான். அதோடு இந்த ஸ்டெரிராய்ட் வேறு விளைவுகளையும் ஏற்படுத்தும். இவ்வளவு நடந்தபிறகும் இந்த புதிய எமன் மருத்துவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது சம்பந்தமாக சட்டம் என்ன சொல்கிறது என்று, எனது இனிய தோழரும், சமூகப்பிரக்ஞை உள்ள பிரபல வழக்கறிஞருமான செந்தில்நாதனிடம் கேட்டேன். சமூகவிரோதமாகக் கருதப்படும் நடவடிக்கைகள் குறித்தோ அல்லது தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பு குறித்தோ விளம்பரங்கள் செய்தால் அரசே நடவடிக்கை எடுக்கலாமாம். அதேசமயம், நோய் நொடி சம்பந்தப்பட்ட விளம்பரங்கள் குறித்து பாதிக்கப்பட்டவர், காவல் துறையிடம் புகார் செய்யலாம் அல்லது நுகர்வோர் நீதிமன்றத்திற்கு போகலாம் என்றும், இந்த இரண்டையும் தவிர வேறுவழி சட்டத்தில் இல்லை என்றும் குறிப்பிட்டார். விளம்பரப்படுத்தப்பட்ட ஒரு மாத்திரை, நான் குறிப்பிடுவதுபோல் பரவலாக சுகக்கேட்டை ஏற்படுத்தினால், அது வெளியே தெரிந்துவிடும் என்றும் வாதிட்டார்.

இதில் எனக்கு உடன்பாடு இல்லை காரணம் எல்லோருக்கும் காவல் துறையைப் பற்றியும் தெரியும். கன்ஸ்யூமர் கோர்ட்டைப் பற்றியும் தெரியும்.

பாதிக்கப்பட்டவர்களின் 'ஆனது ஆச்சு போனது போச்சு' என்ற மனப்பான்மையும் புரியும். இப்போது, இந்தப்பிரச்சினையை வழக்கறிஞர்களாலும் தீர்க்க முடியாது என்பதையும் புதிதாகத் தெரிந்து கொண்டேன். ஆகமொத்தத்தில், நாடுமுழுவதும் உள்ள ஏழை பாழைகள், விளம்பர -மருந்துகளை வாங்கி கடுமையாகப் பாதிக்கப்படுவது அல்லது இறந்துபோவது தொடரும் என்பதும் புரிந்து விட்டது. சிந்தனையாளரான செந்தில்நாதன் சொல்வது ஒருவேளை சரியாக இருக்கலாம். என்றாலும், இதை சரிபார்க்கும் பொறுப்பு இந்த கட்டுரையின் வாசகர்களைப் பொறுத்தது. ஏனென்றால், இது வாழ்வுரிமைப் பிரச்சினை. தீயில் விழும் விட்டில் பூச்சிகள் மாதிரியான பிரச்சினை. வளைக்குள் நயவஞ்சகமாக நீளும் நரியின் வாலை உணவுப் பூச்சி என்று நம்பி, கவ்விப்பிடித்து அந்த நரிக்கே இரையாகும் நண்டுகள் பிரச்சினை மாதிரி....,

என்றாலும், எனக்குத் தெரிந்து இதுஒரு பெரிய அரசியல்சாசனப் பிரச்சினையல்ல. ஒரு மருந்து மாத்திரை குறித்த விளம்பரம், வாய்மொழியாகவோ, பிரசுரமாகவோ, ஒலி -ஒளி பரப்புகளாகவோ வெளிப்படுவதற்கு முன்பு, இந்திய மருத்துவவல்லுநர்களையும், அலோபதிமருத்துவ வல்லுநர்களையும் கொண்ட ஒரு குழுவை அரசாங்கம் அமைக்கலாம். இந்தக்குழுவின் சான்றிதழ்கள் இல்லாமல், இத்தகைய விளம்பரங்கள் வெளிவரலாகாது என்று எச்சரிக்கலாம். இப்படி செய்தால், இது ஒரு ஆரோக்கியமான நடைமுறை ஆகும். மக்களின் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வழிமுறையாகும். உயிர்களோடு விளையாடுபவர்களை தடுத்து, அப்பாவிகளை, இவர்களிடம் இருந்து மீட்டுவிடலாம். எல்லோரும் கண்ணால் பார்த்து, காதால் கேட்டு ரசிக்கும் இந்தப் பட்டப்பகல் கொலைகார விளம்பரங்களை பார்த்துக்கொண்டு மத்திய அரசும், மாநில அரசும் கண்ணை மூடிக்கொண்டு இருப்பது இருக்கலாகாது. விளம்பரங்களை ஒழுங்குபடுத்த அனைத்துத் துறை வல்லுநர்களையும் கொண்ட குழுக்களை தேசிய, மாநில அளவிலும் அமைப்பதோடு, இந்த முறைகேடுகளை முடிவுக்கு கொண்டுவர தக்க சட்டங்களை இயற்றவேண்டும்.

நவசக்தி வார இதழ் - 1999.

# வரலாற்றுப் பின்னணியில் பேராசிரியர்

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பிறந்த காலக் கட்டத்தையும், இப்போதைய காலக் கட்டத்தையும் பின்னணியாகவும், முன்னணியாகவும் வைத்து, தமிழ் - தமிழனின் அன்றைய இன்றைய நிலைகளை நினைத்துப் பார்க்கிறேன். பவள விழாவிற்குக் கால் வைக்கும் பிற பெரியவர்களைப் பற்றி எழுதும் போது இந்த இருவேறு கால கட்டங்களை நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் எனக்கே ஏற்படாமல் போகலாம். ஆனால் பேராசிரியர் அன்பழக னாரின் வாழ்க்கை பழைய கால கட்ட த்தை மாற்றிய வரலாற்று ரீதியான சமூகப் போராட்டத்தில் பின்னிப் பிணைந்திருப்பதால் இவரது பவள விழாவில் ஒரு வரலாற்றுப் பதிவு அவசியமாகிறது.

**பேராசிரியரின் பிள்ளைப் பருவத்தில் தமிழின் இருண்ட காலம் விடியலை நோக்கி நகர்ந்தாலும் விடிவு ஏற்படாத காலம். ஆங்கில மருத்துவக் கல்வியில் பயில வேண்டும் என்றால் வடமொழி தெரிந்து இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்திய காலம். வடமொழி தேவ மொழியாகவும், தமிழ் நீச மொழியாகவும் கருதப்பட்ட கொடுங்காலம்.**

**இவற்றிகு எதிரான போராட் டத்தை கல்வி நிறுவனங்களுக்கு கொண்டு சென்றவர் பேராசிரியர் அன்பழகன்.**

## விடியலை நோக்கி...

பேராசிரியரின் பிள்ளைப் பருவத்தில் தமிழின் இருண்ட காலம், விடியலை நோக்கி நகர்ந்தாலும், விடிவு ஏற்படாத காலம். ஆங்கில மருத்துவக் கல்வி பயில வேண்டுமென்றால் வட மொழி அவசியம் தெரிந்திருக்க வேண்டுமென்ற பிறமொழி ஆதிக்கக் கொடுங்கோன்மை

ச-3.

நிலவிய காலம். வடமொழி தேவ மொழியாகவும், தமிழ் மொழி நீச மொழியாகவும் கருதப்பட்ட காலம்.

இந்தக் கால கட்டத்தில் மறைமலை அடிகள், திரு.வி.க. போன்ற தமிழ் அறிஞர்கள் ஒரு அறிவுப் போராட்டத்தை நடத்தியபோது, அதே போராட்டத்தை மக்களுக்கு அறிவிப்பாகச் செய்தவர்களில் குறிப்பிடத்ததக்கவர்கள் பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி.... இந்தப் போராட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் எடுத்துச் சென்றவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். தமிழாசிரியர்கள், கல்வி நிறுவனங்களில் கேலிப் பொருட்களாக, இளக்காரமாக நினைக்கப்பட்ட காலம் அந்தக்காலம். ஆங்கில, கணித ஆசிரியர்களிடம் பயபக்தியுடன் பழகும் மாணவர்கள், அதை ஈடு செய்யும் வகையில் அவர்களின் நையாண்டிக்குச் சுமைதாங்கியானவர்கள் தமிழாசிரியர்கள். புதுமைப்பித்தன் கூட, விவகாரத்தின் கனபரிமாணம் புரியாமல், தமிழாசிரியர் என்ற பாத்திரத்தை ஆண் சரஸ்வதி என்று கிண்டலாக வர்ணித்ததுண்டு. இத்தகைய காலக்கட்டம் மெல்ல மெல்லச் செத்துக் கொண்டிருந்தாலும், அது அரைகுறை உயிரோடு 1950ஆம் ஆண்டுவரை இருந்ததாக அனுமானிக்கிறேன்.

## பேராசிரியரும் - மாற்றப்பட்ட வரலாறும்

இத்தகைய வரலாற்றுப் போக்கை மாற்றி அமைத்ததில் பேராசிரியர் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அவரின் கண்ணியமான தோற்றம்-கறாரான உரையாடல் இவற்றுடன் ஒரு மாபெரும் இயக்கத்தில் தன்னைத் துணிச்சலாக இணைத்துக் கொண்டது. தமிழகத்திலுள்ள தமிழாசிரியர்களின் கூன்களை நிமிர வைத்தது. ஒரு தமிழ்ப் பேராசிரியர் போராளியாகவும், இருக்க முடியும் என்பதை பயந்த சுபாவம் உள்ள நமது தமிழாசிரியர்களை நினைக்க வைத்தவர். மொழி பண்பாட்டு மக்கள் போராட்டத்தில் முதல் தலைமுறையான பேராசிரியர் அன்பழகனே. இரண்டாவது தலைமுறையில் டாக்டர் தமிழ்க்குடிமகன், முனைவர்கள் டாக்டர் பொற்கோ, ச. மெய்யப்பன், இளவரசு, தி.சு. நடராசன், ஈரோடு தமிழன்பன், இன்குலாப், இரபீசிங், இராம குருநாதன் போன்ற தமிழாசான்கள் உருவாவதற்குக் காரணம். உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர்களை மற்ற மாணவர்களைப்போல் நையாண்டி செய்த மாணவர்கள்கூட, கல்லூரிகளில் தமிழாசிரியர்களைச் சுற்றி வலம்வர வேண்டிய காலக் கட்டாயத்தை மாணவர்களிடையே உருவாக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பேராசிரியர்கள் டாக்டர். மு. வரதராசனார், டாக்டர் வ. சுபமாணிக்கம், ஆ.மு. பரமசிவானந்தம், அ.ச. ஞானசம்பந்தம், அன்பழகன், அரசு மணிமேகலை போன்றவர்கள்.

## வெளியே போகாத வெளிநடப்பு

நான் கல்லூரி மாணவனாக இருந்தபோது நானே நடத்திய ஒரு வெளிநடப்பை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். அப்போது நான் தீவிரமான மாணவர் காங்கிரஸ்காரன்... வட சென்னையில் உள்ள சர் தியாகராயர் கல்லூரியின் தமிழ் மன்றத்தில் பேராசிரியர் பேசுகிறார். அவர் வடவர், இந்தி என்று பேசத் துவங்கினால் உடனே வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்ற திட்டத்துடன் நான் முதல்வரிசையில் உட்கார்ந்து இருந்தேன். அவரும் பேசினார். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் பேசினார். நான் வெளிநடப்பு செய்தேன். ஒற்றைக் காங்கிரஸ்காரனான என்னுடைய போக்கை, கழக மாணவர் கண்டிக்கவில்லை என்றால், அதற்குள்ள ஒரேயொரு காரணம், அவர்கள் பேராசிரியரின் பேச்சில் அப்படியே மயங்கிப் போனதுதான். நான்கூட அவரது தர்க்கரீதியான, சுவையான, இயல்பான பேச்சில் கட்டுண்டு பின்வரிசையில் உட்கார்ந்து, அவர் பேச்சை ரசித்ததையும், பின்னர் சிந்தித்ததையும் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

பேராசிரியரின் சொற்பொழிவு ஆற்று நீரோட்டம் போன்றது. பாய்ச்சலும் இருக்கும், பசுமையும் இருக்கும். ஒரு தோழர், தனது குடும்பத்தினருக்குத் தான் கண்டதையும், கேட்டதையும் எப்படி மனம் ஒன்றிச் சொல்வாரோ அப்படி இருக்கும் அவர் பேச்சு... கேட்டால் கேளுங்கள் கேட்காவிட்டால் போங்கள் என்ற பாவனையில் அவர் பேச்சுத் துவங்குவதுபோல் எனக்குத் தோன்றும். ஆனால் பேசப் பேச அவர் தனது பேச்சை நிறுத்தி விடக் கூடாதே என்ற ஒரு விருப்பத்தை ஏற்படுத்திவிடும். கொண்ட கருத்தும் கோணாமல் மேடைப் பண்பாட்டையும் மீறாமல் இயல்பாக இருக்கும். அவரது பேச்சில் நான் சொக்கிப் போனேன்.

## நோக்கும் போக்கும்

போராசிரியரின் நோக்கும், போக்கும் ஒரு துறவியின் தோரணையைப் போலத் தோன்றும். இப்படிப்பட்ட தோரணை பொது வாழ்வில் ஒருவரை வெற்றிகரமாக ஈடுபடுத்த முடியுமா என்ற கேள்வியையும் எழுப்பும். என்னுள்ளேயும் எழுப்பி இருக்கிறது. ஆனால் இந்தக் கேள்விக்கான திட்டவட்டமான பதில் அண்மையில் சென்னையில் நடைபெற்ற கலைஞரின் நெஞ்சுக்கு நீதி நூல் வெளியீட்டு விழாவில் எனக்குக் கிடைத்தது. அந்த விழாவில் பேராசிரியரின் உரை ஒரு தன்னிலை விளக்கமாக எனக்குத் தோன்றியது. அரசியலில் அவர் மேற்கொண்டிருக்கும் பரபரப்பற்ற நிதானமான போக்கு தற்செயலான ஒரு நிகழ்வல்ல என்பதும், அவர் தனக்குத்தானே அமைத்துக் கொண்ட ஒரு

வரைமுறை என்பதும் எனக்குத் தெளிவானது. கலைஞரின் வேகத்தையும், தனது நிதானத்தையும், சில நிகழ்ச்சிகள் மூலம் குறிப்பிட்டார். கலைஞரின் செயல்பாட்டுத் திறனையும், தனது தீர்க்க தரிசனமான சிந்தனைப் போக்கையும் ஒப்பிட்ட பேராசிரியர், இருவருக்குமிடையே நிலவும் அணுகுமுறை "வேற்றுமைகளில்" ஒரு ஒற்றுமை நிலவுவதை சொல்லாமலே உணர்த்திவிட்டார். ஒரு நாணயத்தின் அசோக சக்கரம் கலைஞர் என்றால், அந்த நாணயத்தின் மறுபக்கத்தின் குறியீடு பேராசிரியர்.

ராம, லட்சுமணர்களிடம் ஒற்றுமை இருந்தாலும், அது ஆண்டான் அடிமை உறவு. புதிய இராம லட்சுமணர்களான கலைஞருக்கும் பேராசிரியருக்கும் உள்ள உறவு ஒரு தோழமை உறவு. பேராசிரியரும், கலைஞரும் பொது நிகழ்ச்சிகளிலும், செய்தியாளர்கள் கூட்டத்திலும் ஒருவருக்கொருவர் பழகும் விதத்தை நான் பத்திரிகையாளன் என்ற முறையில் ரசிப்பதுண்டு. பேராசிரியரின் மௌன சம்மதத்தை அவரது முகபாவம் மூலம் வாங்கிக் கொண்டே சில திடீர்ப் பிரச்சினைகளுக்கு பதிலளிப்பவர் கலைஞர். எனக்குத் தெரிந்த அரசியலில் இப்படிப்பட்ட இணையான தோழமையை நான் கண்டதில்லை. வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால், இந்த இணைக்கு முன்னோடிகளாக கார்ல் மார்க்சும், ஏஞ்செல்சும்தான் நினைவுக்கு வருகிறார்கள்.

இன்றைய தமிழர்கள் சாதிச் சண்டைகளில் உடல் சிதைந்து, அந்நியக் கலாச்சாரப் படையெடுப்பால் மனம் சிதைந்து கிடக்கிறார்கள். கலைஞர், பேராசிரியர் காலத்துக்குப் பிறகு, இவர்கள் என்ன ஆவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த "அறியாத் தமிழர்களின் அந்நிய மோகம்" இவர்களை என்ன பாடுபடுத்தப் போகிறதோ என்ற ஆதங்கம் ஏற்படுகிறது.

எனவே, பேராசிரியர் அவர்கள் மேன்மேலும் விழா காண வேண்டுமென்பதும், அந்த விழாவில் கலைஞரும் கலந்துகொள்ள வேண்டுமென்பதும் எனது நெஞ்சார்ந்த விருப்பம். எல்லைக் காந்திகான் அப்துல் கபார்கான் நாட்டுப் பிரிவினையின்போது சொன்னதைச் சிறிது மாற்றிச் சொல்ல வேண்டும்போல் தோன்றுகிறது.

"ஏய், இயற்கையே! தயவு செய்து மூப்பைச் சாக்காகக் கட்டி எங்கள் தலைவர்களை எங்களிடமிருந்து பிரித்தெடுத்து எங்களை ஓநாய்களிடம் ஒப்படைத்து விடாதே.... அவர்களை பல்லாண்டு, பல்லாண்டு வாழ வைப்பாயாக...."

பேராசிரியர் பவளவிழா மலர் – 1998.

# சீர்வரிசை முகமூடிகள்

பெண்ணியம் பெரிதாகப் பேசப்படுகிற காலம். இன்னும் அதிகமாகப் பேசப்பட வேண்டிய காலக்கட்டம். எல்லாச் சமயங்களும் முடக்கிவைத்த பெண்ணினத்தின் இன்றைய தலைமுறை, பெண்ணியக் கத்தை விடுதலை வேள்வியாக நடத்தி வருகிறது. உடன்கட்டை என்ற பெயரில் பெண்களை, இறந்த கணவனின் சிதையில் சேர்த்து எரித்தது போன்ற கடந்தகால சுமையோடு, 'சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை ஆண் பிள்ளையே' என்ற பழமொழி ஊர் முழுக்க நிலவும் நிகழ்கால விலங்கோடு, தவிப்பது தெரியாமலே தவிக்கிறது பெண்ணினம். இதன் போராளிகள், தங்களுக்காகவும், தங்களது சகப்பெண்களுக்காகவும் போராடி வருகிறார்கள். இது வரவேற்கத் தக்கது. பொதுவாக, அடிமைப்பட்ட நாடோ அல்லது இனமோ தங்களை அடக்கி வைத்த அந்நியர்களுக்கு எதிராகவே போராட வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால், பெண்களுக்கோ தங்களது உரிமைப் போராட்டத்தை குடும்பத்தினருக்கு எதிராகவே நடத்த வேண்டிய, விருப்பத்திற்கு விரோதமான சூழல் நிலவுகிறது.

**பெண்களுக்கான சொத்துரிமை மறுப்பு இன்றைய பெண்ணியப் போராளிகளின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற வில்லை. பெரும்பாலான பெண்ணிய போராளிகளுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில், மாராப்பு போடும் உரிமை கேட்டு 35 ஆண்டுகாலம் எளிய பெண்கள் நடத்திய போராட்ட வரலாறு தெரியாது.**

**பெண்ணியம் என்பது நடுத்தர வர்க்கத்திலிருந்து விடுபட வேண்டும். தோள் சீலைப் போராட்டமே பெண்ணியப் போராட்டத்தின் வரலாற்றில் பிள்ளையார் சுழியாக இருக்க வேண்டும்.**

இதனால் ஏற்புடுகிற தாட்சண்யம், பெண்விடுதலையை தாமதப்படுத்துகிறது. தம்பியின் படிப்பிற்காக அக்காளும், அல்லது அண்ணனின் படிப்பிற்காக தங்கையும் தத்தம் படிப்புரிமையை விட்டுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்தக் கட்டாயத்தால் இந்தப் பெண்களின் வாழ்வுரிமைகூட பாதிக்கப்படுகிறது.

**சொந்தமண்ணைப் புதைத்தவர்கள்**

என்றாலும், இன்றைய பெண்ணிய இயக்கம் சரியான பாதையில் போகிறதா என்பதே கேள்வி. எல்லா உரிமைமீட்புப் போராட்டங்களையும் மேட்டுக் குடியினரே கைவசப்படுத்தி இருப்பதுபோல், இன்றைய பெண்ணிய இயக்கத்தையும், பெரும்பாலும் இந்த குடியினரே கையகப்படுத்தி இருக்கிறார்கள். இதற்கு பெரும்பாலும் விதிவிலக்காக இருப்பது பாப்பா உமாநாத், மைதிலி சிவராமன், உ. வாசுகி ஆகியோரைக் கொண்ட அகில இந்திய ஜனநாயக மாதர் மன்றம் மட்டுமே. பெண்ணியத்தின் பெயரால், இவர்கள்போடும் கலை நிகழ்ச்சிகள் மேட்டுக்குடிப் பெண்கள் வட்டத்தையே சுற்றிச் சுற்றி வருகின்றன. இவர்களுக்கு, அடித்தளப் பெண்களின் பிரச்சினைகள் அதிகமாத் தெரியாது. இந்த அடித்தளத்தின் முந்தைய வரலாறும் இவர்கள் அறவே அறியாதது. இவர்களுக்கு, பெண்ணினத்திற்காய் குரல் கொடுத்த அன்னி பெசன்ட், சரோஜினி தேவி, டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி, பியாட்ரிஸ் வெப் போன்ற போராளிப்பெண்களை அதிகமாகத் தெரியும்.

கன்னியாகுமாரி மாவட்டத்தில் 19-ஆம் நூற்றாண்டில் மாராப்புச் சேலை போட உரிமைவேண்டும் என்று 35 ஆண்டுகாலம் போராடிய தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட பெண்போராளிகளின் போர் முகம் தெரியாது. "தோள் சீலைப் போராட்டம்" என்று அரைகுறையாக அறியப்பட்ட இந்த மகத்தான உரிமைப் போராட்டம், சிவகாசி வரைக்கும் வந்ததோ, இந்தப்பெண்கள் மாராப்பு போட்ட ஒரே காரணத்திற்காக, நிர்வாண மாக்கப்பட்டு, மானபங்கப் படுத்தப்பட்டதோ, இவர்களின் உரிமையை டில்லி உயர்நீதி மன்றமும், லண்டன் உயர்நீதி மன்றமும் நிராகரித்ததோ, இன்றைய பெண்ணியக்க வாதிகளுக்கு துளிகூடத் தெரியாது. பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை மன்றம் இவர்கள் மாராப்பை முற்றிலுமாக போடக்கூடாது என்றும், அதேசமயம் மார்பகத்தை மறைக்கும் அளவிற்கு போட்டுக்கொள்ளலாம் என்றும், மதவாத பத்தாம் பசலித்தனத்திற்கு பாதுகாவலாகவும், பெண்ணுரிமைக்கு தோழமையாகவும், ஒரு தீர்ப்பை வழங்கியதும் தெரியாது. சொந்த மண்ணை,. இன்னொரு மண்ணில் புதைப்பது தெரியாமலே புதைத்தவர்கள் இவர்கள்.

**சமூகக்காரணிகள்**

ஆனாலும், இப்போதைய பெண்ணியவாதிகளும், தங்களுக்குத்

தெரிந்த தளத்தில் இருந்து போராட்டங்களை விசுவாசமாக நடத்தி வருகிறார்கள். அதேசமயம், ஒரு வரலாற்றுப் பார்வையோடு தங்களது பெண்ணியத் தளத்தை விரிவாக்க வேண்டுமென்ற சிந்தனை, இவர்களிடம் அதிகமாகக் காணப் படவில்லை. ஆகையால், எந்த முப்பாட்டிகள் மாராப்பு உரிமைக்காகப் போராடினார்களோ, அவர்களின் பேத்திகளால் நடத்தப்படாதவரை, பெண்ணுரிமைப் போராட்டம் முழுமையாகாது. இதுவரை மேட்டுக்குடி அல்லது நடுத்தட்டு பெண்களின் பிரச்சினையே பெண்ணிய பிரச்சினையாகத் திணிக்கப்படுகிறது. பத்திரிகைகளின் வாய்களிலும், பேச்சாளர்களின் வாய்களிலும் அடிக்கடி அடிபடும் வரதட்சணை பிரச்சினை இதற்கு எடுத்துக்காட்டு. இந்தப் பிரச்சினைதான் பெண்ணினத்தின் மிகப்பெரிய பிரச்சினைப் போல் பேசப்படுகிறது. ஒரு கத்துக்குட்டி கவிஞன்கூட, இந்த கொடுமையை எதிர்த்துத்தான் முதலில் கவிதை எழுதுகிறான். கிராமத்து பெண்களுக்கும், அடித்தளப் பெண்களுக்கோ இந்த விவகாரம் பெரிய பிரச்சனையே இல்லை. இதற்கு சமூகரீதியான காரணிகள் உண்டு.

## சொத்துரிமை மறுப்பு

இந்தக் கிராமத்துப் பெண்களுக்கு, உரித்தான பெற்றோர் வழிச் சொத்துக்கள் மறுக்கப்படுகின்றன. புகுந்த வீட்டிலும் கணவன் சின்னவயதிலேயே இறந்துவிட்டால், இந்தப் பெண்கள் குழந்தைகளோடு அடித்துத் துரத்தப்படுகிறார்கள். இந்தச் சொத்துரிமை-மறுப்பு, இன்றைய பெண்ணிய போராளிகளின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறாதவை. காரணம் இவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் பெண்கள் பெரும்பாலும் சமூகத்தின் மத்திய தட்டில் உள்ள மாதச்சம்பளத்தினர். இவர்களுக்கு படிப்பும், வேலையும் மட்டுமே மூலதனம். வாடகை வீடும், வட்டி பெருகிய கடனுந்தான் பெற்றோர் கொடுக்கும் சீதனம்.

இதனால், இவர்களை, கணவன்மாரும், மாமியார்களும் கூட்டணிவைத்துக் கொடுமை படுத்துகிறார்கள். இது வன்முறையாகும்போது “ஸ்டவ்” வெடிக்கிறது. பரிதாபத்துக்குரிய இந்தப் பெண்களுக்கு கைகொடுக்க வேண்டியது, ஒரு போராளிப் பெண்ணுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு ஆணுக்கும் கடமையாகும். ஆனால், இதுமட்டுமே, ஒரே நிகழ்வாக இருக்க முடியாது. இவர்களுக்கு சொத்துரிமையை வற்புறுத்த முடியாது என்பதாலேயே, பெண்களின் சொத்துரிமைப் பிரச்சினையை ஒப்புக்குப் பேசுவதும், நியாயமாகப் படவில்லை.

## இழப்புத் தொகை

இத்தகைய நடுத்தட்டுப் பெண்கள் பிரச்சினையை ஒதுக்கி

விட்டு, பொதுவாக கிராமப் பெண்களின் நிலைமையை எடுத்தால், இவர்களின் திருமணங்களில் வழங்கப்படும், வரதட்சணை என்பதும், நகைநட்டுகளும், குடும்ப சொத்தில் உரியபங்கு இவர்களுக்கு போய்ச்சேராமல் தடுப்பதற்காக கொடுக்கப்படும் இழப்புத்தொகையே. தென் மாவட்டங்களில் இதை 'சுருள்' என்று சொல்கிறார்கள் இப்போது வரதட்சணை தடுப்பு சட்டத்திற்குப் பயந்து அன்பளிப்பு என்கிறார்கள். பொதுவாகவே, ஒரு கிராமியக் குடும்பத்தில் ஆண்பிள்ளைதான் பரம்பரை சொத்துக்கு உரியவன் என்ற முறைமையே நிலவுகிறது. (இப்படிச் சொல்வதால் நகரங்களில் இது நிலவவில்லை என்றும் பொருளாகாது.) இந்த மனப்போக்கில்தான், ஆணும் பெண்ணும் வளர்க்கப்படுகிறார்கள். நமது அரசாங்க குடும்பநல விளம்பரத்தில்கூட, ஒரு காலத்தில் ஆசைக்கு ஒரு பெண் ஆஸ்திக்கு ஒரு ஆண் என்ற வாசகமே மேலோங்கி நின்றது.

### அம்மான் என்ற முறை வார்த்தை

அண்மைக்காலம்வரை, பெண்களுக்கு, சொத்துக்குப் பதிலாக, அதற்குக் குறைவான சலுகைகள் வழங்கப்பட்டன. ஒரு சிறுமி பூப்பெய்தால், தாய்மாமன், சீர் செய்யவேண்டும். இந்தச்சீர், இந்த மாமன், இந்தப்பெண்ணின் அம்மாவான தனது சகோதரிக்கு சேரவேண்டிய சொத்துக்காக, இவனை அறியாமலேயே, இவன் கொடுக்கும் இழப்புத் தொகையாகும். இதேபோல் ஒரு பெண், திருமணமாகி புகுந்தவீடு சென்றாலும், ஆடிமாத அம்மன் கொடைகளிலும், தீபாவளி, பொங்கல் போன்ற திருநாட்களிலும், இவளுக்கும், இவள் கணவனுக்கும் பிறந்தவீடு, சீர் செய்வது மரபு. இந்தப் பெண்ணின் முதல் பிரசவம், தாய்வீட்டிலேயே நடைபெறும். பிறக்கிற பிள்ளைக்கு கையில் மோதிரமோ அல்லது வெள்ளி அரைஞாண்கயிறோ போடுவது ஒரு வழக்கம்.

தாய் இறந்த பிறகு, அவளது நகைகளும் மகள்களுக்கே போய்ச்சேரும். இவள்களின் பிள்ளைகளுக்கு, தாய்மாமன் வாழ்க்கை முழுவதும் ஏதாவது ஒன்றை செய்துகொண்டிருக்க வேண்டிய கட்டாய சமூகக் கடமை இருந்தது. இதனை முறைப்படுத்துவது மாதிரி, சகோதரி மகனின் ஜாதகம், தாய் மாமனுக்குத்தான் முதலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற மரபும் நிலை நாட்டப்பட்டது. தந்தையைவிட, தாய்மாமனே ஒரு பிள்ளைக்கு ஜாதக ரீதியில் பெரிதாகக் கருதப்பட்டான். இதனால்தான், அம்மா என்ற பெண்பாலுக்கு, அம்மான் (தாய்மாமன்) என்ற வார்த்தை ஏற்பட்டது. பழைய தலைமுறையினர் தாய்மாமன்களை அம்மான் என்றே அழைத்தார்கள். பிள்ளைகளின் தந்தைவழி பாட்டன், தாத்தா என்றும்; பாட்டி, அய்யாமை என்றும் அழைக்கப் பட்டார்கள். ஆனால், தாய்வழி பாட்டன்

வளத்தய்யா என்றும், பாட்டி வளத்தம்மா என்றும் அழைப்பட்டார்கள். பொதுவாக, இந்தப் பாட்டிகள், மகள் வழிப்பேரன் பேத்திகளை, தமது அருமை மகளும், அற்புதமான மருமகனும் சேர்ந்து பெற்ற பிள்ளைகள் என்று கருதுகிறார்கள். மகன் வழிப்பேரப்பிள்ளைகளையோ, தமது பைத்தியக்கார மகனும், தனது ஜென்ம எதிரியும் சேர்ந்து பெற்ற பிள்ளைகளாகவே கருதுவதுண்டு.

இப்படி ஒரு பெண் புகுந்தவீட்டிற்குப் போனபிறகும், பிறந்த வீட்டில் தொடர்ந்து சீருசெனத்திகளை வாங்கிக் கொண்டிருந்தாள். இவளும், இந்த சீர் மயக்கத்தில் தனக்குக் கொடுக்கப்படுவது. தனக்குச் சேரவேண்டிய சொத்திற்கான சொற்பமான இழப்பீட்டு தவணைத்தொகை என்பதை மறந்து விட்டாள். இதனால் தேவைப்படாத சூழல்களில்கூட, பிறந்த வீட்டு பெருமையைப் பேசினாள். இவளது தாலாட்டுப் பாடல்களில்கூட, கணவனை மென்மையாய் மட்டம்தட்டியும், உடன்பிறப்பை உச்சாணிக்குத் தூக்கியும் ஒலித்தாள். இப்படியாகவே, இந்தக் கிராமத்துப்பெண் சொத்துரிமை பற்றி நினைக்க முடியாத அளவிற்கு வளர்க்கப்பட்டாள். நடத்தப்பட்டாள்.

### அக்கா, மாமியாரான கதை

இப்போதோ காலம் மாறிவிட்டது. அம்மான் என்ற தாய்மாமன் இப்போது முறைமாமன் ஆகிவிட்டான். இவனும் மாப்பிள்ளை முறுக்கில் அக்காவை மாமியாராகவே பார்க்கிறான். கிராமத்து சீருசென நேர்த்திகளும் குறைந்துகொண்டே வருகின்றன. வாழ்க்கைப்போராட்டமோ பெருகிக் கொண்டே போகிறது. கூடவே ஆடியோ வீடியோ கலாச்சாரம், செயற்கைத் தனமான திரைப்படங்கள், கிராமிய கட்டுமானத்தை, குடும்ப நிலைய்யில் இருந்தே சிதைத்துக்கொண்டு இருக்கின்றன. 'மாப்பிள்ளை முறுக்கு மாமியாரோடு போச்சு' என்பது பழமொழி. அதாவது மாமியார் இருப்பது வரைக்குந்தான் மருமகப்பிள்ளை, மனைவியை அடித்தோ, அடிக்காமலோ, பிறந்த வீட்டிற்கு அனுப்பி, வாங்கவேண்டியதையும், வாங்கக்கூடாததையும் பெறமுடியும். மாமியார் போய்விட்டால் 'உன் பெண்டாட்டியை இங்கே ஏன் அனுப்புறே' என்று மைத்துனர்கள் அந்தக் காலத்திலேயே கேட்டதாக பழமொழி ஆவணம் கூறும்போது, இந்தக் காலத்தைப்பற்றி கூற வேண்டியதில்லை.

இப்படி ஒரு பெண், தனது சொத்துரிமையை விட்டுக் கொடுத்த போதும், சொந்தக் காலில் நிற்கமுடியாமல் நொண்டியடிக்கிறாள். பிச்சைக்காரியைவிட கேவலமாக நடத்தப்படுகிறாள். வேறுவழியில்லாமல் உதைக்கிற காலுக்கே முத்தம் கொடுக்கிறாள்.

எனவே, ஒரு பெண் எந்தத்தட்டில் இருந்தாலும் தனக்குச்சேர வேண்டிய சொத்தோடோ அல்லது கடனோடோ, ஒரு ஆணோடு தன்னுடைய வாழ்க்கையைத் துவக்க வேண்டும். அந்த ஆணுக்கு, எப்படி தன் பெற்றோரை கவனிக்க வேண்டியது ஒரு கடமையோ, அதுபோல் இவளுக்கும், தன் பெற்றோரை கவனிக்க வேண்டியது கடமையாக்கப்பட வேண்டும். இந்தக் கடமையை நிறைவேற்றும் உரிமை இவளுக்கு இருக்க வேண்டும். பெண்கள் பொருளாதார ரீதியில் சொந்தக்காலில் நிற்கமுடியாது போவதாலேயே, அவர்கள் இழிவுபடுத்தப் படுகிறார்கள். சொத்துரிமை என்ற பொருள் உரிமையோடு, அவர்கள் திருமண வாழ்க்கையை துவக்கினால், மாமியாரின் ஏச்சுக்கோ, மாமனாரின் நையாண்டிக்கோ இடமில்லாமல் போய்விடும். ஒரு லட்ச ரூபாய் சொத்தில், ஒரு பெண்ணிற்கு அறுபதாயிரம் ரூபாய் அளவிற்கு சீர்வகை செய்தாலும், இத்தகைய மாமியார்த்தன்மான முணுமுணுப்புக்கள் நிலவும். அதே பெண்ணிற்கு, அவளுக்குரிய ஐம்பதாயிரம் ரூபாய் சொத்தை பிரித்துக் கொடுத்தாலோ, அதற்குரிய சந்தை விலையை வெளிப்படையாகப் பேசிக்கொடுத்தாலோ, பெண்ணுரிமை முழுதும் முன்னேறாது போனாலும் பெருமளவு முன்னேறும்.

இப்படி பட்டவர்த்தனமாக சொத்தை பங்கீடுசெய்தால், பந்தபாசத்திற்கு இடமில்லாமல் போய்விடும் என்று நினைக்கலாம். பந்தபாசத்தை மகன்கள் சொத்தாக பார்க்கும்போது, பெண்களும் அப்படிப் பார்ப்பதில் தவறில்லை. இன்றைய சீர்முறைகள் பிறந்தவீட்டிற்கு வரும் பெண்ணை தாழ்வு மனப்பான்மையில்தான் ஆழ்த்துகின்றன. நாத்தனார்களின் முகச்சுழிப்பால் இவர்கள் அனிச்சை மலராகிறார்கள். ஏழுபிள்ளை நல்லதங்காள் கதை இதைத்தான் எடுத்துக் கூறுகிறது. மாண்புகளை மேலோங்கச் செய்ய மரபுகளை மாற்றிக்கொள்ளலாம். இத்தகைய சொத்துரிமை பலத்தால், ஒரு பெண், தன்னை கணவனுக்கு இணையாக நினைக்க முடியும். இத்தகைய சொத்துரிமைதான், இவர்களுக்கு சுயமரியாதையைக் கொடுக்க முடியும். இந்த உரிமையை மூடிமறைப்பதற்காக போடப்படும் நகைநட்டுக்கள், இவர்களை நகைப்பிற்கு இடமாகவே ஆக்கிவருகின்றன.

எனவே, இன்றைய பெண்ணியப் போராளிகள், இந்த சொத்துரிமைப் போராட்டத்தையும் தங்கள் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்வதோடு, அடித்தளப் பெண்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ள இரங்கி வரவேண்டும், இறங்கியும் வரவேண்டும்.

நவசக்தி வார இதழ் – 1999.

# படைப்பாளியும் தாய்மொழியும்

ஒரு படைப்பாளிக்கு தாய் மொழி ஞானமும், பற்றும் தேவையா?

பல்வேறு பத்திரிகைகளில், தொலைக் காட்சிகளில் இந்தக் கேள்விக்கு எதிர்மறையாக, இலைமறைவு காய்மறைவாய் பேசப்பட்ட கருத்து, அண்மையில் சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்பில் நடந்த, இந்திய பல்கலைக் கழக தமிழ் ஆசிரியர் மன்றத்தின் 30-வது கருத்தரங்கில் ஒரு விவகாரமாக மாறியிருப்பது வரவேற்கத்தக்கது. 'தொல்காப்பியம் படித்துவிட்டு, நான் எழுத வரவில்லை.' என்று 'வாழும்போதே வரலாறான' ஒரு எழுத்தாளர் தெரிவித்த கருத்து தாய்மொழியை மதிக்காமல், அவர் புறக்கணிப்பதாக அனுமானித்து காரசாரமாக விவாதிக்கப் பட்டுள்ளது. இதில் உரை யாற்றிய மன்றத் தலைவர் முனைவர் தமிழண்ணல், இந்தப் போக்கை முறியடிப்பதற்காக, அடுத்த ஆண்டில் இருந்து தமிழாசிரியர்கள் படைக்கும் ஆய்வுக்கோவைகளில் ஒன்று

**நமது தேசியக்கொடி வெறும் துணியினால் ஆனதுதான். ஆனால் அது புனிதமாக போற்றப் படுகிறது. இந்தக் கொடி அவமரியாதை செய்யப்பட்டால் விளைவுகள் விபரீதங்களாகும்.**

**மொழி என்பதும் எழுத்துக் களால் ஆனதாய் இருக்கலாம். ஆனாலும் தேசிய கொடியைப் போல் இதுவும் புனிதமானது. இன்னும் ஒரு படி அதிகமானது.**

**<u>இப்படிப்பட்ட</u> தாய்மொழியை சிதைப்பதற்கோ, படிக்கமுடியாது என்று மார்தட்டுவதற்கோ எந்த எந்த எழுத்தாளனுக்கும் உரிமை இல்லை.**

படைப்பு இலக்கியமாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார். இந்தக் கருத்தரங்கில் தலைமைவகித்துப் பேசிய அமைச்சரும் முனைவருமான தமிழ்க் குடிமகன், இதே தொல்காப்பிய விவகாரத்தைச் சுட்டிக் காட்டி, ஆணவ எழுத்தாளர்களை புறக்கணிக்க வேண்டும் என்றும், படைப்பாளிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதே தமிழாசிரியர்கள்தான் என்றும், சக ஆசிரியர்களுக்கு 'அடி' எடுத்துக் கொடுத்திருக்கிறார்.. தமிழ் வாக்கியங்களில் ஆங்காங்கே அடைப்புக்குறி இல்லாமல் ஒரு தமிழ் வார்த்தை போலவே ஆங்கிலத்தை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுவதும், தலைப்புகளுக்கே ஆங்கில பெயரிடுவதும், ப்,க் போன்ற ஒற்றெழுத்துக்களை முதலெழுத்துக்களாக வைத்துப் பெயர்சூட்டிக் கொள்வதும் இதேமாதிரி வாக்கியங்களைத் துவக்குவதும் பல எழுத்தாளர்களுக்கு ஒரு பாணியாகி விட்ட சூழலில், தமிழாசிரியர்களின் சினம் நியாயமானதே.

### படைப்பிலக்கியமும், தொல்காப்பியமும்

சம்பந்தப்பட்ட எழுத்தாளர், தமிழ்ப்புலமையால் படைப்பிலக்கியம் ஆக்க முடியாது என்ற தொனியில் கருத்து தெரிவித்து இருக்கலாம். தொல்காப்பியம் படித்துவிட்டுத்தான் ஒருவர் படைப்பிலக்கியம் செய்ய வேண்டியதுமில்லை. இது வற்புறுத்தப்பட்டால், பெரும்பாலான படைப்பாளிகள் மிஞ்சமாட்டார்கள். அதேசமயம் ஒரு எழுத்தாளர், படைப்பாளியாய் பரிமாணப்பட்டு, நாடறிந்த படைப்பாளியாகி, அவரது கருத்துக்களை சமுதாயம் உன்னிப்பாக செவிமடுக்கும் நிலைமை ஏற்படும்போது, சம்பந்தப்பட்ட படைப்பாளி, தொல்காபியம் போன்ற நமது முன்னோர்களின் மூலநூல்களை படிக்கவேண்டும். - இயலாதுபோனால் குறைந்தது அவைபற்றிய கட்டுரைகளையாவது படிக்க வேண்டும். தொல்+காப்பு+இயம் என்று பிரித்துப் பார்த்தால், பழமைமையைக் காத்து இயம்பும் நூல் தொல்காப்பியம் எனப்படும். இப்படிப் பட்ட நூல்களைப் படித்தால்தான், இன்றைய படைப்புக்களையும் கட்டிக் காக்க வேண்டுமென்று எதிர்கால சந்ததியினர் நினைப்பார்கள். எனவே இது எழுத்தாளனின் படிப்பாளித்தனத்தைப் பற்றியது அல்ல. அவன் தன் தாய்மொழி மூலம் தனது தொன்மங்களை எப்படி நேசிக்கிறான் அல்லது பார்க்கிறான் என்பது சம்பந்தப்பட்ட இன்றைய தேவை.

தொல்காப்பியம் போன்ற நமது முன்னோர் நூல்கள் படைப்பாளிகளால் அலட்சியப் படுத்தக் கூடியவை அல்ல.

எதுகை, மோனை, முரண்தொடை, இயைபு, அளபெடை, பொழிப்பு, செந்தொடை உள்ளிட்ட 13,669 தொடைகளை எடுத்தாண்டு, தொல்காப்பியம், தனக்கு முன்னிருந்த இலக்கியங்களை வகைப்படுத்திய நூலாகும். இந்த வகைப் படுத்தல் கணிப்பொறி இல்லாத காலத்திலேயே சுவடிகளில் எழுதப்பட்டுள்ளது. இன்று பேசப்படும் இலக்கிய அமைப்பியலுக்கு வழிவகுப்பதும் தொல் காப்பியமே.

நமது தமிழ் முன்னோர்களின் ஐந்திணை ஒழுக்கம், எந்த மொழி இலக்கியத்திலும் இல்லாதது. இத்தகைய தொல்காப்பியத்தையும், சங்க இலக்கியத்தையும், ஐம்பெரும் காவியங்களையும், பக்தி இலக்கியங்களையும் படிக்கவேண்டியது மெய்யான தமிழ் எழுத்தாளர்களின் கடமையாகும் இவற்றைப் படித்தால், நாம் இன்னும் சங்க இலக்கிய நாடகபாணி காதல் நிகழ்ச்சிகளை கவின்படத் தாண்டவில்லை என்பது புரியும்.

'பெரியவர் என்று வியத்தலும் இலமே' என்று பாடிய நம் முன்னோன் கணியன் பூங்குன்றனின் அன்றைய முழக்கம் இன்றைய தனிநபர் வழிபாட்டையும், சினிமாத்தனங்களையும் எழுத்தால் வீழ்த்துவதற்கு உதவும். அதோடு, சங்கக் காலத்திலேயே மென்மையான காதலுக்கும் திணை ஒழுக்கத்திற்கும் தகுதியற்றவர்களாக கருதப்பட்ட கடைசியர்களை புரிந்து கொள்ளவும், 'நான் ஆழ்கடலில் பெரிய சுறாமீன்களை கூறுபோடும் பரதனின் மகள். உன்னைவிட சிறப்பான இளைஞர்கள் எம்குலத்திலும் உளரே' என்று நற்றிணையில் காதலனை அதட்டிப் பேசிய ஒரு புரட்சிப் பெண்ணை அடையாளம் காணவும் முடியும். தமிழை, ஆரவார முழக்கமாக்கி, பழமை மீட்பு வாதத்தில் ஈடுபடும் பத்நாம் பசலிகள் மீது இந்த ஞானத்தின் மூலம் உருவாகும் படைப்பிலக்கியத் தேரில் இருந்து அம்பிடமுடியும். எனவே, நமது பண்டைய இலக்கியங்களை படிக்க வேண்டியது ஒரு தமிழ் எழுத்தாளனின் கட்டாயக் கடமை.

### கொடியும்-மொழியும்

பொதுவாக, ஒரு சிலரைத்தவிர, நமது தமிழ் கவிஞர்கள் தாய்மொழியான தமிழில் ஆழ்ந்த அறிவும் தீராத பக்தியும் கொண்டவர்கள். இதற்கு மாறாக இருப்பவர்கள் பிரபல எழுத்தாளர்களில் பெரும்பாலோர். இவர்களுக்கு மொழி என்பது ஒரு கருவியே. ஒரு இலக்கியக் கூட்டத்தில் ஒரு உலகளாவிய இதழாசிரியர் ஒருவர் மொழி நமது அடிமை, வேலைக்காரன் என்று கூட குறிப்பிட்டார். இது அடாவடித் தனமானது.

நமது தேசியக் கொடி, வெறும் துணியினால் ஆனதுதான். ஆனாலும் அது புனிதமாகப் போற்றப் படுகிறது. அது கிழித்துப் போடப்பட்டாலோ அல்லது அவமரியாதை செய்யப்பட்டாலோ விளைவுகள் விபரீதங்களாகும். மொழி என்பதும் அந்தத் துணியைப் போல் எழுத்துக்களால் ஆனதாக இருக்கலாம். ஆனாலும் தேசியக்கொடியைப் போல் இதுவும் புனிதமானது. இன்னும் ஒருபடி அதிகமானது.

## மூதாதையர் வழியான பதிவுகள்

அதோடு, தாய்மொழி என்பது, உடல்- உயிர் தொடர்புடையது. நமது உடம்பில் உள்ள கோடிக் கணக்கான செல்கள் ஒவ்வொன்றிலும், ஜீன் என்ற ஒரு சின்னஞ்சிறு திரள் உள்ளது. இது, இன்றைய கணிப்பொறியில் உள்ள சிலிக்கான் மாதிரியானது. நமது முப்பாட்டன் உள்ளிட்ட முன்னோர்களின் துயரங்கள், துக்கங்கள், வெற்றிப் பெருமிதங்கள் முதலிய அத்தனை உணர்வுகளும் நமது ஜீன்களில் பதிவாகி உள்ளன. இந்தப் பதிவுகளின் அடிப்படையில் இப்போதையப் பதிவுகளையும் உள்வாங்கி நாம் செயல்படுகிறோம் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மை. நமது முன்னோர்கள், மனதளவில் எந்த மொழியில் குதூகலித்தார்களோ அல்லது குமுறினார் களோ - அத்தனை உணர்வுகளும், அதே மொழியில் நமது ஜீன்களில் பதிவாகி உள்ளன. இத்தகைய பல்லாயிரத்தாண்டு தலைமுறைவழி தாய்மொழியை -அது எந்த மொழியாக இருந்தாலும், இதைப் புறக்கணிக்கும் அந்த மொழி எழுத்தாளன் சமூகத்திற்கு பயன்படமாட்டான். தாயை, அவளது சகலவித பலத்தோடும் பலவீனத்தோடும் நேசிக்கா தவன் தான், தன் மொழியை நேசிக்க மாட்டான். இப்படிப்பட்ட எழுத்தாளனின் படைப்புக்களும் சமூகத்தால் ஒதுக்கப்படும். காரணம் இவர்களது எழுத்தில் தார்மீகக் கோபமோ, உரிமைத்தனமான சாடலோ, மனிதநேயமோ இல்லாமல், போலித்தனமும், வியாபாரத்தனமான புதுமைகளுமே மிஞ்சி நிற்கும்.

## தமிழ்ப்பற்றாள கவிஞர்கள்

தமிழின் அனைத்து வகை இலக்கியத்திலும் தடம் பதித்தவர்கள் தாய்மொழியான தமிழ் மொழியைப் போற்றியிருப்பதைப் பார்க்கலாம். புறநானூற்றில் '**தமிழ்கெழு கூடல்**' என்று மொழிவளம் சுட்டிக் காட்டப் படுகிறது. **சைவத்தின்** அடிநாதமான திருமந்திரத்தில் - ஈசனோடாயினும் ஆசையறுக்க வேண்டும் என்று இயம்பிய பற்றற்ற ஞானியான

திருமூலர் 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்; தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று பாடினார். கம்பன் 'முத்தும் முத்தமிழும் தந்து முற்றுமோ' என்றான். திருவாசகத் தேன் பருகத்தந்த மாணிக்கவாசகர் 'கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்' என்றார். தமிழ் நீசபாஷையாகவும், வடமொழி, தேவடாஷையாகவும், மொழிப்பண்டிதர்களால் கருதப்பெற்ற காலக் கட்டத்தில் தோன்றிய வள்ளலார் 'பெரு மறைப்பையும், போதுபோக்கையும், உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய், திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச்செய்து அத்தென்மொழியால் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்' என்று ஆண்டவனுக்கு நன்றி கூறுகிறார். வேதநாயகம் பிள்ளை, தனது பிரதாப முதலியார் சரித்திரம் நாவலில், "தாய் மொழிப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஒரு அறிகுறி" என்று தெளிவாக்கினார். பாரதியார் 'வானம் அளந்த தமிழ்' என்றார். பாரதிதாசன் தமிழ் எங்கள் உயிருக்கு மேல்' என்று கூறியதோடு, "சலுகை போனால் போகட்டும்; அலுவல் போனால் போகட்டும்; தலைமுறை கோடிகண்ட என் தமிழ் விடுதலை ஆகட்டும் "என்று இப்போதைய எழுத்தாளர்களை மனதில் வைத்து பாடியிருக்கிறார்.

ஆனால், நமது தமிழ் எழுத்தாளர்கள் தாங்கள் எழுதும் தாய் மொழியைப் பற்றி நினைப்பதே இல்லை. இதனை ஒற்றுப்பிழை இலக்கணப் பிழை இல்லாமல் எழுதவேண்டும் என்றும் தோன்றுவ தில்லை, மண்வாசனைத் தமிழில்கூட பேசுவதற்கே வெட்கப்பட வேண்டிய ஆபாச வார்த்தைகளை சரமாரியாகக் கலக்கிறார்கள். நம்மைப் போல் நமது எழுத்துக்கும் ஆடைகட்ட வேண்டும் என்பதை மறந்து விடுகிறார்கள். படைப்புகளுக்கும் ஆங்கிலத் திலேயே தலைப்பு வைக்கிறார்கள். இந்த லட்சணத்தில் இவர்களில் ஒருவர் இறந்தால் அந்த இறப்பு சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று அங்கலாய்க்கிறார்கள். சமூகம் தங்களை நேசிப்பவர்களையே நிரந்தரமாக நேசிக்கும் என்பதை மறந்து விடுகிறார்கள்.

### புறக்கணிப்பு தீர்வாகுமா?

என்றாலும், தமிழ்குடிமகன் அவர்கள் விடுத்துள்ள

புறக்கணிப்பு ஆணை' ஒரு தீர்வல்ல. தமிழாசிரியர்கள்தான் எழுத்தாளர்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறார்கள் என்பதும் சரியல்ல. இவர்கள் மேற்கொள்ளும் ஆய்வு எம்.பில்., முனைவர் பட்டங்களுக்குத்தானே தவிர, எழுத்தாளர்களுக்கான சலுகைகள் அல்ல. எனக்குத் தெரிந்த வரை, என் படைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட ஐம்பதுக்கும் அதிகமான ஆய்வுகளில், ஒரு சிலவற்றைத் தவிர, எஞ்சியவை உருக்குலைந்தவை. ஒரு சில தமிழாசிரியர்களைத்தவிர பெரும்பாலோருக்கு நவீன இலக்கியம் துளிகூடத் தெரியாது முனைவர் தமிழண்ணல் அவர்கள் நினைப்புதுபோல் தமிழ்ப் புலமையால் மட்டுமே தமிழ் படைப்பை உருவாக்க முடியாது. தமிழில் பிறமொழி கலவை செய்து கொச்சைப்படுத்துகிற எழுத்தாளர்கள், தமிழ்க்குடிமகன் அவர்கள் நினைப்பதுபோல் தமிழாசிரி யர்களின் அங்கீகாரத்திற்காக ஏங்கவில்லை. சாகித்திய அகாடமி, தேசிய புத்தக அறக்கட்டளை போன்ற அரசு நிறுவனங்களிலும் பிறமொழி இலக்கிய அமைப்புக்களிலும் இவர்கள் தான் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

எனவே, தமிழ்ப்பேராசிரியர்கள், அந்தத் தகுதியை மட்டும் வைத்துக் கொண்டு, படைப்பிலக்கியத்துக்கு வரலாம் என்று நினைப்பது, பகல் கனவு. அதேசமயம் படைப்பாற்றலை சமூகச் சிந்தனையால் வலுப்படுத்தி - அவர்கள் படைப்பிலக்கியத்திற்கு வருவது இலக்கிய வளத்திற்கும், மொழிவளர்ச்சிக்கும் உதவும். தமிழறிஞர் மு..வ. அவர்கள் இதற்கு வழிகாட்டி. என்றாலும் அவரையும் பலமடங்கு தாண்டியாகவேண்டும்.

இந்தப் பின்னணியில், தன் மகனை, சான்றோன் எனக்கேட்ட தாயைப் போல், தமிழாசிரியர்கள், தமிழர்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும், தமிழ் மண்ணில் காலூன்றியபடியே எழுதும் படைப்பாளிகளை ஊக்குவிக்க வேண்டும். தமிழாசிரியர்களுக்கும் இத்தகைய, படைப்பாளிகளுக்கும், இடையே அடிக்கடி கலந்துரையாடல் இருக்க வேண்டும். இதுதான், தாய் மொழியைப் பற்றியும் அதுதந்த முன்னோர்களைப் பற்றியும் கவலைப்படாத எழுத்தாளர்களுக்கு. நல்ல பதிலடியாக அல்லது நல்ல பாடமாக அமையும்.

**தினமணி தலையங்கப் பக்கக் கட்டுரை - 1999.**

# செல்லரிக்கும் கரையான்கள்

சென்ற பொதுத்தேர்தலின் போது, அரசுப்பணி சம்பந்தமாக நெல்லை மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். வாக்களிக்கப் போவதில்லையென்று நாலைந்து கரை வேட்டிகளுக்குள் சிக்கிய ஒரு நடுத்தர வயது மனிதர், அவர்களிடமிருந்து விடுபட முண்டியடித்தார். இந்தக் காட்சியைப் பார்த்த நான் அவரிடம் சென்று, 'வாக்களிப்பது ஒரு குடிமகனின் கடமை' என்று ஒரு குட்டிச் சொற்பொழிவு ஆற்றினேன். அரசாங்க ரீதியான சுற்றுப் பயண டைரியில் ஒரு குறிப்பு எழுதக் கிடைத்த மகிழ்ச்சி எனக்கு. ஆனாலும் அவர் நான் ஒரு வாக்கு கொடுத்தால், தான் வாக்குச் சாவடிக்குச் செல்ல தயாராய் இருப்பதாகத் தெரிவித்தார். நான் அவரைக் கேள்விக் குறியோடு பார்த்த போது', இந்த நாட்டில், நமது கட்சிகளில், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், ஒரே ஒரு தாலுகா ஆலுவலகத்தில்.... ஒரே ஒரு காவல் நிலையத்தில் அல்லது எந்த ஒரேயொரு அரசாங்க அலுவலகத்திலாவது லஞ்சம்

ஒரு துரும்பை தூக்கிப் போட்டு, 'நீதான் மாப்பிள்ளை என்று சொன்னால்', அதுகூட துள்ளும் என்ற ஒரு சொல்லடை உண்டு. இது அரசில் பணி ஆற்றும் அத்தனை தரப்பு ஊழியர்களுக்கும் பொருந்தும்.

எனவே, இவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே தோழமை உணர்வை ஏற்படுத்தி, சமூகப் பொறுப்பில் பயிற்சி அளிக்கவேண்டும். தங்களை ஊழலிலிருந்து விடுவித்துக் கொண்டே, ஊழல் புள்ளிகளுக்கு எதிராக ஒரு அறப்போரை நடத்துவதற்கு ஆயத்தப்படுத்த வேண்டும்.

ச. 4.

இருக்காது என்று உங்களால் உறுதியளிக்க முடியுமா? ஏதாவது ஒரு நியாய விலைக் கடையிலாவது அநியாயம் நடக்காது என்று வாக்களிக்க முடியுமா? கள்ளச் சாராயம் இல்லாத ஒரேயொரு கிராமத்தையாவது காட்ட முடியுமா?, என்று என்னைக் கேட்டார். நான் பொய் சொல்ல விரும்பாது திக்கித் திணறியபோது 'எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அல்லது எந்த ஆட்சி மாறினாலும் எங்கள மாதிரி ஏழைகள், அதிகாரிகளுக்கு மாமூல் கொடுத்தாகணும். காக்கிச் சடடைக்காரன் நாயே பேயே என்று பேசினாலும், நாங்கள் சிரித்து மழுப்ப வேண்டும். இந்த நாட்டில் ஒரு ஏழை, தன்னோட மரியாதையை காவுகொடுத்துத்தான், சுதந்திரமாய் திரியமுடியும். இந்த லட்சணத்தில் நான் எதுக்கு வாக்குச் சாவடிக்குப் போகவேண்டும்?' என்று திருப்பிக் கேட்டார். நான் அந்த இடத்தை விட்டு திரும்பிப் பாராமல் போய் விட்டேன்.

## அப்பட்டமான யதார்த்தம்

அந்த கிராமத்துக் கந்தல் குடிமகன் பேசியதுதான் இன்றைய அப்பட்டமான யதார்த்தம். நமக்கு வெள்ளைக்காரனிடமிருந்து சுதந்திரம் கிடைத்தாலும், அந்த சுதந்திரத்தை அரசு இயந்திரம் இன்னும் மக்களுக்கு வழங்கவில்லை. பொதுவாக மேல்மட்டம் சரியாக இருந்தால் கீழ்மட்டம் சரியாகிவிடும் என்பார்கள். இது எதற்குப் பொருந்தினாலும் அரசு இயந்திரத்தின் கீழ்மட்டத்திற்கு பொருந்தவேபொருந்தாது. இதனால்தான் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாட்டில் கீழ்மட்டக் கையூட்டைக் களைய வேண்டுமென்று முதல்வர் கலைஞர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இது சம்மந்தமான கலைஞரின் வேண்டுகோள், ஏழையின் சொல்போல், நிச்சயம் அம்பலம் ஏறாது. ஏறுவதற்கும் விடமாட்டார்கள்.

மேல்மட்டத்தில் நடக்கும் கோடிக்கணக்கான ரூபாய் ஊழல்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம், கீழ்மட்டத்தில் நூறு ரூபாய் கணக்கில் நிலவும் ஊழல்கள் என்பதும். பெரும்பாலானோருக்கு - இன்னும் சொல்லப்போனால், சாதாரண மக்களை நேரடியாகப் பாதிப்பது இத்தகைய சின்னச் சின்ன லஞ்சங்கள்தான். இந்த அப்பாவிகள் சந்திக்கும் சின்ன சின்ன அலுவலர்கள் சமூகத்தை செல்லரிக்கும் கரையான்கள். மேல்மட்ட ஊழலில் கவனம் செலுத்துவது போல் கீழ்மட்ட ஊழலில் கவனம் செலுத்தாத வரையில் சாதாரண மக்களுக்கு சுதந்திரமென்பது எட்டாக் கனியே.

## அதிகார பிச்சைக்காரர்கள்

ஒரு துரும்பை தூக்கிப் போட்டு 'நீதான் மாப்பிள்ளை' என்று சொன்னால், அது கூட துள்ளும் என்ற ஒரு சொல்லடை உண்டு. இது அரசில் பணியாற்றும் அனைத்து தரப்பு ஊழியர்களுக்கும் பொருந்தும். இவர்கள் அதிகாரப் பிச்சைக்காரர்கள். தங்கள் கரங்களை, கொடுக்கிற கரங்களுக்கு மேலே கொண்டு போகிறவர்கள். ஒரு சாதாரணக் குடிமகன் வேறு வழியில்லாமல் கொடுக்கும் லஞ்சப் பணத்தை ஒரு கப்பமாகவே கருதும் குட்டி மன்னர்கள். இவர்களுக்கு கொடுக்கும் கையூட்டுப் பணத்தையாவது காலப்போக்கில் மறந்து விடலாம். ஆனால், இவர்கள் சராசரி மக்களை நடத்தும் விதம், இருக்கிறதே அது நாம் பெற்றதாகக் கூறப்படும் விடுதலைக்கே களங்கமானது.

சில சமயங்களில் இவர்களின் மமதை பெரிய மனிதர்களையும் இழிவு படுத்தும். சங்கீத விமர்சகர் பெரியவர் சுப்புடு அவர்களின் தம்பியும், அகில இந்திய வானொலிக்கும்-தொலைக்காட்சிக்கும் தலைமை இயக்குனராக பணியாற்றியவருமான திரு பி.வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நான்கைந்தாண்டுகளுக்கு முன்பு, என்னிடம் தொலைபேசியில் என் உதவியை நாடினார். தமிழக அரசின் வீட்டு வசதி வாரியத்தில் அவர் வசித்த குடியிருப்பில் அந்த வாரியத்தின் ஒரு கிளார்க்கே தீர்த்து வைக்க வேண்டிய சின்னஞ் சிறு பிரச்சினை. இதற்கு என் உதவியை நாடினார். 'உடனே, நான், உங்களை யார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டாலே, அந்த கிளார்க் அலறியடித்து உதவுவாரே' என்றேன். இதற்கு, அவர் 'அதுதாம்ப்பா இல்லை... என்னை அந்த கிளார்க்குகிட்ட அறிமுகம் செய்துகிட்டேன் ஆனாலும் **He refuses even to look at me** என்றார். அதாவது அந்த கிளார்க் அவரை ஏறிட்டுக்கூடப் பார்க்க விரும்பவில்லையாம். சம்பந்தப்பட்ட கிளார்க்கைப் போல் எல்லா கிளார்க்குகளும் உயர் பதவி வகித்தவர்களிடம் இப்படி மிகையாக நடந்து கொள்ளுவதில்லைதான். ஆனால், சாதாரண மக்கள் என்று பார்க்கும் போது அவர்களை இவர்கள் ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள். அப்படியே பார்த்தால், அந்த மக்களைத் திட்டுவதற்காகத்தான் இருக்கும். மேலதிகாரியின் காலைப்பிடித்துக் கொண்டு சராசரி மக்களின் தலையில் கால் பதிக்கும் மனோபாவிகள் இவர்கள்.

## எனது அனுபவக் கொடுமை

இதே மாதிரி எனக்கும் ஒரு அனுபவம் அண்மையில்

ஏற்பட்டது. பண்டிகைக் கால நெரிசலை கருத்தில் கொண்டு, வேலூரில் ஒரு இலக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக, திருவள்ளுவர் பேருந்தில் பயணச்சீட்டை பதிவு செய்யும்படி என் உறவினரை அனுப்பியிருந்தேன். அவர், அந்தச் சீட்டை இன்னொருத்தர் மூலம் கொடுத்தனுப்பினார். சென்னையிலுள்ள திருவள்ளுவர் பேருந்து நிலையத்திற்குச் சென்றால் அந்த எண்ணுக் குரிய பேருந்தை கால் மணி நேரம் தேடியும் அது கண்ணில் படவில்லை. போதாக்குறைக்கு நான் மூக்குக் கண்ணாடி போட மறந்துவிட்டேன். அதாவது நான் ஒரு தாற்காலிக கைநாட்டு. அந்த பேருந்து நிலைய அதிகாரிகளிடம் பயணச்சீட்டைக் காட்டினேன். அதை ஏனோதானோ என்று வாங்கியபடியே 'இந்த பஸ் இங்கே கிடையாது' என்றார்கள் 'அப்படியானால் எங்கே' என்று பயபக்தியோடு கேட்டேன். 'எங்களுக்குத் தெரியாது அவ்வளவுதான்' என்று கத்தினார்கள் நல்ல வேளை, பயணச் சீட்டை கிழிக்காமல் கொடுத்தார்கள்.

உடனே நான், அந்த வளாகத்திற்கு வெளியேவந்து வரிசைவரிசையாக நின்ற பேருந்துகளைப் பார்த்தேன். என் பேருந்து தட்டுப்படவில்லை. நாமக்கல்லுக்குப் போகும் பேருந்து ஓட்டுநரிடம், பயணச்சீட்டை நீட்டி விபரம் கேட்டேன் அவர் ஏதோ சொன்னார். எனக்கு கேட்கவில்லை. நான் திருப்பிக் கேட்டேன் 'அட போய்யா இதெல்லாம் தெரியாம எதுக்காக வெளியூர் போறே?' என்று அடிக்காத குறையாகக் கூச்சல் போட்டார். நான் விக்கித்து வெலவெலத்துப் போனேன். ஏதோ ஒரு புண்ணியவான் (இந்த சராசரி உதவிகூட புண்ணியமாகக் கருதப்பட வேண்டிய சூழல்) பயணச்சீட்டைப் பார்த்துவிட்டு, என்னை பழையபேருந்து நிலையத்திற்குப் போகச் சொன்னார். திருவள்ளுவர் பேருந்து தான் என்று திட்டவட்டமாக நம்பியது என் தவறுதான். இருபதாண்டு காலமாக அரசாங்க காரிலேயே பயணம் செய்த எனக்கு, ஒரு முன்னாள் அதிகாரி என்ற முறையிலும், ஒரு எழுத்தாளர் என்ற முறையிலும் இந்த கர்வபங்கம் தேவைதான். ஆனால் தப்பு செய்வதற்குக்கூட தகுதியற்ற சாதாரண மக்களிடம் அரசு அலுவலர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்.

## எளிய மக்கள் பயப்படுவது ஏன்?

இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட்டாகவேண்டும். சென்னையிலுள்ள ஒரு நியாயவிலைக் கடை... அந்தக் கடைக்கு எச்சரிக்கையான இடைவெளி கொடுத்து நின்றபடியே, ஒரு நடுத்தரவயது சேரிப் பெண் கூடையும் அரிசியுமாக புலம்பிக் கொண்டிருந்தாள். விசாரித்துப் பார்த்ததில், அவளுக்குக்

கொடுத்த ஒவ்வொரு கிலோ அரிசியிலும் கால் கிலோ குறைக்கப்பட்டதாம். கண்ணுக்குத் தெரிந்து மண்ணெண்ணெய் வைத்துக் கொண்டே இல்லை என்றார்களாம் எண்ணெய் இல்லாமல் எப்படி சமைப்பது என்பது அவள் பிரச்சினை உடனே நான் 'அவங்களைப் போய் ஒரு அதட்டுப் போடும்மா' என்றேன். அதற்கு அவள் 'உனக்கென்ன சொல்லி ட்டே... அவன் போலீஸ்ல என்னை பிடிச்சுக் கொடுத்தால், நான் செய்ய முடியும்' என்று திருப்பிக் கேட்டாள். சிறிது சிந்தித்துவிட்டு, என்னோடு அந்தக் கடைக்கு வரும்படியும் நானே அந்த அம்மாவிற்கு நியாயம் கேட்பதாகவும் குறிப்பிட்டேன். இதற்கும் சூடுபட்ட பூனையைப்போல் 'ஒனக்கென்ன இப்போ கத்திட்டு அப்பாலே எங்கயோ போய்டுவே... வாரத்திற்கு ரெண்டுவாட்டி நான் இந்தக் கடைக்கு வந்தாகணும். இன்னும் அரிசியைக் குறைப்பான், இல்லாட்டி கார்டுல கோளாறு கண்டுபிடிப்பான்' என்று அழாதக் குறையாகச் சொன்னாள்.

இப்படிப்பட்ட போலீஸ் பயமும், உள்ளதும் போய்விடும் என்னும் முன்யோசனையும் இந்த மக்களைத் தவிர்க்கமுடியாத அடிமைத்தனத்தில் தள்ளிவிடுகிறது. பொதுவாக கிராமப் பகுதிகளில் போலீஸ் இன்பெக்டர், தாசில்தார், ஒப்பந்தகாரர்கள், தனியார் பள்ளிக்கூட நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், பெரும்பாலான குட்டி அரசியல் தலைவர்கள் ஒரு குடையில் நிற்பார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களே இந்தக் குடையைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள். இத்தகைய அதிகாரக் கூட்டணிக்கு எதிராக சாதாரண மக்கள் எதுவும் செய்ய இயலாது. இவர்களுக்கு அரசாங்கத்தின் தெரிந்த முகம் கிராம நிர்வாக அதிகாரியும், போலீஸ்ஏட்டுந்தான். இவர்களே இவர்களின் அரசாங்கம். ஒன்று இந்த லோக்கல் அரசாங்கத்திடம் கைகட்டி மெய்பதைத்து நிற்கவேண்டும் அல்லது இவர்களை ஆட்டிப் படைக்கும் தொகுதி அல்லது பகுதி கூட்டணியிடம் தஞ்சம் ஆகவேண்டும். இப்படிப்பட்ட சூழலில் ஒரு குடிமகனின் சுயமரியாதை லஞ்சலாவண்ய அரசாங்கவர்க்கத்தால் கரையான்கள் போல் அரிக்கப்படுகிறது.

இப்படிக் குறிப்பிடுவதால் அனைத்து அரசியல் ஊழியர்களும் கரைபட்டவர்கள் என்று சொல்லவரவில்லை. பல இடது சாரி அரசு ஊழியர் சங்கங்களுடன் எனக்கு தொடர்பு உண்டு. இதன் நிர்வாகிகள் அப்பழுக்கற்றவர்கள், ஆனாலும் இவர்களையும் மீறி பாதிப்பேர் லஞ்சக்குப்பையில்தான் புரளுகிறார்கள்.

ஆட்டோரிக்ஷாவில் இருந்து ஆகாயவிமானம் வரை லஞ்சக்கூத்து நடைபெறும்போது, அரசு ஊழியர்களை மட்டும் தனிப்படுத்தி சுட்டிக்காட்டலாமா என்ற ஒரு நியாயமான கேள்வி எழுகிறது. மேல்மட்ட அதிகாரிகளும், கொள்ளைக்காரத் தலைவர்களும் சுரண்டுவதில், கோடி ரூபாய்க்கு கீழே அவர்கள் சிந்திக்காதபோது வெறும் நூறு, இருநூறு ரூபாய் அளவில் வாங்கும் ஊழியர் செயல்பாட்டை ஒரு பொருட்டாக கருதவேண்டுமா? என்ற இன்னொரு கேள்வியும் எழுகிறது. என்றாலும், இது வெறும் எளிய கையூட்டுப் பிரச்சினை அல்ல. ஆணவப் பிரச்சினை, சாதாரண மக்களிடம் தோழமையுடன் பழகவேண்டியவர்கள் கடமையை செய்வதற்கே காசு கேட்கும் பிரச்சினை. ஏழைகளை கிள்ளுக் கீரைகளாக நினைக்கும் ஜனநாயகப் பிரச்சினை. செத்துப்போன பிரபுத்துவத்தின் மீட்பு. ஆகையால் சாதாரண மக்களுக்கு சுயமரியாதையை கொடுப்பதற்கு இந்தக் கீழ்மட்ட ஊழலையும், கிறுக்குத்தனமான மமதையும் நீக்கியாகவேண்டும்

என்றாலும், மேல்மட்ட ஊழல் பேர்வழிகள் சிறைக்குப் போக வேண்டியவர்கள். கீழ்மட்ட ஊழியர்கள் சீர்திருத்தத்திற்கு உட்படவேண்டியவர்கள். வெளியே வெள்ளையும் சொள்ளையுமாய் தோன்றினாலும் இவர்களும் ஒரு மனோ அடிமைகள்தான். இந்த நாட்டில் அரசு நிர்வாகம் ஜனநாயகப் படுத்தப்படவில்லை. ஒரு சராசரி துக்கடா அதிகாரியைக்கூட அவரது பதவியை பெயர்ச் சொல்லாக்கியே பேசவேண்டும் அதாவது ஒரு தாசில்தாரிடம் 'தாசில்தார் போகச்சொன்னால் போறேன் என்றே பேசவேண்டும் நீங்க சொன்னால் போகிறேன்' என்று பேசமுடியாது. ஒரு விடுமுறை விண்ணப்பம் எழுதும்போது கூட 'நான் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுவதெல்லாம் **(I beg to submit)** என்றே எழுதவேண்டும். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு கான்ஸ்டபிளிடம் பேசும் சராசரி வார்த்தை 'ஏண்டா நாயே' என்பதுதான். ஒரு ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியில் இன்ஸ்பெக்டருக்கு தண்ணீர் கொடுக்காமல், என்னிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த என் உறவினரான ஒரு காவலர் பலர் முன்னிலையில் வாங்கிய வார்த்தைதான் நான் மேலே குறிப்பிட்டது.

**கடைசியர்கள்**

இத்தகைய புதிய வர்ணாஸ்திர அரசின் அடுக்கடுக்கான அதிகார வர்க்கத்தில் வைசியர்களும், சூத்திரர்களுமான

ஊழியர்கள், கடைசியர்களான பொதுமக்களிடம் தங்களைத்தாக்கிய எஜமானத்துவத்தை வட்டியும் முதலுமாகக் கொடுக்கிறார்கள். அதிகாரிகளின் கால்களைப் பிடித்துக் கொண்டே சாதாரண மக்களின் தலையில் கால் பதிக்கிறார்கள். ஆகையால் இந்நாட்டு மன்னர்களாக கருதப்படும் மக்களுக்கு இவர்கள் சக்கரவர்த்தியாகிறார்கள். என்றாலும் கூட்டுறவுத்துறையும், ஊரகவளர்ச்சித் துறையும் ஜனநாயகப்பட்டும், மக்களை ஜனநாயகப்படுத்தியும் வருகின்றன. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய மாறுதல். தமிழ்நாடு அரசு ஊழியர் மாநில சங்கம் தனது உறுப்பினர்களை சமூகப் பிரச்சினைகளிலும் ஈடுபடுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

எனவே அரசின் கீழ்மட்ட ஊழியர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே ஒரு தோழமை உணர்வை ஏற்படுத்த வேண்டியது, அவசர அவசியமாகிறது. இத்தகைய ஊழியர்களுக்கு சமூகப் பொறுப்பில் பயிற்சி அளிக்கவேண்டும். எளிமை இல்லாமல் நேர்மை இல்லை என்று தத்துவார்த்தமாக போதிக்கவேண்டும். இதற்கு இவர்களை மேலிட அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து, சட்டமே சகலமும் என்ற மனோதளத்திற்கு கொண்டு வரவேண்டும். வெளிப்படையாகச் சொல்லப்போனால், தங்களை ஊழலில் இருந்து விடுவித்துக் கொண்டே, ஊழல் அரசியல்வாதிகள்-அதிகாரிகளுக்கு எதிராக ஒரு அறப்போரை மேற்கொள்வதற்கு ஆயத்தப்படுத்த வேண்டும். பல்வேறுஅரசு ஊழியர் சங்கங்கள், இதற்கு ஆவன செய்ய வேண்டும். தங்களது உறுப்பினர்களை அவர்களது நியாயமான சுதந்திரத்துக்கும், பொதுமக்களின் அடிப்படை சுதந்திரத்தையும், சுயமரியாதையும் பேணிக்காக்கத் தயார்படுத்த வேண்டும்.

இந்தத் தோழமை வந்துவிட்டால், கீழ்மட்ட ஊழியர்களாலயே மேல்மட்ட கொள்ளைக்காரர்களைத், தூக்கி எறியமுடியும். கரையான்கள் ஒரு கட்டத்தில் சிறகுமுளைத்த ஈசல்களாவதுபோல், சுயநலப்பொந்தில் லஞ்சக் கரையான்களாய் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கும் இவர்களை சமூகநீதித்தளத்திற்கு கொண்டு வந்தாகவேண்டும். இல்லையானால் சுதந்திரம் என்பது இவர்களுக்கும், இவர்களைச் சார்ந்த சாதாரண மக்களுக்கும் தொடர்ந்து கேலிக் கூத்தாகவே நிலவும்.

**தினமணி தலையங்கப் பக்கக் கட்டுரை - 1999.**

# மிளகாய்ச் சாதமும் மூங்கில் கம்புகளும்

தமிழகத்தில் தலைவர்களின் சிலைகளை - குறிப்பாக டாக்டம் அம்பேத்கர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைகளை உடைப்பதும், இதற்கு எதிர்வினையாக, சாலை மறியல், பேருந்துகளில் கல்லெறிதல், எதிர்ச் சாதிக்காரர்களின் அமைப்புக்களைத் தாக்குதல், காவல் துறையினரின் தடியடி போன்றவை அன்றாட நிகழ்வுகள் ஆகிவிட்டன. இவற்றோடு நம்மால் வாழமுடியாது ஆகையால் இதற்கு வழிகண்டாக வேண்டும். அதற்கு முன்னதாக தமிழ்ச் சமூக சாதிய வரலாற்றை உணர வேண்டும்.

**தலித் மக்களின் சமூகப் பொருளாதார எழுச்சியை, பிற்படுத்தப்பட்ட மக்களால் சகிக்க முடியவில்லை. ஒரு காலத்தில் இப்போதைய தலித் மக்களைப் போல் பல சிறுமைகளை அனுபவித்த பிற்படுத்தப் பட்டோர் தங்களது சாதிய வரலாறை திரும்பிப் பார்க்க வேண்டும்.**

**சுதந்திரத்திற்குப் பிறகுதான் தலித் மக்கள் அரசு சலுகைகளால் மேண்பட்டு வருகிறார்கள். ஆகையால் அரசையோ, சமூகத்தையோ முற்றிலும் தலித் விரோத நிறுவனங்களாக நினைக்கலாகாது.**

## தமிழக சாதிய வரலாறு

இந்தியாவிலேயே, பிற மாநிலங்களோடு, ஒப்பிடும்போது ஏணி வைத்தாலும் எட்ட முடியாத அளவிற்கு அதிக எண்ணிக்கையுள்ள சாதிகள் உலவி வரும் இடம் தமிழகம் ஒன்றே. இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் அரசு எடுத்த மக்கள்

தொகை கணக்குப்படி தமிழகத்தில் 350 சாதிகள் உள்ளன. இவற்றின் ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகள் ஏராளமாக உண்டு.

தமிழக சமூக இலக்கிய வரலாற்றை அலசினால் சாதியமே மேலோங்கி இருக்கிறது. சங்ககாலத்தில் மட்டுமே சாதிகள் இல்லாமல் இருந்திருக்கலாம். இதைத் தவிர்த்த பின்னைய காலத்தில் சிற்சில இடைவேளைக் காலங்களோடு சாதியப் பிரிவுகளே ஆதிக்கம் செலுத்தி உள்ளன. ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர் ஏதாவது தப்பு செய்தால், அந்த சாதியையே வெறுப்பது பிறசாதிகளின் அன்றாடக் கடமையாக இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் ஒரு பொற்கொல்லன் தனது திருட்டிற்கு, கோவலன் மீது பழி போட்டு மதுரையே எரிவதற்கு காரணமாக இருந்தானாம். இதற்காக, ஆண்டுதோறும் கண்ணகி விழாவில் ஆயிரம் பொற்கொல்லர்கள் பலியிடப்பட்ட மாநிலம் இந்த மாநிலந்தான்.

18ஆம் நூற்றாண்டில் பறையர் குலமக்களுக்கும், அருந்ததி குலமக்களுக்கும் ஏற்பட்ட மோதலில் பெரும்கலவரம் ஏற்பட்டதாக அபேதுபே என்ற பிரெஞ்சு அறிஞர் தெரிவிக்கிறார். ஒரு திருவிழாவில் அருந்ததியர் ஒருவர், தனது தலைப்பாகையில் சிவப்புப் பூவை வைத்ததினால், அந்தச் சாதிக்கு அந்த உரிமை இல்லையென்று பறையர் குலமக்கள் ஆட்சேபிக்க, அது சாதிய போராக தாண்டவமாடி இருக்கிறது. 19ஆம் நூற்றாண்டில் சிவகாசிக்கொள்ளை என்ற ஒன்று ஒரு பரபரப்பான வன்முறையாக நடந்தியிருக்கிறது. சிவகாசியில் வாழும் ஒரு குறிப்பிட்ட சாதிக்கு எதிராக, இன்னொரு சாதி, கொள்ளை அடிப்பதற்கு நாள் நேரத்தை முன்கூட்டியே தெரிவித்து விட்டுப் படையெடுத்துச் சென்றது. இதனால் சிவகாசி மக்களுக்கு உதவியாக நெல்லை, கன்னியாககுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அந்த சாதிக்காரர்கள் சிவகாசிக்குச் சென்று அங்குள்ள சாதிக்காரர்களுக்கு துணையாக நின்றிருக்கிறார்கள். இதனால் பின்வாங்கிய படையெடுப்புச் சாதி, புளியங்குடி, தென்காசி, செங்கோட்டை போன்ற இடங்களில் வாழும் சிவகாசி சாதியினரை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். முதுகுளத்தூர் கலவரத்தைப் பற்றிச் சொல்ல வெண்டியதில்லை.

### சாதியக் கட்டுமானம்

இந்தப் பின்னணியில் பார்த்தால், இப்போதைய சாதிச்சண்டைகள், ஒரு தொடர்ச்சி போலவே தோன்றுகிறது. இந்த சாதியத் தொடர்பு அறுபட்டுப் போகமுடியாத அளவிற்குத்தான் சாதியக் கட்டுமானமும் உள்ளது. ஒருத்தன்

தலையில் தனது காலை மிதித்துக் கொண்டும், மேலே இருப்பவனின் கால்களைப் பிடித்துக் கொண்டும் இருப்பதுதான் இந்திய சாதிக் கட்டுமானம். தமிழகத்தைப் பொறுத்த அளவில் நான்கு வர்ண சாதி அமைப்பில் பிராமணர்களையும், சத்திரியர்களையும் தவிர்த்து வைசியர்களும், சூத்திரர்களும், ஆதிதிராவிடர்கள் அல்லாதவர்கள் என்று பிரிக்கப்படாமல் இடங்கைப் பிரிவு, வலங்கைப் பிரிவு என்றே பிரிக்கப்பட்டார்கள். இந்த இரண்டு பிரிவுகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களில் பறையர்கள் எனப்படுவோர் ஒருபக்கமும், பள்ளர்கள் எனப்படுவோர் இன்னொரு பக்கமும் நிறுத்தப்பட்டார்கள். ஆகமொத்தத்தில் நமது சாதிய அமைப்பில், தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு பிரிவினர், பிற்படுத்தப்பட்ட மக்களில் ஒரு பிரிவினரோடு சேர்ந்து கொண்டு தத்தம் மக்களையே அடித்துக் கொள்கிற வம்புத்தனமாக ஒரு கட்டுக்கோப்பு இருந்தது.

### பிராமண எதிர்ப்புப் பற்றி பாரதி

இத்தகைய சாதியத்திற்கு எதிராக ஏற்பட்ட முதல் குரல் பிராமண எதிர்ப்பாக உருவானது. அந்தக் காலகட்டத்தில் இது நியாயமே. அந்தக் காலத்து தமிழக அரசின் பிராமணர் அல்லாத ஊழியர்கள் பிராமண ஆதிக்கம் மேலோங்கிய சென்னை நகரில் ஓட்டல்களில் உட்கார்ந்து சாப்பிட முடியாது. எடுப்புச் சாப்பாடுதான் எடுக்கலாம். இந்தத் தீண்டாமையை எதிர்த்து 1912ஆம் ஆண்டில் டாக்டர் நடேசனால் உருவாக்கப்பட்ட அமைப்பே பின்னர் திராவிடர் சங்கமாகி, நீதிக் கட்சியாகி, திராவிடக் கழகமானது. பொதுவாக இந்த இயக்கம் மேல் தட்டுக்காரர்களுக்காக பிராமணர்களை எதிர்த்து வந்தது. ஆகையால் தான் பாரதி 1921ஆம் ஆண்டில் சுதேசிமித்திரனில் எழுதிய கட்டுரையில் பிராமண எதிர்ப்பு இயக்கம் பிராமணர்களை ஒன்றும் செய்யாது என்றும், மாறாக சாதி இந்துக்கள்; அரிஜனங்களை அடக்கவே பயன்படும் என்றும் தீர்க்கதரிசனமாகத் தெரிவித்தான்.

தந்தை பெரியார், சாதி ஒழிப்பு மாநாடு, தீண்டாமை ஒழிப்பு மாநாடு என்று வலுவான இயக்கத்தை நடத்தினாலும், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், நடுத்தட்டு மக்களுக்கும் பல்லக்குத் தூக்கிகளாகவே இருந்தார்கள். இப்போதுதான் தாங்கள் வெறும் பல்லக்குத் தூக்கிகளாக இருந்திருப்பது இவர்களுக்கே புரிகிறது. சாதி இந்துக்களை சுமக்கும் பல்லக்கை மெல்ல இறக்காமல் பலவந்தமாக

தூக்கிப்போடுவதே இப்போதையப் பிரச்சினை. இந்தப் பின்னணியில் சாதிக் கலவரங்கள் தோன்றுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

**காரணங்கள்**

முதலாவதாக, இப்போது மேலாதிக்கம் செய்யும் சாதியினர் தாங்களும் ஒரு காலத்தில் தலித்துகளைப் போல் அடக்கப்பட்டவர்களே என்பதை மறந்து போனார்கள். குற்றால அருவியில் தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் குளிப்பதற்கு ஒரு காலத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால்தான் குற்றாலம் சென்ற அண்ணல் காந்தி, இந்த பாவப்பட்ட மக்களுக்கு குளிக்கும் உரிமை கிடைக்கும்வரை தானும் குற்றால அருவியில் குளிக்கப்போவது இல்லை என்று திரும்பிவிட்டார். ஆலயப் பிரவேசப் போராட்டத்தில் உயிர்ப்பலி கொடுத்தவர்கள் நாடார்கள். குற்றப் பரம்பரை பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவமானப்படுத்தப் பட்டவர்கள் முக்குலத்தோர். இந்தக் குலத்தின் ஆண்கள் ரேகைச்சட்டம் என்ற சட்டத்தின் பேரில், தினமும் இரவில் அருகே உள்ள காவல் நிலையங்களில் கைரேகை வைத்து விட்டு, அந்த நிலையத்தின் முன்னாலேயே படுக்கவேண்டும். அந்தக் காலத்தில் "அருகே" என்பது பத்து-பதினைந்து மைல்கள். இந்தக் கொடூரமான ரேகைச்சட்டம் 1939ஆம் ஆண்டு வரை நீடித்தது. ஆகமொத்தத்தில் அடிமைப்பட்ட சாதிகள் அந்த அடிமைத்தளத்தில் இருந்து முற்றிலும் மீளாத தாழ்த்தப்பட்ட சாதியினரை மீட்க வேண்டியது ஒரு தார்மீகக் கடமையாகும். ஆனால் மீட்க வேண்டியவர்களே இந்த மக்களை தங்கள் பங்கிற்கும் இன்னும் தாழ்த்தி வைக்கிறார்கள்.

இரண்டாவதாக, தலித்து மக்களின் எழுச்சி வெளிப்பாடுகளிலும் குற்றங்கள் இல்லையென்றாலும் குறைகள் உள்ளன. முதலாவதாக, நமது நாடு சுதந்திரம் பெற்ற பிறகுதான், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகமான சலுகைகள் மேன்பட்டு வருவதையும் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். வேறு விதமாகச் சொல்லப்போனால் அரசையோ, சமூகத்தையோ முற்றிலும் தலித் விரோத நிறுவனங்களாக இவர்கள் நினைக்கலாகாது.

மூன்றாவதாக, தலித் மக்களின் சமூகப் பொருளாதார எழுச்சியை சாதி இந்துக்கள் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்கள் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். சொந்த சாதியிலேயே எளியவன் ஒருவன் முன்னேறிவிட்டால், அவனை கிண்டலும்

கேலியுமாக விமர்சிப்பது சமூகப் பழக்கம்; இந்தப் பழக்கத்தை தலித் மக்களிடமும் இவர்கள் கடைபிடிக்கிறார்கள். உலகத்திலேயே மிகப்பெரிய கொடுமை தீண்டாமைக் கொடுமை என்பதை இந்தப் பிரிவினர் புரிந்து கொள்ளவில்லை. தலித்துகளின் முன்னேற்றம் தலித் எதிர்ப்பலையாக உருவாகியிருக்கிறது.

நான்காவதாக, தென்மாவட்டங்களில் தலித் என்றாலே வன்முறை என்ற ஒரு பெயர் தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய வன்முறையை கண்ணால் காணாதவர்கள் கூட, இவர்களை வன்முறையாளர்கள் என்று நினைக்கிறார்கள். இது ஆபத்தானது. எந்தப் பிரிவிலும், அது கட்சியாக இருந்தாலும், மதமாக இருந்தாலும், சாதியாக இருந்தாலும் வன்முறையாளர்கள் இருப்பார்கள். இத்தகையோரை இவர்கள் சேர்ந்த சாதியோடு முடிச்சிடலாகாது. அதேசமயம் தலித் இளைஞர்களும் தங்களுக்கு எதிராக உள்ள சதிவலையை உணர்ந்து, வன்முறையை தவிர்த்து அறப்போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.

ஐந்தாவதாக, தலைவர்களை ஒரு சாதிக்குள் சிறை வைக்கலாகாது. 1940களில் ஒரு சமயம் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் குற்றாலத்திற்குச் சென்றிருந்தபோது, அவரது சாதியைச் சேர்ந்த ஒரு ஜமீன்தார், அங்கே முக்குலத்தோர் மாநாடு நடைபெறப்போவதாகவும், அதில் பசும்பொன் கலந்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஆனால் தேவரோ, 'ஓட்டல்களில் பாத்திரம் கழுவும் ஆதிதிராவிடரும், உணவு பறிமாறும் பிராமண ஏழைகளுமே என் சாதியினர்.... மிட்டா மிராசுவான நீங்களல்ல' என்று முகத்துக்கு எதிராக தாட்சண்யம் பாராமல் சொன்னவர். அண்ணல் அம்பேத்காரோ தன் இனத்து மக்களை மேம்படுத்துவதை லட்சியமாகக் கொண்டாலும், ஆயிரம் இழிவுகளையும் மீறி அனைவரையும் நேசித்தவர். அனைத்து இந்தியாவிற்கும் உரியவர். இந்த இரு போராளிகளையும் சாதியப்பேராட்டங்களுக்கு சாக்காக வைப்பது தவறானது.

ஆறாவதாக, வெளிநாட்டுச் சக்திகள், சாதிச் சண்டைகளை பிறநாடுகளுக்கும் விற்கும் ஒருசில தன்னார்வ அமைப்புக்கள், சாதி என்பதைத் தவிர எந்த மனிதத்தகுதியும் இல்லாத சண்டியர்கள் அவ்வப்போது சாதிக்கலவரங்கள் தூண்டிவிட்டு, மயான நெருப்பில் குளிர்காய நினைக்கிறார்கள். இந்த சதியின் ஒரு அங்கமாகத்தான் சிலைகள் உடைபடுகின்றன. இதில் உணர்ச்சி வயப்பட்டால், அந்த சதிகாரர்கள் வெற்றிப்

பெற்றார்கள் என்று அர்த்தம். ஆகையால், அம்பேத்கார் சிலையாக இருந்தாலும் சரி அவற்றை வெறும் சிலைகளாகவே பார்க்கவேண்டும். இந்தச் சிலைகளையும் இந்தத் தலைவர்களையும் ஐக்கியப்படுத்தலாகாது. இது சுயமரியாதை சம்பந்தப்பட்டதுதான். ஆனால், இந்தத் தலைவர்கள் இந்தச் சிலைகள் இல்லையென்பதையும், சிலைகளை உடைத்தவர்கள் எதிர்ச் சாதியினராக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதையும், ஒருவேளை சொந்தச் சாதிக்காரனே அந்தக் காரியத்தை செய்திருக்கலாம் என்பதையும் உணரவேண்டும்.

ஏழாவதாக சாதிகளைத்தாண்டி, தமிழ்ச் சாதிக்காக உழைத்த பெரியவர்களை இந்த இருதரப்பிற்கும் அடையாளம் காட்டவேண்டும். எடுத்துக்காட்டாக சமபந்தி போஜனம் நடத்திய வைகுண்டசாமி, இதேபோல், **"சாதியும், மதமும் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி"** என்று குரல் கொடுத்தவர் வடலூர் வள்ளலார், மேல்சாதி ஊமைத்துரைக்காக, படையோடு பஞ்சாலங்குறிச்சி சென்று உடம்பில் வெண்ணையைத் தடவி வெள்ளையரின் வெடிமருந்து கிடங்கில் உயிர்த்தியாகம் ஆதிதிராவிட வீரர் சுந்தரலிங்கம் ஆகியோரை அரசு குறும்படங்களாக எடுத்து மக்களிடையே காட்டவேண்டும். சாதியின் பெயரால் கையெழுத்து போடமாட்டேன் என்று சூளுரைத்தவர் அந்தக் கால மதுரை ஜில்லா போர்டு தலைவரும், தேவர் இனத்தைச் சேர்ந்தவருமான ராமச்சந்திரனார்.

### வரலாற்றில் இடம்பெறாத சுந்தரலிங்கம்

எந்த நெருக்கடியும் தன்னளவில் இல்லாமல் இப்படி உயிர்ப்பலி கொடுத்த வீரன் சுந்தரலிங்கத்தின் வரலாறு தென்மாவட்ட மக்களுக்கு தெரியவேண்டிய அளவிற்கு தெரியப்படுத்தி இருப்போமானால், அந்த வீரன் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டபோது பிற்படுத்தப் பட்ட மக்களில் ஒரு பிரிவினர் அப்படி அநாகரீகமாக ஆட்சேபித்திருக்க மாட்டார்கள். பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட சாதிகளை ஒரே சாதியாகப் பார்த்தவர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார். இவரது கோட்பாடுகளை செயலாக்கியவர் கர்ம வீரர் காமராசர். இவரது அமைச்சரவையில் இருந்த கக்கன் பெருமகனார், இந்த இருதரப்பினருமே பெருமைப்பட்டுக் கொள்ளும் அளவிற்கு சொல்லாலும், செயலாலும் நடந்தவர். இவரோடு தோளோடு தோள் நின்று பணியாற்றியவர் அப்போதைய அமைச்சரும், தேவர் இனத்தைச் சேர்ந்தவருமான ராமைய்யா அவர்கள். இந்தப் பெருமக்களின் தொண்டு குறித்தும், தமிழக அரசு குறும்படங்களை எடுத்து மக்களிடையே திரையிட்டுக் காட்ட வேண்டும். இதனால் மக்களின் சாதித்திரை நிச்சயம் கிழிபடும்.

கரும்புத்தோட்டமும் குரங்குகளும்

இந்த சாதியச் சண்டைகளை நினைக்கும்போது, கடந்த கால விவசாய உக்தி ஒன்றுதான் என் நினைவுக்கு வருகிறது. நெல்லை மாவட்டத்தில் கரும்பு தோட்டத்திற்குள் நுழைய வரும் குரங்குகளை தடுப்பதற்காக விவசாயிகள் மிளகாய் கலந்த அரிசிச் சாதத்தை ஒரு பாறையில் குவியலாக வைத்து விட்டு, பத்து பதினைந்து மூங்கில் கம்புகளையும் வைப்பார்கள். மலையில் இருந்தோ, மரங்களில் இருந்தோ கரும்புத் தோட்டம் நோக்கிச் செல்லும் குரங்குகள் வழியில் இந்த மிளகாய்ச் சாதத்தை உண்டு, இதனால் எரிச்சல் தாங்க முடியாமல் கத்தும். பிறகு அந்த மூங்கில் கம்புகளை எடுத்துக்கொண்டு ஒன்றையொன்று அடித்துக் கொண்டு, ரத்தக் களரியோடு கரும்புத் தோட்டத்திற்கு எதிர்முனையில் ஓடும். தோட்டம் பத்திரமாக இருக்கும். இதேபோல் பல்வேறு சக்திகள், வறுமை என்னும் சாதத்தை உண்ணும் எளிய மக்களுக்கு சாதி, சமயம், மொழி என்ற கம்புகளை கொடுத்து ஒருவரையொருவர் அடிக்க வைக்கிறார்கள்.

இத்தகைய சேதிகளை, அரசாங்கமும் சமூகநல அமைப்புக்களும் மக்களிடம் எடுத்துச் சென்றால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்ற நிச்சயமாக நம்பலாம்.

நவசக்தி வார இதழ்கள் - 1999.

# திரைப்பட அபத்தங்களும் ஆபத்துக்களும்...

அண்மைக்காலமாக, ஒருவகை நிகழ்ச்சிகளை செய்திப் பத்திரிகைகளும், வாரப் பத்திரைகைகளும், மேலே பார்த்தால் சூடாகவும், விலக்கிப் பார்த்தால் சுவையாகவும் சித்தரித்து வருகின்றன. ஈவ்டீசிங் என்றும் தலைப்பிடுகின்றன. எந்தக்குற்றமும் செய்யாத மாணவி சரிகாவின் மரணத்தையொட்டி பதினைந்து நாட்கள் காரசாரமாக பேசப்பட்ட விவகாரம், பேப்பர் குப்பைகளில் போடப்பட்டது. இப்போது மீண்டும் அவை பரபரப்பாகப் பேசப்படுகிறது. அடங்கிக்கிடந்த வம்பர்கள் மீண்டும் கை வரிசையையும், வாய் வரிசை யையும் காட்டுவதே காரணம்.

### பாதிக்கிணறு தாண்டுதல்

ஒரு அனாதரவான பெண்ணை, கிண்டலால், கேலியால் அவமானப் படுத்தும் கொடிய குற்றத்தைத் "ஈவ்டீசிங்" என்று சொல்வது பொழுது போக்குச் செய்திகளே. முதலில் இந்தக் குற்றத்திற்கு பெண் கொடுமை அல்லது பெண்களை

**ரத்தக் கண்ணீர் உள்ளிட்ட புகழ்பெற்ற திரைப்படங்கள் சமுகத்தில் விஞ்ஞான விரோத மான கருத்துக்களை பரப்பி வருகின்றன. கிராமங்களை கொச்சைப் படுத்துகின்றன. "ஈவ்டீசிங்" எனப்படும் பெண்கள் மீதான வன்கொடுமையை ஊக்குவிக்கின்றன.**

**'ரங்கா', 'பில்லா' போன்ற நாடறிந்த கொடியவர்களின் பேரில் திரைப்படங்கள் எடுக்கிறார்கள். ஒருவனை வீரனாக்க ஒன்பது பேரை பேடியாக்கி தமிழகத்தையே ஒரு மனநோயாளி மாநிலமாக மாற்றி விட்டார்கள்.**

மானபங்கப் படுத்தல் என்று பெயரிட வேண்டும். ஈவ்டீசிங் என்ற வார்த்தையை தூக்கி தூர எறியவேண்டும். விவகாரத்தின் கடுமை, வாசர்களுக்கு - குறிப்பாக இளைஞர்களுக்கு உறைக்கும்படி செய்திகளோ, காவல்துறையோ செயல்படவில்லை. இந்தக் குற்றத்தில் மாட்டிக் கொள்வதுகூட ஒரு விபத்து போலவே நினைக்கப்படுகிறது. நேற்றைய ரயிலில் விபத்து ஏற்பட்டால், இன்றைய ரயிலிலும் அது ஏற்பட வேண்டும் என்ற அவசியமில்லை என்று பயணிகள் நினைப்பது போல, நமது இளைஞர்களும் நினைக்கிறார்கள். இது சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை, கடுமையாகத் தண்டிப்பதன் மூலமே, இத்தகைய மனப்போக்கை ஒழிக்கமுடியும் என்று சிலர் கருதுகிறார்கள். இது உண்மைதான். ஆனால் பாதி உண்மையே தவிர, முழு உண்மையல்ல. இந்தப் பாதியை மட்டுமே, வைத்துக் கொண்டு செயல்படுவது, பாதிக்கிணறு தாண்டுவதுபோலதான்.

## நோயின் அறிகுறிகள்

பெண்களைக் கிண்டல் முதல் வம்பு வரை செய்கிறவர்கள் ஒரு நோயின் அறிகுறியே தவிர நோயல்ல. இவர்கள் ஏவுகணைகள். ஏவுதளங்களை நம் கண் முன்னாலேயே பார்க்கிறோம். பாதுகாப்புப்படை ரகசியம்போல் இந்தத் தளங்கள் ஒளித்து வைக்கப் படாமல், பகிரங்கமாகவே காட்சியளிக்கின்றன. இவற்றுடன் கட்டிப்புரளாமல் இந்த வம்புதும்பு காரியங்களை தடுக்க முடியாது. இந்த ஏவுதளங்கள் நமது எதிரி நாட்டு படைத்தளங்கள் அல்ல. நமது தொலைக் காட்சிகள், நாடகங்கள், பத்திரிகைகள்தான் இந்தத் தளங்கள்.

அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் பெரும்பாலும் கவர்ச்சிக் கன்னிகளே தொகுப்பாளர்களாகத் தோன்றுகிறார்கள். இவர்கள் நுனிநாக்கில் பேசுவது, ஒரு கவர்ச்சியையும், சிணுங்குவது படுக்கையறைக் குரல் போலவும் ஒலிக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சி என்பது ஒவ்வொரு பார்வையாளரையும் தனித்து வசீகரிப்பது. இதைத் தனித்துப் பார்க்கும் போது, இந்த வசீகரம் வக்கிரமாகிறது. கவர்ச்சியான ஆடையுடன் முத்தம் கொடுப்பதுபோல் முகம் குவித்து, ஒரு இளம்பெண், சினிமாக் காதலைப்பற்றி வர்ணிக்கும்போது, அதை உற்றுப் பார்க்கும் இளைஞனிடம் ஒரு கிறக்கம் ஏற்படுகிறது. அந்தப்பெண், தன்னிடம் மட்டுமே அந்தரங்கமாக பேசுவதுபோல் ஒரு பிரமை ஏற்படுகிறது. இந்தப் பெண்கள் அறிமுகப்படுத்தும் ஒலிஒளி காட்சிகளோ, ஆபாசத்தின் உச்சம். ஒரு காலத்தில் லாவகமாகவும், நளினமாகவும் இருந்த திரைப்பட நடனங்கள் இப்போது அசிங்கமாகி விட்டன. நடன இயக்குனர்கள், ஆட்டக் குழுவிற்கும், நாயகன் நாயகியருக்கும் ஒவ்வொரு உறுப்பையும், எப்படி ஆட்டவேண்டும் என்று ஆட்டுவிக்கிறார்கள்.

அள்ளிவர ரெடியாம்....

திரைப்படங்களிலோ, கதாநாயகன் என்பவன் கதாநாயகியை நிச்சயம் இம்சை செய்யவேண்டும். அவள் சடையைப்பிடித்து இழுக்கவேண்டும். ஓடிப்போகிறவளின் முன்னால்போய் நின்று பாட்டுப்பாட வேண்டும். நண்பர்களிடம், பித்துப் பிடித்தது போல் நடந்துகொண்டு தனது காதல் வெளிப்பாடுகளை காட்டவேண்டும். உடனே அவர்கள் 'ராசாத்தி..... ராசாத்தி....... அட்ரஸ் என்ன கண்டுபிடி....., ராவோடு ராவாக அள்ளிவர நாங்க ரெடி.....' என்று பாடவேண்டும். இல்லையானால், கதாநாயகன் பதுக்கி வைக்கப்பட்ட தனது காதலியைக் காண, அவளது வீட்டிற்குப் போவான். இதைப்பார்த்த நாயகியின் தந்தை, கதாநாயகனின் கையைப்பிடித்து தடுப்பார். உடனே அந்த நாயகன் 'இந்த கை, இவளை எனக்கு ஒருகாலத்தில் பிடித்துக்கொடுக்க வேண்டிய கை என்பதால் விட்டு வைக்கிறேன். இல்லையானால் வெட்டியிருப்பேன்' என்று வீரவசனம் பேசுவான். கதாநாயகியும், அவனை புதிய புறநானூற்று வீரன்போல் பார்ப்பாள். (இப்படியொரு திரைப்படத்தை நான் பார்த்தேன்.) சினிமாக்காதலுக்கு அப்பன்களே வில்லன்களாய் ஆக்கப்படுகிறார்கள். பெத்தவன், தன் கண் முன்னாலேயே, தன் வீட்டிலேயே, தன்னோட மகளை ஒரு இளைஞன் சல்லாபிக்கும்போது, சும்மா இருக்க வேண்டும்.

இத்தகைய சினிமாத்தனத்தை உள்ளடக்கிய படங்கள்தான் அரசாங்கத் தொலைக்காட்சியிலும் ஒளிப்பரப்பாகின்றன. இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்துவிட்டு, கண்போனபோக்கில் நடந்து, மனம்போனபோக்கில் பெண்களை இம்சிக்கும் இளைஞர்களை கைது செய்ய காக்கிச்சட்டை இருக்கிறது. ஆனால், இந்தத் திரைப்படங்களையும், தயாரிப்பாளர்களையும், தொலைக்காட்சி நிர்வாகிகளையும் கைது செய்ய, எந்த சட்டம் இருக்கிறது? யார் இருக்கிறார்கள்? எங்கிருந்தோ ஏவிவிட்டான் கிளியை, அது என்மீது போட்டதடி பழியை என்கிற கதைதான்.

பெண்ணியப் போராளிகளின் பாராமுகம்

இவைபோதாதென்று, நாடகங்களிலும், திரைப்படங்களிலும் இருபொருள் வசனங்கள். அதுவும் கவுண்டமணி - செந்தில் நகைச்சுவை என்பது ஆபாசத்தின் ஊற்றாகிவிட்டது. இந்த ஊடகங்கள், இயற்கை மனிதர்களுக்கு செயற்கை மனிதர்களை காட்டிக் காட்டி, இப்போது இயற்கை மனிதர்களும் செயற்கையாகி விட்டார்கள். இந்தத் திரைப்படங்களில் வருகிற ஆபாச வசனங்களை, அல்லது பாடல்களை இளைஞர்கள் பாடிக்காட்டும் போது, அவர்கள் நிச்சயமாக கைதுசெய்யப்பட்டு கசையடிக்கும்

உள்ளாகவேண்டும். அதேசமயம் இவர்களுக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டால், இவர்களை இப்படித்தூண்டாமல் தூண்டிவிடும் பேர்வழிகளுக்கு என்ன தண்டனை இருக்கிறது? தண்டனை இல்லையென்பதோடு, இதற்கு எதிர்விகிதத்தில் கார் கிடைக்கிறது, பங்களா கிடைக்கிறது. கள்ளப்பணம் மிதமிஞ்சிப் போகிறது. வெளிநாட்டு மேடைகளிலும் கைத்தட்டுக்கள் கிடைக்கின்றன. இந்தச்சினிமாக்காரர்கள், தங்களது சமூகவிரோத நடிப்பை நியாயப்படுத்துவது, விஞ்ஞானி அப்துல்கலாம் சாதனையைவிட அதிக சாதனையாக சித்தரிக்கப்படுகிறது.

வாரப்பத்திரிகைகளைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. அழகான இளம் பெண்ணின் படத்தை அட்டைப்படமாக போடாத வாரப்பத்திரிகையே கிடையாது. இந்த அழகிய அட்டைப்பட முகப்பில் 'பாகிஸ்தானை எப்படி முறியடிப்பது' போன்ற கேள்விகள். ஒரு தொலைக்காட்சியில், அதோடு சம்பந்தப்பட்ட வாரப்பத்திரிகை குறித்த விளம்பரவரிகளை பேசுகிற பெண்குரல் படுக்கையறைக்கு கூப்பிடுவது போல் ஒலிக்கிறது. இப்படிக் குறிப்பிடுவதால், நான் பெண்களைக் குறைகூறுவதாக ஆகாது. வயிற்றுப் பிழைப்பிற்கு வரும் பெண்களை வைத்தே பெண்மை கொச்சைப்படுத்தப்படுகிறது என்பதே பிரச்சினை. இந்தப்பெண்களைப் போல எல்லாப்பெண்களும் இல்லை. இவர்கள் சிறுபான்மையினர்தான். ஒரு ஆணின் ஒழுக்கத்திற்கு ஒரு பெண்ணே தன் ஆடை அலங்காரம் மூலம் பொறுப்பு வகிக்கவேண்டும் என்ற அவலநிலை இருப்பதாக பெண்ணியப் போராளி மைதிலி சிவராமன் தெரிவிக்கும் வேதனையை நானும் பகிர்ந்து கொள்கிறேன். ஆனாலும் இத்தகைய கலாச்சாரச் சீரழிவுகளுக்கு எதிராக இத்தகைய தன்னலமறுப்பு பெண்ணியப் போராளிகள் ஒரு துரும்பைக்கூட எடுத்துப்போடவில்லை. ஆணாதிக்க ஆண்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

### வாய்தாவே ஒரு அவதி

நீதிமன்றங்களும், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்குவதில்லை. அப்படியே வழங்கினாலும் அவை செய்திகளாவதில்லை. இந்தப் பெண்ணுக்கும் எனக்கும் 'நெருக்கமான' பழக்கம். 'அதனால்தான் இப்படி செய்தேன்.... ஆட்கள் பார்த்துவிட்டதால் அவள் அலட்டிக் கொண்டாள்' என்று குற்றஞ்சாட்டப்பட்டவன் கூசாமல் சொல்லி வழக்கை இழுத்துக்கொண்டே போகலாம். பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு வாய்தா என்பதே இன்னொரு தண்டனை. இதனால்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் நீதிமன்ற வாய்தாவிற்கு அவதி என்ற மண்வாசனைச் சொல் ஏற்பட்டுள்ளது.

## ஆண்கவர்ச்சி

பத்திரிகைகளில் வரும் கதைகளில் பெரும்பாலானவை ஆபாசக் களஞ்சியங்கள். ஆபாசம் என்பது அதற்குரிய வார்த்தைகளில் மட்டுமில்லை. அதைவிட ஆபாசமானது, இலைமறைவு காய்மறை வான பாலியல் தூண்டுதல்தான். இதற்கு கதைகளில் பஞ்சமில்லை. இவைபோதாதென்று, சினிமா கிசுகிசுப்புக்கள். எவன் பெண்டாட்டி எவனோடு போனாள் என்பது மாதிரியான சித்தரிப்புக்கள். தமிழகத்தில் பாலியல் கள்ளஉறவு தவிர வேறு எதுவுமே இல்லைஎன்பது மாதிரியான மாய்மால எழுத்துக்கள்-இவைதான் இன்றைய பத்திரிகை அலங்காரங்கள். இப்போதோ திரைப்படங்கள், தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் ஆண்கவர்ச்சியும் தலைகாட்டுகின்றது. உருண்டு திரண்ட உடம்பை பனியனோடு காட்டும் பழக்கம் இப்போது துவங்கியிருக்கிறது.

## செய்யத்தக்கவை

எடுத்துக்கொண்ட விவகாரத்திற்கு வருவோம். பெண்கேவலத்தில் ஈடுபடுகிறவர்கள், கைதான பிறகு, மாமூலாய் விடப்பட்டார்களா, அல்லது மாமியார் வீட்டுக்கு அனுப்பப் பட்டார்களா? என்பது நாட்டுக்குத் தெரியவேண்டும். காவல் துறையே இதுகுறித்து அவ்வப்போது அறிக்கை விடவேண்டும். இரண்டாவதாக, பேருந்துகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித் தனி இடஒதுக்கீடு செய்வது இந்தப் பிரச்சனையை கூட்டுமே தவிர குறைக்காது. டில்லி போன்ற பெருநகர்களில் பேருந்து இருக்கைகளில் ஆணும் பெண்ணும் இணையாகவே அமருகிறார்கள். எந்த இளைஞனும் எந்த பெண்ணையும் சீண்டியதில்லை. இதனை அவ்வப் போது டில்லிக்குச் செல்லும் நான் பேருந்துகளில் பயணிக்கும் போதெல்லாம் உன்னிப்பாக பார்த்தது உண்டு. அங்கே பெண் என்பவள் பாலியல் உருவகத்திற்கு அப்பாற்பட்ட ஒரு மானிடக்கூறு. அவ்வளவுதான். இத்தகைய சமத்துவ இருக்கையை படிப்படியாக இங்கே கொண்டு வந்தால் இந்தப் பிரச்சினை இல்லாது போகலாம். மூன்றாவதாக, இளைஞர்களுக்கு சமூகப் பொறுப்பை ஊட்டவேண்டும். அந்தக்காலத்து மாணவர்களாகிய எங்களுக்கு தேசியம் - திராவிடம் என்பதே பேச்சாகவும், சிந்தனையாகவும் இருந்தது. பெண்களை ஏளனம் செய்வதோ, குடித்துவிட்டு வகுப்புக்குப் போவதோ நாங்கள் கனவில்கூட கண்டறியாதவை.

## உடல்தேவை அல்ல

பாலியல் உணர்வு என்பது உடல்தேவையாக இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. காலில் அடிபட்டால், தொடையில்

நெறிகட்டுவது போல், வேறுசில அடிப்படைப் பிரச்சினைகள், பாலியல் உணர்வில் வரும். பொதுவாக அடிமன பயம் வெளிமனப் பாலியலாய் தோன்றும். இந்தப் பயத்திற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. இப்படி வரும் பாலியல் மனநோய் பெண்கேலியாக வெளிப்படும். உடலுறவாலும் இந்த மனநோய் தீராது. அடிமனபயத்தை ஒழித்தால் வெளிமனப் பாலியல் வக்கிரம் விடுபடும். மனம் என்பது நெருப்பு மாதிரி எதையாவது ஒன்றை பற்றிக் கொண்டே நிற்கும். எனவே இளைஞர்கள் மனம் சமூகப்பொறுப்பை பற்றிக்கொள்ளுமாறு செய்ய வேண்டும். இவர்களுக்கு உளக் கோட்பாடுகளிலும் பயிற்சி கொடுக்கவேண்டும். இதனால், பெண்களை எள்ளி நகையாடுவது ஒருவித பேடித்தனம் என்பதை சம்பந்தப்பட்டவனால் அறிய முடியும்.

இறுதியாக, நமது திரைப்படங்களையும், தொலைக் காட்சிகளையும் பார்க்கும் போது இந்த நாட்டில் தனிக்கைக்குழு என்ற ஒன்று இருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது. இதன் விதிகளை கடுமையாக்கி, செயல்பாட்டை தீவிரமாக்க வேண்டும். இல்லையானால் இத்தகைய தணிக்கைக்குழு, திரைப்படத்துறை, தொலைக்காட்சி, பத்திரிகை, காவல் துறை, நீதிமன்றம் ஆகிய மாபெரும் அமைப்புக்களின் சார்பில், நமது பெண்களை, வம்பர்கள் அவமானப்படுத்துவது தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த சந்தர்ப்பத்தில் திரைப்பட அபத்தங்களையும் சொல்லியாக வேண்டும். அண்மையில் புதிதாக திருமணமான தன் தங்கையுடன், எனக்கு தெரிந்த ஒரு இளைஞர் அமெரிக்கா சென்றிருந்தார். அக்கா கணவரின் நண்பர்களான அமெரிக்கத் தம்பதிகள் புதுமண மக்களை வாழ்த்துவதற்கு அவர்கள் வீட்டுக்கு போயிருக்கிறார்கள். அப்போது ஒரு அமெரிக்கர், புதிய தம்பதியரைப் பார்த்து; 'நீங்கள் இரண்டு பேரும் டூயட் பாடி ஆடுங்கள்ணி என்று கேட்டிருக்கிறார். இவர்கள் மென்மையாக மறுத்ததோடு, அப்படி ஆணும் பெண்ணும் பாடிப்பாடி "பாடி"களை அணைத்துக் கொள்வது தமிழக மரபல்ல என்றும் தெரிவித்திருக்கிறார்கள். உடனே அந்த அமெரிக்கர், உங்கள் நாட்டு சினிமாக்களில் ஆணும் பெண்ணும் மரங்களைச் சுற்றியோ, மட்டைகளை சுற்றியோ, கோயில் குளங்களைச் சுற்றியோ ஆடுகிறார்களே, என்று கேட்டிருக்கிறார்கள். நமது தம்பதியர், சினிமாவில் வரும் டூயட் மாதிரி காதலன் காதலியோ, அல்லது கணவன் மனைவியோ பாட்டு பாடி ஆடுவதில்லை என்று விளக்கியிருக்கிறார்கள். அந்த அமெரிக்கர்கள் ஆச்சரியப்பட்டு போனார்களாம். இந்திய தம்பதியரோ அல்லது காதலர்களோ டூயட் பாடுவதைப் பார்த்துத்தான் இந்தியத் திரைப்படங்கள் காப்பி அடிக்கின்றன என்று அதுவரை நினைத்திருக்கிறார்கள்.

காரணம் அங்கே வாழ்க்கை திரைப்படமாகிறது. இங்கேயோ திரைப்படத்தை வாழ்க்கையாக்குகிற முயற்சி நடைபெறுகிறது.

### அபத்தப் பிரியர்கள்

எனக்குத் தெரிந்து, இந்தியத் திரைப்படங்களில் மட்டுந்தான், டூயட் பாடல்கள் இடம் பெறுகின்றன. வேறு எந்த நாட்டுத் திரைப்படத்திலும், இப்படிப்பட்ட கோமாளித்தனங்கள் கிடையாது. தேவைப்பட்டால் ஒரு கிளப்பின் ஆடல் பாடல் காட்சிகளையோ அல்லது மேடை நிகழ்ச்சிகளையோ, டேப்புகளை போட்டோ உள்ளது உள்ளபடி காட்டுவார்கள்.

இந்தியத் திரைப்படங்களில் இத்தகைய நம்ப முடியாத டூயட் பாடல்கள், ஒருவனை வீரனாக்குவதற்காக முப்பது பேரை பேடியாக்குவது, மகன் இன்ஸ்பெக்டர், தந்தை கொள்ளைக்காரன், மகள் குற்றவாளி, தந்தை நீதிபதி, அம்மாவுக்குத் தெரிந்த மகன், மகனுக்கு தெரியாத அம்மா, எல்லாம் முடிந்த பிறகு இறுதியாக வரும் போலீஸ், நீதிமன்ற களேபரங்கள் போன்ற அபத்தமான காட்சிகளை மக்களும், அபத்தமாகவே ரசிக்கிறார்கள்: பெரும்பாலோருக்கு இது செயற்கைத்தனம் என்றும், ஒரு திரைப்படத்திற்கு தேவையான மசாலா என்றும் தெரியும். இப்படி தெரிந்து கொண்டுதான் ரசிக்கிறார்கள். அபத்தங்களை ரசிப்பதில் நம்மவர்களுக்கு ஒரு அலாதிப் பிரியம்.

### ரத்தம் தேவைப்படாத கண்ணீர்

என்றாலும், விளையாட்டு, வினையாகும் என்பதுபோல், சினிமாத் துறையினர் எடுக்கும் சில அபத்தமான காட்சிகளும், கருத்துக்களும் சமூகத்திற்கு கேடு விளைவிக்கின்றன. இவர்கள், விஞ்ஞான விரோதமான கருத்துக்களை நம்ப வைத்து பல சமூக விபரீதங்களை ஏற்படுத்துகிறார்கள். இப்படி ஏற்படுத்தும் படங்களும் சக்கை போடு போடுகின்றன. எடுத்துக்காட்டாக, நடிகவேள் எம்.ஆர்.ராதாவை நாடறியச் செய்த ரத்தக் கண்ணீர்ணி சினிமாவை மேற்கோள் காட்டலாம். இந்தப் படம், அந்தக் காலத்தில் கொடி கட்டிப் பறந்ததோடு, பரபரப்பாக பேசப்பட்டது. இதில் நடித்த எம்.ஆர். ராதாவுக்கு, காந்தா என்ற தாசியோடு பாலியல் உறவு கொண்டதால் தான், அவருக்கு தொழுநோய் (குஷ்டரோகம்) வந்ததாக கதைக்கரு அமைந்திருந்தது. இந்தத் நோய் பெண்களால் வரக்கூடியது என்ற ஒரு தவறான கருத்து அனைத்து மட்டத்திலும் இந்தப் திரைப்படத்தால் ஏற்பட்டது. இன்று கூட, இதன் தாக்கம் உள்ளது. ஆனால் இந்த தொழுநோய் பெண்களோடான பாலியல் உறவால் வருவதல்ல. 'மைக்கோ பாக்டீரியம் லெப்ரேணி' என்ற கிருமிகளால்

வரக்கூடியது. ஆகையால் இந்த நோய் உண்மையான பிரம்மச்சாரிகளுக்கும் வரலாம். இந்த விஞ்ஞான உண்மைக்கு புறம்பாக ரத்தக் கண்ணீர் திரைப்படம் தவறான தகவலை கொடுத்ததோடு பெண்களையும், கொடூரமாக நோக்குவதற்கு தளம் அமைத்துக் கொடுத்தது. இது குறித்து கவிஞர் தணிகைச்செல்வன் தினமணியில் விபரமாகவே எழுதியிருக்கிறார்.

**சிறு பிள்ளைத்தனமான கற்பனை**

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான ஒரு திரைப்படம். அதில் இளம் பெண்ணான ரேவதிக்கு ஏதோ ஒரு மனச்சிக்கலுக்காக 'ஹிப்னாட்டிஸம்' எனப்படும் வசீக சிகிச்சை வழங்கப்படும். இதன் மூலம் ஒருவரை அவரது கடந்த காலத்திற்கு கொண்டு செல்ல முடியும். இந்த சிகிச்சையின்படி, ரேவதி, ஐந்தாறு வயது குழந்தை பருவத்திற்கு போய்விடுவார். அந்தச் சமயம் பார்த்து, அவரை அந்த குழந்தைப் பருவத்திற்குள் அழைத்துச் சென்ற டாக்டருக்கு மாரடைப்பால் மரணம் ஏற்படும். இதற்குப் பிறகு இளம்பெண்ணான ரேவதி ஒரு குழந்தை போலவே பேசுவார்; நடப்பார். இவரை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு ஒரு கதை. இப்படிப்பட்ட ஒரு மட்டமான கற்பனை எப்படி தோன்றியதோ?

மனநோய் சிகிச்சைகளுக்கு, பல வழிகள் உள்ளன. இவற்றில் மிகவும் எளியது "ஹிப்னாட்டிஸம்" என்று சொல்லக்கூடிய வசிய முறை. மனநோயாளியை, ஒரு மெத்தைக் கட்டிலில் படுக்க வைத்து சுருள் சுருளான வட்டக் கோடுகளின் மையத்தில் உள்ள ஒரு புள்ளியை மட்டும் பார்க்க வைத்து, சம்பந்தப்பட்ட மனோதத்துவ நிபுணர் இன்னும் பத்து சொல்வதற்குள் உங்கள் மனம் நான் சொன்னபடி கேட்கும் என்று சொல்வார். உடனே அந்த நோயாளியின் மனமும் நிபுணரின் வசப்படும். இந்த சிகிச்சைக்கு நோயாளியின் ஒத்துழைப்பு அவசியம். அவர் நிபுணர் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற எண்ணமற்றவராக இருந்தால், "ஹிப்னாட்டிஸம்" எடுபடாது. என்றாலும், ஒத்துழைப்பு கொடுக்கும் மனநோயாளியை, அரை மயக்க நிலையில் வைத்து, அவரது அடிமனதை வெளிப்படுத்தி, குழந்தைப் பருவம், வாலிபப் பருவம் போன்றவற்றை நிபுணரால் வெளிக்கொண்டு வர முடியும். அந்த நோயாளின் அடிமனதில் மண்டிக் கிடக்கும் நிகழ்ச்சிகள் தொடர்பான உணர்வுகளை நோயாளியாலேயே பேச வைக்க முடியும். இதனால் அடிமனச்சுமை இறங்கும். பிறகு, இன்னும் பத்து சொல்வதற்குள் நீங்கள் பழைய படி ஆகிவிடுவீர்கள் என்று நிபுணர் சொல்லி விட்டு, ஒன்று, இரண்டு என்று எண்ணும்போது சம்பந்தப்பட்ட மனநோயாளியும் இப்போதைய வயதுக்கு திரும்பி விடுவார்.

மனோதத்துவ நிபுணர் அந்தத் திரைப்படத்தில் வருவது மாதிரி ஒருவரை குழந்தையாக்கி விட்டு, சிவலோகமோ அல்லது பரலோகமோ போய்விட்டாலும், அந்த மனநோயாளி சிறிது இடைவெளிக்குப் பிறகு சகஜ நிலைக்கு திரும்பி விடுவார். மனோதத்துவ நிபுணரின் ஆணைகள் கேட்கப்படும் வரைக்குமே, அந்த நோயாளி குறிப்பிட்ட பருவக்கட்டத்தில் இருப்பார். அந்த ஆணைகள் தொடர்ந்து கிடைக்காது போனால், நோயாளி மனோவசிய நிலையில் இருந்து பழைய நிலைக்கு தானாகவே மீண்டு விடுவார். இந்தச் சிகிச்சையையும் அதிக நேரத்திற்கு செய்ய முடியாது. அதாவது மனநோயாளியை அந்த நிபுணரின் மனோ ஆதிக்கத்தில் அதிக நேரம் வைத்திருக்க முடியாது. இப்படிப்பட்ட நிலையில், குழந்தைப் பருவத்திற்கு கொண்டு போகப்பட்ட கதாநாயகி, ஆண்டுக்கணக்கில் குழந்தை போலவே ஆகிவிடுவதாக காட்டுவது அப்பட்டமான அறியாமை. அல்லது வேண்டுமென்றே காது குத்தும் முயற்சி. ஆனாலும், காதுகள் குத்தப்படாமல் ரசிகர்களின் மூளை குத்தப்படுகிறது.

### பொதுவான பாமரத் தனங்கள்

பெரும்பாலான திரைப்படங்களில், பொதுவான பாமரத் தனங்களை நாம் பார்க்கலாம். வில்லன், கதாநாயகியையோ அல்லது அவள் தந்தையையோ கடத்திக் கொண்டு போவான். மறைவான ஒரு இடத்தில் கட்டிப் போடுவான். பிறகு துப்பாக்கி முனையில் அத்தனைச் சொத்துக்களையடம் கதாநாயகி அல்லது அவள் தந்தை தனக்கு எழுதி கொடுத்ததாக ஒரு பத்திரத்தை காட்டி அதில் கையெழுத்து போடச் சொல்வான். கதாநாயகி மறுப்பாள் அல்லது கையெழுத்துப் போட்டு தியாகம் செய்வாள். இது அபத்தத்திலும் மோசமான அபத்தம். ஒருவர் தனக்கு உரிமையான சொத்துக்களை பிறருக்கு கொடுக்க வேண்டுமென்றால், பத்திரம் எழுதி கையெழுத்து போட்டால் மட்டும் செல்லாது. எந்தச் சொத்தையும் அரசு பதிவு அலுவலகத்தில் முறைப்படி பதிவு செய்ய வேண்டும். விற்பவர் அங்கே சென்று சார்வு பதிவாளர் முன்னால் கையெழுத்துப் போடவேண்டும். அவர் கேட்கும் சந்தேகங்களுக்கு விடையளிக்க வேண்டும். நிலைமை இப்படி இருக்கையில், ஏதாவது ஒரு பத்திரத்தில் ஒரே ஒரு கையெழுத்து போட்டுவிட்டால் எல்லாம் முடிந்து விடும் என்பதுபோல், நமது சினிமாக்காரர்கள் இந்தப் பொய்யை பரவலாக பரப்பி விடுகிறார்கள்.

திரைப்படங்களில் பொதுவாக வரும் இன்னொரு பாமரத்தனமான கருத்து. ஒருவர் தலையில் அடிபட்டு பைத்தியமாகத் திரிவார். இடைவேளைக்குப் பிறகு அதே

தலையில் இன்னொரு அடிபட்டு அவருக்கு பைத்தியம் தெளிந்துவிடுமாம். இப்படி பைத்தியக்காரத்தனமான படங்களை பார்க்க வேண்டியது நமது தலைவிதியாகி விட்டது. இன்னும் ஒரு பொதுப்படையான காட்சி. கதாநாயகன், கடத்தப்பட்ட காதல் பெண்ணை தேடிப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவனிடமோ வாகனம் ஏதும் இருக்காது. உடனே ஒரு சைக்கிள்காரனை அடித்துப் போட்டுவிட்டோ அல்லது கார்க்காரனை பள்ளத்தில் உருட்டி விட்டோ அந்த வாகனத்தை ஓட்டிக்கொண்டு ஓடுவான். இதற்கு ரசிகர்களின் கைதட்டும் பலமாக இருக்கும். இப்படிச் செய்வது ஒரு கிரிமினல் குற்றம். இதை உண்மையாகவே செய்கிறவனுக்கு சிறைத் தண்டனை கிடைக்கும். ஆனால் அப்படி நடிப்பவருக்கோ லட்சக்கணக்கில் பணம் கிடைக்கும். இப்படிப்பட்ட நாயகனை போல் அவன் ரசிகன் நடந்து கொண்டால் இந்த சமூகம் என்னாவது?

## கொச்சைப் படுத்தப்படும் கிராமங்கள்

என் வீட்டிலும் தொலைக்காட்சி இருப்பதால், என் விருப்பத்திற்கு விரோதமாக சில திரைப்படங்களை பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அண்மையில் நான் பார்த்த ஒரு படத்தில், கதாநாயகனான கார்த்தி, காதலர்களை ஒன்று சேர்த்து வைத்த குற்றத்திற்காக, ஊர்ப்பஞ்சாயத்து அவருக்கு பூமி பூஜை என்ற தண்டனை வழங்குகிறது. இதன்படி, சாத்திர சம்பிரதாயங்களோடு, மாலை மரியாதைகளோடு அவர் ஒரு குழிக்குள் இறக்கப்படுகிறார்; மண்ணை மூட வேண்டியதுதான் பாக்கி. இப்படி எந்த ஊரில் பூமி பூஜை என்கிற உயிரோடு சமாதி வைத்தல் நடைபெறுகிறது? நடைபெறாத ஒரு கொடூரத்தை நடைபெறச் செய்ய நினைப்பதும் சட்டப்படியான குற்றமே.

இன்னொரு படத்தில், கதாநாயகி தன் கையால் கன்னத்தில் அறை வாங்கும் ஊர்வாசிகள் ஒவ்வொருவருக்கும் தலைக்கு பத்து ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கிறாள். உடனே ஊரே அவளிடம் அடி வாங்கி, தலைக்கு பத்து ரூபாய் வாங்க திரள்கிறதாம். இன்னொரு படம். இந்தப்படம் அதன் அப்போதைய புதிய இயக்குநரை நாடறியச் செய்து, என் உயிரினும் இனிய தமிழ் மக்களே என்று பேச வைத்திருக்கும் வெற்றித் திரைப்படம். இந்தப் படத்தில் வறண்டு போன ஊருக்கு, மழையை வருவிப்பதற்காக, கன்னி கழியாத இளம் பெண் ஒருத்தி அந்த ஊரைச்சுற்றி நிர்வாணமாக போகிறாளாம். எந்த ஊரிலும் நடைபெறாத சம்பவம் இது. ஆனாலும், இந்தக் காட்சியை அந்த இயக்குநர் அரசு விருதுகள் சாட்சியாக நியாயப்படுத்துகிறார். இப்படி கிராமங்கள் கொச்சைப் படுத்தப்படுகின்றன.

## கொடூரமான கொடுமை

கொடூரமான கிரிமினல் செயல்பாடுகளையும், நமது திரைப்பட நண்பர்கள் வியாபாரமாக்க தயங்குவதில்லை. உதாரணமாக, பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ரங்கா, பில்லா என்ற இரண்டு கொடூரமான ரவுடிகள் புதுதில்லியில் புத்தர் பூங்காவில், ஒரு ராணுவ அதிகாரியின் மகளை கற்பழித்து கொடூரமாக கொன்றார்கள். ஆனால், இவர்களின் பேரில் இங்கே திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடின. இவற்றின் கதைக்கருக்கள் மாறுபட்டது என்றாலும், அப்போது பரவலாக பேசப்பட்ட கொடிய கயவர்களின் பெயர்களை திரைப்படங்களுக்கு வைத்தது ஒரு இழிவான வியாபாரத்தனமாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள எடுத்துக்காட்டுகள் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது மாதிரிதான். அபத்தங்களை பட்டியலிட்டால் பெரும்பாலான திரைப்படங்கள் தேறாது. திரைப்படங்களில் பேன்டஸிணி (எஆசபஆஈவ) எனப்படும் நம்பமுடியாத அதீதங்கள் தேவைப்படலாம். ஆனால் இவையே விஞ்ஞானத்திற்கு புறம்பாகவும், சமூகத்தில் நிலவாத சம்பவங்களை காட்சிப் படுத்துவதாகவும் இருக்கலாகாது. ஆனால் நமது திரைப்படக்காரர்களோ செயற்கையான திரைப்படங்களை எடுப்பதன் மூலம் இப்போது மக்களையும் செயற்கையாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

## ஒரு வேண்டுகோள்

திரைப்படத் துறையினருக்கு, இந்த சமூகத்தின் சார்பில் ஒரு பணிவான வேண்டுகோளை விடுக்க வேண்டியதாகிறது. இவர்கள், வெறும் கனவு வியாபாரிகளாக இல்லாமல், சமூகப் பொறுப்புள்ள கலைஞர்களாகவும் பரிணாமப்பட வேண்டும். மத்திய அரசு சார்பில் திரைப்படத் தணிக்கைக்குழு ஒன்று இருப்பதாக அறிகிறேன். இந்தக் குழு காட்சிகளை தணிக்கை செய்கிறதே தவிர, விஞ்ஞான அல்லது சமூக விரோதமான கதைக்கருக்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இதற்குக் காரணம் இந்த குழுவில் பெரும்பாலும் திரைப்பட வியாபாரிகளும், சமூகப் போலிகளுமே இடம் பெற்றிருக்கிறார்கள். இதில் மருத்துவர், பேராசிரியர், பொறியாளர், சமூகப் பொறுப்புள்ள எழுத்தாளர், சமூக சிந்தனையாளர் போன்றவர்களையும் சேர்க்க வேண்டும். இதனால் திரைப்பட அபத்தங்கள் குறையாது போனாலும், விஞ்ஞானத்திற்கும், சமூக பொறுப்புக்கும் எதிரான கருத்துக்கள் இடம்பெறாது என்று நம்பலாம்.

நவசக்தி வார இதழ்கள் - 1999.

# போராளித் துறவி சாலய்யார்...

போராசிரியர் சாலய். இளந்திரையனார் அவர்களைக் குறித்து, இந்தக் கட்டுரையை எழுதும் இந்தத் தருணத்தில், நான் நெகிழ்ந்தும், குழைந்தும் போகிறேன். அவரோடு சம்பந்தப்பட்ட எனது உறவாடல் நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கிறேன். பொதுவாக கடந்தகால நிகழ்ச்சிகள் மனதில் மங்கலான சுவடுகளாகவே தெரியும். ஆனால், சாலய்யாரைப் பற்றிய எனது நினைவுகள் முன்னைய நிகழ்ச்சிகளைவிட வலுவான நிகழ்ச்சிகளாக, மனதில் மறு காட்சிகளாய்த் தோன்றுகின்றன.

1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்..... நான் புதுதில்லியில் வானொலி அமைப்பின் செய்திப் பிரிவில் உதவி ஆசிரியராக பொறுப்பேற்ற வேளை. என் பணியிடத்தில் எனக்குப் பெரிய அதிர்ச்சியே காத்திருந்தது. அங்கு பணியாற்றிய மேட்டுக்குடி தமிழர்கள் என்னைப் பகைப் பார்வையாகவே பார்த்தார்கள். என் மொழி பெயர்ப்பை சிதைத்து, என் மனதைச் சிதைக்க முயற்சித்தார்கள். பிறமொழி மேலதிகாரிகளுக்குப்

**போராளிக் கவிஞர் சாலய்யார் சிறிது விட்டுக் கொடுத்திருந்தால், அவரது தகுதிக்குரிய பல்கலைக் கழகத் தலைவர் பதவி உள்ளிட்ட பல பொறுப்புகள் அவருக்கு வந்திருக்கும்.**

**ஆனாலும், மெய்ப்பொருள் என்பது பதவியைவிட மேலானது என்று திட்டவட்டமாகக் கருதியவர்; கடைபிடித்தவர். எந்தப் பதவியும் மனிதப் பதவிக்கு மேலானது அல்ல என்று உறுதிபட நம்பியவர். வாய்ப்புகளை புறந் தள்ளிய ஒரு போராளித் துறவி சாலய்யார்.**

'போட்டு'க் கொடுத்தார்கள். அவர்களுக்கு, நான் ஒரு தீண்டத்தகாதவனாகவே தென்பட்டேன். என் நிறமும், பேச்சும், பதவியும் அவர்களின் காலங்காலமான பதவிப் பட்டாவிற்கு வில்லங்கமாக தோன்றியது. நான் வாழ்ந்த கரோல் பாக்கிலும் இதே நிலைமைதான். அப்போதுதான், வடமொழித் தமிழர்கள் பெரும்பான்மையாய் இருக்கும் இடத்தில்தான், அவர்களது சுய ரூபத்தை அடையாளம் காணமுடியும் என்று தந்தைப் பெரியார் தெரிவித்த கருத்தின் முழுத் தாக்கமும் எனக்குப் புரிந்தது.

இந்தச் சமயத்தில்தான் சாலய்யார் அவர்கள் எனக்கு அறிமுகமானார். அதுவும் வேறுபட்ட சூழலில் அறிமுகமானார். அங்குள்ள ஒரு சாதியினர், ஒரு சாதி அமைப்பை உருவாக்கி, சாலய்யாரை அதில் சேரச்சொன்னார்கள். அவர், அவர்களை "திட்டி"யதோடு, திட்டவட்டமாக மறுத்துவிட்டார். ஆனால் நான், இந்த முயற்சியை, புதுதில்லிக்கு வந்திருக்கும் 'காலா மதராசி'களில் ஒரு பிரிவினரின் எழுச்சி என்று அனுமானித்து, பட்டும் படாமலும் கலந்து கொண்டேன். சொந்தச் சாதியைச் சேர்ந்தவர்களை, கைத்தடிகளாக பல இலக்கியவாதிகள்கூட பயன்படுத்திக்கொள்ளும் போது, பேராசிரியர் அதற்கு மறுத்தது, நாளடைவில் என்னை ஒரு சாதிய மறுப்பாளனாக பரிணமிக்க வைத்தது.

## இரண்டு வகை உறவாடல்

எவருக்கும் இரண்டு வகையான உறவாடல் உண்டு. ஒன்று சொந்த உறவாடல். இன்னொன்று சமூகச் சிந்தனை வெளிப்பாடுகளில் ஏற்படும் சமூக உறவாடல். இத்தகைய இரண்டு உறவாடல்களும், ஒன்றுக்கொன்று, சம்பந்தமில்லாமல் இருக்கலாம். இப்படித்தான் எல்லோரையும்போல் எனக்கும் இந்த இரண்டு வகை உறவாடல் உள்ளன. ஆனால், சாலய்யாரிடமும், அவரது துணைவியாருடனும், நான் கொண்ட உறவு, இந்த இரண்டு வகைகளையும் கொண்டது. என்னை சொந்த சகோதரனாகவே இருவரும் கருதினார்கள். அதே சமயம், தமிழ்ச் சமூகத்தின் புதிய முளைகளில் ஒன்றாகவும் அனுமானித்தார்கள். தில்லித் தமிழ்ச் சங்கத்திலும், பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளிலும், என்னைப் பங்கெடுக்க வைத்தார். இந்த மகத்தான குடும்பத்திடம், நான் ஒரு மாணவனைப்போல சமூக நிகழ்வுகளுக்கான காரணங்களை கண்டுபிடித்திருக்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசு ஊழியர்களும் தத்தம் அரசாங்கக் குடியிருப்புகளை வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிப்பதற்காக, அதே குடியிருப்பில், ஒற்றை அறையில் தங்களைத் தாங்களே சிறைவைக்கும் சூழலில், சாலய்யார் விசாலமான வீட்டில்

குடியிருந்தார். இப்படி குடியிருப்புகளை வாடகைக்கு விட்ட எம்.பி.க்களை கண்டித்தும் கட்டுரை எழுதினார். அண்ணா உள்ளிட்ட அனைத்துத் தலைவர்களும், டில்லிக்கு வந்தால் அவரைப் பார்க்காமல் சென்றதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் அவரது மாணவர்கள். இப்படி, சமூகத் தலைமை கொண்ட பலருடன் பேசுவதற்கே நேரமில்லாமல் இருந்த சாலய்யார், என்னையும் அவர்களுக்கு இணையாகவே நடத்துவார். என்னை மட்டுமல்ல, டில்லி மாநகரில் படிக்காத பாமரத் தமிழர்களிடமும்கூட, படிப்பாளிகளிடம் எப்படி நடந்து கொள்வாரோ, அப்படியே நடந்து கொள்வார்.

## தொழில் ரகசியம்

நானும், ஒய்வு கிடைக்கும் போதெல்லாம், குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில், அவரது வீட்டிற்குச் செல்வேன். அரிசியில்லாச் சாப்பாடு அதிகாரப் பூர்வமாக செயல்பட்ட சமயத்தில், சாலய்யார் வீடு எனக்கு ஒரு பசியாற்றும் தளமாக விளங்கியது. சாலய்யாருடனும், அவரது துணைவியார் சாலினியுடனும், நான் பணியில் படுத்தப்படும் பாட்டை, அழாக்குறையாகத் தெரிவித்ததுண்டு. அப்போது, சாலினி அவர்கள், ஒரு தாய்மைப் பார்வை வீசுவார். சாலய்யார் ஒரு கோபப் பார்வை வீசுவார். எனது இன்னல்கள் தொடர்வதைக் கண்ட அவர், ஒரு நாள், ஒரு தொழில் ரகசியத்தையும் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தில், விளம்பரக் கண்காட்சித் துறையில், சிறிதுகாலம் தாம் பணியாற்றியதைச் சுட்டிக் காட்டி, அங்கே, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தான் கொடுத்தப் பதிலடியை எனக்கு விலாவாரியாக விளக்கினார். இதனை நானும் பயன்படுத்தத் துவங்கியதில் இருந்து, எனது இன்னல்கள் ஒரேயடியாகப் போயின. என்னுள் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மை போயிற்று.

தில்லிப் பெருநகரில், இப்போது எப்படியோ, அப்போது - அதாவது முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, சிவுப்புத் தமிழர்களும், கறுப்புத் தமிழர்களும், எண்ணெயும் நீறுமாகவே இருந்தார்கள். மண்வாசனைத் தமிழர்கள், தந்தைப் பெரியாரின் தீவிரப் பணியாலும், பெருந்தலைவர் காமராசரின் அரசுத் தலைமையாலும், அப்போதுதான் சிறிது சிறிதாக, தில்லியில் காலூன்றிய காலம். இவர்கள் அத்தனைப் பேருக்கும், சாலய்யார் அவர்களே தலைவராகவும், முன்மாதிரியாகவும் விளங்கினார். இதை, மனதில் கொண்டோ என்னவோ, சிவப்புத் தமிழர்களைக் கொண்ட தில்லித் தமிழ்ச்சங்கம், நமது பேராசிரியரின் தலைமையை

ஏற்றுக்கொண்டது. இவரது பங்களிப்பு இல்லாமல், அந்தக் காலத்தில் தமிழ்ச்சங்க. நிகழ்ச்சிகள் எதுவுமே நடந்ததில்லை. சாலய்யாரின் தாக்கத்தால், இத்தகைய மேட்டுக்குடி தமிழர்களும், தங்களைத் தாங்களே, மறுபரிசீலனை செய்து மண்வாசனைக்கு உரியவர்களாய் மாறினார்கள் என்பதையும் பதிவு செய்தாக வேண்டும்.

### தமிழ்ச்சங்கத் தலைமை

நானும், தில்லித் தமிழ்ச்சங்கத்தில், சாலய்யார் தலைமையில், கவியரங்கம், பேச்சரங்கம் போன்றவற்றில் பங்கெடுத்திருக்கிறேன். ஒரு நிகழ்ச்சி இன்னும் நன்றாகவே நினைவுக்கு வருகிறது. அந்தச் சங்கத்தின் மலரை (சுடர்), உருவாக்கும் பொறுப்பு சாலய்யாரிடம் வழக்கம்போல் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பேராசிரியரும், தமிழ்ச்சங்க துணைத்தலைவரும், தமிழறிஞருமான விஸ்வநாதன், அவர்களின் உதவியோடு, இந்த மலர்களை செம்மையாகத் தயாரிப்பதுண்டு. இவற்றில் ஒன்றில், "நான் ஒரு மூடன்" என்று நான் எழுதிய கவிதை பிரசுரமானது. சராசாரியான ஒருவருக்கு, வானொலிப் பெட்டியின் உள் நுணுக்கங்களோ, அல்லது ஒலிபரப்பின் விஞ்ஞான முறைமைகளோ தெரியாதுபோனாலும், அந்த வானொலிப்பெட்டியில் எதைஎதை எப்படித் திருகினால், இசையோ அல்லது சொற்பொழிவோ கேட்கும் என்பதைத் தெரிந்து வைத்திருப்பார். இதுபோல் 'எனக்கு முருகனுக்கு வேல் இருப்பதாகவோ, மயில் இருப்பதாகவோ, முருகன் என்ற ஒன்று இருப்பதாகவோ தெரியாது. ஆனாலும், முருகக் கோயிலுக்கு நான் போனால் எனக்கு நினைத்தது நடக்கிறது, வேண்டுமானால் என்னை மூடன் என்று சொல்லுங்கள், கவலையில்லை' என்ற பொருளில் அந்தக் கவிதையை எழுதி இருந்தேன். இதைப் பற்றிக் கருத்துச் சொல்லும்படி, சாலய்யாரை வம்புக்கும் இழுத்தேன். உடனே அவர், "நீங்கள் மூடனாகவே இருப்பதாகத் தீர்மானித்தால், நான் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டார். என் முகம் சுருங்கியதைப் பார்த்த, மிகச்சிறந்த மனிதநேயரான அவர், "உங்கள் கவிதை எனக்கு ஏற்புடையது இல்லையென்றாலும், அது நல்ல கவிதை" என்பதுமாதிரி பாராட்டினார்.

### வால்டேர் வழியில்....

சாலய்யாரிடம், எனக்கு பல கருத்து வேறுபாடுகள் உண்டு. இது எப்போதுமே மோதல்கள் ஆனதில்லை. அந்தக்காலத்தில், அவரது வீட்டில், உணவருந்திக்கொண்டே அவரது கருத்துகள் சிலவற்றை மறுப்பேன். சாலினி அவர்கள், தனது துணைவரோடு சேர்ந்து எனது கருத்துகளுக்கு எதிராக வாதாடுவார். பலசமயம், சாலய்யாரின் அணுகுமுறைக்கு என்னை உட்படுத்திக் கொள்வேன்.

சில சமயம், முற்றிலும் மாறுபடுவேன். இந்த இரண்டு சமயங்களிலும், சாலய்யார் மகிழ்ச்சியும் அடையமாட்டார், வருத்தமும் கொள்ள மாட்டார். பிறருக்கு உள்ள மறுப்புரிமையை வால்டேரைப்போல, முழுமையாக அங்கீகரித்தவர். ஆரம்பகாலத்தில் அவருடன், நான் மேற்கொண்ட கருத்துப் பகிர்வு, என்னை ஒரு சமூகப் போராளி எழுத்தாளனாக உருவாக்குவதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்றாகும். நான் ஆரம்ப காலத்தில் எழுதிய, **'வளர்ப்பு மகள்'** என்ற நாவல், நடுவண் அரசின் மேல்நிலைப் பள்ளிகளில் பன்னிரண்டாவது வகுப்பிற்கு பாடநூலாக வைக்கப்பட்டதற்கு, சாலய்யாரே காரணம்.

**பலாப்பழம் போல்வார்....**

சாலய்யார் அவர்கள், ஒரு பலாப்பழம் மாதிரி. அவரது அடலேறான தோற்றமும், பேச்சும் ஆரம்பத்தில், முன்பின் அறியாதவர்களுக்கு ஒரு அச்சத்தைக் கொடுக்கும். ஒரே ஒரு நிமிடம் தான். அதற்குள் அந்தப் பலாப்பழமே தானே உடைந்து, தனது சுளைகளைக் காட்டும். ஒருபக்கம் போராளியாக இருந்த அவர், மறுபக்கம் எல்லாப் போராளிகளையும்போல ஒரு சேயாகவும், தோன்றினார். இத்தகையப் பலாப்பழத்தை கண்டறிந்து, உண்டறிய முடியாத - தமிழகத்தில் வாழும், சாதிகெட்ட தமிழனை, செம்மைப் படுத்த பல்வேறு திட்டங்களோடு சென்னைக்கு வந்தார். இதற்காகவே வசதியாக வாங்கிய சம்பளத்தையும் உதறிவிட்டு ஓடிவந்தார். ஆனால், இந்தத் தமிழன் அவரை கண்டுகொள்ள வேண்டிய அளவிற்கு கண்டுகொள்ளவில்லை. இது அவரது தோல்வி அல்ல. சினிமாத் தனங்களிலும், காலடிக் கலாச்சாரத்திலும் சிக்கிக் கிடக்கும் தமிழனின் தலைவிதி இது. இவன், சாலய்யார் போன்றோரின் தலைமைக்கு தகுதி இல்லாதவனாகவே இருந்து வருகிறான்.

**வித்தும்-விளைச்சலும்...**

எனது **நிழல் முகங்கள்** என்ற நாவலில் ஒரு காட்சி. இந்திய ஆட்சிப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளங்கோ என்ற கருப்புத் தமிழ் இளைஞன், தமிழகத்தின் அவல நிலைக்கு தமிழ்ப் பழைமை மீட்பு வாதத்தில் மனம் செலுத்தும் தமிழாசிரியர்களும் ஒரு காரணம் என்று ஒரு ரயில் பயணத்தில் விமர்சித்தபோது, அதற்குப் பதிலாக பேராசிரியர் சோமய்யா என்ற பாத்திரம் இப்படிப் பேசும்:

"முற்போக்குத் தமிழனுக்கும், கெட்டதுகளில் நல்லது இருப்பதைக் கண்டுபிடிக்க இப்போதைக்கு முடியவில்லை என்பதற்கு நீயும் ஒரு

உதாரணம். இப்போதைய தமிழறிஞர்களிலே உன்னைவிட வேகமாக சிந்திப்பவர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள்.... உதாரணத்துக்கு காலஞ்சென்ற இலங்கைத் தமிழறிஞர் கைலாசபதி.... நெல்லைத் தமிழறிஞர் வானமாமலை.... இன்னும் நம்மிடையே வாழும் பேராசிரியர்கள் சிவத்தம்பி.... சாலய் இளந்திரையன்... முகவை. ராசமாணிக்கம்...."

அந்த நாவலில் தமிழாசிரியரான சோமய்யா, தனது துணைவியாருடன் தில்லிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவர். கோடை விடுமுறைகளில் தமிழகம் முழுவதும், பகுத்தறிவு அடிப்படையில் இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்துபவர். இந்த சோமய்யா பாத்திரத்தையும், சாலய்யாரையும், சாலினியையும் மனதில் வைத்தே எழுதினேன்.

சமூகக் காரணங்களுக்காக சாலய்யார் அவர்களோடு நான் தொடர்பற்றிருந்த காலக்கட்டத்தில், எழுதப்பட்ட நாவல் இது. அப்படி எழுதியதாக நான் அவரிடம் தெரிவிக்கவும் இல்லை. ஆனாலும் அந்த நாவல் அவரது பார்வைக்குச் சென்றுள்ளது. ஒரு நிகழ்ச்சியில் சாலய்யாரை சந்திக்கும்போது, இந்த நாவலில் அவரை நான் குறிப்பிட்டதற்காக சிறிது நெகிழ்ந்து போனார். இப்படிச் சொல்வதால், நான் அவருக்கு ஏதோ சலுகை வழங்கியதாகக் கூறவில்லை. இன்றையக் காலக்கட்டத்தில் மண்வாசனைப் படைப்பாளிகளுக்கும், தமிழாசிரியர்களுக்கும் பொதுவாக தொடர்போ, அல்லது இலக்கியப் பரிமாற்றமோ அதிகமாக இல்லை. ஆனால் சாலய்யார் பழமை இலக்கியத்தையும், நவீன இலக்கியத்தையும் நன்கு அறிந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக தமிழாசிரியர்கள் இடையே சுயமரியாதையைக் கொடுத்த ஒருசில பேராசிரியர்களில் ஒருவர், சாலய்யார். அவரது முன்மாதிரி நோக்காலும், போக்காலும், தமிழாசிரியர்கள் புதுமைச் சிந்தனையாளர்களாகவும், சமூகப் போராளிகளாகவும் விளங்குகிறார்கள். சாலய்யார் போன்றவர்கள் நட்ட வித்துக்களே இப்படிப்பட்ட விளைச்சலாகப் பெருகியுள்ளது.

## புகழ் மறுத்த துறவிப் போராளி

சாலய்யார் சிறிது விட்டுக்கொடுத்திருந்தால், அவரது தகுதிக்குரிய பல்கலைக் கழகத் தலைவர் பதவி உள்ளிட்ட பல பொறுப்புகள் அவருக்கு வந்திருக்கும். ஆனாலும் மெய்ப்பொருள் என்பது, பதவியை விட மேலானது என்று திட்டவட்டமாகக் கருதியவர், கடைபிடித்தவர். எந்தப் பதவியும், மனிதப்பதவிக்கு மேலானதல்ல என்று உறுதியுடன் நம்பியவர். ஆகையால் அருகில் தோன்றிய பொறுப்புக்கான

வாய்ப்புக்களை, தொலைவாய்ப்..... புறந்தள்ளிவிட்டு, ஒரு போராளித் துறவியாகச் செயல்பட்டவர்.

என்றாலும், சாலய்யார் அவர்கள் மரணத்திற்குப் பிறகு, மறுபிறவியாய் விசுவரூபம் எடுத்திருக்கிறார். இவரது மரணம் நம்முள் மரணமுற்ற சுயமரியாதை, தன்னல மறுப்பு, தமிழ் நேயம் போன்ற நெறிகளை மரித்தெழச் செய்திருக்கிறது. இப்போதாவது, பல்வேறு அமைப்புகள் சாலய்யாரின் மரணம், தமிழ் நெறிகளின் மரணமாகும் சூழலைப் புரிந்து கொண்டது பாராட்டத்தக்கது. அவரை மையமாக வைத்து நிகழ்ச்சிகளை நடத்தாத அமைப்புகள்கூட இப்போது, அவரைப்பற்றி நிகழ்ச்சிகளை அமைப்பதும், நிகழ்ச்சிகளை இதழ்களில் எழுதுவதும், காலம் தாழ்த்திய செயற்பாடு என்றாலும், பாராட்டிற்குரியது. சாலய்யாரின் நினைவைப் போற்றுவதென்பது, அவரது நெறிகளைப் போற்றுவதே! அவரைப்போல், புகழை விரும்பாதத் துறவியாக, எந்த விவகாரத்திலும் உள்ளதை உள்ளபடிச் சொல்லும் சிந்தனையாளராக, எந்தப் போராட்டத்திலும் முதலில் நிற்கும் போராளியாக நாம் நிற்பதே அவருக்குச் செய்யும் சேவையாகும்.

சாலய்யார் விட்டுச் சென்ற பணிகளை, அவருக்கு இணையாக செயல்படுத்தும் ஆற்றல் கொண்டவர் சாலினியார் அவர்கள். இவர்கள் இருவரும், வீட்டிலும் மேடையிலும் ஒரேமாதிரியான பார்வை கொண்டவர்கள். ஒரு இம்மி அளவுகூட கருத்து வேறுபாடு கொள்ளாதவர்கள். ஒரு சுயமரியாதைப் போராளி, எப்படி மனைவியை நடத்த வேண்டும் என்பதற்கு சாலய்யாரும், இதே நெறிகளைக் கொண்ட ஒரு மனைவி, எப்படிக் கணவனிடம் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கேற்ப சாலினியாரும் இருந்தனர். இந்த இருவருக்கும் இணையாக எவரும் இருப்பார்களா என்பது சந்தேகமே. இப்படி இவர்கள் இணையான இணை. இந்த இணையில் ஒருவர் நம்மோடு வாழ்கிறார். அந்தச் சாலினியாரின் தலைமையில் நம்மிடையே நிலவும் ஒருசில கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட, தமிழனுக்கு உரிய பொதுவிவகாரங்களுக்கு போராடுவது சாலய்யாருக்கு ஒரு நிரந்தரமான நினைவாகும். அதேசமயத்தில், தக்காரும் மிக்காரும் இல்லாமல் மானுட சேவைக்கென்றே வாழ்ந்த சாலய்யாருக்கு, அரசோ அல்லது நாமோ ஒரு நினைவு மண்டபத்தை அமைக்க வேண்டும்; அமைத்தாக வேண்டும்.

**சாலய் இளந்திரையனார் நினைவுமலர் – 1999.**

# அரவானிகள்

ஆணின் உடம்பில் சிறை பட்டிருக்கும் பெண்களைப் பார்த்திருக்கிறோமா? கேள்விப் பட்டிருக்கிறோமா?

அனைவரும் பார்த்திருக்கிறார்கள். ஆனால் கேள்விப்பட்டதில்லை எங்கேயாவது ஒரு இடத்தில் குறிப்பாக கடைகண்ணிகளில், கூத்துக்களில், கடற்கரைகளில், நகரப் பேருந்து நிலையங்களில் இவர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இவர்கள்தான், ஆணு டம்பில் அடைபட்டிருக்கும் பெண் கள் என்பதை அறிய மாட்டோம். இவர்களைப் பார்த்ததும், நயத்தகு நாகரிகமான வர்களுக்கும் உதட்டோரம் ஒரு கேலிச் சிரிப்பு ஏற்படும். சிலர் ஒதுங்கிப் போவார்கள். பலர் ஒதுக்கிப் போவார்கள். கீழ்மட்ட ரவுடிகளும், கேடிகளும் இவர்களை "பொட்டை" என்பார்கள். ஆனாலும் இவர்கள் பொட்டை கள் அல்ல. பலர் நினைப்பது போல், பாலி யல் உணர்வு இல்லாத ஆண்மை யற்றவர்களும் அல்ல. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகிற ஆண்களும் அல்ல.

**அரவாணிகள் அல்லது அலிகள் ஆண் உடம்புகளில் சிறைபட்ட பெண்கள். கர்ப்பப்பை தவிர்த்து ஒரு பெண்ணுக்குரிய அத்தனை உணர்வுகளும் கொண்டவர்கள்.**

**ஊனமுற்றோருக்காக ஓரளவு உதவிகள் செய்து வரும் மத்திய, மாநில அரசுகள், இந்த பாவப்பட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு, இலவச வீட்டுமனை, மருத்துவ வசதி போன்றவற்றை செய்ய வேண்டும். காரணம் இவர்களும் பாலியலில் ஊனப்பட்டவர்களே.**

### இவர்கள் அவர்கள் அல்ல

ஆண்மையற்றவர்கள், ஒரு ஆணுக்குரிய சகலத்தோற்றத்தோடும் அறிவோடும் விளங்குவார்கள். அதேசமயம் இவர்களுக்கு பாலுணர்வு முற்றிலும் கிடையாது. இவர்களை நகரங்களில் 'ஒன்பது' என்றும், தென் மாவட்டங்களில் 'பெத்தட்டிகள்' என்றும் குறிப்பிடுவார்கள் இதேபோல் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுகிறவர்கள், சராசரி சிறுவர்களாகத் துவங்கி, வக்கரித்தப் பெரிசுகளின் பணத்திற்கும், பண்டங்களுக்கும் மயங்கி, ஓரினச்சேர்க்கைக்கு கட்டாயமாக்கப்பட்டு, பிறகு அந்த ரசனைக்கே அடிமையானவர்கள். இவர்க்ளை, சென்னை நகரத்தின் பூங்காக்களிலும், கடற்கரைச்சாலையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் மெல்லிய ஆடல் பாடலோடு பார்க்கலாம்.

இங்கே குறிப்பிடப்படுகிற 'ஆண் உடம்பின் கைதிகள்' இவர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள். அவர்கள் ஆக்கப்பட்டவர்கள். இவர்கள் பிறவியிலேயே ஆனவர்கள். இவர்கள்தான் அலிகள். இப்போது தங்களை அரவாணிகள் என்று அழைக்க வேண்டுமென்று சங்கம் அமைத்து வேண்டுகோள் விடுப்பவர்கள்.

### இந்த அலிகள் ப்படித் தோன்றுகிறார்கள்?

பூப்படைந்த பெண்ணிற்கு, மாதம் ஒரு தடவை கருப்பையில் ஒரு முட்டை உருவாகிறது. உடல்சேர்க்கையின் போது ஆணின் ந்தில் உள்ள கோடிக்கணக்கான உயிர் அணுக்கள் இந்த கருமுட்டைக்குள் ஊடுருவப் போட்டியிடுகின்றன. இதற்காக இந்த முட்டையை முற்றுகையிடுகின்றன. இவற்றில் ஒன்றே ஒன்றுதான் முட்டைக்குள் சேருகிறது. இந்த உயிர் அணுவில் குரோமோசோம்கள் என்ற திரள்கள் உள்ளன. இவற்றில் பாதி ஆண்தன்மை உள்ளவை. எஞ்சிய மீதி பெண்தன்மை உள்ளவை. முட்டை இயல்பிலேயே பெண்தன்மையானது. இந்த முட்டையில் ஆண்தன்மையுள்ள குரோமோசோம் இணைந்தால், கருமுட்ை , ஆண்குழந்தையாகிறது. பெண்தன்மை உள்ளது சேர்ந்தால் குழந்தை பெண்ணாகிறது. ஆக ஒரு குழந்தை ஆணா பெண்ணா என்பதை தீர்மானிப்பது ஆண்தானே அன்றி, பெண்ணல்ல: (ஆனாலும் இந்த ஆண்களும் இவர்களது அம்மாக்களும், ஆண்குழந்தை பெற்றுத்தரவில்லை என்று குற்றஞ்சாட்டி மாட்டுப் பெண்ணை மாடாக்கி விடுகிறார்கள்.)

இத்துடன் இன்னொரு முக்கியமான சங்கதி. பெண்தன்மை கொண்ட கருமுட்டையும், ஆண் அல்லது பெண்தன்மை கொண்ட

குரோமோசோம்களும் இணையும்போது முட்டையின் பெண்ணியல்பும் ஓரளவிற்கு இருக்கும். இதனால்தான் முழுமையான ஆண் என்றோ, முழுமையான பெண் என்றோ, எவரும் கிடையாது. ஒருவரை ஆண் தன்மை மிஞ்சியவர் என்றும், ஒருத்தியை பெண்தன்மை மிஞ்சியவள் என்றுமட்டுமே அழைக்கலாம். ஆனாலும் இந்த மிஞ்சிய தன்மைக்கு ஏற்ப முட்டை ஆண் வடிவத்தையோ அல்லது பெண்வடிவத்தையோ பெற்றுவிடுகிறது. ஆளுமை மட்டும் விகிதாச்சார அடிப்படையில் இரண்டும் கலந்ததாக இருக்கும். ஒரு சிலர், ஆணிலிருந்து பெண்ணாகவோ அல்லது பெண்ணிலிருந்து ஆணாகவோ மாறியிருக்கிறார்கள். குறைவாய் உள்ள ஆண் அல்லது பெண் தன்மை இன்னொரு தன்மையை அமுக்கி விட்டு ஒரு கட்டத்தில், மேலோங்கி விடுவதே காரணம்.

என்றாலும், இந்த அலிகள் இவர்களோடும் சேர்த்தியில்லை. இவர்கள் மானுடத்தின் மூன்றாவது பரிமாணம். ஆணுடம்பில் பெண்ணுமாய், பெண்ணுடம்பில் ஆணுமாய்- இந்த இயல்பு எப்போதும் மாறமுடியாததாய் இருப்பவர்கள். நமது பக்தி இலக்கியங்கள் ஆண்டவனை குறிப்பிடும்போது ஆணாகி, பெண்ணாகி, அலியாகி என்கின்றன. இந்த அலிகள் மனதளவில் பெண்கள் அல்லது ஆண்கள். பெண்ணுடம்பில் ஆண்களாயிருக்கும் அலிகள் குறைவு என்பதால் அவர்களைப் பற்றி இங்கே பேசப்படவில்லை.

இவர்களுக்கு, ஒரு பெண்ணுக்குரிய அத்தனை உடலுறவு ஆசைகளும், ஆசாபாசங்களும் கொண்டவர்கள். ஒரே ஒரு வித்தியாசம் இவர்களுக்கு கர்ப்பப்பை கிடையாது. ஆகையால் இவர்களால் குழந்தை பெறஇயலாது. என்றாலும் தங்களை முழுமையான பெண்களாக ஆக்கிக் கொள்ள, அறுவை சிகிச்சை செய்துகொள்கிறார்கள். ஹார்மோன் ஊசி போட்டு மார்பகங்களை பெரிதாக்கிக் கொள்கிறார்கள். என்றாலும், ஒரு பெண்ணைப் போலவே மனதுக்குப் பிடித்த ஆணுடன் உடலுறவு கொள்ள விரும்பும் இவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் எள்ளி நகையாடப் படுகிறார்கள். வீட்டிலும் இடம் இல்லாமல், நாட்டிலும் இடம் இல்லாமல் நிர்க்கதியாகும் இவர்களுக்கு, வயிற்றுப்பிழைப்பிற்கு, விபசாரத்தைத் தவிர வேறு வழியில்லாமல் போகிறது. கையும் களவுமாக பிடிபடும்போது இவர்களது 'ஜோடிகளைப் பிடிக்காமல், இவர்களை மட்டுமே காவல் துறை கைதுசெய்கிறது. இவர்கள் மீது விபசாரத் தடை சட்டத்தின்கீழ் வழக்கு போடமுடியாது. ஆகையால் நமது வீரதீரக் காவல் துறையினர், இவர்கள் கஞ்சா உள்ளிட்ட பல போதைப் பொருள்களை விற்பதாக

வழக்கு போடுகிறார்கள். நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு முன்பு இவர்களை படாதபாடு படுத்துகிறார்கள்.

## அலிகளும் குடும்பமும்

பாலியல் குணங்கள் பக்குவம்பெறும் பத்துப் பன்னிரெண்டாவது வயதில் சிறுவனாகத் தோன்றுகின்றவன் தன்னுள் ஒரு சிறுமியைக் காண்கிறான். பூப்படைந்த பெண்போல் நாணுகிறான். அவர்களைப் போலவே ரகசியமாக புடவை கட்டுகிறான். இந்தச் சமயத்தில் தன்னைப் பற்றிய புதிர் புரியாமல் அல்லாடுகிறான். இதுவே மனோ நோயாகிறது. ஒவ்வொரு அலியும், விஞ்ஞானப் பூர்வமான மருத்துவ விளக்கம் இல்லாத பின்னணியில், ஆரம்பத்தில் மனோ நோயில் சிக்கிக் கொள்கிறான். குடும்பத்தினரும் இவர்கள் சேலை கட்டுவதை பார்க்கும்போது, அடித்து உதைக்கிறார்கள்; உடம்பில் சூடு போடுகிறார்கள். அப்படியும் அந்த அலியை திருத்த முடியாததால் வீட்டை விட்டு விரட்டியடிக்கிறார்கள். இல்லையானால், அடி உதை தாங்கமுடியாமல் அந்த அலி சிறுசுகள் வீட்டை விட்டு ஓடிவிடுகின்றனர். எப்படியாவது ஒரு வழியில் தங்களைப் போன்ற அலிகளைக் கண்டறிந்து, அந்த சமூகத்தில் இரண்டறக் கலந்து விடுகிறார்கள். ஆனாலும், குடும்பப் பாசம் இறுதிவரை இவர்களை ஆட்கொள்கிறது. பெரும்பாலோர், பல வழிகளில் சம்பாதித்து அடித்து விரட்டிய தங்கள் குடும்பத்திற்கே பணம் அனுப்புகிறார்கள். ஒருசில பணக்கார வீடுகளில் இப்படிப்பட்ட அலிகள் நாசூக்காக வைக்கப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்து, ஒரு சில அரசு ஊழியர்களும் பேராசிரியர்களும் ஆணுடையில் வேடம் போட்டு விளங்குகிறார்கள்.

## கூவமாகிப் போன கூவாகம்

விழுப்புரத்திற்கு அருகே உள்ள கூவாகத்தில் கூத்தாண்டவர் விழா நடைபெறும் மூன்று நாட்கள் மட்டும் அனைவரும் பெண்ணுடையில் வருகிறார்கள். கூத்தாண்டவர்க்கு மாலையிட்டு, இறுதியில் மாங்கல்யம் அறுபடும்போது தங்களது நிலைமையை நினைத்துக் கத்துகிறார்கள், கதறுகிறார்கள். சராசரி மனிதராய் இருக்க முடியாமல் போய் தங்களுக்கும் தங்களது குடும்பத்திற்கும் சிக்கலை ஏற்படுத்துவதற்காக ஒப்பாரி போடுகிறார்கள். இந்த அடிமன வேதனை புரியாமல், நமது பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இவர்களை கேலிக்கும் கேளிக்கைக்கும் உரியவர்களாக சித்தரித்துத் தொலைக்கிறார்கள்.

இந்தப் பாவப்பட்ட பிறவிகளும், தங்களை மானுடத்தின் மூன்றாவது பரிமாணமாக நினைக்காமல், புராண சங்கதிகளில்

அடைக்கலமாகிறார்கள். பாரதப்போரில் பாண்டவர்கள் வெற்றி பெறுவதற்காக சாமுத்திரிகா லட்சணங்கள் அத்தனையையும் கொண்ட அரவானை, பாண்டவர்கள் பலியிடவேண்டிய நிலைமை. ஆனாலும் தனக்குத் திருமணம் செய்துவைத்தால்தான் அப்படி பலியாகத் தயாராய் இருப்பதாக, அரவான் கூறுகிறான். சராசரிப் பெண் எவளும் பலியாகப்போகும் அவனை மணக்க முன்வரவில்லை. ஆகையால், கிருஷ்ணனே பெண்ணாகி அரவானை மணக்கிறார். அரவானும், மணம் முடித்த மூன்று நாளில் களத்தில் பலியாக்கப் படுகிறான். இந்த அலித் தோழர்கள் தங்களை ஆணாகிப் பெண்ணாகி அரவானின் மனைவியாகிய கிருஷ்ண விதவைகளாக நினைக்கிறார்கள். இதற்காக, கூத்தாண்டவர் போன்ற பல்வேறு அரவான் கோயில்களில் ஆண்டுதோறும் சித்திரா பவுர்ணமியில் மணம் முடித்து மாங்கல்யம் இழக்கிறார்கள்.

## அலிகள் உருவாக்கம்

ஒரு அலிக்குழந்தை எப்படி உருவாகிறது என்பது பற்றி இன்னும் முழுமையான ஆராய்ச்சி செய்யப்படவில்லை. குளோனிங் முறையில் சாதனை படைப்பதாய் தம்பட்டம் அடிக்கும் விஞ்ஞானிகளுக்கு மானுடத்தின் அலிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவோ, இந்த அலித்தன்மையை போக்குவதற்கான வழிவகைகளை கண்டறியவோ மனமில்லையோ மார்க்கமில்லையோ அவர்களுக்குத்தான் வெளிச்சம். மேலே குறிப்பிட்டுள்ள குரோமோசோம்களில் ஏற்படும் கோளாறே அலிகள் உருவாவதற்கு காரணம் என்று இதுவரை பொத்தாம் பொதுவாக கூறப்படுகிறது.

என்றாலும், இது இயற்கையின் சமச்சீர் நிலை என்று தத்துவார்த்தமாகக் கூறப்படுகிறது. பொதுவாக மிருகங்களும் பறவைகளும் ஒரு குறிப்பிட்ட காலவரைக்குட்பட்டே பாலியல் உறவில் ஈடுபடும். தாவரங்களில் கூட எல்லாமலர்களும் ஒரே சமயத்தில் மலருவதில்லை. எல்லாப் பூச்சிகளும், வண்டுகளும் ஒரேசமயத்தில் தேன் எடுத்து தங்குத்டையில்லாத மகரந்தச் சேர்க்கையைச் செய்விப்பதில்லை. ஒரு பூவில் முட்டையிடும் பூச்சி, அந்த முட்டையின் பாதுகாப்பிற்காக இன்னொரு பூவையும் இழுத்து மூடி, மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்துகிறது. அந்த முட்டை, பூச்சியாய் ஆவதும், பூ பழமாய் ஆவதும் பின்னர் ஒரே நேரத்தில் நிகழ்கின்றன. இத்தகைய பிரமிக்கத்தக்க சமச்சீர் நிலைக்கு, மனிதன் போக்கு காட்டுகிறான். இவனுக்கு அல்லது இவளுக்கு உடலுறவு என்பது 24 மணி நேர ஈடுபாடு. குழந்தை

பிறப்பதிலும் தாவரங்கள், மிருகங்கள், பறவைகள் போல் வரம்பு கிடையாது. ஆகையால் இயற்கையே, குழந்தை பெற முடியாத அலிகளை உற்பத்தி செய்து, மனிதன் தாழ்த்தும் சமச்சீர் நிலையை ( நராக்குகிறது என்றும் கூறப்படுகிறது.

### இவர்களுக்குச் செய்யவேண்டியது

என்றாலும் ஒரு கேள்வி எழுகிறது. மனித சமூகத்தின் ஒட்டுமொத்தமான - இயற்கை மீதான பாரா முகத்திற்காக, இந்த அலிகள் ஏன் சிலுவை சுமக்க வேண்டும் என்பதுதான். இவர்களை உற்பத்தி ஆக்குவதில் தந்தைக்கும், மறைமுகமாக சமச்சீர்நிலை தாழ்த்தும் மானுடத்திற்கும் பங்குண்டு. இவர்கள் இப்படி பிறப்பதற்கு இவர்களைப் பிறப்பித்த தந்தையே காரணம். ஆகையால் இவர்களுக்கு படிப்பிலும், வேலையிலும், குடியிருப்பிலும், இடஒதுக்கீடு கொடுக்கப்படவேண்டும். அன்னை இந்திரா காந்தி இவர்களுக்கு டில்லியில் குடியிருப்பு கட்டிக் கொடுத்தார். இன்றளவும் அவரை இவர்கள் நன்றியோடு நினைவு கூறுகிறார்கள். அவருக்குப் பிறகு அனாதையாகிப் போனதாய் நினைக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இவர்கள் கேலி க்குரியவர்கள் அல்ல என்று விளக்க வேண்டும். இவர்களை கிண்டல் அடிக்கும் திரைப்படங்களை, நாடகங்களை தடை செய்ய வேண்டும்.

### வாடாமல்லியின் தாக்கம்

நமக்கு நாமே என்ற தத்துவத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரவானிகள் சங்கம் என்ற ஒரு அமைப்பை அண்மையில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். பிற சங்கங்களைப் போல் அல்லாமல் இவர்களின் பிரதிநிதிகளே இவர்களின் தலைவர்கள். இவர்களைப் பற்றி நான் எழுதிய நாவலான "வாடாமல்லிக்கு" வழங்கிய ஆதித்தனார் விருதில் கிடைத்த ஐம்பதாயிரம் ரூபாயில் பத்தாயிரம் ரூபாயை இந்தச் சங்கத்தின் தோற்றத்திற்காகக் கொடுத்தேன். நான் எழுதிய வாடாமல்லி நாவலின் தாக்கத்தால் இப்போதெல்லாம் அரவானிகள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். பழைய பத்தாம்பசலித் தனமான முறைகேடுகளை விட்டுவிட்டு எய்ட்ஸ் விழிப்புணர்வு போன்ற பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

மத்திய, மாநில அரசுகள் ஊனமுற்றோருக்காக எவ்வளவோ உதவிகள் செய்கின்றன. இந்தப் பாவப்பட்ட அலிமக்களுக்கு இந்த இருவகை அரசுகளும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு, வீட்டுமனை, மருத்துவ வசதி போன்றவற்றைச் செய்து

கொடுக்கவேண்டும். காரணம் இவர்களும் பாலியலில் ஊனமுற்றவர்களே.

இதற்கிடையே விஞ்ஞானிகளும், அலிக்குழந்தைப் பிறப்பைத் தடுக்க ஆராய்ச்சி செய்யவேண்டும். இப்போது உயிரணுவில் உள்ள 23 குரோமோசங்களை பிளந்து பார்க்கிற முயற்சி வெற்றி பின் முதல் கட்டத்தில் உள்ளது. இந்த குரோமோசங்களில் நாலு கோடியே பத்து இலட்சத்துக்கும் அதிகமான இயல்புகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதில் அலித்தன்மைக்கு உரிய இயல்புகளைக் கண்டறிந்து இத்தகைய பிறப்பைத் தவிர்க்க ஆய்வு செய்யலாம்.

அலித்தோழர்களும் தங்கள் பங்கிற்கு அரவான் கதை, முர்க்கே மாதா கதை போன்ற புராணங்களின் வம்சா வழிகள் என்று எந்தக் காலத்திலோ சொன்னதை இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இது அசல் மூடநம்பிக்கை. கூவாகம் போன்ற கோயில்களில் தாலி கட்டியும், பிறகு அதை அறுத்தும் ஒப்பாரி வைக்கும் நிகழ்ச்சிகளை நிறுத்தவேண்டும். அதேசமயம் கூவாகம் போன்ற இடங்களில் ஆண்டுக்கு ஒரு தடவை ஆரோக்கியமான முறையில் கூடுவதில் தவறில்லை.

இப்போது அலிகளைப் பரிகாசமாகப் பார்ப்பதுபோய், அனுதாபமாக பார்க்கும் போக்கு ஏற்பட்டுள்ளது. இதுவே பாசமாக வேண்டும். மேலும் கீழும் இல்லாத ஒரு தோழமை உணர்வாக மாறவேண்டும். நான் வாடாமல்லி என்ற தொடர்கதையை ஆனந்தவிகடனில் எழுதி, பின்னர் வானதி பதிப்பகத்தால் வெளியிட்ட பிறகு நிலைமையில் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வளவு காலமாக அலிகளை கிண்டலும் கேலியுமாக விமர்சித்த திரைப்பட-தொலைக்காட்சியினர் இப்போது திடீர் ஞானோதயம் பெற்று அலித்தோழர்களை அனுதாபத்தோடு சித்தரிக்க துவங்கியிருக்கிறார்கள். இவை என்னுடைய நகல் போன்றவைதான். இதற்காக மூலம் கோபப்படவில்லை. காப்பி அடித்தாலும் ஆரோக்கியமாக அடிக்கிறார்களே என்கிற மகிழ்ச்சிதான்.

**நவசக்தி வார இதழ் - 1999.**

# வீட்டைக் கட்டிப் பார்!

எந்தக் காலத்திலோ, 'கடன்படத் தயார்' என்று விண்ணப்பித்து, அந்த நாளே மறந்துபோன சமயத்தில், அரசு என் விண்ணப்பத்தை அங்கீகரித்து வீடு கட்டக் கடன் தொகை 'ஸாங்க்ஷன்' செய்தது. அந்தச் சமயம் பார்த்துப் பதவியுயர்வு என்ற பெயரில் நான் சென்னையிலிருந்து பெங்களூர் போகும்படி ஆகிவிட்டது. மொத்தக் கடன் எழுபதாயிரம் ரூபாயில், இருபதாயிரம் ரூபாய் வந்து சேர்ந்தது. பெங்களூரில் எப்படி வீடு கட்டுவது என்று நான் யோசித்த போது, என் மனைவி 'நீங்க... இங்கே இருந்தால் மட்டும் வீடு கட்டுவீங்களாக்கும். எழுத்துல கோட்டை கட்டுறது வேற... நிலத்துல வீடு கட்டுறது வேற' என்றார். இதனால், என் மனைவியையே 'ஐடியா' கேட்டேன். உடனே அவர் 'அப்பா... எங்கப்பா...' என்றார். நெல்லை மாவட்டத்தில் கோவங்கோடு என்ற கிராமத்தில் உள்ள என் மாமனாரை வரவழைத்தோம். சென்னைக்கு அருகே உள்ள குன்றத்தூரில் வசிக்கும் என் சகலபாடி (அதாவது சட்டகர்) லிங்கசாமி, தனது

புதுடெல்லியிலுள்ள அரசு அலுவலர்களிடம் ஒரு பழக்கம். கோப்புகளை பார்ப்பதில்லை என்ற பழக்கம். காலை பதினோரு மணிக்கு முன்போ, மாலை நான்கு மணிக்கு பின்னரோ அலுவலகத்தில் இருப்பதில்லை என்ற சபதம்.

ஆனால், நேரில் போய் விட்டால், நம்மை உட்காரச் சொல்லி தேநீர் வாங்கிக் குடுத்து, எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அப்போதுதான் கோப்பை படித்து விட்டு உடனடியாக உதவுவது அவர்களது பண்பாடு.

கோழிப்பண்ணையில் வேலைப் பார்ப்பவர்களை, வீடுகட்ட அனுப்புவதாகக் கூறிவிட்டார். இதற்கிடையே 'வீட்டுப் பிளான் புதுப்பிக்கப்பட்டது. மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலர் உதவியாலும், சம்பந்தப்பட்ட இன்ஜினீயர்கள் கண்ணியமானவர்களாய் இருந்ததாலும், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அலுவலக அதிகாரி உதவியாலும் சிமெண்ட் பெர்மிட்டும் தயாராகிவிட்டது.

ஒரு நல்ல நாளில் -

பூசை முடிந்து, நிலத்தில் செவ்வகக் கோடு வரையப்பட்ட பகுதிகளில், வேலையாட்கள் கம்பியோடும் மண்வெட்டியோடும் இறங்கினார்கள். இந்தச் சமயத்தில், கல்வெட்டுத் துறை நிபுணரும், இஞ்சினீயருமான நண்பர் கொடுமுடி சண்முகம் வந்தார். இவர்தான் எனக்கு இந்த இடத்தை வாங்கிக் கொடுத்தவர்.

"இங்கே என்ன பண்றீங்க...?"

"வாங்க ஸார்... வாங்க.. வீடு கட்டப் போறோம்...!"

"மகிழ்ச்சி... ஆனால், உங்க நிலத்துலதானே வீடு கட்டணும்?'

"அப்போ!..."

"ஒங்க நிலம் அங்கே... அதோ!"

நான், என் மனைவியின் கண்களுக்குத் தப்பித்துக் கொண்டிருந்தேன். அவர் பிறந்தகம் போயிருந்தபோது, சும்மா இருக்கக் கூடாது என்பதற்காக வாங்கிப்போட்ட இடம். சென்னை திரும்பியதும், இந்த இடத்தைக் காட்டி, மனைவியிடம் சபாஷ் பட்டம் வாங்கினேன். ஆனால், இப்போதோ என் மனைவி என்னிடம் பேசவில்லை. அப்பாவை அழைத்தார்.

"வாங்கப்பா... வீட்டுக்குப் போகலாம்... அந்த நிலத்துல வீடு கட்டுறதுக்குப் பதிலாய் பெஸண்ட் நகர்லே ஒரு குடிசை போட்டுக்கலாம்.... நிலம் வாங்கத் தெரிஞ்சா வாங்கணும்... வாங்கப்பா...."

## வம்புச் சுவரும் - வராத சுவரும்

என் மாமனார் பொறுமைசாலி. உருப்படாத தன் மாப்பிள்ளை, எந்த நிலமோ ஒன்றை வாங்கிப் போட்டாரே என்ற சந்தோஷக்காரர். மகளைச் சமாதானப்படுத்திவிட்டார். அப்புறம் நான் வாங்கிப்போட்ட இடம் கண்டுபிடிக்கப் பட்டது. நிலத்தில் மீண்டும், பிளான்படி சுண்ணாம்புக் கோடுகள் போடப் போகிற சமயத்தில், என் மாமனார் ஓர் ஆட்சேபணையைக் கிளப்பினார்.

''மாப்பிள்ளே... நிலத்தைக் கவனிக்காமல் மோசம் போயிட்டியளே... மோசம்...''

"யாரு மாமா... எது மோசம்...?"

'நிலத்துக்கு அடுத்தபடியாய் இருக்கிற வீட்டைப் பாருங்க... அதுல காம்பவுண்ட் சுவர் கண்ணுல படலியா? நம்ம இடத்துக்குள்ளே நாலு அடி எடுத்திருக்கு"

"அய்யய்யோ... அதனாலே!"

"வீட்டுக்காரரைப் பார்த்துக் கேட்கணும்... அவர் சாக்குப் போக்குச் சொன்னால்.... வேற வழியில்ல... காம்பவுண்ட் சுவரை டிக்கணும்..."

என் மாமனார் பழைய காலத்து ஆள். வைரம் பாய்ந்த உடல் கட்டுள்ளவர். வம்புச் சுவருக்கும் போக மாட்டார். வந்த சுவரை விடவும் மாட்டார். நான் யோசித்துச் சொன்னேன்.

'நாலடிதானே. வீடு கட்டுறபடி கட்டுவோம். அப்புறம் பேசுறபடி பேசுவோம்.

மாமனாரும் பதிலளித்தார். 'ஊர்ல எனக்கு நிறைய வேலை இருக்குது'.

அத்துமீறிய வீட்டுக்காரரைப் பார்க்கப் போனேன். அங்கே நீக்ரோ மாணவர்கள்தான் கிடைத்தார்கள். 'வீட்டுக்காரர் எங்கே? என்று அவர்களே என்னிடம் கேட்டார்கள். இதற்குள், என் மாமனார் டேப்பை வைத்து நிலத்தை மேஸ்த்திரியின் உதவியோடு அளந்து கொண்டிருந்தார். நான் மனத்துக்குள் பிரார்த்தித்துக் கொண்டேன். 'கடவுளே... கடவுளே... நீ இருப்பதை நான் நம்புறேன். ஆனால், ஒரு நிபந்தனை. அந்தக் காம்பவுண்ட் சுவர் என் நிலத்துக்குள்ளே இருக்கப்படாது. மாயம் செய்தோ, மந்திரம் செய்தோ மாற்று... மாற்றி வை."

நல்ல வேளையாக, காம்பவுண்ட் சுவர், நிலத்தின் எல்லையிலேயே இருந்தது. என் நிலத்தில் அடுத்தவர் ஆக்கிரமிப்பு இல்லை. எப்படியோ, தொழிலாளர்கள், நிலத்தில் இறங்கினார்கள். நானும் ஒப்புக்கு ஒரு மணி நேரம் இருந்துவிட்டு, 'மாமா... நீங்க எனக்குப் பெண் கொடுத்தது மாதிரி எப்படிப் பெரிய காரியமோ அதே மாதிரி இதுவும் மாமா." என்று சொல்லி விட்டு, வீட்டுக்குத் திரும்பி விட்டேன். அப்புறம் பெங்களூருக்குப் போய்விட்டேன்.

### லாக்கப்பில் தொழிலாளர்கள்

சென்னையில் உருவாகும் என் வீட்டைப் பற்றிய சுவையான

கற்பனையோடு, நான் லால் பாக்கைச் சுற்றிவிட்டு, அலுவலகம் திரும்பியபோது, வங்காளி சௌகிதார், தனது ஆங்கிலத்தை என்னிடம் பரீட்சித்தார்.

"சார்.. மதர் டெலிபோன்ஸ்..."

"யூ வாண்ட் பெர்மிஷன்?"

"நோ ஸார்... மதர்... டெலிபோன்ஸ்..."

"யுவர் மதர்...?"

"நோ ஸார்... அவர் மதர்..."

"க்யா ஹலோ... மை மதர் டையிட்...!"

"மை மதர் ஆல்ஸோ டையிட்... பட் மதர் டெலிபோன்!"

எனக்கு ஒன்றும் புரியவில்லை. சௌக்கிதார் கிழவர், நான் பார்த்த பார்வையில், தனக்கு 'குல்பர்க்காவுக்கு' டிரான்ஸ்பர் கிடைக்குமோ என்று பயந்து பார்த்தபோது, ஒரு டெலிபோன் கால். என் மனைவியின் குரல். "இந்த அநியாயத்தைக் கேளுங்க. நம்ம நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களில் இரண்டு பேரை, திருவான்மியூர் போலீஸார் பிடித்துக் கொண்டுபோய் விட்டார்கள்."

நீக்ரோ மாணவர்கள் வீட்டில் நடந்த ஏதோ ஒரு திருட்டுக்கு, இவர்களைச் சந்தேகத்தின் பேரில் பிடித்து வைத்திருக்கிறார்களாம். நமது போலீசாரின் சர்வதேச அபிமானத்தால், இரண்டு தொழிலாளர்கள் லாக்கப்பில் இருக்கிறார்களாம்... 'ஒங்களுக்கு இன்புளுயன்ஸ் இருக்குன்னு பெரிசாப் பேசுவீங்களே... அதை இப்போ காட்டுங்க..." என்ற முடிவுரையுடன், என் மனைவி என்னை முடுக்கிவிட்டார்.

எனக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரிகளிடம் முறையிட்டேன். எந்த ஏரியாவைச் சேர்ந்த அதிகாரி மேற்படி கேஸுக்கு உதவுவார் என்பதைக் கண்டுபிடிக்கவே என் கிராப்பில் பாதி பிய்ந்துவிட்டது.

மாலையில், என் மனைவி டெலிபோன் செய்தார். பிடிபட்ட தொழிலாளர்கள் விடுதலையாகி விட்டார்களாம். ஆனால் அவர்களின் குடும்பத்தினர் 'எந்த வீடு கட்டும்போதும் இந்த அநியாயம் நடக்கல... இந்த நிலத்துக்கு வந்தபிறகுதான் இப்படி" என்று சொல்லிவிட்டு, அவர்களைத் தடுத்துவிட்டார்களாம். ஆக மொத்தத்தில், வேறு ஆட்களைப் பார்த்துத்தான் வீட்டு வேலையைத் துவங்க வேண்டுமாம்.

மார்ச் மாதம் முடிந்த பிறகுதான், அடுத்த செட் தொழிலாளர்கள் 'மார்ச்சாகி' வந்தார்கள். கட்டிடச் சுவர் நிலத்திற்கு

மேலே மூன்றடி வந்தபோது, கையில் காசு இல்லை. என்ன செய்யலாம்' என்று யோசித்தபோது, என் சட்டகர் லிங்கசாமி, தொழிலாளர்களுக்குக் கூலி சப்ளைக்கும் பொறுப்பேற்றார். எனது நண்பரான நூலக வெளியீட்டாளர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள், 'பிடிங்க ரூபாயை... அப்புறம் அட்ஜெஸ்ட் செய்துக்கலாம்' என்று பணம் கொடுத்து உதவினார்.

கிரில் ஆசாமி

வீடு கட்டும் பணி தொடர்ந்தது. ஜன்னல்களுக்கு, 'கிரில்' வைக்கும் கட்டம் வந்தது. அடையாறில் உள்ள ஒருத்தர், கிலோ இரும்பு பதினோறு ரூபாய்க்குக் கிடைக்கும்போது பத்து ரூபாய் விகிதத்தில் செய்து தருவதாக வாக்களித்தார். மாமனார், ஐந்நூறு ரூபாயை அட்வான்ஸ் தொகை கொடுக்கப் போனபோது, நான் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து வைத்தேன். ஒரு மாதம் ஆகியது. அட்வான்ஸ் வாங்குவதில் அட்வான்ஸாக இருந்த அந்த ஆசாமியைக் காணவில்லை. கடையில் பொறுப்பான பதில் கிடைக்கவில்லை. விசாரித்துப் பார்த்ததில், "அவர் அப்படித்தான்!" என்று கேள்விப் பட்டோம்.

ஒவ்வொரு பைசாவின் அருமையையும் தெரிந்து வைத்திருந்த என் மாமனார் கோபங் கொண்டார். வீடு கட்டும் தொழிலாளர்கள் உதவியுடன், எப்படியோ அந்த ஆசாமியை என் வீட்டுக்குப் பலவந்தமாகக் கொண்டுவந்துவிட்டார். மாமனாரின் மிரட்டலுக்கும், தொழிலாளர்களின் பார்வைக்கும் பயந்துபோன அந்த மனிதர், கடிகாரத்தைக் கழட்டிக் கொடுக்கப்போனார். ஒரு மனிதனைச் சிறுமைப் படுத்தலாகாது என்று சிறுமையான அனுபவங்கள் மூலம் பட்டறிந்த நான், அந்த மனிதரை நெருங்கினேன். உடனே நான் அவரை அடிக்கப்போவதாக நினைத்து, அவர் என்னை பயந்து பார்த்தபோது, 'ஒங்களை நம்புறேன். நீங்கள் கடிகாரத்தைத் தர வேண்டாம். இன்னும் பதினைந்து நாட்களுக்குள் கொடுத்த பணத்தையோ அல்லது அதற்கான கிரில்களையோ கொடுங்கள். நீங்கள் போகலாம்." என்று கிரில் மனிதரைப் போக விட்டேன். அவரைக் கடத்தி வந்த தொழிலாளர்கள், சூள் கொட்டினார்கள். 'கடைசியில் நமக்குத்தான் கெட்டபேரு." என்றார்கள். என் மாமனார், என் கையில் இருந்து, தன் கையை உதறியபடியே சொன்னார்.

'நான் ஊருக்குப் போகணும். நிறைய அங்க வேலை இருக்குது... டேய், யாராவது டிக்கெட்..."

மரமும் – மாமனாரும்...

எப்படியோ மாமனார் முறுக்கைச் சமாளித்தேன். மீண்டும் வீட்டு வேலை துவங்கி, கதவு ஜன்னல்களுக்கு மரம் வாங்கும்

கட்டத்திற்கு வந்தோம். கர்நாடக மாநிலத்தில், காட்டிலாகா அதிகாரிகளிடம் எனக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, இருபதாயிரம் ரூபாய்க்கு, 'ஹென்னே மரம்' வாங்கப் போவதாகவும், இதன் மார்க்கெட் மதிப்பு முப்பதாயிரம் ரூபாய் என்றும் மாமனாரிடம் சொன்னேன். உடனே அவர், "என்ன மாப்பிள்ளே... (அதாவது என்னய்யா நீ மாப்பிள்ளே....) எட்டாயிரம் ரூபாய்ல அடங்குற மரத்துக்கு இருபதாயிரம்... அப்புறம் லாரிச் செலவு." என்றார். உடனே நான், 'சும்மா கிடங்க மாமா... எட்டாயிரம் ரூபாய்ல எதுவும் வாங்க முடியாது... வாங்கப் போறது சிக்மக்லூர்ல... கொடுக்கப் போறது இருபதாயிரம் ரூபாய்." என்றேன். மாமனார் பதிலளித்தார்.

'நான் ஊருக்குப் போகணும். நிறைய வேலை இருக்கு."

மரத்தை விடலாம். மாமனாரை விட முடியுமா...? விட்டுக் கொடுத்தேன். மாமனார் கணக்குப்படியே, எட்டாயிரம் ரூபாய்தான் ஆனது. நல்ல வேளையாக என்னைச் சுமார் பதினையாயிரம் ரூபாயில் இருந்து காப்பாற்றினார்.

### மாமனார் போட்ட கணக்கு

என் மாமனார் போட்ட கணக்கு தப்பியதே இல்லை. எங்களோடு எங்களாக, ஒரு வாலிபன் கட்டிட வேலை பார்த்து வந்தான். ஒரு ஏழைக் குடும்பத்துடன் வசித்து வந்தான். ஏழைகளுக்குள் எந்த வித்தியாசமும் இல்லை என்ற என் கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டான அந்தப் பையன் மீது எனக்கு அபார பிரியம். மாமனாருக்கும் அப்படியே. அவருக்கு நாங்கள் கொடுத்தனுப்பும் சாப்பாட்டின் பாதியை அவனுக்கே கொடுத்துவிடுவார். அவனும், என் மாமனாருடனேயே இரவில் கட்டிடத்திற்குள் தங்குவான்.

ஒருநாள்...

மாமனார் என்னிடம் சொன்னார்.

'மாப்பிள்ளை... இந்தப் பையனும் அந்தக் குடும்பமும் இங்கே தங்குறாங்க. கட்டிடத்துல... நிறைய சாமான் இருக்குது. இவங்க முழிக்கிற முழி சரியில்ல. அதனால்... இங்கே தங்கப்படாதுன்னு சொல்லப்போறேன்.'

'சரியான ஆளு மாமா நீங்க! நமக்காக எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை பார்க்காங்க. இப்போ மெட்ராஸ்ல ஒரே வெள்ளக் காடு இந்தச் சமயத்துல விரட்டினால் எப்படி.'

நான் பெங்களூர் வந்துவிட்டேன். ஒரு வாரம் கழித்து, என் மனைவியின் கடிதம் வந்தது. என் மாமனார் குறிப்பிட்ட அந்தப்

புயலும், அந்தக் குடும்பமும் கொட்டும் மழையிலும், நடு ராத்திரியில், கட்டிடத்திற்குள் கிடந்த ஆயிரம் ரூபாய் இரும்புக் கம்பிகளையும், கார்ப்பென்டரின் கருவிகளையும் எடுத்துக்கொண்டுபோய் விட்டார்களாம். என் மாமனார், நான் அவர் பேச்சை கேட்கவில்லை என்று காரணம் காட்டி, நிஜமாகவே ஊருக்குப் போய்விட்டாராம். கடிதம் போதாது என்று என் மனைவி டெலிபோனில் கத்தினார். பெங்களூரில் தற்செயலாக கண்ணில்பட்ட அந்தப் பயலிடம், நான் விபரம் கேட்க, அவன், 'நான் அப்படி செய்வேனா?' என்று அழுது புலம்ப, அதை நம்பி அவனுக்கே பத்து ரூபாய் அன்பளிப்பு கொடுத்த விபவரத்தை மனைவியிடம் சொல்லவில்லை.

**டில்லிக்குக் காவடி**

இதற்கிடையே, அரசாங்கக் கடனில் இறுதித் தவணைப் பணமான இருபத்தெட்டாயிரம் ரூபாய் வரவில்லை. மூன்று மாதமாக எழுதி எழுதிப் பார்த்தும் பலனில்லை. வேறு வழியில்லாமல், உடனடியாகப் பணம் வரவில்லையானால், அட்மினிஸ்டிரேட்டிவ் டிரிப்யூனலுக்குப் போகப் போவதாக மிரட்டி எழுதினேன். இரண்டு மாதமாகியும், இதற்கும்கூட எதுவும் தெரியவில்லை. வேறுவழியில்லாமல், புதுடில்லிக்குப் போனேன். போகும்போது சாங்ஷன் ஆர்டர் வந்துவிட்டது. பலனில்லாமல், அதாவது மூன்றாவது தவணை என்பதற்குப் பதிலாக, இரண்டாவது தவணை என்று தவறுதலாய்ப் போட்டுவிட்டார்கள். இவ்வளவுக்கும் என் நண்பர் ராவ் என்பவர்தான் நிர்வாக அதிகாரி; தென்னிந்தியர். இந்த தவறை குறிப்பிட்டு மேலதிகாரிக்கு குறிப்பு எழுதி அவரது அனுமதியோடு புது சாங்ஷன் ஆர்டர் வருமென்றும், அந்த அதிகாரி வெளிநாடு போயிருப்பதால் காரியம் பழுக்க ஒருமாதம் ஆகும் என்றும் எனக்கு சலுகை காட்டுவதுபோல் பேசினார்.

நான் ஓடினேன்; ஓடினேன். ஏ.ஜி.சி.ஆர். ஆபீஸ்வரை ஓடினேன். அங்கே சாங்ஷனுக்கு ஏற்பப் பணம் வழங்கும் 'இர்லா' அலுவலகம் போனேன். சம்பந்தப்பட்ட கிளார்க்குக்கு சல்யூட் அடித்ததும், பைலைப் புரட்டினார். ஒரு காகிதத்தைப் பார்த்து 'கியா ஹாலே... அட்மினிஸ்டிரேட்டிவ் டிரிப்யூனல்' என்றபடி, அவர் லேசாய்ப் படிக்கப் போனார். அப்போதுதான், அந்த ஆசாமி அப்படி ஒரு கடிதம் நான் எழுதியிருப்பதை பார்க்கப்போனார். நான் அந்த கடிதத்திலேயே கையைப் பரப்பி மறைத்துகொண்டு "டெல்லி ஆத்மி, அச்சா ஆத்மி" என்றேன். அதாவது, டெல்லிக்காரர்கள் நல்ல மனிதர்கள் என்றேன்.

அந்த அஸிஸ்டெண்டைப் பார்த்து, சாங்ஷன் ஆர்டரில் இரண்டாவது தவணை என்று தப்பாகப் போடப்பட்டதை

சுட்டிக் காட்டி, ஒரு மாதத்தில் மூன்றாவது தவணை என்ற திருத்தம் வந்துவிடும் என்றும், அப்படி வந்தவுடனே, எனக்கு பணத்தை அனுப்பிவிட வேண்டும் என்றும் வேண்டினேன். அவர் என்னை ஒரு மாதிரி பார்த்துவிட்டு, நான் காட்டிய காகிதத்தில், இரண்டாவது தவணை என்ற ஆங்கில வாசகத்தை அடித்துவிட்டு, மூன்றாவது தவணை என்று கையால் எழுதினார். என்னை கையெழுத்து போடவும் சொன்னார். திடீரென்று எழுந்தார். ஒருமணி நேரத்தில் அவரே எல்லா செக்ஷன்களுக்கும் போய், இருபத்தெட்டாயிரம் ரூபாய்க்கு 'செக்' வாங்கி வந்துவிட்டார். இது போதாதென்று இரண்டு தடவை 'டீ' வாங்கிக் கொடுத்தார். இந்த வடஇந்திய அலுவலர்களிடம் ஒரு பழக்கம். அதாவது, பைல்களைப் படிப்பதில்லை என்ற பழக்கம். அலுவலத்திற்கு காலை பதினோரு மணிக்கு முன்போ, மாலை நான்கு மணிக்கு பின்னரோ இருப்பதில்லை என்று ஒரு சபதம். ஆனால், நேரில் போய் விட்டாலோ, எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல், உடனடியாக உதவுவதும் அவர்களின் பண்பாடு.

**ஈரம் காயாத உள்ளம்**

வீடு கட்டி முடித்துப் பால் காய்ச்சும் கட்டம் வந்தது.

குடிபுகு விழாவைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை அதேசமயம், உறவினர்களுக்குக் கொடுத்த வட்டியில்லாக் கடனை (அதாவது பரிசுப் பொருட்களை) திருப்பி வசூலிக்காமல் விட மனமில்லை. ஆகையால் உறவினர்களுக்கென்றே அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. அதேசமயம், மிகவும் நெருங்கிய பிரமுகர்களுக்கும், நண்பர்களுக்கும் அழைப்புக்கள் அனுப்பினேன். பல்வேறு ஊர்களில் இருந்து உறவினர்கள் குழுமினார்கள். 'தேறாத கேஸ்' என்று கருதப்பட்ட நான், வீடு கட்டிவிட்டதில் அவர்களுக்கு மகிழ்ச்சி. மாமனார் முறுக்கோடு கோபித்துப்போய் திரும்பி வந்த என் மாமனாருக்கு இந்த மருமகனே பட்டு வேட்டி, பட்டு சட்டை வாங்கிக் கொடுத்தான். எல்லாவற்றிக்கும் மேலாக,

குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்குகூட நேரம் இல்லாமல் அல்லாடும் தினத்தந்தி இயக்குநர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் தனது மூத்த செய்தியாளர் சுகுமாரோடு, முட்டளவிற்கு தண்ணீர் தேங்கியிருந்த தெருவழியாக நடந்து, ஈரக்கால்களோடு என் வீட்டிற்கு வந்தது இன்னும் என் நெஞ்சில் ஈரம் காயாமல் உள்ளது.

குமுதம், 12-11-1987

# ஒரு மனநோய்ச் சிறுவனுக்காக...

'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' என்று ஔவையார் அறிவுறுத்தினார். இதனால் அந்தக்காலத் திலேயே ஊனமுற்ற வர்கள் ஏளனம் செய்யப்பட்டார்கள் என்பது புலனாகிறது. கூடவே இத்தகைய போக்கிற்கு ஒரு எதிர்ப்பும் இருந்துள்ளது. நமது தமிழில் காதுகேளாதவர்கள், பார்வை அற்றவர்கள், கால், கை இழந்தவர்கள் போன்றவர்கள் மோசமானவர்கள் என்பதுபோல் பழமொழிகளும் உள்ளன. இங்கே இவற்றைக் குறிப்பிடுவது, அவற்றை அங்கீகரிப்பதுபோல் ஆகிவிடும். எனவே தவிர்க்கப் படுகிறது. இப்போதும், வெந்த புண்ணில் வேலைப்பாய்ப்பது போல் இந்த மக்களை நகைச்சுவை என்ற பெயரில் தொலைக் காட்சிகளிலும், திரைப்படங்களிலும் கேவலமாகச் சித்தரிக்கிறார்கள். இத்தகைய மக்கள் விரோதக் கலைச்சிதைவு வெளிப் பாடுகளைக் கொண்ட திரைப் படங்களையும், நாடகங்களையும் அரசாங்கத் தொலைக்காட்சிகூட ஒளிபரப்பி மனிதநேய எதிரியாக விளங்குகிறது. என்றாலும், இத்தனை இழிவுகளையும், மீறி ஊனமுற்றோர் உலகெங்கும் எதிர்க்

**ஊனமுற்றோர், வாதாடி - போராடி, அரசை ஓரளவு நிர்ப்பந்திக்க முடிகிறது. ஆனால் மனநோயாளிகள் இதற்கு மாறானவர்கள். இந்த, உள்ளத்தில் ஊனமுற்றோர் தங்களுக்காக வாதாடவும் முடியாது... போராடவும் முடியாது...**

**இவர்களை பராமரிக்க வேண்டியவர்களும், ஒரு கட்டத்தில், இவர்களை சுமை போலவே நினைக்கிறார்கள். இவர்களிலும் ஏழை-எளியவர் வீடுகளில், குழந்தை மன நோயாளிகள் பிறந்தால் அதற்குப் பெயர் சித்திரவதை.**

காற்றாய் வீசுகிறார்கள். இவர்களின் நலனுக்காக மூன்றாண்டுகளுக்கு முன்பே நமது நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது ஏட்டுச்சுரைக்காயாய், இருந்தாலும் எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும் என்று நம்பலாம். இதேபோல் தமிழக அரசு, உடல் ஊனமுற்றோர்களுக்காக அண்மையில் ஒரு தனி ஆணையாளரை நியமித்து இருக்கிறது.

ஊனமுற்றோர், வாதாடி - போராடி, அரசை ஓரளவு நிர்ப்பந்திக்க முடிகிறது. ஆனால் மனநோயாளிகள் இதற்கு மாறானவர்கள். இந்த உள்ளத்தில் ஊனமுற்றோர் தங்களுக்காக வாதாடமுடியாது. இவர்களை பராமரிக்க வேண்டியவர்களும், ஒரு கட்டத்தில் இவர்களை சுமையாகவே நினைக்க வேண்டியது ஏற்படுகிறது. இவர்களிலும் குழந்தை மனநோயாளிகள் - குறிப்பாக ஏழை பாளை வீட்டில் பிறப்பவர்கள் பிறந்திருக்கவே வேண்டாம் என்ற நிலைதான் இன்றுவரை உள்ளது. இது சம்பந்தமாக எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### வறுமை வியாபாரிகள்

எனது உறவுப்பையன் - தெளிவாகச் சொல்லப் போனால் எனது மைத்துனியின் மகன் அவன் பிறந்து மூன்றாண்டுகளுக்குப் பிறகே, அவனுடைய மனச்சிதைவு கண்டுபிடிக்கப்பட்டது. ஏழைப் பெற்றோரால் எதுவுமே செய்ய இயலவில்லை. இந்தச் சிறுவனுக்கு ஏழுவயது எட்டியபோது சென்னைக்கு வாந்தார்கள். ஒரு எளிய தொழிலை செய்து வருகிறார்கள். இந்தச் சிறுவனை அடையார் பக்கமுள்ள ஒரு தொண்டு நிறுவனத்தில் சேர்த்தேன். எல்லா நிறுவனங்களையும் போல இந்த நிறுவனமும் இந்திய வறுமையையும், ஏழைகளின் இயலாமையையும், இத்தகைய மனச்சிதைவுகளையும் வெளிநாடுகளுக்கு விற்று பணம் சம்பாதித்து வருவதை மூன்றுமாத காலத்திலேயே அறிந்துகொண்டேன். இதன் நிர்வாகத்தலைவரோ அல்லது ஏகபோக முதலாளியோ, அரசு அதிகாரியாக உள்ள என் செல்வாக்கின் மூலம் அப்போதைய குடியரசுத் தலைவர் திரு. வெங்கட்ராமன் அவர்களை அந்த நிறுவனத்தின் புதிய கட்டிடத்திறப்பு (ஜப்பானில் இருந்து மட்டும் இந்த நிறுவனம் கோடிகோடியாய் வசூலித்து இருப்பதாய் கேள்வி) விழாவிற்கு அழைக்க விரும்பினார். குடியரசுத் தலைவரின் வருகையைப் பயன்படுத்தி, அந்த வளாகத்தின் முன்னால் உள்ள ஏழெட்டு கிரவுண்டு நிலத்தை வாரிச்சுருட்டவும் விரும்பினார். நான் இதற்கு உடன் படவில்லை. இதன் விளைவாக அந்தச்சிறுவன் அந்தமனிதரின் மனநோய்ச்சிறுவர் காப்பகத்தில் இருந்து விரட்டப்பட்டான். இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால், குடியரசுத்தலைவரை எப்படியோ,

யார் மூலமோ வரவழைத்து திறப்புவிழாவையும் நடத்தி விட்டார். அந்த நிலத்தையும் விழுங்கி விட்டார்.

### மன்னிப்பு மட்டும் போதுமா?

வேறுவழியில்லாமல் அப்போதைய சமூகநலத் துறை அமைச்சர் திருமதி. இந்திரகுமாரியின் பரிந்துரையின் பேரில் தாம்பரத்திலுள்ள அரசு மனநோய் சிறுவர் காப்பகத்தில் சேர்த்தேன். அங்கே, இந்தச் சிறுவன் துரும்பாக இளைத்து விட்டான். விசாரித்துப் பார்த்ததில் இத்தகைய சிறுவர்களுக்குரிய உணவு, உடை வகையறாக்கள் அதன் பராமரிப்பாளர்களுக்கே போய்ச் சேர்ந்ததாக தெரிந்தது. ஒரு அரசு நிறுவனத்தின் மோசடித்தனத்திற்கு இந்த நிறுவனம் ஒரு முன்னோடியானது. சகித்துக் கொண்டோம். ஒரு நாள், இந்த நிறுவனத்திடமிருந்து ஒரு கடிதம் வந்தது. கடிதம் இல்லை.... கட்டளை. 'உங்கள் பையன் நோய்வாய்ப் பட்டிருக்கிறான். அவனை நீங்கள் உடனடியாக வீட்டிற்கு கூட்டிப்போகவேண்டும். இல்லையானால் அவன் உயிருக்கு நாங்கள் பொறுப்பல்ல.' என்று ஒரு அரக்கத்தனமான தாக்கீது வந்தது.

ஒரு அரசு நிறுவனம், தன்னிடம் உள்ள பிள்ளைகளுக்கு மனநோயைத் தீர்க்க முடியவில்லையானாலும், உடல் நோயையாவது தீர்க்க வேண்டும். இதற்கான மருத்துவர்களும் இருப்பார்கள் என்று நம்புகிறேன். சிறுவனுடைய உடல்நலத்தின் கடுமையை நாகரீகமாகவும் குடும்பத்தி னருக்கு தெரிவிக்கலாம். இதற்குப் புறம்பாக, இப்படி ஒரு காட்டு மிராண்டித்தனமான கடிதத்தை அனுப்பியது. இந்தக் கடிதவிவரத்தை எத்திராஜ் கல்லூரியின் சமூக அமைப்பு நிகழ்ச்சி ஒன்றில் நான் குறிப்பிட்டேன். மனிதநேயரான தமிழக அரசின் சமூகநலத்துறை செயலாளர் திரு. தீனதயாளு அவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஆனாலும் அவர் இத்தகைய போக்கிற்கு எதிராக எதுவுமே செய்யவில்லை. செய்ய முடியவில்லையோ என்னவோ....

### பதிலுக்குப் பதிலாய்.....

மத்திய அரசின் களவிளம்பரத்துறையில் இணை இயக்குநராக பணியாற்றிய நான், இந்தச்சிறுவனை மதுரைப் பக்கம் அரசு நிதியோடு இயங்கும் அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றில் (என்.ஜி.ஓ) சேர்த்தேன். எனது பரிந்துரையை மிகப்பெரிய கவுரவமாக அந்த நிறுவனம் கருதியது. ஆனாலும் அடுத்த மாதமே அந்த இயக்குநர் சென்னையில் சாஸ்திரி பவனில் என்னைச் சந்தித்து தமது நிறுவனம் தயாரித்து மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பி

இருக்கும் லட்சக்கணக்கான ரூபாய் செயல்திட்டங்களுக்கு நான் அனுமதி வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நான் தலையாட்டியிருந்தால் கமிஷனும் கொடுத்திருப்பார். நான் கையை விரித்தபோது, அந்த பையனின் காலை இடறிவிட்டார்கள்.

நானும் சளைக்கவில்லை. சமூகநலத்துறைக்கு புதிய அமைச்சராக சேர்ந்த திருமதி. சற்குணபாண்டியன் அவர்களைச் சந்தித்தேன். கல்லூரி காலத்தில் அவர் தி.மு.க. பேச்சாளராகவும், நான் காங்கிரஸ் பேச்சாளாராகவும் எதிரும் புதிருமாக செயல்பட்டாலும் நன்கு பரிச்சயமானவர். அவரும் பாலவாக்கத்திற்கு அருகே உள்ள ஒரு நிறுவனத்திற்குப் பரிந்துரைத்தார். இந்தச் சிறுவனை கூட்டிக்கொண்டு சென்ற அவன் தந்தையின் ஏழ்மைக்கோலத்தை பார்த்தோ என்னவோ, அந்த நிறுவனமும் கைவிரித்துவிட்டது.

## சமூகசேவை நடிகை

ஒரு பொது நிகழ்ச்சியில் நானும், பிரபல 'சமூகசேவை' நடிகையும் கலந்து கொண்டு உரையாற்றினோம். ஏற்கனவே அவர் எனக்கு நன்கு பழக்கமானவர். சமூகநல அமைப்புக்களில் செயல்படுவதாகக் கூறி மாலை மரியாதைகளை வாங்கிக் கொள்கிறவர். சென்னை கோட்டூரில் உள்ள இத்தகைய சிறுவர் காப்பகத்தில் ஈடுபாடு கொண்டவராய்க் கருதப்படுகிறவர். இந்தச் சிறுவனை அங்கே சேர்க்கலாமா என்று அவரிடம் கேட்டேன். அந்தப் பையனின் நிலைமையை எடுத்துச் சொன்னேன். 'இயலாது' என்று ஒற்றைச் சொல்லில் முடித்து விட்டார். ஒருவேளை இவர் இந்தச் சிறுவனைப்பற்றி திரைப்படமோ அல்லது தொலைக்காட்சித் தொடரோ தயாரித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி பத்மஸ்ரீ பட்டம்கூட வாங்கலாம்.

## அஞ்ஞான வாசத்தில்...

இவனது அஞ்ஞான வர்சத்தை தடுக்கும் விடுமுறைக் கால ஏற்பாடாக, நான் வாழும் பகுதியில் உள்ள ஒரு தொண்டு நிறுவனம் இவனைச் சேர்த்துக் கொண்டது. சேர்த்த மறுநாளே, இந்த நிறுவனத்திற்கு யாரோ ஒருவர் ஒரு காரை அன்பளிப்பாய் வழங்கியிருப்பதாகவும், அமைச்சர் சற்குணபாண்டியன் அவர்கள் அந்த கொடையாளி சார்பில் காரின் சாவியை தொலைக்காட்சி சாட்சியாக இவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், இதற்குரிய ஏற்பாடுகளை நான் செய்யவேண்டும் என்றும் எனக்கொரு செய்தி வந்தது. நான்கூட, இந்தப்பையனின் நலத்திற்காக இந்த ஏற்பாட்டை செய்வதற்கு முயற்சித்திருப்பேன். ஆனால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள், தனது மகன் திருமண அழைப்பிதழை என் இல்லத்திற்குக் கொண்டு வருவதாகவும், நான் வீட்டிலேயே இருக்கவேண்டும்

என்றும், அவரது நேர்முக உதவியாளர் என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார். இதற்காக நான் இரண்டு நாள் வீட்டுக்காவலில் இருந்தேன். அந்த அமைச்சரின் மகன் திருமணம் இனிதே நடைபெற்றதை பத்திரிகைகளில் தெரிந்துகொண்டேன். சிலசமயம் வேண்டியவர்களுக்கு நேரில் அழைப்பிதழ்களை கொடுக்க வேண்டும் என்ற ஆர்வக் கோளாறில், இப்படி ஏற்படுவதுண்டு. இதற்காக அமைச்சர் மீது எனக்கு வருத்தமும் இல்லை. என்றாலும், இந்தப் பின்னணியில் நான் அவரைச் சந்திக்க விரும்பவில்லை. இதனால் அந்தச்சிறுவனை அந்த நிறுவனமும் தன்னிடம் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. என்றாலும்-

வழக்கமான தொண்டு நிறுவனங்களிலிருந்து சிறிது விதிவிலக்காக உள்ள ஒரு நிறுவனத்தில் இப்போது இந்தச் சிறுவன் இருக்கிறான். இவனது ஏழைப்பெற்றோர் சில நூறு ரூபாய் நோட்டுக்களை செலவழித்து மூன்று மாதத்திற்கு ஒரு தடவை, முறை வைத்து இவனைப் பார்த்து வருகிறார்கள். இந்தச் செலவைவிட இன்னொரு சிக்கல்... பதினைந்து வயதை தாண்டிய சிறுவர்களை இந்த நிறுவனத்தில் வைத்துக்கொள்ள இயலாதாம். இப்போது இவனுக்கு பதினான்கு. ஓராண்டு காலத்தில் இவன் சென்னையில் பெற்றோரிடம் அனுப்பப்படுவான். இப்போது விடுமுறையில் வரும்போதெல்லாம் வீட்டை விட்டு ஓடிவிடுகிறான். அவனது பெற்றோர்கள் தங்களது அன்றாட ஜீவனத்தொழிலை ஒதுக்கிவிட்டு, இவனை நாடு நகரெங்கும் தேடிப்பிடித்து கொண்டுவரவே பொழுது போய்விடும்.

### பதிலுக்காக ஒரு கேள்வி

இந்தச் சிறுவனாவது, ஓரளவு வசதிபடைத்த எனது பராமரிப்பில் இருக்கிறான். எங்காவது தொலைந்து போனாலும், எப்படியாவது அவனை என்னால் மீட்டு விடமுடியும். ஆனால் ஏழைப் பெற்றோருக்குப் பிறந்து, உற்றோருக்கும் முகச்சுழிப்பை ஏற்படுத்தி, திக்கற்று திசையற்று திரியும் மனநோயாளி குழந்தைகளை முழுமையாய் அரவணைக்க தமிழக அரசிடம் காப்பகம் ஏதும் இருக்கிறதா? உடல் ஊனமுற்றோர், விதவைகள், முதியவர்கள், படித்த ஏழைப்பெண்கள் போன்றவர்களுக்கு நிதியுதவி வழங்கும் தமிழக அரசிடம் இத்தகைய சிறுவர்களையும் பராமரிக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா? இந்தப் பாமரனுக்கு அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழக அரசு இந்த கேள்விக்கு எனக்கு பதிலளிக்கவில்லை என்றாலும், இத்தகைய சிறுவர்களுக்காக புள்ளி விபரங்களில் போகாமல், ஒரு நல்ல விடையை கண்டுபிடிக்க வேண்டும்.

**நவசக்தி வார இதழ் - 1999.**

# பெரியவரும், தோழரும்

ஒருவரின் தனிப்பட்ட சொந்தப் பிரச்சினைகளையும், சர்வதேச பிரச்சினைகளுடன் இணைத்து, அதற்குரிய தீர்வை குறிப்பிடுபவர் எனது பெரியவரும் தோழருமான, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தமிழ் மாநில செயலாளரான எம். கல்யாணசுந்தரம்.

பொது மருத்துவமனையில் கைபிசகி, காலொடிந்து சேர்க்கப்பட்டிருந்த போதுகூட, அங்கே சிபாரிசுக்காக வந்த ஒருவருக்கு அந்த இடத்திலேயே பிசகிய கையோடு, புன்னகை மாறாது கடிதம் எழுதிக் கொடுத்தவர்.

பெரியவர் எம். கல்யாண சுந்தரம் அவர்களைப் பற்றி எழுதுகின்ற இந்த சமயத்தில் உடலெல்லாம் புல்லரிக்கிறது. எத்தனையோ தலைவர்களை நெருங்கிய வட்டாரத்திலிருந்து பார்த்திருக்கிறேன், பழகி இருக்கிறேன். கசப்பும் உண்டு, இனிப்பும் உண்டு. ஆனால், எம்.கே. அவர்களுடன் எனக்கு இருந்த தொடர்பு வாழ்நாள் முழுவதும் நினைத்து மகிழக்கூடிய ஒன்றாகும். இப்படிப்பட்ட ஒரு அபூர்வமான மனிதரை எனது எஞ்சிய வாழ்நாளில் பார்க்க முடியுமா என்பது சந்தேகம். என் மனதுக்குள். இப்போது, எம்.கே. அவர்கள் என்னிடம் காட்டிய அன்பையும், உதவியையும் உயிரூட்டிக் கொண்டே, அவர் இன்னும் இருப்பதாகவே அனுமானித்துக் கொண்டு இருக்கிறேன்.

பெரியவர் எம்.கே. அவர்களை எனது பள்ளிக் காலத்திலிருந்தே அதிசயமாக நினைத்திருக்கிறேன். தமிழக சட்டப் பேரவையில், அவர் ஆற்றிய உரைகளும், கேட்ட

கேள்விகளும் அந்தக் காலத்திலேயே, என் மனதில் அவரை ஒரு அதிசயத் தலைவராகவே உருவங் கொள்ளச் செய்தது. பிறகு அவரை சென்னையில் சந்திக்கும் பேறு கிடைத்த போது, எனக்குக் கிடைத்த மகிழ்ச்சியை சொல்லால் வடிக்க இயலாது. நான் தாமரையில் பல கதைகள் எழுதியதன் மூலம் எம்.கே. அவர்களுக்கு, என்னை நன்றாகத் தெரியும்.

### பதறிப்போன எம்.கே. .....

இத்தகைய பின்னணியுடன், பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு, எழும்பூரில் உள்ள ஒரு கல்யாண மண்டபத்தில் தோழர் ஒருவரின் கல்யாண நிகழ்ச்சியில் இருவரும் கலந்து கொண்டோம். எம்.கே. அந்த திருமண நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினரார். நான் வாழ்த்திப் பேசினேன். அப்போது இளைஞனாக இருந்த நான் வாழ்த்துரையின் போது பழைய தலைமுறை பயனற்றுப் போய் விட்டது என்றும், புதிய தலைமுறையால்தான் நாட்டிற்கு சுகத்தைக் கொண்டுவர முடியும் என்றும் குறிப்பிட்டேன். இறுதியில் பேசிய எம்.கே. அவர்கள், இதற்குப் பதிலளிக்கும் வகையில், என் படைப்புக்களை பலவாறு பாராட்டிவிட்டு, நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்ததுடன், நாட்டைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் பழைய தலைமுறையினரை சமுத்திரம் இப்படி பேசலாகாது என்று மிகமிக இனிமையாக தெரிவித்தார். இந்த அர்த்தத்தில் அவர் சொன்னாரே · தவிர, அந்த பதில் இனிமையாகவும், ஆணித்தரமாகவும், என்னைத் திருத்துவது மாதிரியும் இருந்தது.

### துடித்துப்போன நான்.....

நான் துடிதுடித்துப் போனேன். எம்.கே. அவர்கள் நாட்டின் விடுதலைக்கு ஆற்றிய பணியையும், ஒரு நாளில் இருபத்துநான்கு மணி நேரமும், நாட்டு மக்களைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பதும் நான் அறிந்ததே. அப்படிப்பட்ட ஒரு உன்னத தலைவனின் மனதை புண்படுத்தி விட்டோமோ என்று கிட்டத்தட்ட அழும் நிலைக்கே வந்துவிட்டேன். திருமண நிகழ்ச்சிக்குப் பிறகு, அவரிடம் என் பேச்சுக்கு விளக்கம் அளித்து, பழைய தலைமுறையினரின் தியாகத்தை குறிப்பாக எம்.கே. அவர்களின் தியாகத்தைநான் போற்றிப் பாதுகாப்பேன் என்று சொன்னதுடன், அவரிடம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டேன். அவரும் ஒரு தந்தைக்குரிய கனிவுடன் என் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

இதற்குப் பிறகு, எம்.கே. அவர்களுடன், ஒரு சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பேறு எனக்குக் கிடைத்தது. அவர் என்னைப் பார்த்து ஒரு புன்முறுவலைத் தோற்றுவிக்கும்போதெல்லாம் நான் சொக்கிப் போவேன்.

## சர்வதேச பிரச்சினையும்-சொந்த பிரச்சினையும்...

நான் சென்னை தொலைக்காட்சியில் பணியாற்றியபோது எனக்கு ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டது. அரசு பணியில் நியாயப் போராட்டம் தொடுத்த எனக்கு, அதன் விளைவாக பல்வேறு பிரச்சினைகள் சொந்த வாழ்விலும் ஏற்பட்டன. இதற்கு எம்.கே. அவர்களின் ஆலோசனையையும், உதவியையும் பெறலாம் என்று ஒரு எண்ணம் ஏற்பட்டது. எனது இனிய நண்பரும், பாட்டாளிக் கவிஞருமான திரு. கே. சி. **எஸ். அருணாசலம்** அவர்களுடன், திரு. எம்.கே.-வை, தியாகராயநகரில் அவர் வசித்த தோழர் வீட்டில் சென்று பார்த்தேன்.

எனது பிரச்சினைகளை அவரிடம் சொன்னேன். அவர் உடனடியாக உதவி வழங்குவதாகக் கூறினார். பிறகு எனது பிரச்சினை, சர்வதேசப் பிரச்சினையுடனும் சம்பந்தப் பட்டிருக்கிறது என்று முன்னுரை கூறிவிட்டு, அதற்கு விளக்கமளித்தார். அந்த விளக்கத்தால் இன்னும் நான் ஒரு சிறந்த எழுத்தாளனாக வராமல் இருக்கிறேன் என்றால், அது என்னுடைய குற்றம்தான். பாரதம், தனது சமதர்ம இலக்கை நோக்கிச் செல்வதற்கு இடையூறாக மேல்நாட்டு சக்திகள், வர்த்தகக் கலாச்சாரத்தை நமது நாட்டில் உருவாக்கி, வியாபார நடத்தையை அறிமுகம் செய்துவிட்டதால், என்னைப் போன்றவர்கள் அதற்கு 'அரவானாய்' ஆக்கப்படுகிறார்கள் என்றார்.

சொந்தப் பிரச்சினைகளில், சோர்வு கொள்ளாமல், சர்வதேச ரீதியில் நிலவும் சமதர்ம எதிர்ப்புச் சக்திகளுக்கு எதிராக எனது பேனாவைத் திருப்ப வேண்டும் என்றார் இப்படி கொள்கையளவில் பேசிவிட்டு, அவர் சும்மாவும் இருக்கவில்லை. எனது பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தார். அவர் எனது பிரச்சினையை இப்படி வேறு முறையில் ஆக்கியபோது நான் புல்லரித்துப் போனேன். அவர் காலைத் தொட்டு வணங்கி, எனது பேனாவை அவரிடம் கொடுத்து அதை எனக்குத் திருப்பித் தரும்படி வேண்டிக் கொண்டேன். அவரும் சிறிது நேரம் என்னையும், அந்தப் பேனாவையும் மாறிமாறி உணர்ச்சித் ததும்ப பார்த்துவிட்டு, பின்னர் அதை என்னிடம் நீட்டினார்

தள்ளாத வயதிலும், தன்னை பார்க்க வரும் தோழர்களிடம் அவர் பேசிய விதம் பண்பின் உச்சகட்டமாகும்.

### மருத்துவமனையில் எம்.கே.

எம்.கே. அவர்கள் சென்னைப் பொது மருத்துவமனையில், நோய்வாய்ப்பட்டுச் சேர்க்கப்பட்டிருந்த நேரம். நான் அவரை அங்குப் போய்ப் பார்த்தேன். அவரது கையிலும் காலிலும் கட்டு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த அவர், பேச்சுவாக்கில் 'இங்கேகூட சிபாரிசுக்காக ஒருவர் என்னைப் பார்க்க வந்தார்' என்று சிரிப்பும், கேலியுமாக சொன்னார். அவர் சொன்னதன் உள் அர்த்தம் புரிந்த நான் 'இப்படித்தான் உலகம் ஆயிட்டுது என்று சலிப்பாகச் சொல்லிவிட்டு, 'நீங்கள் என்ன செய்தீர்கள்' என்றுக் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே, 'அவர் வந்த காரியத்தை முடித்துக் கொடுத்தேன்' என்றார். எனக்கு அவரை ஐந்து நிமிடம் மௌனமாகப் பார்க்க முடிந்ததே தவிர, மறுவார்த்தை பேச முடியவில்லை. இவர் அற்புதத்திலும் ஒரு அற்புதம். மனிதாபிமானத்திற்கு ஒட்டுமொத்தமான உருவம்.

### எம்.கே. தலைமையில் திரைப்படம்

எனது '**ஊருக்குள் ஒரு புரட்சி**' என்ற நாவல் '**புத்தம் புது காலை**' என்ற தலைப்பில் திரைப்படமானது. (படம் இன்னும் டப்பாவுக்குள்ளேயே இருப்பது என்பது வேறு விஷயம்). சோவியத் கலாச்சார மாளிகையில் இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்தின் ஆதரவுடன் போட்டுக் காண்பித்தோம். எம்.கே. அவர்கள் அதற்கு தலைமை வகித்தார். படம் முடியும் போது அவர் உரையாற்றுகையில், அந்தப் படத்தை பெரிதும் பாராட்டினார். இதை வெளிச்சத்திற்குக் கொண்டுவர எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பிறகு, தனிப்பட்ட முறையில் என்னிடம் பேசும்போது, இந்தப் படம் அரங்கேறுவதற்கு ஆவண செய்வதாகக் கூறினார். ஒரு வாரத்திற்குள், தம்மைச் சந்திக்கும்படியும் கேட்டுக்கொண்டார். அவரது செல்வாக்கில் அந்தப் படத்தை பிரபலப்படுத்தியிருக்கலாம். ஆனாலும், அவரது தள்ளாமையைக் கண்டும், அந்த மகத்தான தலைவரை, அவருக்கு இருக்கும் கட்டாயப் பணிகளைக் கருத்தில் கொண்டும், என்னளவிலாவது விட்டு வைக்க வேண்டும் என்றும் நினைத்தேன். அதனால், இது சம்பந்தமாக அவரிடம் நான் எதுவுமே பேசவில்லை. அந்த தியாகிக்கு அவரது சிரமத்தைக் கூட்டாமல் இருப்பதற்காக நான் என் வரையில் செய்த சிறு 'தியாகம்' இது.

மகான்களிடம் போனால் அவர்களின் இருப்பிடத்தில் நமக்கு ஏதோ ஒருவிதமான சுக உணர்வு ஏற்படும் என்பார்கள். அவர்களிடம் உள்ள ஆன்மீக சக்தியால் அவர்கள் அருகே இருக்கும்வரை வாழ்க்கைப் பிரச்சினைகளோ துக்கச் சுமைகளோ மறந்துபோய்விடும் என்பார்கள். இதுபற்றி, எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால், எம்.கே. அவர்கள் முன்னிலையில், நாம் இருக்கும்போது மட்டுமல்ல, அவரைவிட்டுப் பிரிந்து வீட்டிற்கு வந்தபிறகும்கூட, சுமையாகத் தெரிந்த வாழ்க்கை நமக்கு சுவையாகத் தெரியும். காரணம், அவர் சிறியன சிந்தியாதார். ஒரு தடவை தோழர் வி.பி. சிந்தனிடம் 'உங்களுக்கும் எம்கேவுக்கும் சாவே, கிடையாது. எந்த விபத்திலிருந்தும், ஆபத்திலிருந்தும் நீங்கள் தப்பித்து விடுவீர்கள்'' என்று கூறினேன். உடனே, அவர் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "தயவு 'செய்து சிறியவனான என்னை அந்தப் பெரியவருடன் ஒப்பிடாதீர்கள்'' என்று உணர்ச்சித் ததும்ப கூறினார்.

நான் எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறேன். நாவல்கள் படைத்திருக்கிறேன். கவிதைகள் எழுதியிருக்கிறேன். ஆனால், எம்.கே.--யுடன் எனக்கு ஏற்பட்ட நட்பையும், தோழமையையும், அவரது இதய விசாலத்தையும் என்னால் உள்ளது உள்ளபடி விளக்க முடியவில்லை. சில சங்கதிகள் அனுபவத்தால் உணரக் கூடியதேயன்றி, அடுத்தவர்களுக்கு சொல்லியல்ல என்ற கருத்தை இப்பொழுது நான் முழுமையாக நம்புகிறேன். திரு. எம். கே. அவர்களை, நான் எப்போதும் பெரியவர் என்ற முறையிலேயே தரிசித்தேன். ஆனால், அவரோ என்னிடம் தோழன் என்ற முறையிலேயே பேசினார்; நடந்து கொண்டார்.

**எம். கல்யாணசுந்தரம் நினைவுமலர் - 1988.**

# காரசுவையான கலந்துரையாடல்

சமுத்திரம்: தோழர் புஷ்பா, ரொம்ப நாளாவே நமக்கு ஒருத்தரை ஒருத்தர் தெரியும். இலக்கியத்தால் சமுதாயத்தை மேம்படுத்த முடியாதுன்னு நீங்க சொல்லுவீங்க. இப்போ எனக்கு புஷ்பா தங்கதுரைகிட்ட பேசுறதா, ஸ்ரீ வேணு கோபாலன்கிட்ட பேசுறதான்னு தெரியலே. இருந்தாலும் முதல்ல ஸ்ரீ வேணுகோபாலன்கிட்ட பேசுறேன். நீங்களே மனிதர்களை · மேம் படுத்தக்கூடிய சில கதைகளை ஸ்ரீவேணுகோபாலன்கிற பெயர்லே எழுதியிருக்கீங்க. அப்புறம் எதை வச்சு இலக்கியத்தால் சமுதாய த்தைத் திருத்த முடியா துன்னு நீங்க சொல்றீங்க?

புஷ்பா: என்னோட கருத்து என்னன்னா... நானும் எவ்வளவோ படிக்கிறேன். படிச்ச பிறகு என் அறிவு வேணும்னா கூடுதே தவிர, பண்பாடு கூட மாட்டேங்குது. இப்போ, நான் ரயில்லே போயிக்கிட்டிக்குபோது, ஒரு பிச்சைக்காரன் வாரான்னு வச்சுகிங்க... நான் எடத்தை விட்டு எழுந்திருந்து, கால்சட்டைப் பையிலேயிருந்து பணத்தை

தோழர் சுப. வீரபாண்டியன், தன்னை ஆசிரியராகக் கொண்ட "இனி" என்ற இதழக்கு இலக்கியத்தின் ஒரு முனையில் உள்ள என்னையும், மறுமுனையில் நின்றாலும், மனிதாபிமானியான எழுத்தாளர் புஷ்பா தங்கத்துரை அவர்களையும் நேருக்கு நேர் சந்திக்க வைத்தார்.

இலக்கியம் என்பது ஒரு தொடர்ச்சி. இலக்கியக் கருத்துக்கள் நிரந்தரமல்ல. ஆனால், இலக்கியம் நிரந்தரம்- அதாவது மனிதநேய இலக்கியம்.

எடுத்துப் போடறதுக்குப் பொறுமை இருக்காது. ஆனா, அங்க வாழக்காய் விக்கிறவன் உக்காந்திருப்பான் சார்.... அவன் எழுந்து உள்ளேருந்து காசை எடுத்துக் குடுப்பான் சார். படிக்காத அவரு பெரியவரா, படிச்ச நான் பெரியவனா?

சமுத்திரம்: டால்ஸ்டாய் சொன்னாரு. 'அனுபவம் முக்கியமில்லே. அனுபவத்திலேருந்து பெறக்கூடிய படிப்பினையே முக்கியம்'ன்னாரு. அனுபவம்கிறது ஜன்னல். அந்த ஜன்னல் வழியா தெருவைப் பாக்கணுமே தவிர, ஜன்னலே தெருவாகாது.... இல்லியா... இப்போ நீங்க சொன்னது ஒருவிதத்தில் சரிதான். மெத்தப் படிச்சவன் சுத்தப் பைத்தியக்கார'ம்பாங்க. சமீபத்தில் பேராசிரியர் அன்பழகன் பேசினாராம். பெரியார் அதிகமாப் படிக்கலே. அதுனாலேதான் அதிகமா சிந்திச்சார்'ன்னு. சரி, நீங்க சொன்ன ரயில்லே, உங்க இடத்தில் நான் இருந்திருந்தா, அந்த வாழக்காய் விக்கிறவன் உக்காந்திருந்த தோற்றம், அவன் எழுந்து வேட்டிய தூக்கின விதம்; அதிலேருந்து ரூபாய எடுக்கிறது, அதை ஒரு கதையில சொல்லியிருப்பேன். என் வருத்தம் என்னன்னா நீங்க அதையே கொஞ்சம் செக்ஸ் கலந்து, அந்த வாழக்காய்காரனை ஒரு பொண்ணா மாத்தி, அவ ஜாக்கெட்டுலேயிருந்து காசை எடுத்துக் குடுத்தான்னு சொன்னாலும், அதுலே மனிதாபிமானம் இருக்கு. இதை ஏன் நீங்க எழுதாம விட்டீங்க?

புஷ்பா: நான் என்ன சொல்றேன்னா, நீங்க அப்படி எழுதிட்டா மட்டும் படிக்கிறவன் உடனே மாறிட மாட்டான். இப்போ வரதட்சணையைப் பத்தி இந்திலே ஒரு சினிமா வந்திருக்கு. உருக்கமா எடுத்திருக்கான். கண்ணுலே தண்ணீர் வந்திடும். ஆனா அதைப் பாத்து எத்தனை பேர் மாறிட்டாங்க? ஒன்னும் பிரயோஜனமில்லே. எனக்கு 15 வயசுலே படிஞ்சதுதான் மனசுலே உறைஞ்சு நிக்குது. நம்மளை விடுங்க. அமெரிக்காவில நம்மவிட படிக்கிறவங்க அதிகம். அங்க சிறந்த - மிகச் சிறந்த நாவல்களைக்கூட, முதல் நாலுபக்கம் படிச்சவங்க எத்தனை பேரு, பாதி வரைக்கும் வந்தவங்க எத்தனை பேரு, முழுப் புத்தகத்தையம் படிச்சவங்க எத்தனைபேருன்னு கணக்குப் பாத்தா, முழுசும் படிச்சவங்க ரொம்பக் குறைவு சார். அமெரிக்காவிலேயே அப்படின்னா, ரொம்ப ரொம்பக் குறைவான ஆளுங்க மட்டுமே படிக்கிற நம்ம தமிழ் நாட்டில, எழுதி எழுதி கோடிக்கணக்கான மக்களையும் திருத்தப் போறோமகிறது லேசான விஷயமில்லே.

சமுத்திரம்: புஷ்பா, சமூக வளர்ச்சிங்கிறது, ஒரு பரிணாம வளர்ச்சி. ஒரு புரட்சிப் படைக்குப் பின்னாலே ஒரு கலாச்சாரப்

படை வேணும். ஆயிரம் பேருதான் படிக்கிறான். கோடிக்கணக்கானவங்களை எப்படி எழுத்து போய்ச் சேரும்னு கேக்கறீங்க. பெரியார் நடத்தின 'குடியரசு' பத்திரிகை ஏற்படுத்தின தாக்கத்தை, பெரிய பத்திரிகை எதுவும் ஏற்படுத்தல. நேரடியா மக்களை நீங்க தொட முடியலேன்னாலும், மக்கள்கிட்ட வேலை பாக்கிற தன்னலமற்ற தொண்டர்கள்கிட்ட உங்க எழுத்து போனாலே போதும். அவன் அதை மக்கள்கிட்ட எடுத்துக்கிட்டுப் போவான். ஹிட்லர் சொன்னான் - அவன் மோசமானவன் - ஆனா அவன் அருமையா சொன்னான் - 'சரித்திரம் வென்றவர்களால் எழுதப்படுகிறது'ன்னான். நான் ஏதாவது துன்பத்தைச் சந்திக்கும்போது "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" அப்பிடின்னு என் பாட்டன் எழுதுனது தான் ஞாபகம் வருது. எப்பவும் இந்த வார்த்தை என் மனசுலே ஒலிச்சுகிட்டிருக்கு. அப்புறம் லியோ டால்ஸ்டாய், போலீஸ் அட்டகாசத்தைப் பத்தி எழுதியிருக்கிற 'புத்துயிர்ப்பு' நாவலை மறக்க முடியுமா?

புஷ்பா: இலக்கியத்தை, சமூக மாற்றத்துக்கான காரணங்களில் ஒன்னுன்னு வேணும்னா சொல்லலாம். ஒரே காரணம்னு சொல்ல முடியாது. உலகம், 1930-40 வரைக்கும் ரொம்ப மெதுவாத்தான் நகர்ந்தது. மாற்றங்களே இல்லை. சயின்ஸ் வந்தப்புறம் ரொம்ப வேகம். பென்சிலின் எல்லாம் கண்டுபிடிச்ச பிறகு அது வாழ்க்கை முறை, சிந்தனை எல்லாத்தையும் மாத்திடுச்சு. விஞ்ஞானத்துக்கு முன்னால இலக்கியம் பயனற்றுப் போச்சே.

சமுத்திரம்: நீங்க சொல்றது மாதிரி என்னதான் விஞ்ஞானம் வந்தாலும், அடிப்படை மனிதன் இருக்கானே அவனோட உணர்வுகள், சமூகப் பங்கீடுகள், விஞ்ஞானத்தைக் கூட, விஞ்ஞானத்தை அதன் விளைவுகளை எப்படிப் பகிர்ந்தளிக்கிறது எல்லாத்துக்கும் இலக்கியம் வேணுமே. இப்போ, கிராமத்தில் ஒரு பெரியவரு ஒரு ஆட்டை, ஒரு கிடா கிட்டே சேர்றதுக்கு விடறாரு. நான் புது ஆளா அங்க நின்னா அது வெக்கப்படுது. நான் அந்தப் பக்கம் போனப்புறம், அது ரெண்டும் லவ் பண்ணுது. ஆட்டுக்கு இருக்கிற வெக்கம்கூட நம்ம ஊரு சினிமாக் காரனுக்கும் இல்லே. சினிமாக்காரிக்கும் இல்லே. இந்தக் காலக்கட்டத்தில ஒரு வைராக்கியம், ஒரு மான உணர்வு இதுக் கெல்லாம் இலக்கியம் தேவைப்படுது. பிரெஞ்சுப் புரட்சிகூட, வால்டேர், ரூசா எழுதின இலக்கியத்தாலேதானே வெடிச்சது.

புஷ்பா: அப்படியில்லே... ஒரு சமூகம் புரட்சிக்குத் தயாரா இருந்த காலத்தில வால்டேரும், ரூசோவும் எழுதினாங்க. எந்த

சமூகம் புரட்சிக்கு தயாரா இருக்கோ, அப்போ அந்த சமூகத்தில நாமும் எழுதலாம். பயனிருக்கும்.

**சமுத்திரம்:** அப்போ, இலக்கியத்துக்குப் பயனிருக்கு.

**புஷ்பா:** ஆனா அதுதான் ஒரே காரணம்னு சொல்ல முடியாது.

**சமுத்திரம்:** புஷ்பா, இலக்கியத்துக்கு ஒரு தொலைநோக்கு உண்டு. கார்க்கி எழுதுன 'தாய்' நாவல்லே, கிராமத்துலே இருக்கிற தொழிலாளி மாஸ்கோவுக்குப் போவான். ஆனா, மாஸ்கோவில இருக்கிற படிச்ச தொழிலாளி இவனை எளக்காரமா பார்ப்பான். அப்பவே, சோவியத் யூனியன் வீழ்ச்சிக்கு விதை ஊன்றப்படுவதை கார்க்கி எவ்வளவு சூசகமா, தொலைநோக்கோட சொல்லியிருக்கார் பாருங்க. அப்புறம், இலக்கியம்கிறது ஒரு காலப்பதிவு. இப்போ நம்ம காலத்துத் தமிழர்கள் சினிமாவுக்கு இரையாப் போயிட்டானேங்கிற வருத்தத்தை நான் ஒரு கதையில் பதிவு செய்திருக்கேன்.

**புஷ்பா:** ஏங்க... அவனுக்கு வேற வழியில்லே. பொழுது போக்கில்லே. சினிமாவுக்குப் போறான்.

**சமுத்திரம்:** கன்னடக்காரனுக்கு வேற வழியிருக்கு. ஆந்திராகாரனுக்கு இருக்கு. கேரளாக்காரனுக்கு இருக்கு. இவனுக்கு மட்டும் இல்லியா?

**புஷ்பா:** மனித இனம் தானாகவே மாறிப்போயிக்கிட்டு இருக்கு. யாரோட தலையீடும் தேவையே இல்லை.

**சமுத்திரம்:** அந்த மாற்றத்துக்கு இலக்கியம் உதவுது.

**புஷ்பா:** பெரிசா ஒன்னும் உதவலை. சாதாரண மனிதனுக்கு, நேத்து ரேஷன்லே அரிசி போட்டான். இன்னிக்குப் போடலை, இப்படிப் பொருளாதாரக் காரணம் தான் பெரிசா தெரியும். 1967ல் தி.மு.க. வரும்னு ஒரு பத்திரிகையும் எழுதலே. பத்திரிகைகள், இலக்கியம் எல்லாம் ஒரு கருத்தையும் உருவாக்க முடியாது.

**சமுத்திரம்:** ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் என்கிட்ட சொல்றாரு - "எனக்கும் ஆட்சியில சலனங்கள், சபலங்கள் வரது உண்டு. ஆனா உங்க எழுத்துக்களை நினைச்சுக்கிட்டு, நான் உடனே சரி பண்ணிக்குவேன்' அப்படிங்கிறாரு. என் எழுத்துன்னா அது நான் மட்டுமில்லே, எனக்கு புதுமைப்பித்தன், அழகிரிசாமி, விந்தன் சொல்லிக் குடுத்தாங்க. மக்கள்

சொல்லிக் குடுத்தாங்க. நான் வாழக் கூடிய சமூகம் சொல்லிக் குடுத்துச்சு.

**புஷ்பா:** ஒருத்தரை மாத்தி உங்களுக்கு என்ன நடந்திடப் போவுது?

**சமுத்திரம்:** அவர் சாதாரண ஒருத்தரல்ல. சாதாரணமான லட்சக்கணக்கான மக்களின் மீது நடைபெறும் போலீசின கொடுமைகளை, அராஜகங்களை தட்டிக் கேட்கும் நிலையில் உள்ளவர்.

**புஷ்பா:** நீங்க என்னதான் கரடியா கத்தினாலும், பொதுமக்கள் எல்லோரும் சேர்ந்து ஒத்துக்கிற வரைக்கும் எதுவும் பயன்தராது. இப்போ நீங்க நூறுபேர் சேர்ந்து வரதட்சிணை கூடாதுன்னு எழுதுனாலும், ஒரு பொண்ணு அவளா சுதந்திரமா இவன் இல்லைன்னாலும் இன்னொருத்தன கட்டிக்க முடியும்னு தைரியம் வந்தாத்தான் வரதட்சிணையைப் போக்க முடியும்.

**சமுத்திரம்:** வரதட்சிணைப் பிரச்சினைங்கிறது, மேட்டுக்குடி தங்கள் பிரச்சினையை சமூகத்தின் மீது திணிக்கிறது. சாதாரண மக்களுக்கு வரதட்சிணைப் பிரச்சினையே இல்ல. யாராவது இந்த வரதட்சிணைப் பிரச்சினையில பெண்களுக்கு சொத்துரிமை உண்டுங்கறத கேக்கறானா? சரி, இலக்கியத்துனால எந்தப் பயனும் இல்லைன்னு சொல்ற நீங்க அப்புறம் எதுக்கு எழுதுறீங்க?

**புஷ்பா:** சம்பாதிக்கறேன். பணம் கெடைக்குது. அதனால எழுதுறேன். கருத்துக்காக எழுதுன புதுமைப்பித்தன் பேரே இப்ப மங்கிகிட்டுதானே வருது.

**சமுத்திரம்:** அதெல்லாம் இல்ல. அந்தக் காலத்த அவர் பதிவு செய்தார். இப்ப நீங்க மேல போங்க.

**புஷ்பா:** அப்ப இலக்கியம்கறது ஒரு காலகட்டத்துக்கு மட்டும்தான் உதவும்.... அப்படிங்கிறீங்களா?

**சமுத்திரம்:** இல்ல... இலக்கியம்கறது ஒரு தொடர்ச்சி... இலக்கியக் கருத்துக்கள் நிரந்தரமில்ல... ஆனா இலக்கியம் நிரந்தரம்.

**புஷ்பா:** கடந்த பத்தாண்டுகள்ல நிக்கக்கூடிய இலக்கியம் எது?

**சமுத்திரம்:** நிறைய இருக்கு. பொன்னீலனின் 'புதிய தரிசனங்கள்' ஒரு காலப்பதிவு.

**புஷ்பா:** நான் அதப் படிக்கல இப்போ நானே படிக்காதபோது நம்ம நாட்டுல எத்தன ஜனங்க அதைப் படிச்சிருக்கப் போறாங்க.

**சமுத்திரம்**: போராளிகள் படிக்கிறாங்க.

**புஷ்பா**: அவங்க படிச்சிட்டுப் போகட்டும்.

சமுத்திரம் அவங்க படிச்சிட்டுப் போறதில்ல. அவங்க எதையாவது செய்வாங்க.

**புஷ்பா**: சார்... நான் ஸ்ரீவேணுகோபாலன்கிற பேர்ல அருமையான கதைகள் எழுதுனபோது 18 வருசத்துல ஏதோ பத்துப்பேர் வந்து பாராட்டிருக்காங்க. புஷ்பா தங்கதுரைன்னு எழுத ஆரம்பித்தற்கப்புறம் ஆறு வாரத்துல நான் பாப்புலரா யிட்டேன்.

**சமுத்திரம்**: இப்போ 'அந்தி மந்தாரை' படம் பாரதிராஜா எடுத்திட்டிருக்காரே நீங்களும் பாத்தீங்கள்ல.... அதுல வர்ற அந்த தியாகியவிட நீங்க என்ன பெருசா கஷ்டப்பட்டுட்டீங்க? எதுக்கு சொல்ல வர்றேன்னா அறிமுகம் கெடைக்கலேங்கறதுக்குக்கா ஸ்ரீவேணுகோபாலன் புஷ்பா தங்கதுரையா...

**புஷ்பா**: இருங்க... இருங்க... அப்ப எனக்கு முன்னோடிகள் ஜெயகாந்தனும், தி. ஜானகிராமனும். எப்பப் பார்த்தாலும் தி. ஜானகிராமன் ஒரு அடல்ட்ரிய எழுதறது கவனிச்சிருக்கேன். தி. ஜா.-வ ரசிக்கிறவங்க இதை மறைமுகமா ரசிக்கிறாங்கன்னு நான் புரிஞ்சிக்கிட்டேன்.

**சமுத்திரம்**: இத நான் உறுதியா ஏத்துக்கிறேன்.

**புஷ்பா**: அப்புறந்தான் நானும் இதப் புரிஞ்சிக்கிட்டு கொஞ்சம் செக்ஸ் கலந்து எழுத ஆரம்பிச்சேன். ஆகையினால நான் உங்களுக்கும்கூட சொல்றேன் அதுல ஒண்ணும் தப்பில்ல. நல்ல கதை எழுதறதோட கொஞ்சம் பணமும் பண்ணத்தானே வேணும்.

**சமுத்திரம்**: நான் புஷ்பா தங்கதுரைய மாத்தணும்னு பாத்தா நீங்க என்னை மாத்த முயற்சிக்கிறீங்க. சரி அவுங்கவுங்க வழியில நாம நடந்தாலும், மனித நேயத்த, மனித மேம்பாட்ட நமக்கேத்த வகைகள்ல சொல்லணும்.

– "இனி", மே 1996

# பாரதி என்ற மனிதன்

இதுவரை பாரதியார் பாடல்களைப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்த நமது தமிழ் விற்பன்னர்களும், வியாபாரப் பத்திரிக்கைகளும், இப்போது பாரதியாரையே படாதபாடு படுத்தத் துவங்கியிருக்கிறார்கள். பாரதி தனது கோட்டில் ஒட்டுப் போட்டுத் தைத்தது குடைத் துணியா அல்லது மனைவியின் புடவைத் துணியா என்பது ஒரு பத்திரிக்கையின் ஆராய்ச்சி. பாரதியை எல்லோரும் மகா கவி என்று ஒப்புக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான், 'கல்கி, பாரதி மகா கவியில்லை, என்ற விவாதத்தை வேண்டுமென்றே துவக்கினார் என்று ஒருவரின் மழுப்பல். 'பாரதியார் என்னய்யா... பாரதியார்... நான் வளர்ந்து விட்டேன். ஆகையால், அவர் எனக்கு 'சுப்பிரமணியக் கவிதான்' என்ற பேராசிரியர் ஒருவரின் அடம். என் வீட்டை தேடிவரும் சிற்றிலக்கிய பத்திரிக்கை ஒன்று 'பாரதி ஒரு நிலப்பிரபுத்துவ பிற்போக்கு கவிஞன்' என்று சொல்லும் ஃபேஷன். இவற்றை எல்லாம், கேட்கும்போதும், பார்க்கும்போதும், இந்த பாரதி

**சில மனிதர்கள், சிறந்த கவிஞர்களாக இருப்பார்கள்; ஆனால், நல்ல மனிதர்களாக இருக்கமாட்டார்கள். சில கவிஞர்கள், நல்ல மனிதர் களாக இருப்பார்கள்; ஆனால் சிறந்த் கவிஞர்களாக இருக்கமாட்டார்கள். பாரதியோ இந்த இரண்டிலும் உச்சம்.**

**பாரதியின் கவிதைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பின்னணி நிகழ்ச்சி உண்டு. இதை முழுமையாக ஆய்வு செய்யவேண்டும்.**

நூற்றாண்டு விழா சீக்கிரம் முடிவடைந்து விடக்கூடாதா **என்று** கூட நினைக்கத் தோன்றுகிறது.

## தமிழறிந்த தண்டல்காரர்கள்

பாரதியாரை, இப்படி தமிழ்படித்தவரெல்லாம் தண்டல்காரர்களாகி கண்டபடி விமர்சிப்பது தமிழ் இலக்கியத்தில், இன்னும் தீர்க்கப்படாமல் வழி வழியாக வரும் ஒரு குறையையே எடுத்துக் காட்டுவதாக நினைக்கிறேன். தமிழ் இலக்கியத் திறனாய்வில் படைப்பாளிகளின் பின்னணியையும், அவற்றின் காலக்கட்டத்தையும், படைப்பாளியின் நிலையில், **அந்தக்** கட்டத்தில் நாம் இருந்திருந்தால் எப்படிச் செயல்பட்டிருப்போம் என்ற "பின் நோக்கும்" இல்லாததையே இது காட்டுகிறது. இந்த குறைதான் "தான் கள்ளி பிறரை நம்பாள்" என்பது மாதிரி பாரதி மேல் குற்றம் காண வைக்கிறது.

எடுத்துக்காட்டாக சொல்லப்போனால், குழந்தை அழுவதன் மூலம், பிறநாட்டு எதிரிகள், தன்நாட்டு வீரர்களை அடையாளம் கண்டு, கொன்று விடக்கூடாதே என்பதற்காக, பெற்ற குழந்தையையே கொன்ற தாய்க்கும், 'தீர்மானம் என்று வந்து விட்டால், என் பிள்ளையைக் கூட கொல்வேன்' என்று வீறாப்பு பேசிய, ஷேக்ஸ்பியரின் "லேடி மேக்பெத்"துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நம்மவர்களால் காண முடியாது. முன்னவள் செய்தது கொலை என்றாலும், அது தியாகம். பின்னவள் செய்தது கொலையல்ல என்றாலும் அது கொலையினும் கொடிய நெஞ்சத்தைக் காட்டுவது. இப்படிப் பட்ட தமிழ் இலக்கியச் சூழலில் பாரதியை, சரியாக அடையாளம் காட்ட வேண்டியது, நமது பொறுப்பாகிறது. பாரதியாரின் ஒவ்வொரு பாடலுக்கும் உரித்தான நிகழ்ச்சிகளையும் சமூகப் பின்தளத்தையும் ஆராய வேண்டும். இந்த முறைமைக்கும் காணிக்கையாக - நான் கேள்விப்பட்ட நிகழ்ச்சிகளை பகிர்ந்து கொள்கிறேன்.

## கடையத்தில் கண்டனம்

பாரதியாரின் மனைவி செல்லம்மா பாரதி பிறந்த கடையத்தில், என் பள்ளியிறுதிப் படிப்பை முடித்தேன். பொதுவாக, பள்ளிப் பேச்சுப் போட்டிகளில் முதற் பரிசுகள் வாங்குபவன் நான். எஸ்.எஸ்.எல்.சி படிக்கும்போது, பாரதி நினைவாக நடந்த பேச்சுப் போட்டியில், எனக்குத்தான் முதற்பரிசு என்பது, மாணவர்கள் மத்தியில் முடிவான தீர்ப்பு. ஆனாலும் எனக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. நான், பாரதியாரின் "சொல்லத் தகாத" பாடல்களை சொல்லி விட்டேன் என்பதுதான் காரணம். ஒருவேளை என்னை, திராவிட இயக்கத்துடன் இணைத்துப்

பார்த்திருக்கலாம். 1956ஆம் ஆண்டு வாக்கில், பாரதி என்ற பனை மரத்தடியில், அவன் கவிதை நுங்கின் சுவையைச் சொன்ன என் வார்த்தைகள் நடுவர்களுக்கு, 'கள்ளாக தெரிந்திருக்கலாம். ஆகையால், எனக்குக் கோபம் இல்லை. பரிசு என்பது ஒரு அங்கீகாரம். அந்த அங்கீகாரம் எனக்குத்தான் பரிசில்லாமல் கிடைத்தது என்பதால் - அதுவும் முதல் பரிசு வாங்கிய மாணவர் தோழனே 'ஒனக்குத்தாண்டா கிடைத்திருக்கணும்' என்று பெருந்தன்மையாக சொல்லிவிட்டதால், எனக்கு வருத்தமும் இல்லை. ஆனால் விவகாரம், அதோடு முடியவில்லை. அதுவரை, என்னைச் செல்லப் பிள்ளையாக நடத்திய ஆசிரியர்கள், என்னை விரோதப் பிள்ளையாக நடத்தத் துவங்கினார்கள். நின்றால் குற்றம், எழுந்தால் குற்றம். தனிப்பட்ட முறையில், வகுப்புகள் முடிந்ததும், என்னிடம் நிமிடக் கணக்கில் பேசும் என் அபிமான ஆசிரியர்கள்கூட, என்னை விரோதி மாதிரி பார்த்தார்கள்.

எனக்கோ தர்ம சங்கடம். பிராமண எதிர்ப்பு மாணவர்களோடும் சேர முடியவில்லை. பிராமண மாணவர்களுடனும் இணைய முடியவில்லை. பள்ளியில் இருந்து, நீக்கப்பட்டு விடக்கூடாதே என்பதற்காக, எனக்கு கொடுக்கப்பட்ட அத்தனை "பாராமுகங்களையும்" பார்த்து சகித்துக் கொண்டேன். என்றாலும், எனக்கு ஆசிரியர்கள்மீது கோபம் ஏற்படுவதற்குப் பதிலாக, பாரதி மீது பச்சாதாபம் ஏற்பட்டது. 1956-ஆம் ஆண்டில் பாரதியார் பாடல்களைப் பாடிய - அதுவும் பூசி மழுப்பிப் பாடிய எனக்கே இந்தக் கதி என்றால், நான் சொன்னதை விட கடுமையான பாடல்களை பாடியது மட்டுமல்ல - யாத்ததுபோல் வாழ்ந்த பாரதியை என்ன பாடுபடுத்தியிருப்பார்கள்! பாரதியின் அந்த ஊர் நடமாட்டத்தை விசாரிக்கத் துவங்கினேன்.

## விசித்திர பாரதி

நல்ல வேளையாக, பாரதியாரின் சமவயது கிழவர்கள், அப்போது வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு, பாரதி மீது துவேஷமோ அல்லது ஆவேசமான பக்தியோ கிடையாது. அவர்களைப் பொறுத்த அளவில் பாரதி ஒரு விசித்திரமான மனிதன். அவ்வளவுதான். நான், அந்த முதியவர்களை, மெல்ல அணுகியதும் கொட்டிவிட்டார்கள். 'சுப்பிரமணியமா, செல்லம்மா ஆத்துக்காரனா. சரியான கிறுக்கன்.... கழுதைக் குட்டி வாலைப் பிடித்துக்கிட்டு... அது பின்னாடியே, இந்த ஆறு பக்கமா ஓடுவான். இன்னொரு நாளைக்கு சேரில போய் வம்பளப்பான்.... அவங்க கூட டீக்கடையில் ஒக்காருவான்.... ஒரு நாள்... சுடல மாடசாமிகூட ஆடுறான். ஆனால் மனுஷாள்னா உயிரை விடுவான்.... இப்போ என்னடான்னா, அவனுக்கு...." இந்த முதியவர்களின் தொனி, பாரதிக்கு, இத்தகைய கிறுக்குத்தனம்

இல்லாதிருந்தால், இன்னும் அதிக பேர் புகழ் கிடைத்திருக்கும் என்பது மாதிரியும், அவனை ஒரு கெட்ட உதாரணமாக நினைத்து, 'ஆசாரப்படி வாழ்ந்த தங்கள் பெயர், தெருவிற்கு குறுக்கே கூட போகவில்லையே என்ற ஆதங்கம் ஒலிப்பது போலவும் தோன்றியது.

## மறவன் பாட்டின் மர்மம்

பாரதியார், கடையத்தில் இருந்தபோது, பட்ட அவமானங்களும், ஏற்பட்ட வறுமையும் கொஞ்ச நஞ்சமல்ல. பொதுவாக, தீவிரமாக வாழ்க்கையை துவக்கி, பிறகு வாழ்வால் 'குட்டுப்படுபவர்கள்' இறுதியில் 'ராமா கோவிந்தா' என்றோ அல்லது இயல்பான குழு உணர்வினால், சொந்த ஜாதியினருடனோ, சரண் புகுவது இயற்கை. பாரதி, அப்படிப் பட்டவன் அல்ல. கடையத்தில் வாழும்போது (அல்லது வாடும் போது) பக்கத்துச் சேரிக்குப் போய், அந்த மக்களோடு, உரக்கப்பேசி, பலமாகச் சிரித்து வாழ்ந்தவன். ஒரு சமயம் சேரியில் சுடலை மாடனுக்கு 'கொடை', மேளத்தோடு, வில்லுப்பாட்டும் அமர்க்களப்பட்டது. பாரதியார், சாமியாடத் துவங்கி விட்டாராம். உடனே பக்தர்கள், அவர் கையில் தட்டைக் கொடுத்து கற்பூரத்தை ஏற்றி விட்டார்கள். நாணயங்களை காணிக்கையாகப் போட்டார்கள். உடனே பாரதி கேட்டானாம்.

"நான் கேட்கிறதை ஒங்களால் காணிக்கை கொடுக்க முடியுமா?"

"எது கேட்டாலும் கொடுக்கோம்."

"முடியாது. நான் மூளையைக் கேட்பேன். உங்களால் தரமுடியுமா? கடவுள்தான் ஒங்களுக்கு 'அதைக்' கொடுக்கலியே..."

பக்தர்கள் துணுக்குற்றபோது, பாரதி கலகலவென்று சிரித்தானாம். ஒருவேளை, சாமியாடும் பாமரமக்களை, அவன் செல்லமாகக் கண்டித்திருக்கலாம். எப்படியோ... உயர் ஜாதியில் பிறந்தவன் 'ஹரிசன' சுடலைமாடனை ஆடியது கண்டு பொறுக்காதவர்கள் பாரதியை எள்ளி நகையாடினார்கள். செல்லம்மாவை இளக்காரமாகப் பார்த்தார்கள். விருந்து, கேளிக்கைகளுக்கு, சுப்பையா (பாரதியின் செல்லப்பெயர்) அழைக்கப்படவில்லை. மொத்தத்தில், தள்ளாமல் தள்ளி வைத்தார்கள். இந்தச் சமயத்தில் அவன் பாடியதுதான் "மறவன் பாட்டு."

"மண்வெட்டி கூலிதின்னலாச்சே" என்று துவங்கி

"பேராசைக் காரனடா பார்ப்பான் - ஆனால்
பெரியதுரை என்றிடில் வேர்ப்பான்"

என்று நீட்டி,

"வீர மறவன் நாமன்றோ? - இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்றோ?"

என்று முடித்தானாம்.

## இருட்டடிப்பு

பல பிரசுர நிறுவனங்கள், பாரதியின் இந்தப் பாடலை எடிட்' செய்திருக்கின்றன. பிராமணர்களை, கடுமையாகச் சாடும் வரிகளை நீக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து இவர்களுக்கு, பாரதியைப்பற்றி புரியவில்லை என்பது தெளிவாகும். பாரதி, "உடன் பிறந்தே கொல்லும் நோய்போல்" பிராமண விரோதி அல்ல. அதனால் பின், பிராமணம் - பிராமணர் அல்லாதோர் என்ற ஜாதி இந்துக்களின் பிரபுத்துவ போராட்டத்தை, பல் கட்டுரைகளில் அம்பலப்படுத்தியதுடன், பல அரிய கருத்துக்களை, தொலை நோக்கோடு கட்டுரை வடிவுகளாகத் தந்தான். எந்த ஜாதி ஆதிக்கத்தையும் விரும்பாத பாமர ஜாதிக்கு மாறியவன் பாரதி. சாதீய சமூகத்தில், தான் பட்ட இன்னல்களையும் மீறி, அவற்றை சமூக நோக்கோடு பார்த்தான். இவனின் 'எடிட்டான' கவி வரிகள், ஒரு ஜாதிக்கு எதிரான கீதமல்ல. தொழிலாளர்-பாமரர் வர்க்கம் அப்போதைய சூழலில் தங்களுக்கு தடங்கலாக இருந்த இன்னொரு வர்க்கத்திற்கு எதிராக, தனக்கே இயல்பாக உள்ள முரட்டுத்தனத்தில் முழக்கிய பாடல். பாரதி இந்த நலிவுற்ற வர்க்கத்தின் வாய். அந்த வாயையே இந்த நிறுவனக்காரர்கள், அடைக்கிறார்கள்.

## பாரதியின் பாடல்களுக்குப் பின்னே

பாரதியின் ஒவ்வொரு பாடலுக்கும் பின்னால் ஒரு வரலாற்றுப் பின்னணியோ அல்லது குடும்பப் பின்னணியோ சமூகப் பின்னணியுடன் இணைந்துள்ளன என்று பல பெரியவர்கள் சொல்ல கேட்டிருக்கிறேன். ஆனால், இவை பற்றி முழுமையான கள ஆராய்ச்சி ஏதும் நடத்தப்படவில்லை. எனக்குத் தெரிந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## பி.ஜி. தீவினிலே எம்குல மாதர்...

அந்தக் காலத்தில், வெளிநாட்டு மலைத் தோட்டங்களிலும், இதர முதலாளித்துவ அமைப்புகளிலும் வேலை செய்வதற்காக,

நம் நாட்டவர்கள் குறிப்பாக தமிழர்கள், கொத்தடிமைகளாகச் சென்று குற்றுயிராகத் துடித்த சோக நிகழ்ச்சிகள் பாரதியாரை உலுக்கியிருக்கின்றன. பல பாடல்களாக புனைந்தான் பாரதி. இவற்றில் இரண்டு பாடல்களுக்கு, நான் கேள்விப்பட்ட நிகழ்ச்சிகள் இவை.

நெல்லை நகரில் ஒரு இளம் தாய். கூலித் தொழிலாளி பெற்ற பெண் குழந்தையை, உறவினர் குடும்பத்திடம் ஒப்படைத்துவிட்டு, மகளின் எதிர்காலம் கருதியோ என்னவோ, பிஜித் தீவிற்குப் போய் விடுகிறாள். அங்கிருந்து, மாதா மாதம் குழந்தையின் பராமரிப்பிற்காக பணம் அனுப்பி வைக்கிறாள். கரும்புத் தோட்டத்திலே ஊழியம் செய்யும் அந்த கூலிப் பெண்ணால் மகளை மறக்கவும் முடியவில்லை. எப்படியோ, காலம் உருண்டு மகளை கன்னி பெண்ணாக்கி விடுகிறது. நெடிய கொடிய பிரிவிற்கு பிறகு ஆசை மகளின் ஒவ்வொரு அணுவையும் பார்த்து ரசிப்பதற்காக, தாயகம் திரும்புகிறாள்.

நெல்லை நகரில் இருந்து இளம் பெண்ணாய் போய் மூதாட்டியாய் திரும்பும் அந்த தாய்க்கு, ஒரு தயக்கம். மகள் வாழும் வீட்டிற்கு போகத் துடித்த மனத்தை கல்லாக்குகிறாள். பி.ஜி. தீவில் இருந்து அங்கங்கள் குறைந்து, குஷ்டரோகியாகத் திரும்பிய தன்னை, மகள் அடையாளம் காணக்கூடாது என்று அவள் மனம் வைராக்கியப் படுகிறது. எப்படியோ ஒரு உறவினர் மூலம், மகளை தாமிரபரணி நதிக் கரையோரம் வரவழைத்து விடுகிறாள். மகளைக் கண்டு கண்ணீர் கொட்ட - அதாவது மகளை 'கண்குளிரப்' பார்த்த அந்த தாய், தாயை அடையாளம் காணாமலே அந்த இளம்பெண் சென்ற பிறகு அங்குள்ள ஒரு மரத்தில் தூக்கிபோட்டு தன்னைத்தானே மாய்த்துக்கொள்கிறாள்.

இந்த நிகழ்ச்சி பாரதிக்கு எட்டுகிறது. துடியாய் துடிக்கிறான். மூன்று நாட்கள் வரை அவனுள் மூச்சு மட்டுமே இயங்குகிறது. இறுதியில் "பி.ஜி. தீவினிலே எம்குல மாதர்" என்ற பாடலை கண்ணீரும் கம்பலையுமாக எழுதுகிறான். இதனால்தான் அவனால் பாமரர்களும் படிக்கக்கூடிய கவிதைகளை எழுத முடிந்தது.

சில மனிதர்கள், சிறந்த கவிஞர்களாக இருப்பார்கள்; ஆனால், நல்ல மனிதர்களாக இருக்கமாட்டார்கள். சில கவிஞர்கள், நல்ல மனிதர்களாக இருப்பார்கள்; ஆனால் சிறந்த கவிஞர்களாக இருக்கமாட்டார்கள். பாரதியோ இந்த இரண்டிலும் உச்சம்.

தீக்கதிர் மலர் - 1995.

# அவ்வையாரான அழகிய நாயகி அம்மாள்

படைப்பிலக்கியத்தில் தன் வரலாறாகவும், தன் வரலாற்றில் படைப்பு இலக்கியமாகவும், 'கவலை' என்ற அழகிய நாயகி அம்மாளின் படைப்பு, பல்வேறு இலக்கிய அதிர்வுகளை தோற்றுவிக்கின்றது. உள்ளதை உள்ளபடி எழுதுவதே இலக்கியம் என்பதற்கு கவலை, ஒரு இலக்கியமாகவும், இலக்கணமாகவும் ஒரே சமயத்தில் திகழ்கிறது.

கவலைப்படுவதும் சிலுவை சுமப்பது போல் ஒரு மகத்தான காரியம் குறித்து எழும் காரணம் போலாகிறது.

அந்தக் காலத்து பாணியில் சொல்லப்போனால் இந்தக் காலத்து தமிழ்ப் படைப்புகள், செட்டியார் முடுக்கினால் மட்டுமே பேசப் படுகின்றன. ஆனால் ஒரு படைப்பு- ஒரே ஒரு படைப்பான கவலை, முழுக்கமுழுக்க சரக்குமுடுக்காலேயே, பரபரப்பாக பேசப்பட்டுவருகிறது. இதனை விமர்சிக்காத பத்திரிகை எதுவுமே இல்லை. சென்னையில், நான், எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களை அண்மையில் சந்தித்த போது அவர் கேட்ட முதல் கேள்வி 'கவலையப் படித்தீர்களா?' என்பதுதான் இதனை வெளியிட்ட பாளையங்கோட்டையில் உள்ள தூய சவேரியார் கலலூரியின் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், தமிழகமெங்ககும் பல்வேறு இடங்களில் 'கவலைக்கு' மகிழ்ச்சியான ஆய்வரங்கங்களை நடத்துகிறது. 'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பத்தடி பாயும்' என்பது பழமொழி ஆனால் 'கவலையை' பொறுத்த வரையில் இது உல்டாவாகி இருக்கிறது. எழுத்தாளத் தோழர் பொன்னீலனின் இலக்கிய வீச்சு

எட்டடி என்றால் அவரது தாயார் அழகிய நாயகியம்மாளின் வீச்சோ பத்தடியாகியிருக்கிறது. இந்த அளவிற்கு படைப்பிலக்கியத்தில் தன் வரலாறாகவும், தன் வரலாற்றில் படைப்பு இலக்கியமாகவும், கவலை பல்வேறு இலக்கிய அதிர்வுகளை தோற்றுவிக்கின்றது. உள்ளதை உள்ளபடி எழுதுவதே இல்க்கியம் என்பதற்கு கவலை, ஒரு இல க்கியமாகவும், இலக்கண மாகவும் ஒரேசமயத்தில் திகழ்கிறது.

தமிழ் இலக்கிய ஒளவையார்களைப் போல, இந்தப் படைப்பு சிறுமி அழகியநாயகி, கன்னிப்பெண் அழகியநாயகி, குடும்பத் 'தலைவி' நாயகி அம்மாள், விதவை அழகியநாயகி, மாமியார் அழகியநாயகி என்று பல்வேறு அழகிய நாயகிகள் நடமாடுகிறார்கள். இப்போது லெட்டர் பாட் வைத்து நூற்றுக் கணக்கான வாசகர்களின் கடிதங்களுக்கு பதில் எழுதியும், தரமான ஓம்சக்தி பத்திரிகையில் தொடர் எழுதியும், புகழோடு விளங்கும் அழகிய நாயகி அம்மாள், ஒரு முதுபெரும் ஒளவையாய், பரிணமித்து நிற்கிறார்.

### சிறுமி நாயகி

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஈத்தாமொழி என்ற கிராமத்தில், பாரம்பரியமிக்க குடும்பத்தில் இளையநாடானின் மகளாக பிறந்தவள் இந்த சிறுமி. முதலில் அண்ணனையும், கடைசியில் தங்கையையும் உடன்பிறப்புகளாகக் கொண்டவள். சின்னவயதிலேயே தாயற்றுப்போனவள். பாட்டியோ, தனது ஒரே மகனை சாவுக்கு காவுக்கொடுத்துவிட்டு, அவனது சமாதியில் ஓட்டையிட்டு தலையை உள்ளே விட்டு 'மகனே மகனே' என்று அரற்றியதை பார்த்தவள் இந்தச் சிறுமி. இவளது ஒன்றுவிட்ட சகோதரனான கட்டநாடான், தனது மூன்றாவது தாரமான அகஸ்தீஸ்வர நாடாத்தியை ரத்தம் சொட்டச்சொட்ட அடித்து நொறுக்கியதையும், அவன் வீட்டுக்குள்ளேயே அந்தப் பாவிப்பெண் ஓராண்டுக்கு மேல் கண்ணில் படாமல் வாழ்ந்ததையும், இறுதியில் வீட்டுக்கு வெளியே தூக்கி எறியப்பட்டதையும், கண்நோயாய்க் கண்டவள் இந்தச் சிறுமி.

இந்த மயினியிடமிருந்து நாட்டுப்புறப்பாடல்களை கேட்டவள். பனை ஓலைகளில் இவளது கலை வேலைப்பாடுகளைக் கண்டவள். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த மயினிக்கு பக்கபலமாக நின்றவள். இந்தக் கட்ட நாடான் இறுதியில், சித்திரவதை செய்யப்படாத குறையாக செத்த போது, சொந்த ஊருக்கு விரட்டப்பட்ட, அகஸ்திஸ்வரிகாரியிடம் செய்தி போகிறது. உடனே அவள் 'எனக்கு அறுக்கத் தாலி கழுத்தில் இல்லை' என்று சொல்லுகிறாள். இந்தப் பெண்ணடிமைக் கொடூரங்களை கண்டு இந்தச்சிறுமி அப்போது அழுது இருக்கிறாள். அதைச்சொல்லிச்சொல்லி இப்போது நம்மையும் அழவைக்கிறாள்.

ஏழுவரை படித்துவிட்டு, இவரது தந்தையின் அடாவடித்தனத்தால், மேற்கொண்டு படிக்கமுடியாமல் போனாலும், துகிலுரிதல், அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, முத்துப்பட்டன் மாலை, ஆகிய நாட்டுப்புற கலை இலக்கிய நூல்களை படித்தவள். மலையாள மொழியிலும், ஓரளவு தேர்ச்சிப் பெற்றவள்.

## இளம்பெண் அழகியநாயகி

இவள், தனது தந்தை இளையநாடானுக்கு, இரண்டாம் தாரமாய் வந்த சின்னம்மாவை சொந்தத்தாயாக கருதியவள். இந்த நூலில், பெற்ற மகனும் கட்டிய கணவரும்கூட தாக்குதல்களில் இருந்து தப்பிக்க முடியாதபோது, மாற்றாந்தாயான இந்தச் சின்னம்மா, மாற்றுக்குறையாத பொன்னாக விளங்குகிறாள். இது அழகியநாயகி சிறுமி இளம்பெண்ணாக உருமாறினாலும், அவளது மனிதாபிமானமும் நேர்மையும் மாறவில்லை என்பதற்கு அத்தாட்சி. ஊரில் இருக்கிற சின்னஞ்சிறு குழந்தைகளை கூட்டி வைத்துப் பாடம் சொல்லி கொடுத்தவள். புத்தக வியாபாரி வரும்போதெல்லாம் சொந்தமாய் சேர்த்த சக்கரங்களை (காசுகள்) கொடுத்துப் புத்தகங்கள் வாங்கிப் படித்தவள். செல்லமாக ஒரு மைனாவை வளர்த்தவள். அந்த மைனா தனது தம்பியைப்பார்த்து 'ஏ ராஜா.... வாடே என்று பேசும்போதும், 'கஞ்சி குடிச்சியா' என்று இவளை கேட்கும்போதும் புளகாங்கிதப்பட்டவள். அதே மைனா ஒரு பூனைக்கு இரையானபோது. தந்தையோடு சேர்ந்து ஒப்பாரி போட்டவள். ஆகமொத்தத்தில் சுற்று வட்டாரத்தில் அனைத்து சாதிப்பெண்களின் மதிப்பைப் பெற்றவள்.

## குடும்பத் தலைவி

இப்படி மனிதாபிமானத்தோடும், நேர்மையுடனும் திகழ்ந்தவள் பொட்டலூரில், அம்மம் கொண்டாடியார் குடும்பத்தில், காந்தியவாதியான ஆசிரியருக்கு வாழ்க்கைப்பட்டவள். தந்தை, தன்னை ஒரு சாதாரண குடும்பத்தில் தள்ளிவிட்டுவிட்டார் என்று தப்பாகவோ சரியாகவோ நினைத்தவள். ராமருக்கு லட்சுமணன் போல், அண்ணுக்கு தம்பியான, தனது கணவர், குடும்ப விவகாரங்களில் - குறிப்பாக அண்ணன் மனைவி பூமத்திவெளக்காரியின் அடாவடித்தனங்களை கண்டுக்காதவர் என்பதில் இவளுக்கு ஒரு குறை உண்டு. அதோடு அண்ணனிடமும், அவரின் சொக்கரனான கந்தசாமி என்னும் வம்பனிடமும், பேசக்கூடாது என்று கணவர் போட்ட கட்டளையை வெளியே சொல்ல முடியாமல் வெம்பியவள். கணவன் வீட்டிற்கு தாழ்ப்பாள் போட்டால், பழி இவளிடம் வந்து சேருகிறது. தலைப்பிரசவத்திற்கு கூட்டிப்போகும் தந்தை

இளைய நாடானோ, இவளை வண்டியோடு வழியில் விட்டுவிட்டு, நீதிமன்றத்திற்கு இடையிலேயே பிய்த்துவிடுகிறார். குழந்தை பிறந்தபிறகு, தாயையும் சேயையும் சீரோடும் சிறப்போடும், அனுப்பாத குடும்பத்தால் குலைந்துபோனவள்.

இதுபோதாது என்று இவளுடைய மச்சான் மனைவியான பூமத்திவெளக்காரி பொதுச்சொத்துக்களைத் திருடி தம்பிக்கு கொடுக்கிறாள். இவளை ஊரில் எவ்வளவு கேவலமாக பேசமுடியுமோ, அவ்வளவு கேவலமாக பேசுகிறாள். ஒரு கட்டத்தில் இவளை அடிக்கிறாள். இவளோ 'இன்னும் காணாது இன்னும் அடி, என் தகப்பன்கிட்டே, நீ பொண்ணு கேட்க வந்த அண்ணு, நீரு எங்களுக்கு ஒன்னுந்தரவேண்டாம். எங்களுக்கு சொத்து நிறைய இருக்கு எண்ணு..... சொல்லி, தாலியக் கெட்டி ஓங்கையில புடிச்சி தந்து..... ஓம்பிள்ளைய புடிச்சித் தந்திட்டேன், நீ கூட்டிக்கிட்டுப் போ எண்ணு தந்தானே...... அந்த தோசமெல்லாம் இண்ணோடே தீரட்டும்........ அடி...... என்ன வளர்த்து, நேச்சக்கிடா போல ஒனக்கு பெலி தந்தான் என் தகப்பன். நீ இண்ணும் நேசக்கடன தீரு' என்று கையறுநிலையில் பேசுகிறாள்.

வீட்டுக்குத் திரும்பிய கணவனிடம் சொன்னாலோ, அவர் "அந்த அடி சிறீராமர்' அடிச்ச அடி, அந்த அடியில குத்தமில்லை" என்கிறார். இந்தப்புதிர் இன்றளவும் இந்த ஆசிரியருக்கோ நமக்கோ புரியவில்லை. இதனால்தான் 'கொண்டவன் துணையில்லாதவளுக்குக் கூரையளக்கும் துணை இல்லை' என்ற பழமொழியை நினைத்துப் பார்க்கிறாள். 'எனக்கும் ஏழையான கோழையை வகுத்தான் விதிகாரன்' என்று வாசகர்களிடம் கூறுகிறாள். இவளது கோபம் இந்த நூலில் ஒரு பரபரப்பான விவகாரம். பெற்ற மகன் பொன்னீலனே இதை மறுத்து எழுதி இந்த நூலில் பிற்சேர்க்கையாக இணைத்திருக்கிறார். இதில் அப்பழுக்கற்ற தனது தந்தை அம்மாவின் துணி மணிகளை ஓடைக்குப்போய் துவைத்து வந்த துணிச்சலான காரியத்தையும் சுட்டிக்காட்டுகிறார். ஆனாலும், அழகிய நாயகி அம்மாளின் கோபம் அல்லது வருத்தம் நியாயமாகவே படுகிறது. அதே சமயம் இந்த அழகிய நாயகி தனது மகன் சிரமமில்லாது, மதுரையில் தனியார் பள்ளியில் இருந்து மீண்டு, அரசாங்க பள்ளியில் சேர்வதை இவர்கள்(கணவன்) செய்த புண்ணியம் என்கிறாள். பொட்டலூரில் உயர்நிலைப்பள்ளி வருவதற்காக சொத்தையும் பணத்தையும் கொடுத்தும் ஊரரால் உதாசீனம் செய்யப்பட்ட கணவருக்கும், அவரது அண்ணனுக்கும் ஒரு தார்மீக கோபத்தோடு நியாயம் கேட்கிறாள்.

**விதவை**

கல்யாண வயதில் நின்ற இரண்டு மகள்களும் இறந்துபோக, நடுத்தர வயதிலேயே கணவனை இழந்து தவிக்கிறாள் அழகியநாயகி.

ஆனாலும், மூத்தமகனான பக்தவசலத்தை (பொன்னீலன்) மேல்படிப்பு படிக்க வைக்க படாத பாடுபடுகிறாள். உருட்டிப்பெறட்டி, பணம் திரட்டி, அவனைப் படிக்கவைத்தும் விடுகிறாள். வீட்டுப்பொதுச் சுவரை பலவீனமாக்கியதோடு, அதைப் புதுப்பிக்க போகும் போது வம்புக்கு வந்த பங்காளி கந்தசாமியை எதிர்த்து நிற்கிறாள். இந்த வரலாற்றை சொல்லும்போது, சோகமும் வீரமும் கைகோர்க்கின்றன.

சொந்த அண்ணனின் மகள் கனியைவிட, மூத்தய்யாபேத்தி புஷ்பத்தை மருமகளாக ஏற்றுக் கொள்ள இலைமறைவு காய்மறைவாய் ஆசைப் பட்டதும் இந்த நூலில் இந்த அம்மாவை மீறி ஒரு தகவலாக வந்துள்ளது. அத்தைமகன் மீது காதல் வயப்பட்ட கனி, அந்த அத்தைக்கு தன்னை பிடிக்க வில்லையென்று நினைத்து 'அத்தையை ஊருக்குப் போகச்சொல்லுங்க' என்று சிணுந்து சொல்வது பகட்டில்லாத இந்த மண்ணின் மகள்களால் மட்டுமே முடியக்கூடியது.

**மாமியார்**

மருமகளான கனி, தனக்குப் பிடிக்கவில்லை என்பதை மாமியாரான அழகிய நாயகியம்மாள் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கிறார். இதை விலாவாரியாய் விவரிக்காததில் ஒரு முதிர்ச்சியான, முன்னெச்சரிக்கையான மாமியாரைப் பார்க்கிறோம்.

ஆனாலும் நாடறிந்த படைப்பாளியாய் திர்ந்திருக்கும் அழகிய நாபகி அம்மாள் இப்போது குடும்பப் பொறியிலிருந்து மீண்டு, சமூகத்தளத்திற்கு வந்திருப்பதால், மருமகள் மீதான கோபம் தணிந்திருக்கும் என்றும் நம்பலாம். மருமகளுக்கும் தனது மாமியாரான, தனது அய்யாகூடப் பிறந்த மாமியாரின் புகழில் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். இதுதான் மனோதத்துவம்.

**இறுதியாக...**

மண்வாசனையும், சொல்லடைகளும், வளமான வர்ணனைகளும் கொண்ட இந்தப்படைப்பில் என்னால் முற்றிலும் ஒன்றமுடிகிறது. இதில் என் மூளை மட்டுமல்லாது, என் இதயமும் ஒட்டிக் கொள்கிறது. காரணம் இவரது காலத்தில் நடந்த கிராமத்து நிகழ்ச்சிகளும், பழக்கவழக்கங்களும், சண்டைகளும், சச்சரவுகளும்,அம்மன் கொடைகளும், எனது கிராமத்திலும் நகலெடுத்தது போல் நடந்தவை. இந்தப்படைப்பு என்னை ஏழெட்டு வயது சிறுவனாய் கிராமத்தில் திரிய வைக்கிறது. அந்தச் சிறு வயதிலிருந்து இன்றைய ஐம்பத்தெட்டு வயதுக்கு இன்னும் நான் திரும்பவில்லை. என்னைப்போல் எவரும், இதைப் படித்து முடிக்காமல் வைக்கமுடியாது. நான்கைந்து மணிநேரம் வாசகனின் கவலையை மறக்க வைக்கும் கவலை. கவலையே ஒரு சாதனைக்கு அடித்தளமாகும் என்பதை எடுத்துரைக்கும் படைப்பு.

தாமரை - செப்டம்பர், 1999.

# முகடுகளிலும் அடிவாரங்களிலும்

அடித்தள மக்களின், அடிப்படைப் பிரச்சினைகளை எழுதும் எழுத்தாளர்களுக்கும் ஒரு அடிப்படைப் பிரச்சினை உண்டு. யாருக்காக நாம் எழுதுகிறோமோ, அவர்கள், நம் படைப்புக்களைப் படிப்பதில்லை. படிக்கும் நிலையிலும் இல்லை. இதனால், ஒரு எழுத்தாளனுக்கு தன் எழுத்தின் நேரடித் தாக்கம் பிடிபடுவதில்லை. சம்பந்தப்பட்ட படைப்பை, பெரும்பாலும் 'ரசிப்பவர்கள்' நடுத்தர வர்க்கத்தினர் தான். இவர்களின் ரசனை, ஒரு பெண்ணின் அழகை மட்டும் பார்ப்பதுபோல. அந்த அழகிற்கு அப்பாலும், ஒன்று இருப்பதைச் சுட்டிக் காட்டும்போதுதான், சமூகப் பிரக்ஞையுள்ள எழுத்தாளன் திருப்தியடைவான். இந்த 'திருப்தி' கிடைக்காததால், பலர் கீழே விழுந்துவிட்டார்கள். சிலர், எதிரே முகாமிற்குப் போய் 'அழகுணர்ச்சி... இலக்கியம், நயம்' என்றவற்றைப் பேசினால் மட்டும் பரவாயில்லை. இவற்றின் அனாவசியங்களாகவும் போய்விடுகிறார்கள். போய் விடுவதோடு, இலக்கிய நீரோக்களோடு சேர்ந்து, இவர்கள் 'இலக்கிய பர்வெர்ட்டுகளாகவும்'

**உள்ளதை உள்ளபடி எழுதாமல், அந்த உள்ளதில் ஒளிந்திருக்கும் உண்மையை கண்டு எழுதுவதே யதார்த்தம்.**

**மக்கள் எழுத்தாளர்களான கு. சின்னப்பபாரதியின் 'சங்கம்', டி. செல்வராஜின் 'தேநீர்', எனது 'உயரத்தின் தாழ்வுகள்' இந்த வகையான யதார்த்தப் படைப்புகள்.**

**1976-ஆம் ஆண்டு வாக்கில் கல்வராயன் மலைக்கு, அரசு பணி சம்பந்தமாய் நான் சென்றபோது இருந்த சூழலே இந்தக் கட்டுரை. இந்தச் சூழல் இப்போது மாறியிருக்கிறதா? அல்லது மாற்றப்பட வேண்டுமா?**

மாறி விடுகிறார்கள். மாறுவது மட்டுமல்ல, நமக்கே இலக்கிய உபதேசம் செய்ய முற்படுகிறார்கள்.

## இயல்பும்–யதார்த்தமும்

இவர்கள், அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றி எழுதுபவர்களாக மட்டும் இருந்து விடுவதுதான். வித்தியாசமான படைப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்வதுதான். எந்த சமூகத் தவிப்பைப் பற்றி எழுதுகிறோமோ அந்த சமூகத்தளம் உய்வடைவது வரைக்கும் அதைப்பற்றி எழுதிய எழுத்தாளனும் அங்கீகாரத்திற்கு அலையக் கூடாது என்ற இலக்கியக் கம்பீரம், மக்கள் எழுத்தாளனுக்கு இருக்க வேண்டும். புத்தர் உலகில் உள்ள எல்லோருக்கும் 'நிர்வாணம்' கிடைப்பது வரைக்கும் தனக்கு 'நிர்வாணம்' வேண்டாம், என்று கிடைத்த நிர்வாணத்தை உதறிவிட்டதாகக் கூறப்படுகிறதே, அப்படித்தான் மக்கள் எழுத்தாளனும் இயங்க வேண்டும்.

நான், பெரும்பாலும் அப்படித்தான் இயங்குவதாக நினைக்கிறேன். 'உயரத்தின் தாழ்வுகள்' தொடர்கதைக்கு நான் எதிர்பார்த்த வரவேற்பு, தினமணிக்கதிர் வாசகப் பரப்பில் கிடைக்கவில்லை. அது வாசகப் பரப்பின் முடத்தனத்தைக் காட்டுவதோடு, இன்றைய படித்ததாகக் கூறப்படும் வர்க்கம், அடித்தளமக்களின் பிரச்சினைகள், இலக்கியமாக வடிவெடுக்கும்போது, 'புரியாத வார்த்தைகள்' என்று பேச்சுத் தமிழை சுட்டிக் காட்டித் தங்களின் புரியாத்தனத்தைக் காட்டிக் கொள்வதுண்டு. ஆனாலும் அந்த தொடர்கதையை, 'விழலுக்கு நீர் பாய்ச்சியதாக நினைக்கவில்லை. 'சோற்றுப் பட்டாளத்தைவிட, 'உயரத்தின் தாழ்வுகளைச்' சிறப்பாகக் கருதுகிறேன். அதற்கான அளவுகோல் வைத்து அளந்துதான் சொல்கிறேன். கவிஞர் இளவேனில், இது நன்றாக இருக்கிறது என்றார். என் இலக்கிய வீச்சுக்கு, அவர் சொல்வதே அளவுகோல். அவர் சொல்வது, ஆயிரமாயிரம் தோழர்கள் - அடித்தள மக்களை கரையேற்ற உழைக்கிறார்களே - அவர்கள் சொல்வது மாதிரி. ஆகையால்தான், தோழர் இளவேனில், என்னிடம், 'உயரத்தின் தாழ்வுகளை' எந்த சூழலில் எழுதினேன் என்பதை ஒரு கட்டுரையாகத் தரும்படிக் கேட்டதும், அதை இலக்கியக் கௌரவமாகக் கருதி, எழுதத் தீர்மானித்தேன்.

## கல்லாக்கப்பட்ட கல்வராயன் மலைமக்கள்

கல்வராயன் மலையைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள், சேலத்தில் இருந்து, ஐம்பது அறுபது கிலோமீட்டர் தொலைவில்

உள்ள இந்த மலைப் பகுதியில் பல கிராமங்கள் சிதறிக் கிடக்கின்றன.

'கொத்தடிமை முறையில் இருந்து "மீட்கப்படுவது" வரைக்கும், இந்த மலைவாசிகள் மூன்று ஜாகிர்தார்களின் கட்டுப்பாட்டில் காட்டு தர்பாரில் இருந்தார்கள்.

இந்த நூற்றாண்டின் எழுபதுகளில், கல்வராயன் மலைக்குப் போகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது அரசு அதிகாரிகள் முகாம் போட்டிருந்தார்கள். இந்த மலைப்பகுதியில் மக்களை கொத்தடிமையில் இருந்து மீட்டு, தேனும் பாலையும் ஓட வைப்பதே இவர்களின் விருப்பம். நானும் எனது பதவி அடிப்படையில்தான் சென்றேன்.

அங்கிருந்து, இருபது கிலோ மீட்டர் தொலைவுவரை பல குக்கிராமங்களைப் பார்த்தேன். பொதுவாக, மலை ஜாதி என்றால், வில்அம்போடு, முரட்டுத்தனத்துடன் இருப்பார்கள் என்பதும், இவர்கள் தங்களின் பெண்டு பிள்ளைகள், பிறரால் பயன்படுத்தப்படுவதை அனுமதிப்பார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

இந்தக் கருத்தின் அடிப்படையில் பாரதம், முழுவதும் பல அப்பாவி மலைமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் சூறையாடப்பட்டிருக்கிறார்கள். கல்வராயன் மலை மக்களைப் பற்றியும் 'சமவெளிக்காரர்கள்' இப்படித்தான் கருதுகிறார்கள். இது உண்மையா?

## சூரிய இருட்டு

உண்மை மாதிரி. ஆனால் உண்மையல்ல. காட்டில் நடக்கும்போது, உடம்பில் முள் குத்தலாகாது என்பதற்காக, கோவணத்தைக் கட்டிக் கொண்டு, தலை முழுவதையும் வேட்டியால் மூடிக்கொள்ளும் இந்த மக்களைப் பார்த்ததும், சூரியனைப் பற்றிப் படித்த ஒரு விஞ்ஞானப் புத்தகம் எனக்கு நினைவுக்கு வந்தது. சூரியனின் அடிப்பாகம், சொல்ல முடியாத கருநிறத்தில் உள்ளதாம். இங்கே நினைத்துப்பார்க்க முடியாத உஷ்ணம் ஆட்சி செலுத்துகிறதாம். மற்றபகுதிகளை விட அளவற்ற உஷ்ணம் அளவற்ற இருட்டு. உஷ்ணம் அதிகமானதால், அதிகமாய்ப் போன இருட்டு. பொதுவாக, உஷ்ணத்தில் தான் ஒளி பிறக்கிறது என்று நினைத்திருந்தேன். இங்கேயோ மையிருட்டையும் ஒளிப்பிரளயமாய்க் காட்டும் இருட்டான இருட்டு.

இதற்கு அந்தப் புத்தகத்திலேயே விளக்கம் இருந்தது. அளவுக்கு மீறிய உஷ்ணம் ஒரு அளவில் இருக்க வேண்டுமாம். இதே மாதிரிதான் இந்த மக்களும். இவர்கள் கோழைகள்

அல்ல, பெண்டு பிள்ளைகளை மனமொப்பிக் கொடுப்பவர்கள் அல்ல. இவர்களுக்கும் தன்மானம் இருக்கிறது. காலங்காலமாக, கற்காலத்தில் இருப்பதுபோல் வாழ்ந்து வாழ்ந்து, வாழ்க்கை என்பது தங்களைப் பொறுத்த அளவில் இப்படித்தான் என்று நினைத்துப் பழகி விட்டார்கள். புலி என்றால், மானை அடிக்கும் என்பது எப்படி தவிர்க்க முடியாத இயற்கை விதியோ, அப்படி, நாகரிக மனிதன், இவர்களுக்குக் கொடுத்த செயற்கை விதியை, இயல்பாக மட்டுமல்ல, *இயற்கையாகவும்* எடுத்துக் கொண்டார்கள்.

நான், இவர்களிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன் 'மலையாளி' (அதாவது ஜாஹிர்தார்கள்) போன பிறகு, தேனும பாலும் ஓடுவதாகத்தான் சொன்னார்கள். அதிகாரிகளும் சரி, என்னைப்போல் அங்கு போகிறவர்களும் சரி, தேவ தூதர்கள் என்றும், *மிலேச்சர்காளான தங்களை வாழ்விக்க* வந்த மகான்கள் என்றும் நினைக்கிறார்களாம் மலைமக்கள். தலைவர்களின் முகங்களையும் பேச்சையும் ஊடுருவிப் பார்த்தபோது, 'அட *சரிதான்* வந்தவன் பத்தாதுன்னு நீ வேறயா... ஆள விடுய்யா' என்ற சொல்லாத சொல் ஒலிப்பது போல் கேட்டது.

இரண்டு நண்பர்களைக் கூட்டிக் கொண்டு, ஒரு கிராமத்திற்குப் போனேன். அங்கே, தினம் மூன்றுபடி வரகுக் கூலிக்கு, 'நிலத்தைக் கொத்த' வந்திருந்த சேலம் மாவட்ட நாடோடிப் பெண்களைப் பார்த்தேன். அவர்கள், ஏதோ கும்மியடித்துப் பாடிக் கொண்டிருந்தார்கள். நானும் என் பங்குக்குத் தாளம் போட்டேன். (இங்கே ஒன்றைக் குறிப்பிட வேண்டும். நான், அந்தக் கிராமத்திற்குப் போன போது, அவர்களைப் பற்றி கதை எழுதும் நோக்கம் எதுவுமே எனக்குக் கிடையாது. அவர்களின் வாழ்க்கை முறையை அறிய வேண்டும். என்ற 'டாக்டரேட்' மனபான்மை கூட கிடையாது. புரட்சித் தீயைப் பற்றவைப்பதும் நோக்கமல்ல)

**என் கிராமத்தின் நகல்**

இந்த மக்களின் கலைப் போக்கையும், வீட்டையும், வேலையின் இயல்பையும் பார்த்தபோது, சின்ன வயதில் நான் வாழ்ந்த என் வீட்டிற்கும், நான் உண்ட உணவிற்கும், இவர்களின் இருப்பிடங்களுக்கும், எந்த வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் 'சோளக் கஞ்சி' குடித்தேன். இவர்கள் 'கேழ்வரகுக் கூழ்' நான் 'வில்லுப்பாட்டு' பாடியிருக்கிறேன். இவர்கள் கரிராமன் பாட்டு. ஆக, கிராமங்களில் வாழும் எளியவர்களை இங்கே கொண்டு வந்து நிறுத்தினாலோ, அல்லது இவர்களை அங்கே கொண்டு நிறுத்தினாலோ, வாழும் முறையிலும், கலாச்சார ரீதியிலும் வேறுபாடு காண முடியாது. எப்படியோ,

என்னிடம் அவர்களும் தங்களைக் கண்டிருக்கக் கூடும். சரளமாகப் பேசத் துவங்கினார்கள்.

ஜாஹிர்தார் காலத்தில், பல்வேறு வகையான வரிகளைச் செலுத்தியிருக்கிறார்கள். கல்யாணமாகாத பையனுக்கு 'காவாலி வரி', 'அரிவாள் வரி', விதவைப் பெண்களுக்கு 'வாழா வெட்டி' வரிகளோடு, ஜாஹிர்தாரர்களுக்கும், சமவெளிக்காரர்களுக்கும் 'பெண் வரி'யையும் கொடுத்திருக்கிறார்களாம். கூச்சத்தோடுதான் சொன்னார்கள். ஆனாலும், அப்போது, இஷ்டப்பட்ட இடத்தைக் கொத்தி நிலமாக்க முடிந்தது. பொதுவாக, காட்டு மரங்களுக்குத் தீயிட்டு அவற்றின் சாம்பலைக் காட்டில் தூவி உழுது, வரகு பயிரிடுவார்கள். இதற்கு 'புனக்காடு' என்று பெயர். இந்த நிலத்தில், இரண்டு போகத்திற்குப் பிறகு பயிரிட முடியாது. அப்படிப் பயிரிட்டால், விளையும் வரகு, போதையைக் கொடுக்குமாம். ஆகையால், நிலம் விட்டு நிலம் தாவும் வழக்கத்தை வைத்திருந்தார்கள். இப்போது, அரசாங்க அதிகாரிகள், புனக்காடு உருவாவதைத் தடுக்கிறார்கள். ஆக, நிலம் இல்லை. காட்டுச் சொத்துக்களான முந்திரி, தேக்கு முதலியவை, காண்டிராக்டர்களுக்கு போகின்றன. இவர்கள் என்ன செய்வார்கள்? இதுதான் இவர்கள் பிரச்சினை. இது அரசாங்கத்தின் பிரச்சினையாக மாறவில்லை. இதுவே மொத்தப் பிரச்சினை 'சரி நம்ம தலையெழுத்து' என்று இவர்கள், அரசிற்கு பிரச்சினையாகாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம், ஏற்கனவே சொன்னது போன்ற சூரியக் கறுப்பு...

## ஆளில்லாத பிரசவம்

இந்தக் கறுப்பு போக வேண்டுமானால், இவர்களை உஷ்ணப் படுத்த வேண்டியதில்லை. இவர்களின் உஷ்ணத்தைக் குறைக்க வேண்டும். இதற்கான அறிகுறிகள், பல கிராமங்களில் தோன்றத் துவங்கியுள்ளன. ஜாஹிர் காலத்தில் தங்களுக்குள்ளே வாழ்ந்த மூப்பன் போன்ற உள்ளூர் அலுவலர்கள் நடந்து கொண்ட விதத்தை வெறுப்போடு பேசி, உஷ்ணத்தைக் தாக்கும் இவர்கள், விரைவில் ஒளி சிந்தத் துவங்குவார்கள். ஆனால், இவர்களுக்குள் ஒரு தலைமை இன்னும் உருவாகவில்லை. உருவாகக்கூடிய பிரசவம், உள்ளது. பிரசவம் என்றதும் இன்னொன்று நினைவுக்கு வருகிறது. சமீபகாலம்வரை, இந்த மக்கள் பிரசவநிலையில் உள்ள பெண்களை, தனியாக ஒரு குடிலில் ஆளுதவி இல்லாமல் விட்டு விடுவார்களாம். அவள் பெற்று வந்தால் உண்டு. இல்லையானால், குடும்ப நலத்திட்டம், வாஸெக்டமி டூபெக்டமி இல்லாமல் செயல்படுவதாக அர்த்தம்.

இப்படி, அனர்த்த வாழ்வு நடத்தும் இந்த மக்கள், என் மனத்தைப் பெரிதும் பாதித்த தருணத்தில் ஒரு பிரபல பத்திரிகை, என்னிடம் ஒரு சிறு தொடர்கதை கேட்டது. உடனே வேண்டும் என்றார்கள். இந்த மக்களையே மையமாக வைத்து எழுதியனுப்பினேன். இதற்கிடையே அந்த 'பிரபல' பத்திரிகை, செக்ஸ் எழுத்தாளர்களுக்கு, ஒரு மரியாதை. எனக்கு இன்னொரு மரியாதை வைத்திருப்பதாக அறிந்து, அந்த பத்திரிகை ஆசிரியருக்கு அதைக் கண்டித்து, கடிதம் எழுதிப்போட்டேன். இரண்டு மாதம் கழிந்து கதை திரும்பி வந்தது, 'கனமான' கதையாம். பிரசுரிக்க இயலாதாம். தினமணிக்கதிரின் ஆசிரியரான திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் என்னிடம், தனது உதவி ஆசிரியரை அனுப்பி தொடர்கதை கேட்டார். இந்தக் கதையைக் கொடுத்தேன். பிரசுரமாயிற்று.

'கதையே' இல்லாமல், கல்வராயன் மக்களின் வாழ்க்கை முறையை மையமாக வைத்து விளங்கும் இந்த திரில் இல்லாத கதையை பிரசுரித்த நா.பா. வுக்கு, நான் நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும். ஆனால், இந்தக் கதைக்கு வரையப்பட்ட சித்திரங்கள், பிரச்சினையையே கொச்சைப்படுத்தியதோடு, அசிங்கப்படுத்திவிட்டன. மலைப்பெண்கள் சாக்கெட் போடமாட்டார்கள் என்று, யார் சொன்னார்களோ. பிரதான பெண் கதாபாத்திரத்தை 'ஏ' பெண்ணாக வரைந்தது மட்டுமல்ல, ஒரு ஆடவனை, கையுங் காலுமாய் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் நிகழ்ச்சியை வரையாமல், கட்டப்பட்டிருக்கும் தம்பியைப் பார்க்க வரும் வெள்ளச்சியை ஒருவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதை செக்ஸியாக வரைந்து, எந்த வியாபாரத்திற்கு மனச்சாட்சி இருந்தாலும் சதை வியாபாரத்திற்கு இருந்தாலும், கதை வியாபாரத்திற்கு கிடையாது என்பதை நிரூபித்து விட்டார்கள். எழுதியது பிரசுரானபோது ஏண்டா எழுதினோம் என்ற குறை, இந்த கட்டுரை எழுதும் இந்தத் தருணத்தில்தான் ஓரளவு போயிருக்கிறது.

இந்தத் தொடர்கதை, அரசு யந்திரத்தின் அசமந்தப் போக்கை, பெரிதும் சித்தரிக்கிறது. ஆனாலும் இதுமாவட்ட மட்டத்திலோ, நமது செகரட்டேரியட் மட்டத்திலோ, யாருடைய மனச்சாட்சியையும் உசுப்பவில்லை. சம்பந்தப்பட்ட, இலாகா நண்பர்களிடம் சொன்னால் 'அப்படியா... எப்போ எழுதினிங்க' என்று என்னையே, சினிமா எழுத்தாளர் மாதிரி கதை சொல்லச் சொல்கிறார்கள். இவ்வளவுக்கும் இத்தகைய செய்திகளைச் சேகரிக்க ஒரு தனி இலாகா வேறு இருக்கிறது. இந்த மக்களின் பிரச்னைகளைப் பற்றித் தப்பாகவோ அல்லது சரியாகவோ எழுதப்பட்ட ஒரு படைப்பைப் பற்றித் தெரியாதவர்கள் இந்த மக்களைப் பற்றி எப்போது தெரியப் போகிறார்கள்?

இந்தப் பகுதிக்கு, செக்ஸ் எழுத்தாளர்கள் போயிருந்தால் வண்டி வண்டியாக எழுதலாம். சின்னப் பையன்களுக்கு, பெரிய பெண்களைக் கட்டி வைப்பது, அங்கே வழக்கம். ஆனால், இப்போது ஓரளவு விழிப்புற்று வரும் அந்த சமூகத்தில், இப்போது, இது பல வெளிப்படையான பிரச்சினைகளையும், எதிர்ப்புக்களையும் தோற்றுவித்திருக்கிறது. ஆரோக்கியமான அறிகுறிதான். ஆனாலும், நமது பிரபல எழுத்தாளர்களுக்கு, இந்த பாவப்பட்ட மக்கள், சரியான அறுவடை. இதை வைத்து, பிரபல பத்திரிகைகளில் ஆண்டு முழுக்க கதை எழுதி, மலை மக்களின் 'அடிமனவருடலை' வெளிக் கொண்டு வந்தவர்கள் என்றுகூட பாராட்டுகள் வாங்கலாம்.

என்னால் அப்படி எழுத முடியாது. எனக்கோ அல்லது இளவேனிலுக்கோ, எதை எழுதுகிறோம் என்பதோடு, எதை எழுதாமல் விடுகிறோம் என்பதும் முக்கியம். இதுதான் நானறிந்த எதார்த்தம். இதில் இன்னொரு எதார்த்தம் அடிப்படுகிறது. அதுதான், பத்திரிகைகளுக்கு ஏற்றபடி, இவர்களை கிளு கிளுப்பாக எழுதி, குளு குளுப்பான 'புகழை' வாங்குவது.

எந்த எதார்த்தம் முக்கியம் என்பதே கேள்வி.

மக்களின் எதார்த்தத்திலும் எதார்த்தமாக இருக்க வேண்டிய அம்சங்களா? அல்லது அடிப்படைப் பிரச்னையையே திசைதிருப்பும், 'மேனாமினுக்கி' எதார்த்தங்களா?

எதார்த்தம் பல்முனைப்பட்டது. எனது எதார்த்தம் - நமது எதார்த்தம் பிரச்சினையை திசை திருப்பாத எதார்த்தம். உள்ளதை உள்ளபடி எழுதுவது எதார்த்தமல்ல. உள்ளபடி இருப்பதில் உள்ளதைக் கண்டு எழுதுவதே எதார்த்தம். இந்த எதார்த்தத்திற்கு ஒரு இலக்கிய உதாரணமாக 'உயரத்தின் தாழ்வுகள்' இருப்பதாக நினைக்கிறேன். 'கார்க்கியில்' இதுபற்றி ஒரு கட்டுரை வருவதே, இந்தக் கதை, வீணடிக்கப்பட்ட கலாச்சார சூழலில் தோன்றினாலும், எதிர்காலத்தில் இது மாதிரியான பிற படைப்புக்களுக்கு அடித்தளமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

நம்புவது என் உரிமை. அது சரியா தவறா என்று சுட்டிக் காட்ட வேண்டியது, உங்கள் கடமை.

கவிஞர் இளவேனிலை ஆசிரியராக
கொண்டு கார்க்கி இதழ் - 1981.

# ஏட்டுச்சுரைக்காய் தீர்ப்புகள்

ஊர்ப்பஞ்சாயத்து கட்டப்பஞ்சாயத்து ஆகியவை வலுக்கட்டாயமான - சில சமயம் அநீதியான தீர்ப்புகளை வழங்கும் போது, பெரும்பாலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது, நீதிமன்றத் தீர்ப்புகளை. இவ்வளவுக்கும் நீதிமன்றங்கள் தர்மசபைகள் அல்ல. கிடைக்கின்ற சாட்சியங்களை வைத்தே நீதி வழங்கப்படுவதால் அந்த நீதி அறவெளிப்பாடாக இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

ஆனாலும் பல ஏழைகள், தங்களால் தவிர்க்க முடியாத காரணங்களாலேயே நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். அந்த மன்றங்களில் நீதி கிடைக்கும் என்றும் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை பெரும்பாலும் பொய்ப்பதும் இல்லை. என்றாலும் தன் சொல்லைக் கேட்க வேண்டிய வழக்கறிஞரிடம் கைகட்டி வாய் புதைத்து நீதிமன்றங்களில் வழக்கைத் தொடுத்து வாய்தா வாய்தா என்று வருடக்கணக்கில் நடந்து, இருக்கிற சொத்துக்களையும் அடிமாட்டு விலைக்கு விற்று இறுதியில் அந்த நீதிமன்றத்தில்

**ஏழை-எளியவர்களுக்கான சாதகமான நீதிமன்ற தீர்ப்புகள் பெரும்பாலும் நீர்த்துப் போகின்றன அல்லது தீர்த்துக் கட்டப் படுகின்றன.**

**இந்த அவலத்தைப் போக்க ஒரே வழி, உச்ச-உயர்நீதி மன்றங்களின் நேரடி மேற் பார்வையில் சுயாட்சி அதிகாரம் கொண்ட, கண்காணிப்பு ஆணையம் ஒன்றை, பல கிளைகளோடு பல்கிப் பரவச் செய்யவேண்டும். இது ஒன்றே ஏழைகளுக்கான விமோச்சனம்.**

இருந்து, தான் எதிர்பார்த்த நீதியை ஒரு ஏழைக் குடிமகன் பெற்றுவிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆண்டுக்கணக்காக பட்ட இன்னல்களும், ஏளனங்களும் அந்த பத்து நிமிட தீர்ப்பில் காணாமல் போய் விடுகின்றன. வேர்வை சிந்தி உழைத்த நிலத்தில் நல்ல விளைச்சல் ஏற்படும்போது, அந்த உழைப்பின் சுமையே ஒரு சுவையாய் மாறுவதுபோல் நீதி கிடைத்த ஏழை மகிழ்ந்து போகிறான். ஆனாலும், மகசூலை கணக்கு பார்க்கும்போது எப்படி. தார்க்கம்பு கூட மிஞ்சாமல் போகிறதோ அப்படி இந்த நீதியின் கணக்கை பார்க்கும்போது 'உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணா' என்கிற நிலைமைதான் ஏற்படுகிறது. காரணம் நீதிமன்றம் தக்க நீதியை வழங்கினாலும், அந்த நீதியை செயல்படுத்தும் பொறுப்பு அரசு அமைப்புகளிடம் அல்லது பொது நிறுவனங்களிடமே உள்ளன. இவை ஆரம்பம் முதலே இந்த ஏழைக்கு எதிராக இருப்பதால் இவனுக்குக் கிடைக்கும் நல்ல தீர்ப்பும் கிடப்பில் போடப்பட்டு விடுகிறது.

## பெரும்புள்ளிகளின் கூட்டணி

எடுத்துக்காட்டாக, கிராமங்களில் உள்ள பெரும்புள்ளிகளிடம், ஆள்பலம், பணபலம், அதிகாரபலம் ஆகிய முப்பெரும் பலங்கள் உள்ளன. இன்றைய சூழலில் அரசியல் அதிகாரமும் இவர்களிடமே உள்ளன. எந்தக் கட்சியில் இருந்தாலும் சுயநலம் என்று வரும்போது இவர்கள் ஒன்று சேர்ந்து கொள்வார்கள். இவர்களோடு அந்தந்தப் பகுதி தாசில்தார், பத்திரப் பதிவாளர், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் கூட்டணி வைத்துக் கொள்வார்கள். இந்தப் பின்னணியில் ஒரு பெரும்புள்ளியின் வயலுக்கு இடையே சிதறு தேங்காயாக ஒரு துண்டு துக்கடா நிலம் ஒரு ஏழைக்குச் சொந்தமாக இருக்கும். அந்த ஏழையின் மூதாதையர்கள் வைத்திருந்ததில், எஞ்சிய இந்த நிலம் அவனுக்கு விலைமதிப்பற்றது. ஆழ்ந்த பாசத்திற்குரியது. இதை விற்பதற்கு, மனதாலும், அவனால் நினைக்கமுடியாது. ஆனாலும் பெரும்புள்ளிக்கு, இந்த நிலம் கண்ணை உறுத்தும், அந்த நிலத்தைத் தரும்படி அன்போடு கேட்பார். அப்புறம் அடாவடியாய்க் கேட்பார். இந்த ஏழைக்கோ, அந்த நிலம் தாய்க்குச் சமம் என்பதால் தாயைப் பழித்தவனைப் பார்ப்பது போலவே அந்தப் புள்ளியைப் பார்ப்பான். ஆனாலும் ஏழையின் கோபம் செல்லத்தக்கதல்ல. இதனால்தான் செல்லாக்கோபம் பொறுமையின் அடையாளம் என்கிற பழமொழியே வந்தது. எப்படியோ கொஞ்சங்கொஞ்சமாக வரப்பு வெட்டப்பட்டு, இந்த நிலம் ஒரு புள்ளிகூட இல்லாமல் பெரும்புள்ளியிடம் போய்விடும்.

இந்த ஏழையோ, தன்னைத்தவிர எல்லாவற்றையும் விற்று நீதிமன்றம் போவான். அந்த மன்றமும், அந்த நிலத்தை பெரும்புள்ளி

திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கும். ஆனாலும் இந்தத் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டியது வருவாய்த் துறை அதிகாரிகளின் பொறுப்பு. இவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது காவல்துறையினரின் பொறுப்பு. இந்த இரு துறைகளும் பெரும்புள்ளியின் பைக்குள் அடக்கம். சாக்குப் போக்குகள் சகலமும் சொல்லி தீர்ப்பு கிடப்பில் போடப்படும். அந்த ஏழைக்காக வழங்கப்பட்ட தீர்ப்பு ஊமைகண்ட கனவாகிவிடும். இந்த தீர்ப்பை அமுல் செய்யவில்லை என்று மீண்டும் நீதிமன்றம் செல்ல வேண்டுமானால், கோர்ட் அவமதிப்பு வழக்கு என்று பெரும்புள்ளியின் மீதும், அரசு அலுவலர்கள் மீதும் அதே ஏழை வழக்குப் போட வேண்டும். அதனால் அந்த ஏழைக்கு பகை இரட்டிப்பாகுமே தவிர, பலன் இருக்காது. அப்படியே இருந்தாலும், அந்த வெற்றி தோல்விக்குழியில் அடக்கமாகிவிடும். இதை வைத்துத்தான் சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழலாம் என்ற பழமொழி ஏற்பட்டிருக்க வேண்டும்.

### மண்ணாகிப்போன தீர்ப்பு

ஆள்பலமோ, பணபலமோ இல்லாத ஒரு ஏழைக்குக் கிடைக்கும் நீதியின் லட்சணம் இதுதான். பலசமயம் நடுத்தர மக்களும் பாதிக்கப்படுவதுண்டு. எனக்குத் தெரிந்த வெளி மாநிலத்தில் பணியாற்றிய தமிழர் ஒருவர், வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி, சென்னை நகரில் வீட்டுமனை வாங்கிப் போட்டார். பதவியிலி ருந்து ஓய்வுபெற்று திரும்பி வந்து பார்த்தால், அந்த மனையில், ஒரு தாதா சொகுசு பங்களா ஒன்றை கட்டியிருந்தார். இவர், காவல்துறையினரிடம் முறையிட்டார். காவல்துறையோ, ஒரு விசித்திரமான சட்டத்தை அவர் மீது ஒரு ஆயுதமாக எறிந்து தாதாவுக்கு கேடயமாக நின்றது. அதாவது,

### சட்டவிதியும்-தலைவிதியும்

ஒரு உடமை யாருடைய பொறுப்பில் இருக்கிறதோ அந்த உடைமைக்குச் சேதம் வராமல் இருக்க, சம்பந்தப்பட்டவருக்கு காவல்துறை, பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பது சட்ட விதியாம். தலைவிதியைக்கூட மாற்றலாம். சட்டவிதியை மாற்ற முடியுமா? இந்த விவகாரத்தில் அந்த அப்பாவி மனிதர் வாங்கிப்போட்ட நிலம், அந்த தாதாவின் பொறுப்பில் பங்களா முளைத்த இடமாகிவிட்டது. ஆகையால் காவல்துறையினர் அந்த வீட்டுக்கும், வீட்டுக்காரனுக்கும் பாதுகாப்பு கொடுப்போம் என்றார்கள். மனையை வாங்கிப் போட்டவர் வம்புதும்பு செய்தால் கைது செய்யப்படுவார் என்று எச்சரித்தார்கள். இந்த அப்பாவியோ நீதிமன்றத்திற்குப் போனார். ஓய்வு கால இறுதியில் கொடுக்கப்படும் பணத்தை

வழக்கில் போட்டு, மனையைத் திரும்பிப் பெறுவதற்கான தீர்ப்பை பெற்றுவிட்டார். ஆனால், அந்த தாதாவோ, நிதியில் தீர்த்துவிட்டான். இதனால் இந்தத் தீர்ப்பை செயலாற்ற வேண்டிய அரசு இயந்திரத்திற்கு காதுகள் செவிடாகிவிட்டது. கண் குருடாகிவிட்டது. மீண்டும் கோர்ட் அவமதிப்பு வழக்குத்தான் போட வேண்டும். கையிலோ பணமில்லை. அந்தப் பாவப்பட்ட மனிதரோ மூன்று பிடி மண் எடுத்து தன் மனையில் கட்டிய வீட்டுக்கு முன்னால் வீசியடித்துவிட்டு, எந்த மாநிலத்தில் கவுரமாகவும் சுயமரியாதையாகவும் வேலை பார்த்தாரோ, அந்த மாநிலத்திற்கு சொத்திழந்து சுயமிழந்து விரக்தியோடு ஓடிவிட்டார்.

என் கண்ணில்பட்ட இன்னொரு நிகழ்ச்சி. நான் வாழும் பகுதியில் சுமார் நாற்பது கிரவுண்டு வீட்டுமனை, நீதிமன்ற தாவாவில் இப்போதும் உள்ளது. இந்த மனைகளில் எவரும் வீடுகட்டலாகாது என்று உயர்நீதிமன்றம் பத்தாண்டுகளுக்கு முன்பே இடைக்காலத் தடை விதித்துள்ளது. இந்தத் தடைக்கு இன்னும் உயிர் இருப்பதாகக் கேள்வி. ஆனாலும் அத்தனை வீட்டு மனைகளிலும், பிளாட்டுகளிலும் சொகுசுப் பங்களாக்கள் தோன்றிவிட்டன. இன்றளவும், நீதிமன்றத்தைப் பொறுத்த அளவில் இந்த நாற்பது கிரவுண்டும் காலிமனைதான். நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான இத்தகைய சூட்சமங்கள் எப்படி நடைபெறுகிறது என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

## இரட்டை வேடங்கள்

பல ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட தீர்ப்புகள் செயல்படுத்தப்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டி, பாதிக்கப்பட்டவர்கள், மீண்டும் நீதிமன்றத்திற்குப் போன செய்திகள் பத்திரிகைகளில் விலாவாரியாக வந்துள்ளன. நாமும் படிக்கத்தான் செய்கிறோம். இனிமேலும் படிக்கத்தான் போகிறோம். ஆனாலும் நீதிமன்ற தீர்ப்புகள் செல்லாக் காசாய் ஆக்கப்படுவது குறித்து நம்முள் ஒரு தார்மீக கோபம் ஏற்படுவதில்லை. அதேநேரம் தீர்ப்பு, ஏழைகளுக்கு எதிராகவோ அல்லது அரசுக்கு ஆதரவாகவோ இருந்தால், அது உடனடியாகவும் தடாலடியாகவும் செயல்படுத்தப்படுகிறது.

ஆகமொத்தத்தில் நீண்ட நெடிய ஆண்டுகளை உள்ளடக்கிய கொடூரமான செலவு பிடித்த வாய்தா காலத்திற்குப் பிறகு, வாராது வந்த மாமணிபோல் நியாயமான தீர்ப்பு கிடைத்தாலும் அந்த தீர்ப்புகூட, ஏழை என்றால் எள்ளி நகையாடுகிறது. இதை செயலாக்க வேண்டிய அரசு இயந்திரம் வடமொழி மந்திரம் போல் ஏழைக்குப் புரியாத சட்டச்சரத்துக்களை சாக்குப் போக்காகச் சொல்லி,

காலத்தைத் தாழ்த்தி நீதியையும் தாழ்த்தி விடுகிறது. தாமதப்பட்ட நீதி - மறுக்கப்பட்ட நீதி என்ற புகழ்மிக்க சட்டப்பழமொழியை நடைமுறையில் கண்டாலும் ஒருத்தர் தாமதப்பட்ட நீதியைப் பெறுகிறார். அப்படியும் அந்த நீதி மறுக்கப்படுமானால், அதை எந்த மொழியால் அழைப்பது?

ஆக, ஏட்டுச் சுரைக்காய் தீர்ப்புகளை, எப்படி அரங்கேற வைப்பது என்பதே சமூக நீதியில் அக்கறை கொண்ட அத்தனை பேரும் சிந்தித்து பரிகார நடவடிக்கைகளை எடுத்துக்கூற வேண்டியது கட்டாயமாகிறது. காரணம் இதில் பெரும்பாலும் ஏழைகள், குறிப்பாக பெண்களே பாதிக்கப்படுகிறார்கள். இறந்து போன கணவரின் வாரிசான இளம் விதவைக்கு சொத்துக்கள் கொடுக்கப்படாமல் அவள் விரட்டியடிக்கப்படுகிறாள். நீதிமன்றத்தில் இவளுக்கு முன்கதவு திறக்கப்பட்டு, இவளது மாமியார், மாமனார், மச்சான் வகையறாக்களுக்கு பின்கதவு திறக்கப்படுகிறது.

### கண்காணிப்பு ஆணையம்

எனவே, நீதிமன்ற தீர்ப்புகளைச் செயல்படுத்துவதற்கு மாநில அளவில் உயர்நீதிமன்றத்தின் நேரடி மேற்பார்வையில் ஒரு கண்காணிப்பு ஆணையம் உருவாக்கப்பட வேண்டும். இந்த ஆணையம் ஒப்புக்கு ஐந்தாறு பேரை மட்டும் நாற்காலியில் அமர்த்தாமல், மாநிலம் முழுவதும் ஆலமரமாய், வேர் விட்டும், விழுதுகள் விட்டும் பல்கிப் பரவி இருக்கவேண்டும். ஒவ்வொரு நீதிமன்றத்தின் தீர்ப்பும், செயல்படுத்தப்படுகிறதா என்று இந்த ஆணையமே கண்காணிக்கவேண்டும். இதுகுறித்து ஒவ்வொரு தீரப்பின் செயலாக்கம் பற்றி சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். கைக்கெட்டினாலும் வாய்க்கு எட்டாத நிலைபோல நீதி கிடைத்தாலும் அதன் பலனை அனுபவிக்க முடியாமல் தவிப்பவர்களின் முறையீடுகளுக்காக காத்திருக்காமல், இந்த ஆணையமே தன்னிச்சையாக ஒவ்வொரு தீர்ப்பையும் அது செயல்படுகிறதா என்று கண்காணிக்க வேண்டும். இதற்கு காலவரம்பும் நிர்ணயிக்க வேண்டும். நீதியின் மறுபக்கமான தீர்ப்பை நிலைகுலைய வைப்பவர்கள் மீது சிறைத்தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் விதிக்க வேண்டும். இத்தகைய அமைப்பிலும் ஊழலும் பாரபட்சமும் இருக்கலாம். ஆனாலும், இப்படிப்பட்ட அமைப்பு ஒன்று இருக்கிறது என்கிற எண்ணமே, நீதிமன்ற தீர்ப்பிற்கு ஒரு மரியாதையைக் கொடுக்கும்.

ஒரு தீர்ப்புக்குப் முன்னால், வாய்தாக்கள் மாதங்களாகி ஆண்டுகளாகின்றன. இந்த வாய்தாவே தண்டனையைவிட கொடூரமானது. வாதிகளும், பிரதிவாதிகளும் பல்வேறு இடங்களில்

இருந்து பல்வேறு சாட்சியங்களைக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் விசாரணை குறுக்கு விசாரணை என்று செய்யப்படுகிறார்கள். வழக்கின் ஆவணங்கள் அலசப்படுகின்றன. சட்ட நுணுக்கங்கள் இருதரப்பு வழக்கறிஞர்களாலும் பிரகாசப்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு நீதிபதியும் இந்த வாதப் பிரதிவாத தகவல்களையும், சாட்சியங்களையும் ஆவணங்களையும் தராசு முனையில் ஆய்ந்து வேண்டுதல் - வேண்டாமை இல்லாத நீதித்தன்மையோடு, ஒவ்வொரு வார்த்தையையும் எண்ணி எடைபோட்டு, தீர்ப்பு வழங்குகிறார். ஆனால், இந்த தீர்ப்புகளோ அரசு கோப்புகளில் சமாதியாகி விடுகின்றன. ஆயிரம் ரூபாய்க்கு குதிரை வாங்கி, அதை தக்க வைத்துக் கொள்வதற்கு ஐந்து ரூபாய்க்கு கயிறு வாங்காத கதைதான் இந்த நீதிக்கதையும்.

**மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு.......**

பெரிய பெரிய வழக்குகளில் தீர்ப்புகள் உடனடியாய் செயல்படுவதற்காக பத்திரிகை கண்காணிப்பும், பொது நிறுவனங்களின் முன்னெச்சரிக்கையும் உதவுகின்றன. ஆனால், பத்திரிகைகளில் வராத ஏழை-எளியவர்களின் தீர்ப்புகளோ பெரும்பாலும் நீர்த்துப் போகின்றன அல்லது தீர்த்துக் கட்டப்படுகின்றன. இந்த அவலத்தைப் போக்க ஒரே வழி, சுயாட்சி அதிகாரம் கொண்ட, நீதிமன்றத் தீர்ப்புகளுக்கான கண்காணிப்பு ஆணையம் ஒன்றை பல கிளைகளோடு உருவாக்குவதுதான்.

நாடாளுமன்றத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நமது தமிழக உறுப்பினர்கள், இந்தப் பிரச்சினை குறித்து சிந்திக்க வேண்டும். புதிய மக்களவையும் இத்தகைய ஆணையத்திற்கு வடிவம் கொடுக்க முயற்சிக்க வேண்டும். சமூக நீதியில் அக்கறை கொண்ட நமது சட்டப்பேரவை உறுப்பினர்களும் வரும் கூட்டத் தொடரில் இந்த ஆணைய உருவாக்கம் குறித்து மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். இதனால் எண்ணற்ற ஏழைகளின் ஊமை அழுகை, ஆனந்தப்பள்ளாக ஒலிக்கும். இந்த வரலாற்றுக் கடமையை மாண்புமிகு மக்கள் பிரதிநிதிகள் தட்டிக்கழிக்க மாட்டார்கள் என்று நம்புவோமாக.

நவசக்தி வார இதழ் - 1999.

# வேரில் பழுத்த பலா

இலக்கியத்திலும், வானொலியிலும், டி.வி.யிலும் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு செய்தித் துறைகளிலும் எழுத்தாளர் சு. சமுத்திரத்திற்கு ஏராளமான அனுபவங்கள். இங்கே தமது வாழ்க்கையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்.

('வாழ்க்கை ஒரு சமுத்திரம்' என்ற தலைப்பில் குமுதம் வெளியிட்ட கட்டுரைக்கான கருத்து)

1962ஆம் ஆண்டு பி.ஏ. தேர்வில் பிரமாதமாக வரலாம் என்று நினைத்து இருந்தேன் ஆனால் ஆங்கிலத்தில் 'அவுட்' இதுவரை, முதல் நான்கு மாணவர்களில் ஒருவனாக வந்த எனக்குப் பெரிய அதிர்ச்சி. இளமையிலேயே பெற்றோரை இழந்த என்னை வளர்த்துப் படிக்க வைத்த என் சித்தப்பா வுக்கும், சித்திக்கும் என் மீது பயங்கரமான கோபம். அரசியல் மேடைகளில் பேசியதால்தான், நான் 'அவுட்டாகி' விட்டேன் என்று கருதி, என்னை 'கெட் அவுட்' என்று சொல்லக் காத்திருந்தார் என் சித்தப்பா. சென்னையில் அப்போது கோணி வியாபாரம் செய்து வந்தார். பி.ஏ.வில் தோற்றுப் போனதால் இனிமேல் உயிரோடு இருக்கப் போவதில்லை என்று நான்

**தாழ்த்தப்பட்ட- பிற்படுத்தப் பட்ட, முதல் தலைமுறை படித்த கிராமிய இளைஞர்கள், தூசி படிந்து உள்ள கண்ணாடிகள். இந்தக் கண்ணாடிகளை துடைத்தால், அவை காலம் எல்லாம் பள பளக்கும். ஆனால், பலர் இதனை உடைக்கத் தான் பார்ப்பார்கள்.**

**இந்த உடைப்பை முறியடிப்பதற்கு, நேர்மை, விசுவாசம், திறமை, கண்டிப்பு, கனிவு ஆகியவையே கேடயங்கள் என்பது எனது முப்பதாண்டு கால அலுவலக அனுபவம்.**

சூளுரைத்தேன். சித்தப்பா-சித்தி பயந்து விட்டார்கள். ஒரே ராஜமரியாதை-நான்கு நாட்களுக்கு. நான் சாப்பிடுகிற வேகத்தைப் பார்த்த சித்தப்பா 'இவன் சாப்பிடப் பிறந்தவனே தவிர, சாகப் பிறந்தவன் அல்ல' என்பதைப் புரிந்து கொண்டு திட்டத் துவங்கினார். ஒருநாள், எனக்கு வெறுப்பும் வந்துவிட்டது. "வேலையில் சேராமல் இந்த வீட்டுல நுழைய மாட்டேன்," என்று சொல்லிவிட்டு, இரண்டு பேண்ட் சட்டைகளை ஒரு கைப் பையில் வைத்துக் கொண்டு, வெளியேறி விட்டேன்.

## கையில் ஐந்து ரூபாய்

எங்கே போவது என்று தெரியவில்லை. கையில் ஐந்து ரூபாய்தான் இருந்தது. நேராக காஞ்சிபுரம் போனேன். அப்போது காங்கிரஸ் பேச்சாளராகவும், லாரி டிரைவராகவும் இருந்த என் நண்பர் வடமலை ராஜ் அங்கே இல்லை. திடீரென்று ஒரு எண்ணம். கல்லூரி மாணவனாக இருந்தபோது, அச்சரப்பாக்கம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு. வெங்கட சுப்பா ரெட்டியாரை ஆதரித்து மேடைகளில் பேசியிருந்தேன். அவருடைய மருமகன் திரு. ஸ்ரீராமுலு ரெட்டியார் (எழுத்தாளர் சரோஜினியின் கணவர்) அப்போது சொற்பொழிவிற்காக பணம் நீட்டினார். நான், அதை வாங்க மறுத்துவிட்டேன். இதனால், அவருக்கு என் மீது அளவு கடந்த பற்றுதல். அப்போது அவர் அச்சரப்பாக்கம் பஞ்சாயத்து யூனியன் தலைவர். அவரிடமே வேலை கேட்கலாமே?

## கூடவே ஒரு போலீஸ்

காஞ்சிபுரத்தில் இருந்து, மதுராந்தகம் கூட்டு ரோட்டில் இறங்கி, வேடந்தாங்கலைப் பார்த்து நடந்தேன். ஒரு போலீஸ்காரரும் என்னுடன் வந்தார். ஒரு கிலோமீட்டர் வரைக்கும் 'நீங்க' போட்டார். இரண்டாவது கிலோமீட்டரில் 'அப்பா' போட்டார். மூன்றாவது கிலோமீட்டரில் நான் கேடியாக இருப்பேன் என்று 'டா' போட்டார். நல்ல வேளையாக வேடந்தாங்கல் வந்துவிட்டது. இல்லையானால், நான்காவது கிலோமீட்டரில், அவர் என்னை அடிக்கவும் அடித்து இருப்பார்.

ஸ்ரீராமுலு ரெட்டியார் என்னைப் பார்த்ததும் எழுந்து நின்று வரவேற்றார். எதிரே உள்ள நாற்காலியில் உட்கார வைத்தார். போலீஸ்காரர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் ஏதோ பேசி அனுப்பிவிட்டு, என்னைப் பார்த்தார். நான் வந்த காரியத்தைச் சொன்னேன். 'இவ்வளவுதானா' என்று

சொல்லிவிட்டு "நான் யூனியன கமிஷனருக்குப் போன் செய்றேன். இன்னும் இரண்டு நாளில், அவரைப் பார்த்துவிட்டு, வாத்தியார் வேலையில் சேருங்கள். அப்புறம் வேற வேலை தேடலாம்" என்றார்.

நான் புறப்பட்டேன். இரண்டு நாட்களுக்கு என்ன செய்வது? கையில் ஒரு ரூபாய்தான் இருந்தது. அவரிடம் கேட்க வெட்கம். தயங்கித் தயங்கி திரும்பி நடந்தேன். வழியில் எனக்காக காத்திருந்தவர் போல் தோன்றிய போலீஸ்காரர்! "ஐயாதான் ரெட்டியார்கிட்டச் சொல்லி என் மகளுக்கும் வேலை வாங்கித் தரணும். செகண்டரி கிரேட்" என்றார்.

### விபரீத எண்ணம்

எனக்கு ஒரு விபரீத எண்ணம். 'அதுக்கும் நானாச்சு. நூறு ரூபாய் தள்ளும்' என்று கேட்கலாமா? லாக்கப்பில் தள்ளத் தயாராக இருந்தவர், பணத்தைத் தள்ளுவார் என்பதில் சந்தேகம் வரவில்லை. 'சீ, இப்பவே இந்த புத்தியா?' என்று என்னை நானே கோபித்துக் கொண்டு நடந்தேன். திடீரென்று, ரெட்டியார் கூப்பிடுவதாக, ஒருவர் வந்து சொன்னதும், ஸ்ரீராமுலு ரெட்டியாரிடம் ஓடினேன். அவர் சிரித்தபடியே 'தம்பி, தப்பா நினைக்கப்படாது. எல்லோருக்கும் பணத்தட்டுப்பாடு வரத்தான் செய்யும். எனக்குக் கூட வந்திருக்கு. அதனாலதான் கேட்கிறேன். கையில பணம் இருக்கா, இல்ல நான் தரட்டுமா?' என்றார். எனக்கு அழுகை வந்தது. அடக்கிக் கொண்டேன். சொற்பொழிவுக்கு அவர் நீட்டிய பணத்தை வாங்க மறுத்த நானா இப்போது பணம் கேட்பது? கூடாது. கூடாது. "பணம் இருக்கு" என்று கம்பீரமாகப் பதிலளித்துவிட்டு திரும்பி நடந்தேன். பஸ் கட்டணத்திற்குரிய பணம் இல்லை. காஞ்சிபுரம் வரை நடப்பது என்று தீர்மானித்து நடந்து கொண்டிருந்தேன். கண்ணீர் தானாக வந்தது. இவ்வளவு தூரத்தையும் எப்படி நடப்பது? திடீரென்று ஒரு கார் வந்து நின்றது. ஸ்ரீராமுலு ரெட்டியார் சிரித்தபடியே 'நானும், உங்களுக்காக இன்னைக்கே காஞ்சிபுரம் வாரேன், ஏறுங்கோ,' என்றார்.

### குளத்தில் விழுந்து சாகலாமா?

காஞ்சிபுரத்தில் என் நண்பர் வடமலைராஜ் இல்லை. எப்படியோ அங்கே ஒரு நாள் சமாளித்துவிட்டு, அச்சரபாக்கம் போய்ச் சேர்ந்தேன். யூனியன் அதிகாரிகள் எதுவுமே தெரியாது என்றார்கள். ஸ்ரீராமுலு ரெட்டியாரோ, டெல்லிக்குப்

போய்விட்டார். கையில் இருந்தது நாலாணா. பசி தாங்க முடியவில்லை. அச்சரபாக்கம் குளக்கரைக்குப் போனேன். குளத்தில் தண்ணீர் இருந்தது. ஆழம் எவ்வளவோ. காட்டுக் கொடிகளால் கை கால்களைக் கட்டிக் கொண்டு, குளத்தில் விழுந்து சாகலாமா, எவனாவது இந்த நாலணாவுக்கு விஷம் தருவானா. இரவு மணி எட்டு இருக்கும். அக்கம் பக்கம் நாதியில்லை. காட்டுக் கொடிகளை எடுக்கப் போனேன். திடீரென்று கதராடை அணிந்த ஒருவர், நான்கைந்து பேர்களுடன் வந்தார். எடுத்த எடுப்பிலேயே "நீ சமுத்திரம் தானேடா?" என்றார். நான் தலையாட்டினதும் "முட்டாள் ஒன்னை எங்கெல்லாம் தேடறது. நீ நேராய் என்னைப் பார்த்திருக்கணும். என் பெயர் சீனிவாசன். கல்வி வளர்ச்சி அதிகாரி. ரெட்டியார் என்கிட்ட சொல்லியிருக்கிறார். காட்டுக்கரணை பள்ளிக்கூடத்திற்கு நீதான் ஹெட்மாஸ்டர். சரி, வா, என் ரூமுக்குப் போகலாம். டேய்.... ஏண்டா அழறே.... சரி வா மொதல்ல சாப்பிடலாம்" என்றார்.

**பி.ஏ. வாத்தியார்**

காட்டுக்கரணை என்ற கிராமத்தில் அப்போது ஒரு சின்னக் கடை கூடக்கிடையாது. கார் போக முடியாது. அப்படியே தப்பித் தவறி போகிற கார் திரும்ப முடியாது. ஆனால் நல்ல ஜனங்கள். பஞ்சாயத்துத் தலைவர் என்னை வரவேற்று ஒரு வீட்டின் முன்னறையைத் தயாராக வைத்திருந்தார். அரிசி பருப்பு வகையறாக்களை அவரே வாங்கி வைத்திருந்தார். அப்போது எட்டாவது வகுப்பை ஈ.எஸ்.எல்.சி. என்பார்கள். அரசாங்கப் பரீட்சை எழுதியாக வேண்டும். ஆனால் மாணவர்களுக்கு நான் போய்த்தான் 'ஏ.பி.ஸி.டி.' சொல்லிக் கொடுத்தேன். நல்ல ஆசிரியர் வேண்டும் என்று இந்த எட்டாவது மாணவர்கள் 'ஸ்டிரைக்' செய்ததாலேயே, என்னை அங்கே, தலைமை ஆசிரியராகப் போட்டார்களாம். நானும், இரவு பகலென்று பாராது, மாணவர்களுக்குப் பாடம் நடத்தினேன். அவர்களுக்கும், நானென்றால் உயிர். பாடம் நடக்காத சமயத்தில் மாணவர்களோடு தேக்குத் தோப்புகளில் திரிவேன். காடுகளுக்குச் சென்று, நாகப் பழங்களைத் தின்பேன்.

ஊரிலும் எனக்கு நல்ல மரியாதை. எனக்கு 'பி.ஏ. வாத்தியார் என்று பெயர். அந்த பள்ளிக்கூடத்திலேயே 'பழமும் தின்று கொட்டையும் போட்ட' ஒரு வயதான ஆசிரியருக்கு இது பிடிக்கவில்லை. அவர், மாணவர்களை, தன் வீட்டு சமையலுக்கு பள்ளிக்கூட நேரத்தில் பயன்படுத்தக்கூடாது என்று

நான் உத்தரவு போட்டது காரணமாக இருக்கலாம். அல்லது ஒருவேளை நானே 'கிராஜுவேட்-தலைமை ஆசிரியர்' என்று அகங்காரமாக நடந்திருக்கலாம். சமயத்தை எதிர்பார்த்து இருந்தார்.

## சாதிய மேலாண்மை

ஒரு நாள் நல்ல மழை. பள்ளிக்கூடம் ஒழுகியது. இதே இந்த ஆசிரியர் என்னிடம் வந்து "ஸார்....ஸ்கூல் ஒழுகுது. பேசாமல் கிருஷ்ணன் கோவிலுல ஒரு வகுப்பை வைக்கலாம்," என்றார் வினயமாக. நானும் அதற்கு உடன்பட்டு, இன்னொரு ஆசிரியரை,, மாணவர்களுடன் கோயிலுக்குப் போகும்படி சொன்னேன்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு இரண்டு ஹரிஜன மாணவர்கள் அழுது கொண்டு வந்தார்கள். "கோவிலுக்குள் எப்படிப் போகலாம்?" என்று அவர்களை ஊர் மக்கள் அடித்தார்களாம். "இதை விடக்கூடாது ஸார்," என்றார் அந்த ஆசிரியர். நான் கோபத்துடன் கோவிலுக்குப் போனேன்.

ஹரிஜன மாணவர்களின் சிலேட்டுக்களும், நோட்டுப் புத்தகங்களும், கோவிலுக்கு வெளியே சிதறிக் கிடந்தன. ஓரிரு பெஞ்சுகள் உடைக்கப்பட்டு வெளியே கிடந்தன. ஹரிஜன மாணவர்களுடன், இதர மாணவர்களும் சேர்ந்து அழுது கொண்டிருந்தார்கள்.

என்னைப் பார்த்ததும், சத்தமாக புலம்பினார்கள். "இந்த நாட்ல எல்லாரும் சமம்டா...வாங்கடா கோவிலுக்குள்ளே போகலாம். ஊர்க்காரங்க என்ன செய்யுறாங்கன்னு பார்த்துடுறேன்," என்று சொல்லிக் கொண்டே, கோவிலுக்குள் நுழையப் போனேன்.

ஊர்க்காரர்களில் ஒருவர், "வாத்தியாரே, நீர் வேணுமுன்னால் போகலாம். காலனி பசங்க போனால்...." என்றார். நான், அதைப் பொருட்படுத்தாமல், உள்ளே ஹரிஜன மாணவர்களை இழுத்துக் கொண்டு நுழையப் போனேன். பஞ்சாயத்துத் தலைவர் ஊரில் இல்லை. ஊர்த் தலைவர்கள் என்னைத் தாக்கலாம் என்ற சூழல். எனக்கோ, மகாத்மா காந்தியின் நினைவு மட்டுமே நின்றது. திடீரென்று, தையல் ஆசிரியரான கேசவன் செட்டியார் என்பவர், என் காலில் நெடுஞ் சாண்கிடையாக விழுந்து, "ஸார்.... இந்த ஊருக்குப் புத்தி வர இன்னும் இருபது வருடம் ஆகும். வத்தி வச்சு விட்டது கிழட்டு வாத்தியான். இவங்க அப்பாவிங்க. ஒங்களால ஊர்ல

ரத்தக்கறை வேண்டாம்,'' என்று சொல்லி, என் கால்களைப் பிடித்துக் கொண்டார். நானும் "எக்கேடாவது கெட்டுப் போங்க"', என்று சொல்லிவிட்டு, பெட்டி படுக்கையை சுருட்டிக் கொண்டு புறப்பட்டேன்.

மாணவர்கள் கதறி அழுதார்கள். என்னிடம் லேசாகப் பிரியம் காட்டிய இரண்டு இளம் பெண்கள், கண்ணீர் மல்க நின்றார்கள். ஊர்க்காரர்கள் கூடத் தடுத்தார்கள். ('கிழட்டு' வாத்தியார்தான், நான் போகக்கூடாது என்று அதிகமாகக் கெஞ்சினார்.) உருண்டோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, திரும்பிப் பாராமல் நடந்தேன்.

**மீண்டும் மீண்டும் சித்தப்பா**

மீண்டும் சென்னை. மீண்டும் சித்தப்பா. மீண்டும் திட்டு. ஓரிரு மாதங்களில் தென்னாற்காடு மாவட்டத்தில், ஓர் உயர்நிலைப் பள்ளியில், 'பி.டி. அஸிஸ்டெண்ட்' என்ற வாத்தியார் வேலை கிடைத்தது. தலைமை ஆசிரியரின் தில்லு முல்லுத்தனம் (சம்பளம் சரியாகத் தராமலே கையெழுத்து வாங்கிக் கொள்பவர்) பொறுக்காமல் வெளியேறினேன்.

மீண்டும் சென்னை. மீண்டும் சித்தப்பா. மீண்டும் திட்டு. இரண்டு மாதங்களுக்குள் சீனியர் கோவாபரேட்டிவ் இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்தது. மதுரை மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில், பாய் நெசவு கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டேன். எனக்கு முன்னால் இருந்தவர், கூட்டுறவு சங்கத் தலைவரை 'முதலாளி' என்று சொல்லிப் பழகிவிட்டார். என்னிடமும் இதை எதிர்பார்த்தார். நடக்கவில்லை. இதனால் அடிக்கடி தகராறு வந்தது.

மீண்டும் சித்தப்பா வீடு. இப்போது, அவர் என்னைத் திட்டவில்லை. தேறாத கேஸை எதுக்காகத் திட்டணும்? பேச மறுத்துவிட்டார். சித்தி, ஊரில் விவசாயத்தைக் கவனிக்கப் போய்விட்டார். பசியால் துடித்தேன். என் பெரியம்மா மகன், காசு கொடுப்பான். என் ஒன்றுவிட்ட பெரியப்பா மகள் சோறு போட்டாள். எப்படியோ மூன்று மாதத்திற்குள் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி வேலை கிடைத்தது. ஸ்ரீபெரும்புதூரில் பஞ்சாயத்து யூனியனில் வேலை. பஞ்சாயத்துகளுக்கு, அய்யாதான் ஆடிட்டர்!

இதே சமயத்தில், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில், எப்போதோ எழுதி மறந்துபோன பரீட்சைக்கு 'இன்டர்வியூ' வந்தது மத்திய தகவல் சர்வீஸுக்கான பேட்டி. புதுடில்லிக்கு புறப்பட்டேன்.

மத்திய தகவல் சர்வீஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, டில்லி வானொலித் துறையில், தமிழ்ச் செய்திப் பிரிவில் 'சப் எடிட்டராக' நியமித்த ஓர் ஆர்டர் வந்தது.

டில்லி வானொலியில், தமிழ்ச் செய்திப் பிரிவில் சேர்ந்தேன். எல்லா மொழி செய்திப் பிரிவுகளும், குதிரை லாயம் போன்ற ஒரு கட்டிடத்திற்குள் இருந்தன. எல்லா மொழிக்காரர்களையும் ஒரே சமயத்தில் பார்த்ததும், பழகியதும் இனிமையான அனுபவம். முதல் நாளே, கான்டீனுக்குப் போன் செய்து 'இட்லி ஹை... வடா ஹை...' என்றேன். 'குச் நை' பதில் வந்தது. உடனே 'ஏக் பிளேட் குச்சி நை ஹை' என்றேன். ('குச்சி நை' என்றால் ஒன்றும் இல்லை என்று இந்தியில் அர்த்தம்.)

**செய்தி வாசிப்பாளராக...**

ஒரு மாதம் ஆகிவிட்டது. செய்திகளைப் படிப்பது என் வேலை இல்லை என்றாலும், எனக்குப் படிக்க ஆசை. எப்படியோ படிக்கும் பணியும் கிடைத்துவிட்டது. நான்கு கோடி தமிழ் மக்களும் என் வாசிப்பைக் கேட்க உன்னிப்பாய் இருப்பதுபோல் எனக்குள் ஒரு எண்ணம். அந்த நாளும் வந்தது. மத்தியானச் செய்தியைப் படிக்க, சகாக்களுடன் போனேன். ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட ஸ்டூடியோவிற்குள் என் உடம்பு வேர்வையில் நனைந்தது. கைகால்கள் ஆடின. 'பேடரைத் திறக்க வேண்டும். சிவப்பு விளக்கைப் பார்க்க வேண்டும். படிக்கத் துவங்கினேன். பத்து நிமிட செய்தியை ஆறு நிமிடத்திற்குள் முடித்துவிட்டு, நான்கு நிமிடத்திற்கு என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தேன்.

சகாக்கள், தயாராகக் கொண்டு வந்திருந்த, ஏற்கனவே காலையில் படித்து முடித்த செய்திகளை, பலாத்காரமாய்ப் பிடுங்கி, அங்கொன்றும் இங்கொன்றுமாகப் படித்து முடித்தேன்.

சென்னையில் பல்வேறு பேச்சுப் போட்டிகளில் வென்றும், தமிழ் மாணவர் தலைவராக திகழ்ந்தும் செயல்பட்ட எனக்கு அங்கே என்னுடைய சகாக்களோடு ஒன்றிக்க முடியவில்லை. இதற்கு நான் காரணமல்ல. என்னுடைய ஆங்கில உச்சரிப்பிற்காக எதிரே உள்ள மலையாளப் பிரிவு அலுவலர்களை கண்சிமிட்டி சிரிப்பார்கள். எனது பணி செய்திகளை மொழியாக்கம் செய்வது. 'சொன்னார்' என்று எழுதினால் அதை அடித்துவிட்டு 'தெரிவித்தார்' என்று திருத்துவார்கள். 'தெரிவித்தார்' என்று எழுதினால் 'சொன்னார்' என்று திருத்துவார்கள். இப்படி

பக்கம் பக்கமாக திருத்தப்பட்டதை தமிழ் தெரியாத ஒரு வங்காளி இயக்குநரிடம் காட்டி "சமுத்திரம் இவ்வளவு தப்புகள் செய்திருக்கிறார்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் இதனாலேயே என்னை வேறு துறைக்கு மாற்றும்படி அமைச்சரவைக்கு கடிதம் எழுதியதாகப் பின்னர் அறிந்தேன்.

என் நிறத்திற்காக சிரித்தவர்கள்-என் உச்சரிப்பிற்காக சிரித்தவர்கள். இப்படி நாளெல்லாம் சிறுமைப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில் எங்கள் பிரிவுத் தலைவர் எனக்கு சரியாக மொழி பெயர்ப்பு வரவில்லையென்றும், ஆகையால் எனது மொழி பெயர்ப்பை பிற சகா திருத்தவேண்டும் என்றும் ஒரு சர்க்குலரை ஆங்கிலத்தில் எழுதி வெளியே தொங்கபோட்டார்.

இந்த சர்க்குலர் எனக்கு ஒரு தன்மானப் பிரச்சினையாகியது. அப்படி எழுதியவர் அன்று மட்டும் என் கண்ணில் பட்டிருந்தால் நிச்சயம் கொலை செய்திருப்பேன். கரோல்பாக்கில், அவரது சின்னவீட்டில் தேடிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. இந்த சர்க்குலர் படி ஒவ்வொருவரிடமும் குட்டுப்படுவது என்பது என்னால் முடியாத காரியம். ஆகையால் வங்காள மேலதிகாரிக்கு ஆங்கிலத்தில் ஒரு விடுமுறைக் கடிதம் இப்படி எழுதினேன்.

"எனது தமிழ் செய்திப் பிரிவுத் தலைவர் இன்னொரு சகாவான ஒரு பெண்ணின் தூண்டுதலால் என்னை இழிவுபடுத்தி ஒரு சர்க்குலர் போட்டிருக்கிறார். ஆகையால் என் மனநிலை பாதிக்கப் பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மனம் பழையநிலைக்கு வருவதற்காக எனக்கு இரண்டு நாள் விடுமுறை கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்."

**(Sir, As I am Mentaly upset by a circular issued by the unit incharge, Mr..... denigrating me, instigated by our lady collague Miss..., I request you to give me two days casual leave, to recover my shattered feelings")**

இந்த மாதிரியான விடுமுறைக் கடிதம் வானொலி நிலைய வரலாற்றிலேயே புதிதாக இருந்திருக்கும். மேல் அதிகாரியான வங்காள இணை இயக்குநர் அதிர்ந்து போனார். அந்தக் கடிதத்தை அவரால் ஏற்க முடியாது. ஆகையால் கரோல்பாக்கில் நான் தங்கி இருந்த அறைக்கு வானொலி கார் வந்தது. என்னை அந்த அதிகாரியின் அறைக்குள் கொண்டு போய் போட்டது. நான் போவதற்கு முன்பே எனது சகாக்கள் இரண்டு அணிகளாகப் பிரிந்து அங்கு வாதிட்டுக் கொண்டிருந்தார்கள்.

என்னைப் பார்த்ததும் அந்த அதிகாரி கத்தினார். சஸ்பெண்ட் செய்யப் போவதாக மிரட்டினார். உடனே நான், எனக்குத் தெரிந்த ஓட்டை ஆங்கிலத்தில் அப்படி ஏற்பட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சொன்னேன். வேலைபோய் வெளியே சோற்றுக்கு திண்டாடுவதைவிட உங்கள் அறையிலேயே உண்ணாவிரதம் இருப்பேன் என்கிற மாதிரி ஏதோ ஒரு விரக்தியில் உரத்துக் கத்தினேன். அந்த அதிகாரி தனது சுருக்கெழுத்தாளரை வரவழைத்தார். நானோ என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று வீம்பாக இருந்தேன். உடனே அந்த அதிகாரி எனது செய்திப் பிரிவுத் தலைவர் வெளியிட்ட சர்க்குலரை ரத்து செய்வதாகவும், இப்படிப்பட்ட சர்க்குலரை இனிமேல் அவர் வெளியிடக்கூடாது என்றும் டிக்டேஷன் கொடுத்தார். இந்த வெற்றியை என்னால் ரசிக்கக்கூட முடியவில்லை. இந்தப் போரில் நான் வெற்றி பெற்றாலும் அதில் கிடைத்த காயங்கள் இப்போதுகூட வலிக்கின்றன.

**சிறையில் செய்தி வாசிப்பாளர்**

இந்தச் சமயத்தில் இன்னொரு போதாத வேலை. நான் தனியாக அறை எடுத்து ஒரு தோழரோடு தங்கியிருந்தேன். அதற்கு முன்பு தமிழர்களுக்கு பரிச்சயப்பட்ட ராமானுஜம் மெஸ்ஸில்-அதாவது உண்டு உறையும் இடத்தில் தங்கி இருந்தேன். அப்போது தமிழ்நாட்டு இளைஞர் ஒருவர் தடபுடலாக தங்கியிருந்தார். சென்னையில் ஒரு பிரபலமான ஒரு டாக்டரின் மகனாம். இவரைச் சுற்றி பத்து பதினைந்து பேர் சூழ்ந்திருப்பார்கள். சிலசமயம் ஓரிரு பெண்களைக்கூட கூட்டி வருவார். இவர் எனக்கு பழக்கமே தவிர. நட்பல்ல. ஆனால் என்னிடம் மிகவும் கண்ணியமாகப் பழகுவார்.

நான் தனியறைக்குப் போன பிறகு ஒருநாள் என் அறைக்குள் ஓடி வந்து, ‘‘என்னை காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்’’ என்று கதறினார். ஒரு நிமிடத்திற்குள் ஒரு சர்தார்ஜி இளைஞன் ஒரு தடியோடு ஈட்டிக்காரன் மாதிரி வந்து அந்த இளைஞனை என் கண் முன்னாலேயே அடித்து வெளியே இழுத்தான்.

எனக்கோ இந்தி வராது. அதோடு எங்கள் இரண்டு பேரையும் சேர்த்து அடிக்கும் வலிமை கொண்டவன் அவன். ஆனாலும் என்னால் தாளமுடியவில்லை. அரைகுறை ஆங்கிலத்தில் “யூ பேஸ்டட் டாக்” என்று சொல்லி ககொண்டு அவன் · கையைப் பிடித்தேன். உடனே அவன் நான் இந்த இளைஞன் வாங்கிய கடனுக்கு கேரண்டி கொடுக்க

முன் வந்திருப்பதாகக் கருதி சிரித்தான். அதையே இந்தியில் விளக்கமாகக் கேட்டான். உடனே நான் "நோ நோ" என்றேன். பழையபடியும் அந்த இளைஞனை கண்ணத்தில் ரெண்டுபோடு போட்டு வெளியே இழுத்துக் கொண்டு போனான். அவனோ என்னை கையெடுத்துக் கும்பிட்டான்.

எனக்கு மனசு கேட்கவில்லை. அந்த சர்தார்ஜி இளைஞனை அதட்டியபடியே அவன் வீட்டுக்குப் போனேன். அவனும் சிநேகிதமாக சிரித்தபடியே அந்த இளைஞனை ஒன்றும் செய்யப் போவதில்லை என்றும் தெரிவித்தான். என்னையும் வரும்படிக் கேட்டான். இந்த இளைஞன் வாங்கிய ஆயிரக்கணக்கான ரூபாய்க்கான ஆவணங்களை புதுப்பிக்க வேண்டும். மற்றபடி ஒன்றுமில்லை என்றான். இந்த இளைஞனும் என்னைப் பார்த்துக் கெஞ்சினான். வேறு வழியில்லாமல் நானும் அவனோடு போனேன். ஒரு அறைக்குள் எங்களை உட்கார வைத்தான். நாங்கள் உட்கார்ந்ததுதான் தாமதம்..... உடனே அறைக்கு வெளியே போய் கதவை சாத்தி விட்டான். ஜன்னல் வழியாக எங்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே, தந்தையைக் கூப்பிடுவதற்காகப், போய்விட்டான்.

எனக்கோ நடுக்கம். அன்று மத்தியானம் நான் செய்தி வாசிக்கவேண்டும். அதுவும் மொழி பெயர்த்து செய்தி வாசிக்க வேண்டும். சில சமயம் செய்தி வாசிக்காத ஒருவர் மொழி பெயர்ப்புக்காக வந்திருப்பார். நான் போகவில்லையானால் நாள், மணி, நேரம் தவறாமல் வரும் செய்தி நின்று போகலாம். வேலையும் கோவிந்தாவாகி விடும். ஒரே குழப்பம். அந்தச் சமயத்தில் நான்கைந்து பெண்கள் எதுவுமே நடக்காதது போல் அங்கே வந்தார்கள். உள்ளே ஒரு டெலிபோன் இருப்பதை அப்போதுதான் பார்த்தேன். உடனே அந்தப் பெண்களிடம் கைகளை அங்குமிங்குமாக ஆட்டி, 'ஐ கவர்மெண்ட செர்வண்ட், போலீஸ் மே கம்ளைண்ட் ஹேற' என்று டெலிபோன் ரீசிவரை தூக்கினேன். அந்தப் பெண்கள் பயந்து விட்டார்கள். அப்போது புதுடெல்லியில் போலீஸ் என்றால் எல்லோருக்குமே பயம். உடனே அந்தப் பெண்கள் கதவை திறந்து விட்டார்கள்.

நாங்கள் இருவரும் எடுத்தோம் ஓட்டம். ஒரு கிலோமீட்டர் வரை ஓடிய பிறகு அந்த இளைஞனுக்கு 'ஆளைவிடு' என்கிற அர்த்தத்தில் ஒரு கும்பிடு போட்டு விட்டு, ஒரு ஆட்டோவைப் பிடித்துக்கொண்டு வானொலி நிலையத்திற்குள் பாய்ந்தேன்.

**சென்னை திரும்பல்**

நான் சென்னையிலுள்ள வேறு பதவிக்கு திரும்புவதற்கு

ஆசைப்பட்டேன். பேருந்து நிலையத்தில், கூட்டத்தில் தவிப்பவரை எப்படிக் கூட்டம் உள்ளே தள்ளிவிடுமோ, அப்படி எனது சகாக்களில் பலர் என்னை சென்னைக்கு தள்ளிவிடுவதில் உதவிகரமாய் இருந்தார்கள். மூன்றாண்டு காலம் சென்னையில் களவிளம்பரத்துறை அதிகாரியாக காரோடும், பேரோடும், மேலதிகாரிகளோடு சண்டை சச்சரவுகளோடும், நீடித்தேன். இதில் கிடைத்த அனுபவங்களும், களநிகழ்ச்சிகளும் நான் கதைஎழுத உதவின. மூன்றாண்டுகளுக்குப் பிறகு, உதவி செய்தி ஆசிரியராக பதவி உயர்வு ஏற்பட்டு டெல்லிக்கு மாற்றப்பட்டேன்.

### பைத்தியக்கார மருத்துவமனையை போல...

டெல்லியில் அத்தனை இந்திய மொழிகளுக்கும் செய்திகளை ஆங்கிலத்தில் கொடுக்கும் ஒரு மாபெரும் கூடம். இதற்கு ஜி.என்.ஆர்., அதாவது 'ஜெனரல் நியூஸ் ரூம்' என்று பெயர். இப்போது குளிர்சாதன வசதிகளோடு நவீனமாக உள்ள அந்தக்கூடம் அப்போது மாட்டுத் தொழுவம்போல் இருந்தது. இதன் மத்தியில் மிகப்பெரிய நாற்காலியில் பொறுப்பாசிரியர் உட்கார்ந்திருப்பார். பக்கவாட்டில் தென்னிந்திய, வடஇந்திய, கிழக்கிந்திய மொழிகளுக்கான உதவி செய்தி ஆசிரியர்கள் இருப்பார்கள். டெலிபிரிண்டர்கள் இரையும். டெலிபோன்கள் கத்தும். இண்டர்காம்கள் அலறும். தந்திகள் குவியும். பிறநாட்டு ஒலிபரப்புகள் முனங்கும்.... உதவி செய்தி ஆசிரியர்கள் பொறுப்பாசிரியரை சூழ்ந்து கொண்டு தத்தம் தலைப்பு செய்திகளைக் காட்டி அங்கீகாரத்திற்காக நிற்பார்கள். செய்தி நேரம் நெருங்குவதைப் பார்த்து, பல்வேறு வினோதமான குரல்களை எழுப்புவார்கள். ஆகமொத்தத்தில் புரியாதவர்களுக்கு அது ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியாகவே தெரியும்.

### தொழில் குருநாதர் இராமநாதன்

இத்தகைய மருத்துவமனையில், உதவி செய்தி ஆசிரியரான அடியேன், என்னை எந்த செய்திப் பிரிவு இழிவுப்படுத்தியதோ அந்த செய்திப்பிரிவிற்கும், செய்திக் கட்டளைகளை தீர்மானிக்கும் பொறுப்பில் இருந்தேன். பொறுப்பாசிரியர்கள் பெரிய அதிகார அந்தஸ்து கொண்டவர்கள். அவர்கள்தான் செய்திகளின் போக்கை தீர்மானிக்க வேண்டியவர்கள். இதில் குறிப்பிடத் தக்கவர் 'இந்தியன் எக்ஸ்பிரஸி'ல் மூத்த செய்தியாளராக பணியாற்றிவிட்டு, டெல்லியில் வானொலி செய்தி ஆசிரியராக பணியாற்றிய திருமிகு. இராமநாதன் அவர்கள். இவர்தான் எனது தொழில் குரு தூசி படிந்த இந்தக் கண்ணாடியை துடைத்துவிட்ட செய்தி மேதை. **'வருவதைப் படி, படித்ததை**

தூர எறி எது மனதில் நிற்கிறதோ அதுதான் செய்தி' என்பார். இவருக்கு ஈடான செய்தி ஆசிரியர் எவருமே கிடையாது. எல்லோரின் பிரமிப்புக்கும் உரியவர். இப்போதும் நன்றாகவே நினைவுக்கு வருகிறது.

பங்களாதேசம் விடுவிக்கப்பட்ட செய்தி வந்தது. அதேசமயம் பாகிஸ்தானிய அதிபர், சண்டை தொடரும் என்கிறார். இந்த இரண்டையும், நம் மக்களின் மகிழ்ச்சி குன்றாத வகையில் செய்தியாகப் போடவேண்டும். எங்கள் செய்தி இயக்குநர் டாக்டர் பஜாஜ் அவர்கள் குழம்பிப் போனார். பொறுப்பாசிரியர் குழப்பிக் கொண்டிருந்தார். உதவிச் செய்தி ஆசிரியர்கள் உதட்டைப் பிதுக்கினார்கள். அப்போது டெஸ்கில் இருக்க வேண்டிய அவசியமில்லாத என் குரு இராமநாதன் எங்கிருந்தோ வந்தார். எல்லோரும் அவரை மொய்த்தார்கள். சோமபானம் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், அவர் ஒரு தலைப்புச் செய்தியை ஆங்கில்த்தில் கொடுத்தார். அதன் தமிழ்வடிவம் இதுதான்.

**"பங்களாதேஷ் விடுவிக்கப்பட்டாலும், இந்தியாவுடனான போர் தொடருமாம். இந்த விடியலுக்கு மத்தியில் பாகிஸ்தான் அதிபர் தன் மக்களுக்கு ஆறுதலாக, இப்படி ஒரு ஆண்மையற்ற அச்சுறுத்தலை அறிவித்திருக்கிறார்."**

இந்த தலைப்புச் செய்தியை கேட்டு, அனைவரும் மகிழ்ந்து போனார்கள். இப்பேர்பட்ட இவர், என்னை பொறுப்பாசிரியரான தனக்கு, உதவி ஆசிரியராக வைத்துக் கொண்டார். அரசியல் முக்கியத்துவம் உள்ள செய்திகளை 'எடிட்' செய்து எழுதுவது என் பொறுப்பு. அவரிடம் காட்டினால், என்னை கண்டபடி திட்டுவார். எல்லோரும் சிரிப்பார்கள். இன்னொரு நாளும் இப்படி திட்டி முடித்துவிட்டு சிரித்தவர்களை தன்னருகே கூப்பிட்டார். 'சமுத்திரத்தை திருத்த முடியும். அவனுக்கு இயல்பான அறிவு இருக்கிறது. அதனால்தான் திட்டுகிறேன். நீங்களோ புத்தி கெட்டவர்கள். ஆகையால்தான் உங்களை திட்டவில்லை" என்று ஆங்கிலத்தில் முழங்கினார்.'

என்றாலும் திட்டிக்கொண்டே இருந்தார். நான் ஒரு தந்திரத்தை கடைப்பிடித்தேன். அவர் சிகரெட்டிற்காக அங்குமிங்கும் பார்க்கும்போது, என்னிடம் உள்ள சிகரெட்டை அவர் வாயில் வைத்து, நெருப்பிட்டுக்கொண்டே, தலைப்புச் செய்தியைக் காட்டுவேன். 'சிங்கக்குட்டிடா நீ' என்று அதை கிளியர் செய்துவிடுவார். பிறகு, என் செய்தியில் உள்ள தப்பை

அதற்கென்ற உள்ள சில சகாக்கள் சுட்டிக்காட்டும்போது அவர் கண்ணுக்குத் தெரிந்த இந்தச் சிங்கம் அசிங்கமாகிவிடும். ஆனால், வெளியே வந்தாலோ நாங்கள் தோழர்கள். ஒவ்வொரு திட்டுக்கும் ஒரு பெக் சோமபானம் கொடுப்பார். பிராமணராக இருந்தாலும், தந்தை பெரியாரிடம் அளவற்ற பற்று கொண்டவர்.

இந்த சந்தர்ப்பத்தில் என் புது மனைவி ஒன்பது மாதத்தோடு ஊருக்குப் போய்விட்டார். எனக்கு சமையலை சொல்லிக் கொடுத்தார். செய்ய முடியவில்லை. எப்படியோ கண்டதைத் தின்று வேலை பார்த்தபோது, துப்பினால் ரத்த ரத்தமாக வந்தது. நான் பயந்து போனேன். மருத்துவமனைக்குப் போனால் எனக்கு டி.பி. வந்திருப்பதாகத் தெரிவித்து மருந்தும் கொடுத்தார்கள். இதைக் காரணம் காட்டி என் மேல் அதிகாரியிடம் வேறு துறைக்கு மாற்றம் கேட்டேன். அதற்குள் என் வேலையையும் விசுவாசத்தையும் புரிந்துகொண்ட என்குரு இராமநாதன், 'எளிதாக ஷிப்ட் கொடுக்கிறோம். இங்கேயே இரு' என்றார். என்னுடைய உடல் இளைக்காததை பார்த்துவிட்டு, நான் வேண்டுமென்றே பொய் சொல்லுவதாக மேலதிகாரிகளுக்கு ஒரு அனுமானம்.

என்றாலும், அமைச்சரவை ஆணையிட்டு, புதுடெல்லியில் உள்ள பத்திரிகைத் தகவல் அலுவலகத்தில் உதவித் தகவல் அதிகாரியாக மாற்றினார்கள். ஆனால், வானொலி அதிகாரிகள் என்னை விடுவித்த மறுத்தார்கள். இது தெரிந்ததும் என்னைப் போல் மாறுதலாகி விடுவிக்கப்படாமல் இருக்கும் அனைவரையும் ஒன்று திரட்டி, ''**உதவி செய்தி ஆசிரியர்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிர்ப்பான சங்கம்**'' **(Society for prevention of cruelties on Assistant News Editors)** என்று ஒன்றைத் துவக்கினோம். இதைக் கேள்விப்பட்ட அதிகாரிகள் உடனடியாக என்னை விடுவித்தார்கள்.. என்குரு 'அல்பம்... அல்பம்...' என்றார்.

### பப்பாளி தர்பார்

நான் டி.பி.க்காக ஊசி போட்டும், ரத்தம் கொட்டுவது நிற்கவில்லை. பயந்துபோய் சென்னைக்கு விடுப்பில் வந்தேன். அப்போது என்னுடைய ஆன்மீகக் குருவான ரங்கசாமி செட்டியார் ரத்தம் கொட்டுவதற்கான காரணத்தை கண்டுபிடித்தார். மனைவி இல்லாத இரண்டுமாத இடைவெளியில் தினமும் பப்பாளிப் புழங்களையே ஆகாரமாக உண்டேன். 'அடே! பாவி. அபார்சனுக்கு உரிய பழத்தை சாப்பிட்டிருக்கியே. உனக்கு அறிவு இருக்கா?' என்று கடிந்து

கொண்டார். பப்பாளி பழக்கடியும் நின்றது. ரத்தகொட்டலும் நின்றது. மீண்டும் டெல்லியில் வேலைக்குச் சென்றேன்.

இந்தப் பின்னணியில் ஒன்று சொல்லவேண்டும். புதிதாய் வேலையில் சேர்ந்த ஆறுமாத காலத்திற்குள் ஒன்றை புரிந்து கொண்டேன். மத்திய அரசு செய்தி-தகவல்துறை அலுவலருக்கு, தமிழ் அறிவு மட்டும் போதாது. ஆங்கில அறிவும், பொது அறிவும் தேவை என்பதை உணர்ந்து கொண்டேன். இதனால் வானொலிச் செய்திகளையும், அவற்றின் உச்சரிப்பையும் மணிக்கணக்கில் கேட்பேன். நூலகத்தில் இருந்து பல்வேறு புத்தகங்களை வாங்கிப் படிக்கத் துவங்கினேன். நுணுக்கமான ஆங்கில வார்த்தைகளை எழுதிக் கொண்டு மனப்பாடம் செய்தேன். பத்திரிகைகளை பாடநூல் போல் படித்தேன். ஆங்கிலத்தில் உரையாடுபவர்களை உன்னிப்பாக கவனித்தேன். திறமையில்லாமல் கௌரவத்தை நிலைநிறுத்த முடியாது என்று எனது கல்லூரி ஆசிரியர் ஒருவர் சொன்ன கருத்தை சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்.

பத்திரிகைத் தகவல் அலுவலகத்தில் உதவி அதிகாரியாக மாற்றப்பட்ட பணியில் சேர்ந்தேன். வானொலி செய்தி கிணற்றிற்குள் தவளையாக இருந்த எனக்கு, ஒரு பரந்துபட்ட அனுபவம் கிடைத்தது. அனைத்து மாநில அலுவலர்களும் என்னை "காலா மதராசி" (கறுப்பு மதராசி) என்றும், "ராம்" என்றும் அன்போடு அழைப்பார்கள்.

இந்தச் சமயத்தில் ஒரு மூத்த தமிழ் அதிகாரி, ஒரு காக்டைல் பார்ட்டியில், ஒரு இழிவான காரியம் செய்ய முயற்சித்திருக்கிறார். இதற்காக அரசாங்கம், அவரை கட்டாய விடுமுறையில் அனுப்பி விட்டது. விசாரணைக்கும் உத்தரவிட்டது. துறைத்தலைவரான இந்த அதிகாரி, நான் களவிளம்பர அதிகாரியாக சென்னையில் பணியாற்றிய போது, என்னை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்ப்பவர். இவரை எங்களது சங்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று பேரவை கூட்டப்பட்டது. 'கூட்டியவர்களோ, இவரைவிட இழிவானவர்கள். இந்த அதிகாரியும், எவரையும் மதிக்காமல் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று பேசும் ஆசாமி பேரவையில் ஒருவர் மாற்றி ஒருவராக இவரை திட்டித் தீர்த்தார்கள். எனக்குப் பொறுக்க முடியவில்லை. உடனே நான் எழுந்து, 'இங்கே பேசியவர்களில் பெண்பித்து இல்லாத - அதை செயலில் காட்டாத யாராவது ஒருவர் உண்டா?' 'அரசாங்கமே நடவடிக்கை எடுக்கும்போது, உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது' என்று கத்தியதில், பேரவை கை தட்டியது. நான் திடீர் கதாநாயகனானேன்.

### திடீர் கதாநாயகன்

இதன் விளைவாக, ஓரிரு மாதங்களில் இந்திய செய்தி தகவல் அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனது மேல் அதிகாரிகளின் பலர் தங்களுக்கு அமைச்சரவை சிக்கல் கொடுக்கும் போதெல்லாம் இந்த காலா மதராசியிடமே வருவார்கள். எந்த அமைச்சகத்துக்கு கைகட்டி வாய் பொதித்து சென்றேனோ, அந்த அமைச்சகத்தில் மூத்த அதிகாரிகளோடு, என்னால் முரண்டுபிடித்து வாதாட முடிந்தது. இது என் பலம் அல்ல. ஒரு இயக்கத்தின் பலம் என்பதை உணர்ந்து கொண்டேன்.

எங்கள் அமைச்சரவைக்கு, நான் ஒரு தலைவலியாக ஒரு கட்டத்தில் தோன்றியது. அமைச்சரவைக்கு எதிரான, நியாயமான போராட்டத்தில் இப்போது என்.எப்.டி.சி எனப்படும் தேசிய திரைப்பட வளர்ச்சி நிறுவனத்தின் சென்னை மேலாளர் திரு. பி.ஆர். பரமேஸ்வரன், மத்திய கிராமிய மின்சார வாரியத்தில் மூத்த அதிகாரியாக உள்ள நாயர் (அப்படித்தான் கூப்பிடுவேன் முழுப்பெயர் தெரியாது), எங்களது மூத்த அதிகாரியும், சங்கத் தலைவருமான திரு. எஸ்.சி. பட் போன்றவர்கள் எனக்கு பக்கபலமாக இருந்தார்கள். இப்போது சென்னை தொலைக்காட்சியில் செய்தி ஆசிரியராக இருக்கும் பாலசுப்ரமணியம், எனது சங்க நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவினார். அமைச்சரவை, செய்தித்துறைக்காக நியமிக்கும் ஆணைகளின் நகல் ஒவ்வொன்றும், என் பெயருக்கும் வரும். இந்தியா உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் உள்ள மத்திய செய்தித் துறைத் தோழர்களுக்கு என்பெயர் அத்துபடி.

இந்தப் பின்னணியில் குடும்பச் சூழ்நிலை காரணமாக சென்னைக்கு மாற்றும்படி அமைச்சரவைக்கு விண்ணப்பித்தேன். முன்பு ஆண்டுக்கணக்கில் கையெடுத்து கும்பிடாத குறையாக போட்ட விண்ணப்பங்களை கண்டுகொள்ளாத அமைச்சரவை, தங்களது தலைவலி தீர்ந்ததுபோல் காலையில் போட்ட விண்ணப்பத்திற்கு மாலையிலே சென்னை வானொலி பத்திரிகைக்கு உதவி செய்தி ஆசிரியராக மாற்றியது.

### ரப்பர் இல்லாத மின்சாரம் (LIVE WIRE)

எவருக்கும் இல்லாத வழக்கமாக சங்கம் எனக்கு பிரிவு உபச்சாரவிழா நடத்தியது. இதில் பேசிய ஒரு இளையசகா, "சமுத்திரம் இரண்டு மகத்தான காரியங்களை சாதித்திருக்கிறர். ஒன்று, நமக்கெல்லாம் கெஜட்டட் அந்தஸ்து வாங்கி கொடுத்திருக்கிறார். இரண்டாவதாக, அவருக்கு டிரான்ஸ்பரையும்

வாங்கிக்கொண்டார். ரப்பர் இல்லாத மின்சார ஒயரான இவர் நம்மிடையே இருந்தால் நன்றாக இருக்கும்" என்றார்.

இப்படியாக, வானொலி செய்தி ஆசிரியராய், மீண்டும் களவிளம்பர அதிகாரியாய், "திட்டம்" பத்திரிகையின் உதவி ஆசிரியராய், சென்னை தொலைக்காட்சியின் உதவி செய்தி ஆசிரியராய், பெங்களூரில் களவிளம்பரத் துறை தலைமை அதிகாரியாய், சென்னை வானொலி நிலையத்தின் செய்தி ஆசிரியராய், அங்கிருந்து சென்னை தொலைக்காட்சி செய்தி ஆசிரியராய், பின்பு அங்கிருந்து துரத்தப்பட்டு, அதே சென்னை வானொலி நிலையத்தில் மூத்த செய்தியாளராய், இறுதியாக சென்னை சாஸ்திரிபவனில் செய்தி விளம்பரத்துறை இணை இயக்குநராய் பணியாற்றி, வயதுக்கு வராமலேயே ஒய்வு பெற்றேன். அதாவது, கிராமத்தில் என் உண்மையான வயதை ஒன்றே முக்கால் வருடம் கூட்டிப் போடப்பட்டதே காரணம்.

இந்த 33 ஆண்டுகால அலுவலக வாழ்க்கையில் ஐந்து இணைச் செயலாளர்களுக்கு எதிராக எழுத்து மூலமாக போராடி இருக்கிறேன். இரண்டு உடனடித் தலைமை அதிகாரிகளுக்கு எதிராகவும் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. உயர்நீதிமன்றம், மத்திய அலுவலர் தீர்ப்பு ஆணையம் போன்ற நியாயத் தலங்களுக்கு அரசை எதிர்த்து பலதடவை சென்றிருக்கிறேன். அத்தனை வழக்குகளிலும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் தோழர் செந்தில்நாதன் எனக்காக வாதாடினார். ஏதாவதொரு வகையில் வெற்றிகள் எனக்கு கிடைத்தன. ஆனால், அதில் விழுப்புண்கள் இன்னும் வலித்துக்கொண்டே இருக்கின்றன.

நான் 1998 மார்ச் மாதத்தில் பதவியிலிருந்து ஒய்வு பெற்றேன். அப்போது மத்திய அரசு அதிகாரிகளுக்கு நீட்டிப்பு கொடுக்கும் பொறுப்புள்ள துறைக்கு அமைச்சராக இருந்தவர் என் இனிய நண்பர் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள். தோழர் செந்தில்நாதனைப் போல முப்பதாண்டு கால நண்பர். எஸ்.ஆர்.பி. என்று அழைக்கப்படும் இந்தத் தோழர், எனக்காக பலதடவை மேலதிகாரிகளோடு வாதாடியவர். என்னிடம் பதவி நீட்டிப்புக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். இவர் என் நண்பர் என்பதை தெரியாத எங்கள் களவிளம்பரதுறை தலைமை இயக்குநரான சுரோஷ் சோப்ரா அவர்களும், நிர்வாக துணை இயக்குநர் பீர் அவர்களும் நீட்டிப்பு கேட்கும்படி என்னை கேட்டுக்கொண்டார்கள். எந்த சமுத்திரம் மேல் அதிகாரிகளுக்கு தலைவலி போல் தோற்றம் காட்டினானோ அந்த சமுத்திரத்திற்கு அவர்கள் உதவ முன்வந்தது நெஞ்சை

நெகிழ்த்தியது. இந்த நிறைவோடு ஓய்வு பெறவேண்டும் என்று தீர்மானித்து அவர்களது வேண்டுகோளை நன்றியோடு மறுத்தேன்.

**பதவியில் இருப்பவர்கள் எப்போதாவது ஒருநாள் நாற்காலியை காலி செய்தாக வேண்டும். இதை உணர மறுக்கிறவர்கள் தான் அவதிக்கு ஆளாகிறார்கள்.**

அதோடு ஒரு மூத்த அதிகாரியின் நீட்டிப்பு இளைய சகாக்களின் பதவி உயர்வுகளை பாதிக்கும். இதுவும் என் மறுப்பிற்கு ஒரு காரணம். சுருக்கமாகச் சொல்லப்போனால் என் எஞ்சிய வாழ்க்கை நன்னடத்தை ஜாமீனில் விடுதலையாகி உள்ளது. இந்த பதவி ஓய்விற்குப் பிறகு எனக்கு நிற்கக்கூட நேரமில்லை. எழுத்தாளர் பணி.... இலக்கிய பேச்சுப்பணி.... இளைய தோழர்களின் படைப்புகளுக்கு முன்னுரை கொடுக்கும்பணி, கூடவே சும்மாதானா இருக்கீங்க இந்த வேலைய செய்யுங்க என்ற என் மனைவி கொடுக்கும்பணி.... வாழ்நாள் முழுதும் இனிமையான வேலைதான்.

நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து வந்தவன். ஐந்து வயதிற்குள்ளேயே தாய்-தந்தையை இழந்தவன். ஒற்றைப் பையன். என்னுடைய தாய்மாமா தங்கய்யா, சித்தப்பா பாண்டி ஆகியோரின் உதவியால் கல்லூரிப் படிப்பை முடித்தவன். நான் டெல்லிக்குப் போனபோது காலா மதராசிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால் இப்போதோ எங்குமே 'டால்' அடிக்கும் கறுப்பு மயம். என் நிறத்திற்காக அன்று சிரித்தவர்கள் முகத்தில், இப்போது எந்த இளக்காரமோ ஏளனமோ இல்லை. காலா மதராசிகள் கண்டிப்பானவர்கள் என்பது அவர்களுக்குப் புரிந்து விட்டது.

என்றாலும் இங்கே ஒன்றை நான் சுட்டிக்காட்ட வேண்டும். நான் தங்கியிருந்த ராமானுஜம் மெஸ்ஸுக்கு எதிரே ஒரு பிராமண குடும்பம் இருந்தது. இளந்தம்பதிகள். அவர்கள் என்மீது காட்டிய அன்பு இருக்கிறதே அதை சொல்லியும் தீராது; சொன்னாலும் மாளாது. அந்த சகோதரிக்கு மது என்று ஒரு சகோதரன். என் இனிய தோழன். இப்போது எங்கே இருக்கிறார்களோ? எப்படி இருக்கிறார்களோ? நிச்சயம் நன்றாகத்தான் இருப்பார்கள்.

இறுதியாக, எனது அரசு அலுவலக அனுபவம் இதைத்தான் சொல்கிறது.

"நேர்மையாக இருக்கவேண்டும்... விசுவாசமாகவும் இருக்க வேண்டும்... திறமையையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்... பொதுச் சொத்தில், ஒருகாசு கூட எந்த வகையிலும், நம்பையில் விழக்கூடாது... கெட்டது நடந்தால் அவ்வப்போது சாடி நல்லதின் பக்கம் நிற்கவேண்டும்... கோடிக்கணக்கான மக்கள் கொடுக்கும் வரிப்பணத்தில் சம்பளம் வாங்குகிற என்னைப் போன்ற அரசு ஊழியர்கள், அந்த மக்களை மனதில் நினைத்து விசுவாசமாக பணியாற்றினால், நமது குடும்பம் 'ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றும்"

இரண்டாவதாக, "தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட மக்கள் தூசி படிந்த கண்ணாடி. இந்தத் தூசியை, மேல் அதிகாரிகளாக இருப்பவர்களில் நான் குறிப்பிட்ட இராமநாதன் அவர்களைப் போல் துடைப்பவர்களும் உண்டு. எனது தமிழ் செய்தி துறைத் தலைவர் போல் தூசியை துடைக்கிறேன் என்கிற சாக்கில் உடைப்பவர்களும் உண்டு.

புதிதாக பணியில் சேருகின்ற இந்த இருபிரிவு இளைஞர்களும் இதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில்தான் நான் 'வேரில் பழுத்த பலா' என்ற நாவலை எழுதி 'சாகித்ய அகாதமி விருது'ம் வாங்கினேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஆரம்பத்தில் தூசி படித்த இந்தக் கண்ணாடியை உடைக்க முயற்சித்தவர்கள் மீது எந்தக் கோபமும் கொள்ளாமல், அதன்மீது படர்ந்த தூசிகளை துடைத்து விட்ட மேல் அதிகாரிகளையும், சகாக்களையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். காலா மதராசிகளுக்கு இக்கட்டான அறுபதுகளில், டெல்லியில் நுழைந்த எனக்கு என் போர்க்குணத்தை கூர்மைப்படுத்திய அப்போதைய டெல்லிப் பேராசிரிய தம்பதிகளான சாலய் இளந்திரையன், சாலினி இளந்திரையன், கோயில்பிள்ளை, எனக்கு யோகாசனம் சொல்லிக்கொடுத்த உறவினரான திரு. தங்கச்சாமி, முடித்திருத்தகம் நடத்திய என் தோழர் முதலியோருக்கு நன்றிக்கடன் பட்டவன்.

மத்திய தேர்வாணையக் குழுவிற்கு 1966-ஆம் ஆண்டு நேர்காணலுக்காக சென்ற முகம் தெரியாத இந்த முகத்திற்கு தன் சொந்த வீட்டிலேயே இடம் கொடுத்து ஆதரித்த முத்துச்சாமி என்ற தோழரையும் (இப்போது மதுரையில் இருக்கிறார்), இப்போதும் எனது பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளும் தொலைக்காட்சி இணை இயக்குநர் இராமகிருஷ்ணனையும், துணை இயக்குநர் பீர்முகம்மதையும், இந்திய திரைப்பட நிறுவனத்தின் தென்னக மேலாளர் பி.ஆர்.

பரமேஸ்வரனையும், சென்னை தொலைக்காட்சி இயக்குநர் ஏ. நடராசனையும், சென்னை வானொலி இயக்குநர்களான எம்.எஸ். கோபால், செல்வம், விஜய திருவேங்கடம், வேணுகோபால் ரெட்டி, சுப்பிரமணியம், நெல்லை வானொலி இயக்குநர் குக நமச்சிவாயம், சென்னை வானொலி நிகழ்ச்சி தயாரிப்பு அதிகாரி ரவீந்திரன், குமார், என்னை கேளாமலேயே எனது நாவல்களை ஒலிபரப்பிய இப்போதைய சென்னை வானொலி நிலைய இயக்குநர் வி.ஆர். குமார், இனிய தோழர் நல்லதம்பி, தஞ்சைவாணன், ஓய்வுபெற்ற-இப்போதும் என்னுடன் தொடர்பு வைத்திருக்கும் எனது இளைய சகாக்களான, களவிளம்பர அதிகாரிகள் தனசேகரன், திரேசநாதன், தமிழ்மணி, ரவி போன்ற தோழர்களையும் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கும்போது மனம் நெகிழ்கிறது. அன்புக்கு ஈடாக எதுவும் இல்லை என்று அழுத்தமாகச் சொல்கிறது.

என்க்கு அரசுப் பணியில் சோதனை நேரும்போதெல்லாம் என்பக்கம் நின்ற யு.என்.ஐ. தோழர். ரமேஷன், தினமணி சிகாமணி, தினந்தந்தி சுகுமார், தினமலர் உரிமையாளர் கிருஷ்ணமூர்த்தி, அதன் செய்தியாளர் அமுதன், செம்மலர் ஆசிரியர் கே.எம். முத்தையா, என் இனிய நண்பர் செந்தில்நாதன் ஆகியோர்கள் ஏதோ ஒருவகையில் அரசுப் பணியில் நான் நிலைத்திருக்க உதவி செய்தவர்கள்.

இந்தக் கட்டுரையும், வீட்டைச் கட்டிப்பார் கட்டுரையும் பிரசுரமாக காரணகர்த்தாவாக இருந்த குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி. அவர்களும், ஜ.ரா. சுந்தரேசன் அவர்களும் இந்த கட்டுரைகளை பிரசுரிக்கவில்லை என்றால் உங்களோடு நான் இப்படி விரிவாக என் அனுபவங்களை பகிர்ந்திருக்க முடியாது.

மேலே குறிப்பிட்டட அத்தனை பேரும் எனக்கு இனிய நினைவுகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓய்வுபெற்ற ஒருவருக்கு இனிய நினைவுகள் மட்டுமே இருந்தால் அதற்கு ஈடேது? இணையேது? இன்றைய இளைஞர்களுக்கு அண்ணல் காந்தியடிகள் சொன்னதுபோல் என் வாழ்க்கையே ஒரு செய்தியானால் மகிழ்வேன்.

பின்குறிப்பு:

இந்தக் கட்டுரையில் சில பகுதிகள் குமுதத்தில் வந்தவை அல்ல.

குமுதம் - 1983.

# தாழ்த்தப்பட்ட தமிழிசை

திருவையாறு தியாகராச ஆராதனையிலிருந்து, சென்னையிலுள்ள மியூசிக் அகாடமி என்று ஆங்கிலத்திலும், 'சங்கீத வித்வத் சபை' என்று புரியாத தமிழிலும் உள்ள கச்சேரிக்கூடம் வரை 'சங்கீத ரகளை' நடந்து முடிந்தது நினைவிருக்க வேண்டும். நினைவில் நிற்கமுடியாத - இந்த கர்நாடகக் கச்சேரிகளை, பத்திரிகைகள் பக்கம் பக்கமாய் விமர்சித்து, புகழ்ந்து தள்ளுவது, அடுத்த சங்கீத சீஸன் வரைக்கும் நீடிக்கும்.

இங்கே பலியாவது தமிழிசை இசை என்ற வார்த்தையைப் பயன் படுத்துவதற்கு, காலங் காலமாக நமது முதுகில் அழுந்தந்திருந்தமாக அழுத்தும் ஒரு காரணமும் உண்டு. செய்யுள் என்பது எப்படிக் கவிதை யாகாதோ, அப்படி சங்கீதம் இசையாகாது. சங்கீதம் என்பது மேட்டுக்குடி மக்களை தனிப் படுத்தவும், அவர்களது ரசனைக்கு ஒரு கவுரவம் கொடுக்கக் கூடியது மான புரியாத வார்த்தைகளைக் கொண்டது.

**பாட்டாளி மக்களால் மேற்கொள்ளக்கூடிய செயற்கரிய செயல்களை மேட்டுக்குடி மக்கள் செய்ய முடியாமல் போகும்போது, அவற்றை இழிவுபடுத்துவது முதலாளித்துவக் கலாச்சாரம். பனை ஏறுதல், மீன் பிடித்தல் போன்ற வீரத் தொழில்கள் இழிவாகக் கருதப்பட வேண்டும் என்ற ஒரு நிலையை தோற்றுவித்த பிரபுத்துவவாதிகள்தான் தமிழிசை மேல் கர்நாடக இசையை அழுந்த வைத்திருக் கிறார்கள். அதேசமயம் -**

**தேவார, திருவாசகப் பாடல்களை பகுத்தறிவின் பேரால் பாடாமல் இருப்பது தமிழிசைக்கு உட் பகையாகும்.**

### சங்கீதமும்-இசையும்

இதில் பாடப்படுகின்ற மொழி அந்நியமானது. மக்களுக்குப் புரியாதது. இன்னும் சொல்லப்போனால், அவர்களை மட்டம் தட்டுவது. ஆனால், இசை என்பதோ, எந்த மக்கள் அதைச் செவிமடுக்கிறார்களோ, அந்த மக்களின் மொழியில், அவர்களின் பண்பாட்டை எதிரொலிப்பதாகவும், மேம்படுத்துவதாகவும் ஒலிக்கக்கூடியது. சங்கீதம் காட்டில் பெய்த மழை. இசை, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல. சுருக்கமாகச் சொல்லப் போனால், சங்கீதம் ஒரு போலித்தனமான பிரமையை ஏற்படுத்துவது. இசையோ, தன்னை மக்களின் மொழி மூலம் பாட்டாக புரியவைத்து, அந்தப் பாட்டையும், அதன் பொருளையும் உணரவைக்கும் அடிநாதம். இதனால்தான், சைவ சமயக் குரவர்களில் ஒருவரும், திருவாசகத் தேனைக் காதிலும் கருத்திலும் பாய வைத்தவருமான மாணிக்கவாசக சுவாமிகள், "**சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்**" என்று அருளினார். ஒரு பாட்டின் பொருளை அதைக் கேட்பவர்களுக்கு புரியவேண்டும் என்று சொல்லாமல் சொன்னார். ஆனால், "**எங்கும் தமிழ், எதிலும் தமிழ்**" என்று பேசுவதற்கு என்றே பிறந்தவர்கள் உள்ள இந்தத் தமிழகத்தில், கேட்பவர்கள் பொருள் உணர்ந்து கேட்கும்படியான தமிழ்ப் பாடல்கள் பாடப்படுகின்றனவா?

இல்லை. முக்கால்வாசி இல்லை. மீதிக் கால்வாசியிலும், பெரும்பகுதி தமிழ்ப் பாடல்கள் வடமொழி கலந்தவை. இதற்குக் காரணம், தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகளும், சியாமா சாஸ்திரிகளின் பாடல்களும், முத்துஸ்வாமி தீட்சிதரின் பக்திப் பாடல்களும் தமிழிசையை ஆக்ரமித்து, அதை மெல்ல மெல்ல சாகடித்துக் கொண்டிருப்பதே. இந்தச் சங்கீத மும்மூர்த்திகள் பிறப்பதற்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே, மூன்று தமிழிசை மேதைகள் நமக்காக, தமிழிசையோடு கூடிய பல அரிய பாடல்களை விட்டுச் சென்றார்கள்.

### தமிழிசை மேதைகள்

முதலாமவர், 1550-ம் ஆண்டு சீர்காழியில் பிறந்து, நூற்றுக் கணக்கான தமிழ்ப் பாடல்களை இயற்றிய **முத்துத் தாண்டவர்**. இவரது பாடல்கள் இருபதாம் நூற்றாண்டின் நுழைவாயில் வரை கச்சேரிகளில் ஒலித்தன. இப்போதோ கேட்கக் கிடைக்காதவை இன்னொரு தமிழிசை மேதையான **மாரிமுத்தாபிள்ளை**, 1712-ம் ஆண்டு சிதம்பரம் அருகே தில்லைவிடங்கத்தில் பிறந்து, வெண்பா, மடக்கு, திருக்கு என்று பலப்பல வகையான பாக்களையும், பொருள் செறிவு கொண்ட

இசைப் பாடல்களையும் அருளியவர். மூன்றாவமர், 1711-ம் ஆண்டு தில்லையாடியில் உருவாகி, 258 இசைப்பகுதிகளைக் கொண்ட ராம நாடகத்தை எழுதியும், அவற்றில் நாற்பது ராகங்களைப் பயன்படுத்தியவருமான **அருணாசலக் கவிராயர்**. ஆனால், இன்றோ, இந்தச் சொந்த மொழி இசை மேதைகளை "வந்த மொழி" மேதைகள் துரத்திவிட்டனர். அவர்கள் துரத்தினார்களோ, இல்லையோ, அவர்களது பேரால், தமிழர்களின் இசை மேதைகள் இருட்டடிப்பு செய்யப்பட்டு வருகிறார்கள். இவ்வளவுக்கும் செட்டிநாட்டரசர் ராஜா சர் **அண்ணாமலைச்** செட்டியாரும், பாரதத்தின் முதலாவது நிதி அமைச்சர் திரு. **ஆர்.கே. சண்முகம்** செட்டியாரும், டி.ஏ. **நாராயணசாமிப் பிள்ளையும்**- எல்லாவற்றிற்கும் மேலாக **தந்தை பெரியாரும்** தமிழிசைக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள். இந்தத் தமிழிசை இயக்கம் வந்ததே ஒரு தனிக்கதை.

திருவையாறிலுள்ள தியாகராச சுவாமிகளின் நினைவாக அமைக்கப்பட்ட சபாவிற்கு, 144 வயதாகிறது. ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் விழாவில் அந்த சுவாமிகளின் தெலுங்கு கீர்த்தனைகள் இசைக்கப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாக பேர் பெற்ற அனைத்து வித்வான்களும் இதில் பாடுவார்கள்.

**சங்கீதக் குண்டர்கள்**

1931-ம் ஆண்டுவாக்கில் தமிழிசை மேதை பேராசான் **தண்டபாணி தேசிகர்** அங்கு பாடுவதற்காக அழைக்கப்பட்டார். அவரும், **தியாகராஜ சுவாமி**களின் இரண்டு கீர்த்தனைகளைப் பாடிவிட்டு, மூன்றாவதாக ஒரு தமிழ் பக்திப் பாடலை பாட முற்பட்டிருக்கிறார். அவ்வளவுதான், அங்குள்ள சங்கீதக் குண்டர்கள் அவரைப் பாட விடவில்லை. கூச்சலிட்டுக் குழப்பமிட்டு கீழே இறக்கி விட்டார்கள்.

இதைக் கண்ட கொதிப்பில்தான் **அண்ணாமலைச் செட்டியாரும்**, ஆர்.கே. சண்முகம் செட்டியாரும், **ரத்னசபாபதி** முதலியார் போன்றவர்களும் தமிழிசைக்கு மீண்டும் புத்துயிர் அளித்தார்கள். அப்படியும் தமிழிசைக்கு மேடை கொடுத்த மன்றத்தில், தமிழ்ப் பாடகர்கள் பாடுவதற்குத் தயங்கினார்கள். இதை மனதில் வைத்து, 4-1-44ல் ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்:-

**"எந்தப் பாடகர்களும் வர மாட்டோம் என்று சொல்லி இருந்தாலும், கடைசி முடிவில், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களும் நானும் மேடையிலேறிப் பாடிவிடுவது எனவும்கூட தீர்மானித்தோம்."**

இப்படி நமது முன்னோர்கள் முன் வந்தும், தமிழ்ப் பாடகர்கள் முன்வராததற்குத் தாழ்வு மனப்பான்மை காரணமாக இருக்க முடியாது. பின் என்ன காரணம்?

### தமிழிசையின் செட்டிநாட்டரசர்

தமிழிசைக்காக, செட்டிநாட்டரசர் ஒரு இயக்கம் தோற்றுவித்தாலும், அதிலும் இப்போது, கர்நாடக வாடை வந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆரம்பத்தில் வாத்தியங்களில் உருவான கர்நாடக வாசனை, இப்போது பாடல்களிலும் மெல்ல மெல்ல ஊடுருவி, தமிழ்ப் பாடல்களை நோகடித்து வருவதாகக் கூறப்படுகிறது. பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் இதை மனதில் வைத்துத்தானோ என்னவோ, "தமிழ்ப் பண்ணிசை ஏட்டில் இருக்கிறது. இலக்கணத்தில் உள்ளது. ஆனால் நாட்டில் நடமாடவில்லை. நடமாட நம் விடவில்லை" என்றார். அதாவது. பழியை பிறமொழிக் கீர்த்தனைகள் மீது போட்டு விட்டு, நாம் ஒதுங்கக்கூடாது என்கிறார்.

### இசை மறியல் அல்ல...

இப்படிச் சொல்வதால், நான் வடமொழிக்கோ, சங்கீத மும்மூர்த்திகளுக்கோ எதிராய் இசை மறியல் செய்வதாக பொருள் கொள்ளலாகாது. பாரதி குறிப்பிட்டது போல் தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகள் 'சுந்தரத்' தெலுங்கில் உதயமானது, அவர் தப்பல்ல. அவரது கீர்த்தனைகள் ஆங்காங்கு பாடுவதிலும் தப்பில்லை. ஆனால், அவையே எல்லாம் என்று ஆகி, தமிழிசை அது தோன்றிய மண்ணிலேயே புதைக்கப்பவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கோவிலின் கருவறைக்கு வேளியே அடிமைத்தனமாக இருக்கும் ஓதுவார் தமிழ்போல், தமிழிசையும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த சங்கீத மேட்டுக் குடித்தனத்தை, இளையராஜா போன்றவர்கள், தமிழ்ப் பண்ணால் முறியடித்திருக்கலாம். ஆனால், அவர்கள் ஏனோ அதில் முழுக்கவனம் செலுத்தவில்லை. இசைக்கருவிகளின் நாதம்தான் தமிழைப் பின்புறம் தள்ளுகிறது.

### பண்ணமைந்த பாடல்கள்

நமது தேவாரப் பாடல்கள் அனைத்துமே பண் அமைத்துப் பாடக்கூடிய வகையில் இயற்றப்பட்டவை. குறிப்பாக, திருஞானசம்பந்த சுவாமிகள், பாடல்களையும் பண்களையும் பின்னிப் பிணைத்தவர். ஆழ்வார் பாடல்கள் அத்தனையும் இசைத் தேனாய் மிளிர்பவை. ஆனால், இவற்றை எந்தக் கச்சேரிகளிலும் அதிகமாகக் கேட்க முடியாது.

### பெரியார் தமிழிசை மன்றம்

இந்த நிலையைக் கண்டும், வெகுண்டும், எங்கும் தமிழ் ஒலிக்க வேண்டும் என்று நினைக்கும் "ஸ்டூடண்ட்ஸ் ஜெராக்ஸ்" உரிமையாளர் **அருணாசலம்** அவர்கள், **தந்தை பெரியார் தமிழிசை மன்றம்** என்ற அமைப்பை தோற்றுவித்திருக்கிறார். அண்மையில் இதன் இசைவிழா, மூன்று நாட்கள் சென்னையில் நடந்தது. ஆண்கள் மட்டுமே வாசித்து வந்த நாதசுரத்தை அருமையாக வாசித்துப் புகழ்பெற்ற மதுரை **எம்.எஸ். பொன்னுத்தாய், திருப்பூர்** சகோதரிகளான **எஸ்.பி. சாரதா,** கலைமாமணி **ஏ.கே. காளீசுவரன்** ஆகியோரைக் கவுரவித்தார்கள். இந்தப் பெரியவர் மூலம், சங்கரதாஸ் சுவாமிகளின் நூறு பாடல்களை தஞ்சைப் பல்கலைக்கழகம் ஒலிப்பதிவு செய்துள்ளது.

நாடறிந்த தமிழிசைச் செல்வன் **முத்துக்கூத்தன்,** வெண்கலக் குரலில் தமிழ்ப் பாடல்களை ஒலிக்கும், **டி.கே.எஸ். கலைவாணன்** நாட்டுப்புற இசையை நயம்பட பாடும் **புஷ்பவனம் குப்புசாமி** போன்றவர்களின் இசை நிகழ்ச்சிகளையும் நடத்தியிருக்கிறார்கள். இவர்கள் இக்கால நல்ல கவிஞர்களான கவிஞர் தாராபாரதி, கவிஞர் **பல்லவன்** போன்றோரின் பாடல்களையும் பாடியிருக்கிறார்கள். தமிழிசை, பழம் பாடல்களை மட்டும் பாடிக்கொண்டு இருக்கக்கூடாது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. திரு. அருணாசலம் வெளியிட்டுள்ள ஒரு சிறுகுறிப்பு நூலில், தந்தை பெரியார் 1943-ம் ஆண்டு டிசம்பர் 25ம் தேதி குடியரசு இதழில், **"தமிழ்ப் பாட்டுக்கள் என்றால், அவை முழுக்க முழுக்கத் தமிழ் மொழியில் அமைந்தவைகளாகவே இருக்கவேண்டுமேயொழிய, 100க்கு 99 வடமொழி வார்த்தைகளைக் கொண்ட தமிழ்ப் பாட்டாயிருத்தல் கூடாது"** என்று குறிப்பிட்டு, பல அரிய கருத்துக்களையும் தொகுத்துத் தந்திருக்கிறார்கள்.

### தந்தை பெரியார் கருத்து

1944-இல் தந்தை பெரியார் **"நம் மொழியாவது, பாட்டு இசைக்கக்கூட பயன்படாது என்று சொன்னால் இந்த இழிமொழி நம் உயிரைப் போலல்லவா கவ்வுகிறதாய்"** இருக்கிறது என்று மிக்க வேதனையோடு கூறுகிறேன். சுருக்கமாகச் சொன்னால்..... தமிழன், தான் நுகரும் இசையை... தமிழில் இசை, தமிழில் பாடு, தமிழர்களைப் பற்றி, தமிழர்களுக்கு ஏற்றதை... தமிழர்களுக்குப் பயன்படுமாறு பாடு என்கிறேன்" என்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியிருக்கிறார்.

தமிழிசைக்கு ஆபிரஹாம் பண்டிதர், சட்டாம்பிள்ளை போன்ற கிறிஸ்துவப் பெரியோர்களும் அருஞ்சேவையாற்றியிருக்கின்றனர். இந்த வகையில் தமிழிசைக்குப் புத்துணர்ச்சி ஊட்டிய பெருமை, கிறிஸ்துவத் தமிழர்களுக்கும் உண்டு.

**உட்பகை**

தமிழிசை இயக்கத்தை யார் நடத்தினாலும் அதைப் போற்றியே ஆகவேண்டும். ஆனாலும் இதை நடத்துகிற தோழர்களுக்கு ஒரு பரிந்துரையும் செய்ய வேண்டியது அவசியமாகிறது. தமிழிசை என்ற பெயரில் பகுத்தறிவுக்குப் புறம்பானது என்று கூறிக்கொண்டு, தேவார திருவாசகப் பாடல்களை இசைக்காமலிருந்தால், அது தமிழிசைக்கு ஒரு உட்பகையாகும். இதேபோல், இந்த இயக்கத்தை ஒரு குறிப்பிட்ட சாதிக்கோ, அல்லது மொழிக்கோ எதிராகவும் திருப்பி விடலாகாது. எந்த வர்க்கம் ஆதிக்கம் செலுத்துகிறதோ, அந்த வர்க்கம், தனது சிறுபான்மை கலாச்சாரத்தைக் பெரும்பான்மை மக்கள்மீது சுமத்துவது உலக வரலாறு.

பாட்டாளி மக்களால் மேற்கொள்ளக்கூடிய செயற்கரிய செயல்களை மேட்டுக்குடி மக்கள் செய்ய முடியாமல் போகும்போது, அவற்றை இழிவுபடுத்துவது முதலாளித்துவக் கலாச்சாரம். பனை ஏறுதல், மீன் பிடித்தல் போன்ற வீரத் தொழில்கள் இழிவாகக் கருதப்பட வேண்டும் என்ற ஒரு நிலையை தோற்றுவித்த பிரபுத்துவவாதிகள்தான் தமிழிசை மேல் கர்நாடக இசையை அழுந்த வைத்திருக்கிறார்கள்.

தமிழிசைப் பாடல்கள் மக்களை மேம்படுத்துவதாகவும், பிற மொழிக்காரர்களை மட்டந்தட்டாததாகவும் இருக்கவேண்டும். தமிழிசையை, அப்போதைய ஆழ்வார்கள், நாயன்மார்கள் பட்டிதொட்டியெங்கும் பரப்பியது போல் மீண்டும் பரப்ப வேண்டும் என்ற ஒரே நோக்கையே கொள்ளவேண்டும். இல்லையானால், தாளம் தவறிப்போகும்; தமிழிசையும் தளர்ந்து போகும்.

வாசுகி - 1994.

# உலகம்மை-என் அம்மை

எனது சிறுகதைகளிலும், நாவல்களிலும் பிரதானமாக விளங்குபவை பெண் பாத்திரங்களே. இந்தப் பாத்திரங்கள், துவக்கத்தில் சமூக நியதிகளைத் தூக்கிச் சுமந்து கொண்டு 'பௌவிய'மாக இருக்கும். பிறகு, சமூக நியதிகள் எனப்படுபவை, தங்களை கொத்தடிமையாய் பிணைத்துக் கொண்டிருக்கும் சங்கிலிகள் என்பதை உணரும் போது, அந்தச் சங்கிலிகளை-அவை பொற்சங்கிலிகளாய் இருந்தாலும்-அவற்றை அடித்து நொறுக்கிக் கொண்டு, பெண் அடிமை பேணுவோருக்கு எதிராகப் போர்ப்பரணி பாடும்.

இக்கருத்தைத்தான், என் சிறுகதைகளை 'எம்.பில்' பட்டத்திற்காக ஆய்வு செய்த பேராசிரியர் துரைசாமியும், இதே பட்டத்திற்காக நாவல்களை ஆய்வு செய்த பேராசிரியர் சதாசிவமும் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

சுந்தரி - மல்லிகா - மணிமேகலை

ஓர் இளம் பெண்ணின் திருமணம், ஒருசில முட்டாள்

**இந்த உலகம்மையையே, சிக்கல் வரும்போதும், இலக்கிய வெற்றிக்கும், நான் மானசீகமாக இப்போது வணங்கி வருகிறேன். என்னால் படைக்கப்பட்டவள், இப்போது என்னைப் படைத்துக் கொண்டு இருக்கிறாள்!**

**ஏனென்றால், உலகம்மையில் என் சாயலைக் கண்டேன். ஏழைப் பெண்களின் அவல நிலையின் அடையாளத்தைப் பார்த்தேன். நாவல் எழுதுவதற்கு முன்பு இவளை சென்னைக்கு கொண்டு வந்து சீரழிக்கப் போனேன். ஆனால் அவளோ இப்படித்தான் எழுதணும் என்று ஆணை போட்டுவிட்டாள்.**

களால் நிச்சயிக்கப்படுவதை உணர்ந்து, ஒரு கிழவனுக்கு தான் நிச்சயிக்கப்பட்டிருப்பதை முறையிட்டும், அகலக் கைவிரித்த சுற்றத்தையும், காதலனையும், துச்சமாக்கி, தன் தலைவிதியைத் தானே நிர்ணயிக்கக் கிளம்பிய 'சோற்றுப் பட்டாளம்.' சுந்தரி-

ஆரம்ப காலத்தில் தன் நகைகளை மூலதனமாக்கி தொழிற்சாலையை துவங்கிய கணவனும், புகுந்த வீடும், தனக்கு குஷ்டரோக நோயின் அறிகுறிகள் தெரிய துவங்கியதும், கொடுமை புரிய, அவற்றின் வெம்மை தாங்காமல், அனாதை விடுதியில் அடைக்கலமாகி, பிறகு அந்த விடுதியின் வளர்ச்சிக்காக, கணவனையும், அண்ணன் தம்பிகளையும் எதிர்த்துப் போராடி, தன் சொத்தைப் பிரிக்கும் இல்லந்தோறும் இதயங்கள் 'மணிமேகலை'-

ரௌடியைக் கல்யாணம் செய்ய மறுத்ததற்காக, வளர்ப்புத் தாயால் விரட்டப்பட்டு, வறுமையால் வாடும் பெற்ற தாயிடம் வந்து, ஏழைப் பெண்களுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்தும் வீட்டுக்கார அம்மாவுக்கு எதிராகப் போராடி, தன்னை பாட்டாளி வர்க்க ஜன்சங்கிலியில் இணைத்துக் கொள்ளும் 'வளர்ப்பு மகள்" மல்லிகா-

ஆகிய இந்தப் பாத்திரங்கள் என்னை எழுத்தாளனாக அங்கீகரித்தவை. 'சோற்றுப் பட்டாளம்' ஒரு கல்லூரியில் பாட நூலாகவும், வளர்ப்பு மகள்' மத்திய செகண்டரி போர்டின் கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளிகளில் 12வது வகுப்பிற்கு பாட நூலாகவும் வைக்கப்பட்டுள்ளன. என்றாலும்-

**உலகம்மை உலகம்மைதான்**

எனக்கு மிகவும் பிடித்த பெண் பாத்திரம், இதுவரை சுந்தரி போலவோ, அல்லது மல்லிகா போலவோ, நாட்டு மக்களுக்கு அதிகமாக அறிமுகமில்லாத 'ஒரு கோட்டுக்கு வெளியே' நாவலில் வரும் உலகம்மைதான்! முன்னைய கதாபாத்திரங்கள், நான் பெற்ற பெண்கள். ஆனால் உலகம்மையோ, எனது தாய். முன்னவர்களை நான் எழுதி வளர்த்தேன். இவளோ, என்னை எழுதச் சொல்லி வளர்த்தாள்.

முதலில் கதையைச் சொல்கிறேன்.

உலகம்மை, குட்டாம்பட்டியில் உள்ள ஒரு பனையேறியின் மகள். இளம் வயதிலேயே தாயை இழந்தவள். இருபத்தோரு வயதுக்காரி. பனையில் இருந்து விழுந்து, முடங்கிப் போன தந்தையைக் காப்பாற்ற வேண்டியவள். விவசாயக் கூலிப் பெண் அவள் வீட்டின் மனைகூட, ஒரு பண்ணையாருக்கு உரியது.

தன்னையறியாமலே-கண்ணுக்குப் புலனாகாத, கருத்துக்குப் புலனாகாத ஏதோ ஒரு சமூக உணர்வு உள்ளவள்.

ஆள் பலமும், பண பலமும் கொண்ட பீடிக்கடை 'ஏஜெண்ட்', பீடி சுற்றும் தன்னை பெண்டாள நினைப்பதை அறிந்து, 'ஒனக்கு அறிவிருக்கா? ஒன் அக்கா தங்கச்சிய இடியேண்டா' என்று சொல்லி விட்டு, வயல் வேலைக்குப் போகும் வைராக்கியம் கொண்டவள்.

**வகுப்பும்-வர்க்கமும்**

சக கூலிப் பெண்கள், அவளின் தொழில் மாற்றத்திற்குக் காரணம் கேட்டபோது, ஏஜெண்டைப் பற்றி முறையிட, 'அவனை செருப்பால் அடித்திருக்க வேண்டும்' என்று யோசனை சொன்ன ஒருத்தியைப் பார்த்து - 'நீயாயிருந்தா அடிக்கலாம்..... ஒனக்கு அண்ணன், தம்பி, சொக்காரான் சொகக்காரன் இருக்கு.... எனக்கு யாரிருக்கா?,.....அவன் திருப்பியடிச்சா கேட்க நாதியில்லியே..... இல்லாதவன் பொண்ணு எல்லாத்துக்கும் மயினிதான் (அண்ணி)' என்று, தன் நிலையை உணர்ந்த யதார்த்தமான பெண். அதே சமயம், பண்ணையார் மாரிமுத்து நாடாருடன் வயலில் இருந்து ஊருக்குள் போகும்போது, அவர் தன் மகள் சரோஜாவை பெண் கேட்க வரும் மாப்பிள்ளைக் குடும்பத்தை 'பனையேறிக் பய குடும்பமா?' என்று கர்ணத்திடம் கேட்டபோது, பனையேறியின் மகளான உலகம்மை, தனக்குள்ளேயே சிந்திக்கிறாள்.

"பனையேறிப் பய குடும்பமான்னு" மாமா, நாக்கு மேல பல்லு போட்டு கேக்காரே.... ஏன்.... இவரு தாத்தா.... பனை ஏறினாராமே.... பனையேறுற நாடார் சாணான்னும், ஏறதவங்க நாடார்னும் ரெண்டு சாதியா மாறிட..... இப்படித்தான் ஜாதிங்க வந்திருக்குமோ?.... இத்தன சாதி இல்லாம.... ஏழைசாதி.... பணக்கார சாதின்னு ரெண்டு இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்! பிராமணன்ல ஏழை, பறையன் மாதிரி கஷ்டப்படுறான்... பறையன்ல பணக்காரன் பிராமணன் மாதிரி குதிக்கான். ஏழைப் பறையனும், ஏழை சாணானும், ஏழை பிராமணனும் ஒண்ணாச் சேர்ந்தா ஊரையே மாத்திப்பிடலாம்..... அம்மாடி என் புத்தி ஏன் இப்படிப் போவுது?...... எந்த ஜாதி சந்தைக்குப் போனால் நமக்கென்ன....?

இப்படி சமூக உணர்வுக்கும், தனது பலவீனமான நிலைமைக்கும் இடையே ஊசலாடும் உலகம்மை, பின்னதை வென்று, முன்னதைப் பலப்படுத்திக் கொள்கிறாள்.

மாரிமுத்து நாடார், சட்டாம்பட்டியில் உள்ள பட்டதாரி வாலிபனான லோகுவிற்கு, அழகான பெண்ணான உலகம்மையை

தன் மகள் சரோஜாவாகக் காட்டி பையனை மயங்க வைத்து, இறுதியில் மணமேடையில் தன் மகளை உட்காரச் செய்வதற்காக, ஆள் மாறாட்டம் செய்கிறார். உலகம்மை, இந்த தில்லுமுல்லில், அவளை அறியாமலே பயன்படுத்தப்படுகிறாள். விவரம் தெரிந்ததும், நேராக சட்டாம்பட்டிக்குப் போய், லோகுவிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு வந்து விடுகிறாள்.

**பிராந்தனை ஏவி...**

மாரிமுத்து நாடாரின் ஆதிக்க பலமும், அசுரத்தனமும், தெரிந்திருந்தாலும், தன் உடம்பைக் காட்டி, ஒரு திருமணம் நடப்பதையோ, பிறகு மணமக்கள் இருவரும் கஷ்டப்படுவதையோ விரும்பாத உலகம்மை, நியாயத்தின் பொருட்டு, சிலுவை ஏந்திக் கொள்ளத் தயாராகிறாள்!

தந்தை மாயாண்டி, அவள் மானபங்கப் படுத்தப்படலாம் என்று சொன்னபோது, 'நான் புலிக்குப் பொறந்தவ..... ஒம்மோட மவள்..... எந்தப் பய வேணுமுன்னாலுங்ம வாலாட்டிப் பார்க்கட்டும். அவன் தலய வெட்டி ஒம்ம காலுல வைக்காட்டி, நான் உலகம்மல்ல' என்று சூளுரைக்கிறாள்.

உலகம்மை, லோகுவிடம் தெரிவித்த உண்மை ஊருக்குத் தெரிந்து விடுகிறது. மாரிமுத்து நாடாரின் வயலில் வழக்கம் போல் வேலை செய்து கொண்டிருக்கும் அவள், மாரிமுத்துவின் சொந்தக்காரன் 'பிராந்தனால்' கண்டபடி திட்டப்பட்டு வெளியேற்றப்படுகிறாள். சக கூலிப்பெண்கள் உதவிக்கு வந்தாலும், உலகம்மை அதை நாசூக்காக நிராகரித்து விட்டு, சட்டாம்பட்டியில் வயல் வேலைக்குப் போகத் தீர்மானிக்கிறாள்.

**ஒரு கோட்டுக்கு உள்ளே...**

விவகாரம் இத்துடன் நிற்கவில்லை. அவள் தந்தை மாயாண்டி, மாரிமுத்து நாடாரிடம் என்றோ வாங்கிய கடனுக்காக, ஒரு கோட்டுக்குள் நிறுத்தப்படுகிறார். இன்னும் சில கிராமங்களில் நடந்து வரும் சம்பிரதாயப்படி, வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்காத ஏழை எளியவர்கள், வட்டமாகப் போடப்பட்ட கோட்டுக்குள் வைக்கப்படுவார்கள். அதை அவர்கள் தாண்டக் கூடாது. தாண்ட முடியாது. உலகம்மை, சட்டாம்பட்டி வயலில் இருந்து நேராக தந்தை சிறை இருக்கும் கோடு போட்ட இடத்திற்கு வருகிறாள்.

அவர் 'தண்ணீர் தண்ணீர்' என்று கதறுகிறார். அவரை மீட்கப்போகும் மகளை, மாரிமுத்து கோஷ்டி அச்சுறுத்துகிறது. அக்கம் பக்கம் நிற்பவர்கள், 'கண்டுக்கவில்லை.'

காளியம்மன் கோவிலைப் பார்த்து, 'அடியே.... காளி... இவ்வளவு நடந்த பிறகும் ஒனக்கு.... அங்க இருக்க என்னடி யோக்கியத இருக்கு?' என்று கத்திக்கொண்டே, நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள போலீஸ் நிலையத்தைப் பார்த்துப் போகிறாள்.

ஆரம்பத்தில் அதட்டிப் பேசிய தலைமைக் கான்ஸ்டபிள், உலகம்மையின் ஆவேசத்திற்குப் பயந்து, குட்டாம்பட்டி வருகிறார். அவரைக் கண்டதும், கோடு அழிக்கப்படுகிறது. கான்ஸ்டபிளுக்கு 'கலர் பாட்டல்' உடைக்கப்படுகிறது.

மாயாண்டியே குடித்து விட்டு கோடு கிழித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. உலகம்மை, சுற்றிலும் நின்ற கிராம மக்களைப் பார்த்து, போலீஸாரிடம் உண்மையைச் சொல்லும்படி மன்றாடுகிறாள். எல்லா வாய்களும், நோய் கண்டது போல் மூடுகின்றன.

தலைமை கான்ஸ்டபிள் அரசியல் பின்னணியும், ஆள்பலமும் கொண்ட மாரிமுத்து நாடாருடன் சேர்ந்து கொண்டு, மாயாண்டியை 'குடித்துக் கலாட்டா செய்தான்' என கைது செய்து கொண்டு போகிறார்.

உலகம்மை 'அய்யா அய்யா' என்று முனங்கிக் கொண்டே, பின் தொடர்கிறாள். ஊர் ஜனங்களோ, வேடிக்கைப் பார்க்கிறார்கள். அதுவும், அவனைப் பின் தொடர்ந்து சென்று வேடிக்கை பார்க்கிறார்கள்.

**புதுமைப் பெண்ணாய்...**

உலகம்மையால் பொறுக்க முடியவில்லை. வெடிக்கிறாள். நாடி நரம்பெங்கும் வியாபித்திருந்த தைரிய அணுக்கள் ஒன்றிரண்டாய், இரண்டு நான்காய், நான்கு பதினாறாக, பதினாறு இருநூற்று ஐம்பத்தாறாய் பிளந்து, அடக்க முடியாத 'அணு பிளப்பாகி', அணு குண்டை அடியில் வைத்திருப்பவள் போல் கத்துகிறாள்.

"நீங்கள்ளாம் மனுஷங்களாய்யா... பொட்டையிலயும் கேடு கெட்ட பொட்ட பயலுவ.... ஏன் பின்னால வாரீக? உள்ளதைச் சொல்ல பயப்படுற நீங்களெல்லாம் எதுக்காவ மனுஷன்னு பூலோகத்துல லாந்தணும்? போங்கய்யா.... ஒங்க வேலையைப் பாத்துக்கிட்டு....'

மாயாண்டி லாக்கப்பில் அடைபடுகிறார். வழியில் சென்னைக்குப் போகும் லோகுவைப் பார்த்தாலும், உலகம்மை-அவன் கேட்டும்-தன் கஷ்டத்தைக் கூறவில்லை.

போலீஸ் நிலையத்தில் காத்துக் கிடந்து, வேலைக்குப் புதிதாகையால் இன்னும் கெட்டுப் போகாமல் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து, எங்க அய்யாவ:... மாரிமுத்து நாடார் குடுத்த கடனெ சாக்கா வச்சி... கோட்டுக்குள்ள நிறுத்திட்டாரு..... போலீஸ்.... ஏழை மக்களோட துணைவன்னு சொல்லு தாங்களேன்னு இங்க வந்து, இந்த அய்யாகிட்ட சொன்னேன். இந்த அய்யாவும் வந்தாரு.... கோட்டுக்குள் நிறுத்துனவங்கிட்டயே கலர் குடிச்சிட்டு, 'பட்ட போட்டார்'னு என் அய்யாவ, இழுத்துக்கிட்டு வந்துட்டாரு நானும் கேக்குறேன்... எங்கய்யா சாராயம் குடிச்சதுக்கும், இந்த போலீஸ் அய்யா, மாரிமுத்தோட கலர் குடிச்சதுக்கும் என்ன வித்தியாசம்? சொல்லுங்க எசமான்?

மாயாண்டி விடுதலை செய்யப்படுகிறார். மாரிமுத்து நாடார் எச்சரிக்கப்படுகிறார். ஆனால் விவகாரம் முடியவில்லை. சப்-இன்ஸ்பெக்டரை, உலகம்மை 'வச்சிக்கிட்டு' இருப்பதாக ஊரில் செய்தி அடிபடுகிறது. ஊர்க்காரர்களை, பொட்டப்பயல்கள் என்று சொன்னதற்காக, ஊர் கூட்டப்பட்டு, உலகம்மைக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. அதோடு, மாரிமுத்துவின் ஆட்கள் உலகம்மையின் வீட்டைச் சுற்றியுள்ள தத்தம் நிலத்தை, சுவரெழுப்பி அடைக்கிறார்கள். அவளுக்கு இருந்த ஒரே வழியும் அசுத்தம் செய்யப்படுகிறது. இரவில் கூரையில் கற்கள் விழுகின்றன.

உலகம்மை அதிகாரிகளிடமும், பஞ்சாயத்துத் தலைவரிடமும் முறையிடுகிறாள்.

பஞ்சாயத்தின் முன்னால்...

ஊர்க் கூட்டம் கூட்டப்படுகிறது. ஆனால், அவள் புகாரை எடுத்துக் கொள்ளாமல், அவள் சக்திக்கு மீறிய அபராதத் தொகையை ஏன் கட்டவில்லை என்று அங்கு கேட்கப்படுகிறது. ஊராரை, 'பொட்டப் பயலுக' என்று முன்பு சொன்னதற்கு, இப்போதும் விளக்கம் கேட்கப்படுகிறது.

உலகம்மை, ஊரில் இருந்து தள்ளி வைக்கப்படுகிறாள். தனிமையில் தவிக்கும் அவள், சேரிக்குச் செல்கிறாள். சேரி ஜனங்கள்-குறிப்பாக பட்டதாரி இளைஞன், அருணாசலத்தின் ஆதரவு கிடைக்கிறது.

தண்ணீர் பிரச்சினையில் உண்ணாவிரதம் இருக்கும் அருணாசலம், அதை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் வெற்றியுடன் முடித்துக் கொள்ளும் போது, உலகம்மை அவனுக்கு வாழைப் பழம் கொடுக்கிறாள். ஊர்ப் பிரமுகர்கள் வெகுண்டெழுகிறார்கள்.

## புரட்சிப் பெண்ணாய்...

உலகம்மை வயலுக்குப் போயிருந்த போது, அவள் வீட்டுக்கு உள்ள ஒரே வழியும் அடைபடப் போகிறது. வீட்டுக்குள்ளேயே சிறைபடப் போகும் நிலையில், மாயாண்டி மன்றாடுகிறார். கதறுகிறார். ஊர் மக்கள் காலில் விழுகிறார். பலனில்லை. இறுதியில் வழி அடைபடும் முன்னே அவர் உயிர் விடை பெறுகிறது.

வீட்டுக்கு வந்த உலகம்மை, கதறுகிறாள். விடிய விடிய அய்யாவை வைத்து 'அழகு' பார்க்கிறாள். மறுநாள் காலையில் பிணத்தைத் தூக்க வந்த ஊர்க்காரர்கள் முன்னால் கண்ணீர் விடுவதே பாவம் என்று கருதி, அழுகையை ஆவேசமாக்கி, ஊராரை உள்ளே விடாமல், தன்னந்தனியாய் பிணத்தைத் தூக்கிக் கொண்டு போய் சேரி ஜனங்களின் ஒத்தாசையுடன் எரிக்கிறாள்.

அருணாசலம் 'கொள்ளி' வைக்கிறான்.

"ஊர்க்காரன் காலுல விழுந்ததுக்காக, நான் திட்டுவேன்னு பயந்து செத்துட்டீரா? என்ன பெத்த அய்யா! கோழி மிதிச்சு குஞ்சு சாவாதுன்னா, குஞ்சி மிதிச்சி கோழி சாவுமாய்யா... என்னப்பெத்த அய்யா?"

உலகம்மை கதறுகிறாள்.

சேரியில் சில நாள் இருக்கும் உலகம்மை, ஒரு முடிவுக்கு வந்து விடுகிறாள். 'மேல் ஜாதியில் இருக்கும் ஏழை பாழைங்களும், ஹரிஜனங்கள் தான்.... அவங்களும் ஹரிஜனங்களோட சேரணும்' என்று நினைத்து, அதற்கு முன் மாதிரியாக நடக்க விரும்பி, கிராமத்திற்கு வந்து, தன் வீட்டு தட்டு முட்டுச் சாமான்களை எடுக்கிறாள்.

'ஜாதிப் பெண்' சேரியில் போயிருப்பதை விரும்பாத ஊர் மக்கள், இப்போது அவளை, அங்கே வரும்படி கெஞ்சுகிறார்கள். பலருக்கு அவளை அளவுக்கு மீற கொடுமைப்படுத்தி விட்ட குற்ற உணர்வும் வருகிறது.

"பறக் குடியில் போய் இருக்காதே! அது உனக்கும் கேவலம்..... எங்களுக்கும் கேவலம்" என்று சொல்லும் கணக்கப் பிள்ளையைப் பார்த்து உலகம்மை கர்ஜிக்கிறாள்.

"நான் இப்போ பறச்சிதான்..... அப்படி ஆனதுனால சந்தோஷம் இல்லாமப் போவல. நான் ஒருத்தி போறதால.... மேல் ஜாதி எல்லாம் போயிடுமுன்னா, ஒங்க ஜாதிங்க எவ்வளவு இத்துப் போயிருக்கணும்? என்னைப் பத்திக் கவலைப்படாம ஒங்களைப்

பத்தி மட்டுமே கவலைப்படுங்க.... நான் மேல் ஜாதியில் செத்து, கீழ் ஜாதியில் பொழைச்சிக்கிட்ட பொம்பல!....."

உலகம்மை சேரியில் சேர்கிறாள்.

ஹரிஜனப் பையன் அருணாசலம் மூலம் நான் சொன்னேன்.

"மேல் ஜாதி ஏழையும், கீழ் ஜாதி ஹரிஜனங்களும் ஒரே வர்க்கமாய் போற காலம் வரப்போவது....... நீ சேரியில் சேருற காரியம், எதிர்காலத்தில் ஒருவேளை நடக்கப் போற சமதர்மப் புரட்சிக்கு ஒரு காரணமாய் அமையலாம்."

உலகம்மையை வெறும் வீரப் பெண்ணாக-உணர்ச்சிகளை ஒடுக்குகிறவளாக மட்டும் நான் சித்தரிக்கவில்லை. அவளின் மென்மையான உணர்வுகளையும் காட்டியிருக்கிறேன்.

லோகுவிடம், ஆள் மாறாட்டத்தைச் சொல்லப் போகிறவள், அவன் மாரிமுத்து நாடார் மகள் சரோஜாவை மணந்து கொள்ள வேண்டும் என்று வாதாடுகிறாள். அவன் இளநீர் சாப்பிடச் செல்லும்போது, "சாப்பிட்டால் சரோஜாக்கா கூடத்தான் சாப்பிடுவேன்" என்கிறாள்.

லோகு, பஸ் நிலையத்தில் அவளைப் பார்த்து, 'இதுதான் கடைசி பஸ். போகட்டுமா? என்று சொல்லிவிட்டு, அவன் போனபோது 'கடைசி பஸ்ஸா.... கடைசி சந்திப்பா' என்று தனக்குள்ளேயே மருகுகிறாள்.

சரோஜாவுக்கு, வேறொரு இடத்தில் திருமணமானதும் லோகுவை அல்லும் பகலும் நினைக்கிறாள். வக்கீல் நோட்டீஸை, அவன் எழுதிய காதல் கடிதமாகக் கூட நினைத்துப் படிக்கிறாள்.

ஓர் ஏழைப் பெண்-அதுவும் இளம்பெண், ஊரை எதிர்த்து தன்னந்தனியாகப் போராட முடியுமா? என்று சில விமர்சகர்கள்-அதுவும் கண்ணகி மதுரையை எரித்ததை நம்புகிறவர்கள்-கேட்டார்கள். உலகம்மையைப் போன்று, பல பெண்கள் குக் கிராமங்களில் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஊரில் முக்கால் வாசிப் பேர் ஏழை எளியவர்கள். இவர்கள், உள்ளூர, உலகம்மை மீது அனுதாபம் கொண்டாலும், வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்க முடியாதவர்கள் என்பதை சுட்டிக்காட்டி இருக்கிறேன். அதோடு காலம் மாறி, சமூக அமைப்பு மாறுதலுக்குட்பட்டு வருகிறது.

இந்த நிலைமை, இயல்பிலேயே வீரமுள்ள பெண்கள், நியாயத்திற்குப் போராட களம் அமைத்துக் கொடுக்கிறது. இது

சென்னை நகர சாளரங்கள் வழியாக கிராமங்களைப் பார்ப்பவர்களுக்குப் புரியாது.

இந்த உலகம்மையை தமிழில் வந்த தனி ரக நாவல் என்று வல்லிக்கண்ணன் வர்ணித்தார்.

'உலகம்மை தமிழில் பின்னால் தோன்றும் நாவல்களில் எதிரொலிசெய்வாள்' என்று ஈழத்துத் தமிழறிஞர் டாக்டர் கைலாசபதி கருத்துத் தெரிவித்தார்.

சென்னை வானொலியில் நாடகமாக்கப்பட்டு, இருமுறை ஒலி பரப்பாகியது. பிறகு அகில பாரத நாடக நிகழ்ச்சியில், 14 மொழிகளில், 87 நிலையங்கள் மூலமாக, ஒரே சமயத்தில் குரல் கொடுத்தாள் உலகம்மை.

**உலகம்மை படைப்பின்போது...**

உலகம்மையைப் படைக்கும் போது அழுதிருக்கிறேன். முஷ்டிகளால் மேஜையைக் குத்தியிருக்கிறேன். அவள் தந்தை இறந்தபோது என் தந்தை இறந்ததுபோல், ஏங்கி அழுதேன். ஏனென்றால், உலகம்மையில் என் சாயலைக் கண்டேன். ஏழைப் பெண்களின் அவல நிலையின் அடையாளத்தைப் பார்த்தேன். உலகம்மை சேரிக்குப் போன பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளை இரண்டாவது பாகமாக எழுதும்படி நண்பர்கள் சொல்கிறார்கள். அதே சமயம், இனிமேல் அப்படி எழுத முடியுமா என்று கேட்கிறார்கள். எனக்கும் பயமாக இருக்கிறது.

எப்படியோ கச்சிதமாக அமைந்த உலகம்மையை, பலவீனப்படுத்த நான் விரும்பவில்லை. நாவல் எழுதுவதற்கு முன்பு, இவளை சென்னைக்குக் கொண்டு வந்து, சீரழிய வைக்க நினைத்தேன். ஆனால் அவளோ ஒரு கட்டத்திற்கு வந்ததும், 'இப்படித்தான் எழுதணும்' என்று ஆணையிட்டு விட்டாள்.

நீங்கள் சொன்னால் நம்புவீர்களோ என்னமோ, இந்த உலகம்மையையே, சிக்கல் வரும்போதும், இலக்கிய வெற்றிக்கும், நான் மானசீகமாக இப்போது வணங்கி வருகிறேன். என்னால் படைக்கப்பட்டவள், இப்போது என்னைப் படைத்துக் கொண்டு இருக்கிறாள்!

**பின்குறிப்பு:**

அண்மையில் பேராசிரியர் சிவத்தம்பியை நான் சந்தித்தபோது இந்த நாவலில் எதிர்கால தலித்திய போராட்டத்திற்கான விதை உள்ளடங்கி இருந்ததாக குறிப்பிட்டார்.

**மங்கை – 1980.**

# பதிவுபெறாத படைப்பாளிகள்

உலக் இலக்கியங்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படுபவைகளில் எதைப் படித்தாலும, அது வாசகர்களின் மனோபாவத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துவதுண்டு, இப்படிப் பட்ட ஒரு திருப்பு முனையை என்னுள்ளே ஏற்படுத்தியது பிரெஞ்சுக்காரர் ஆன ஹென்றி ஷாரியர் எழுதிய 'பட்டாம் பூச்சி' என்ற மாபெரும் இலக்கிய படைப்பாகும்.

பொதுவாக எந்த எதிர்மறையான பிரச்சினையும், ''நாமார்க்கும் குடியல்லோம்'', 'அஞ்சுவதும் இல்லை, அஞ்ச வருவதுமில்லை' என்ற நாவுக்கரசரின் வீரம் செறிந்த வரிகளை, நெஞ்சுக்கு உரமாக்கி. நிமிர்ந்து நிற்பவன் நான். ஆனாலும் அண்மையில் எனக்கு ஒரு சோதனை ஏற்பட்டபோது, சிறிது ஆடிப்போய் விட்டதும் உண்மை தான். என்றாலும், புதுடெல்லிக்கு ரெயிலில் சென்ற போது இந்தப் பட்டாம்பூச்சியை படித்துப் படித்து இப்போது நானே ஒரு பட்டாம்பூச்சியாகி விட்டேன் எந்த ஆணவத்தையும் எதிர்த்து நிற்கும் துணிச்சலையும், ஆற்றலையும் இந்தப் பட்டாம்

**ஒரு எழுத்தாளர், தனக்கு வேண்டிய எழுத்தாளரைப் பற்றி படம் காட்டுகிறார். உடனே, அவர் இவருக்கு சாகித்ய அகாதமி பரிசு வாங்கிக் கொடுக்கிறார்.**

**இன்னொரு எழுத்தாளர், சாகித்ய அகாதமி பரிசு பெற்ற ஒரு எழுத்தாளரை நேர்காணல் விதிகளை மீறி வானளாவ புகழ்கிறார். உடனே, புகழப்பட்டவர் புகழ்ந்தவரைப் பற்றி ஒரு குறும்படம் எடுக்கிறார். இப்படி அசிங்கமாகிப்போன தமிழ் இலக்கியச் சூழலில் கவிஞர்கள் சிற்பி, ஈரோடு தமிழன்பன், கு. சின்னப்பபாரதி ஆகியோரது படைப்புகள் நிராகரிக்கப் படுகின்றன.**

பூச்சி எனக்கு வழங்கியிருக்கிறது!

பட்டாம்பூச்சியின் படத்தை மார்பில் பச்சை குத்தி, அதனாலேயே அந்தப் பெயரைப் பெற்ற இருபத்தைந்து வயது பிரெஞ்சு இளைஞன் ஒருவன் செய்யாத கொலைக்காக தண்டனை பெற்று, பிரெஞ்சு கயானாவில், கொடியதும், கொடூரமானதுமான தீவாந்திர சிறைக்கு கொண்டு செல்லப் பட்டதையும், அங்கிருந்தும் அதைப்போன்ற பிற சிறைகளில் இருந்தும் அவன் தப்பிக்க முயற்சிகள் மேற்கொள்வதையும் அந்த முயற்சிகள் முறியடிக்கப்படுவதையும், இறுதியில் அவன் முயற்சி வெற்றி பெற்று சுதந்திர மனிதனாக மாறுவதையும் காட்டும் விடுதலைக் காவியம் இது.

செய்யாத குற்றத்திற்காக தண்டனை பெறுவதற்கு காரணமான நீதிபதி, ஜூரர்கள், அரசாங்க நீதிபதி போன்ற சுவையில்லாத பேர்வழிகளை பழிவாங்கியே தீர்வது என்று தீர்மானத்துடன் அட்லாண்டிக் சமுத்திரத்தின் மறுகோடியில் உள்ள தீவாந்திர சிறைக்கு செல்கிறான்.

புத்தம் புதிய ரூபாய் நோட்டுக்களை கட்டை விரல் பருமனுள்ள ஒரு குழாயில் அடைத்து, அதை மறைப்பதற்காக அவன் ஆசன வாயின் வழியாக பெருங்குடலுக்குள் தள்ளிவிடும்போதே உற்சாகம், 'திகில்' ஆகிறது. சிறைச்சாலையில் பயங்கரமான மரணக்கூச்சல்கள்.... சித்திரவதைகள்... ஆண்டுக்கு எண்பது சதவீதம் கைதிகள் இறந்து விடும் கொடுமை.... தனிமைச்சிறை.... தலைக்கு மேலே 'தொங்கும் விளக்கே கண்ணை வலிக்க வைக்கும் நிலமை. 'தேகா' என்ற சகக் கைதியின் உதவியால், சிறையை வெடிவைத்து தகர்க்க முயற்சி செய்து பிடிபட்டுவிடுகிறான்.

இதனால், பயங்கரமான ஒரு கொட்டடிக்குள் மாட்டப்படுகிறான். எதிரே உள்ள கடல் அலைகள் அவன் இடுப்பு வரைக்கும் வந்துபோகும். இப்படிப்பட்ட சிறைகளை எல்லாம் தப்பி, கட்டுமரம் மூலம் தப்பிக்க பார்க்கிறான்.

பதிமூன்று வருடங்களாக, கொட்டடிகளில் இருந்து தப்பிக்க பல்வேறு முயற்சிகள் செய்து, 1945-ஆம் வருடம் அக்டோபர் 15-ந் தேதி தப்பித்த 'பட்டாம்பூச்சியை'ப் படிக்கும் எவருக்கும் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளும் உறுதி கிடைக்கும்.

ஆரம்பத்தில், பிரெஞ்சு மொழியில், பாப்பிலியான் என்ற தலைப்பில் வெளியான இந்தப் படைப்பு பின்னர் பல மொழிகளிலும் வெளியாகி திரைப்படங்களாகவும் வெளிப்பட்டது.

'இந்தப் படைப்பை படியுங்கள் என்றுதான் சொல்ல முடிகிறதே தவிர, இப்படி நயங்கள் உள்ளன என்று என்னால் பரிந்துரைக்க இயலவில்லை. காரணம் ஒவ்வொரு வரியுமே ஒவ்வொரு விடுதலை விரும்பியின் உயிர்த் துடிப்பு.... ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு விடுதலை விரும்பியின் விடாமுயற்சிக்கு உரைகல்....

இந்தப் படைப்பை படிப்பவர்கள், கை, கால்களை இழந்தும், கண்கள், மூக்குகளை இழந்தும் குற்றுயிராய் வாழும் தொழுநோயாளிகள் இழக்காத மனித நேயத்தையும், சிறைச்சாலைக்குள் நடைபெறும் கொலை, கொள்ளை, லஞ்ச லாவண்யங்களையும் கிட்டத்தட்ட நம்மூரில் நடப்பது போலவே சித்தரிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக 'பட்டாம்பூச்சி' பட்டபாட்டை நினைக்கும்போது, நாம் படும் பாடு ஒரு பாடே இல்லை என்பது புரியும்.

இந்த உண்மைக்கதையை இருபத்தோரு ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் மொழி பெயர்த்து, அது குமுதத்தில் வளியாகியது. இதை நூலாகக் கொண்டு வந்த 'மணிவாசகர் திப்பகத்தின் உரிமையாளரும், பிரபல இலக்கியவாதியுமான டாக்டர் ச. மெய்யப்பன் 'மூலமா', 'மொழி பெயர்ப்பா' என்று ஐயுறும் வரையில் இந்த உயிரோவியத்தை வழங்கிய அவருக்குத் (ரா.கி. ரங்கராஜன்) தமிழுலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது' என்கிறார். இதே கருத்தை சுஜாதாவும் தமது முன்னுரையில் சொல்லி இருக்கிறார்.

இந்த உரைநடைக் காப்பியத்தை தமிழுக்கு அப்படியே தந்த ரா.கி. ரங்கராஜன் அவர்களின், மொழிபெயர்ப்பு திறனை நமது இலக்கிய உலகம் இன்றும் அங்கீகரிக்கவில்லை. தொ.மு. சிதம்ப ரகுநாதன், த.நா. குமாரசாமி, தா.ந. சேனாதிபதி, சரஸ்வதி ராம்நாத், விஜயலட்சுமி சுந்தரராசன் போன்ற மொழி பெயர்ப்பாளர் வரிசையில் குறிப்பிடப்பட வேண்டியவர் இந்த ரங்கராஜன். இப்படி ஒரு மொழி பெயர்ப்பை நான் படித்ததில்லை வானொலியில் மொழி பெயப்பிலேயே மூழ்கிப் போன என்னை மிகவும் சிறிதாக்கிவிட்டார் இந்த ரா.கி.ர. ஆனாலும் இவர் நம்மவர்களால் கண்டுகொள்ளப் படவேயில்லை. சென்னையில் 'சாகித்ய அகாதமி' நடத்திய மொழி பெயர்ப்பு கருத்தரங்கிலும் இவர் புறக்கணிக்கப்பட்டார். இதுமட்டுமல்லாமல், இவர் எழுதிய 'கையில்லாத பொம்மை' என்ற நாவல் திறமை இருந்தும் டிகிரி வாங்காததால் சிரமத்துக்குள்ளாகும் ஒரு இளைஞனைப் பற்றிய கதை.

சுஜாதாவிற்கு முன்பே தமிழில் நவீனத்துவத்தை கொண்டு வந்தவர் ரா.கி.ரா என்று நான் அந்தக் காலத்திலேயே எனது 'குற்றம் பார்க்கில்' சிறுகதையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

இவரைப்போல் இலக்கியப் பதிவுபெறாத ஒரு அற்புதமான எழுத்தாளர் **ஜ.ரா. சுந்தரேசன்.** இவரது 'அப்புசாமி சீதாப்பாட்டி' சிறுகதைகளுக்கும், நாவல்களுக்கும், தமிழ் இலக்கியத்தில் தனி வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டியவை. ஆனால், குமுதம் பத்திரிகையில் எழுதினார் என்கிற ஒரே காரணத்திற்காகவே இவர் இலக்கியப்பதிவு பெறாமல் இருக்கிறார். இவரது நடை எளிமையாகவும், அதேசயமம் நையாண்டியாகவும் இருக்கும். மேஜீக்கல் ரியலிசம் என்று சொல்கிறார்களே-மாந்திரீக யதார்த்தம், அதை அந்தக் காலத்திலேயே 'நெருங்கிநெருங்கி வருகிறாள்' என்ற நாவலில் கொண்டுவந்தவர் சுந்தரேசன். இவரைப்போல் சண்முகசுந்தரம் என்ற புனிதன், சுந்தர பாகவதர் என்ற பெயரிலும், பல அற்புதமான கதைகளை சிலேட நடையில் எழுதியவர். இவர்களது குமுதக் குருநாதரான எஸ்.ஏ.பி. அவர்களின் **'காதலென்னும் தீவினிலே', 'சக்தி'** போன்ற படைப்புகளும் மிகவும் ஆழமானவை, தரமானவை. இவரது படைப்புகளும் குமுதம் ஆசிரியர் என்கிற ஒரே காரணத்திற்காக பதிவு செய்யப்படவில்லை. தாசில்தார் நாய் செத்தால் துக்கம் விசாரிக்க வருகிறவர்கள் அதே தாசில்தார் செத்தால் வராமாட்டார்கள் என்ற பழமொழிக்கு ஏற்ப இவர் மரணத்தின்போது இவரால் ஊக்குவிக்கப்பட்ட பல படைப்பாளிகளை நான் பார்க்கவில்லை.

இதேபோல், அரக்கத்தனமாக நிராகரிக்கப்படுபவர் அசுரத்தனமாக எழுதும் **தாமரை மணாளன்.** புதுமைப்பித்தனுக்கு பிறகு இவரைப்போல் அங்கதச் சுவையோடு எழுதுவதற்கு, இப்போதுகூட ஆளில்லை. வணிகப் பத்திரிகைகளுக்காக சிலசமயம் வளைந்து கொடுத்தாலும், இவரது நடையில் எள்ளல், துள்ளல், இலக்கியநயம், யதார்த்தம், புரட்சி ஆகியவை உள்ளடங்கியிருக்கும். எல்லாத்துறைகளிலும் தன் எழுத்து வல்லமையை நிரூபிப்பவர். இப்போதுகூட 'வாசுகி'யில் இவர் எழுதும் கடைசி பக்க 'உள்ளத்தை கிள்ளியவர்கள்' அற்புதமான சித்தரிப்புகள்.

நெல்லை பூமியின் மண்வாசனையை அப்படியே நுகர வைப்பவர் எழுத்தாளர் தாமரை செந்தூர்பாண்டி. இவரது குடிப்பிறப்பு என்ற சிறுகதைத் தொகுப்பு லில்லி சிகாமணி அறக்கட்டளை பரிசையும், தென்னக பண்பாட்டு இயக்கத்தின் பரிசையும் பெற்றவை. தமிழக அரசு இவரது படைப்புகளை எல்லா பள்ளி கல்வி நூலகங்களிலும் வைக்கவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறது. படிக்க மனமிருந்தும் முடியாமல் போன

சிறுவர்-சிறுமிகளையும் அப்படி அவர்களை படிக்க வைக்க இயலாத ஏழைப் பெற்றோர்களையும் இந்த தொகுப்பில் படிக்கும்போது கண் கலங்காதவர்கள் கல்நெஞ்சுக்காரர் களாகத்தான் இருப்பார்கள். இப்போது இவர் கொண்டு வந்திருக்கும் **இதோ ஒரு மனுஷி** என்ற சிறுகதையும் சமூகப் பொறுப்பு வாய்ந்த போராளித்தன்மை கொண்டவை.

எழுத்தாளர் **சிவசங்கரி** அவர்களின், நான்கு தொகுதிகளைக் கொண்ட **"இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு"** என்ற முயற்சி ஒரு மாபெரும் இலக்கிய வேள்வி. இந்த முயற்சியை பிறமொழிப் பத்திரிகைகள் பாராட்டி பக்கம் பக்கமாக எழுதுகின்றன. ஆனால் இங்கே காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, இது கண்டுக்கப்படவில்லை. மூன்று தலைமுறைகளை கொண்டு இவர் எழுதிய **'பாலங்கள்'** என்ற நாவல் தமிழில் வெளியான மிகச் சிறந்த பபைப்பு.

இதேபோல் **ஜே.எம். சாலி**, ஒரு அற்புதமான எழுத்தாளர். இஸ்லாமிய மக்களின் பிரச்சினைகளை யதார்த்தமாகவும், மனித நேயமாகவும் சித்தரித்ததோடு பொது பிரச்சினைகள் குறித்தும், எழுதியவர். அருமையான தமிழ்நடைக்காரர். இவரை போன்றவர் இனியவனும். இலக்கிய வீதியில் பல எழுத்தாளர்களை வளர்த்து விட்டவர். தரமான கதைகள் எழுதியவர்.

போதாக்குறைக்கு, பதிப்பகத்தார் தாங்கள் பதிப்பிக்கும் எழுத்தாளர்களைப் பற்றி வானளாவ துதி பாடுகிறார்கள். இதே துதியை ராயல்டியில் காட்டினால் நன்றாக இருக்கும்.

இப்படி **ரோஜாகுமார், தேனீ சீருடையான், அல்லி உதயன், ஜீவகாருண்யன், ராஜாமணி, ஜனநேசன், தி.சு. வேலாயுதம்** என்று அடுக்கிக்கொண்டே போகலாம். மேலே குறிப்பிட்டவை அனைத்தும் உடனடியாய் நினைவுக்கு வந்த பெயர்கள். இதேபோன்ற படைப்பாளிகள் விடுபட்டுப்போயிருந்தால் என்னை மன்னிக்க வேண்டும். "ஒருபானை சோற்றுக்கு ஒரு அகப்பை சோற்றைத்தான்" காட்டியிருக்கிறேன். என்றாலும்-

ஒரு எழுத்தாளர் திராவிட இயக்கத்தை நாலாந்திர இலக்கியம் என்கிறார். அதில் கலைஞரைப் பற்றி ஒருவார்த்தை இல்லை. பிறகு அதே கலைஞரை கணையாழியில் புகழ்ந்து தள்ளுகிறார். ஒரு எழுத்தாளர் இன்னொரு எழுத்தாளரைப்பற்றி திரைப்படம் எடுக்கிறார். உடனே, அந்த எழுத்தாளர் இவருக்கு 'சாகித்ய அகாதமி பரிசு' வாங்கிக் கொடுக்கிறார். ஒருவர், சாகித்ய விருது பெற்ற படைப்பாளியை நேர்காணல் தத்துவத்தையும் மீறி வானளாவ புகழ்கிறார். உடனே, புகழப்பட்டவர், புகழ்ந்தவரைப்பற்றி ஒரு திரைப்படம் எடுக்கிறார்.

இப்படி அசிங்கமாக போய்விட்டது நவீனத்தமிழ் இலக்கிய உலகம். இதனால் சாகித்ய அகாதமியின் பரிசுக்கான தமிழ்மொழியின் உயர்குழுவில் தேர்வுக்கு வந்த சிற்பியின் கவிதைகளுக்கோ, ஈரோடு தமிழன்பனின் படைப்புகளுக்கோ, அல்லது கு. சின்னப்ப பாரதியின் 'பவளாயி' நாவலுக்கோ கிடைக்கவேண்டிய விருது கிடைக்காமலே போய்விடுகிறது. இத்தகைய இலக்கிய தகிடுதத்தங்களில் தகுதிக்குரிய எழுத்தாளர், பதிவுபெறாமல் போவதில் ஆச்சரியமில்லை.

இதேபோல் பல எழுத்தாளர்களை தனது பத்திரிகைகள் மூலம், கைதூக்கி விட்டு பல்வேறு படைப்புகளை உருவாக்கிய **நாரணத்துரைக் கண்ணன்** விடுபடப்படுகிறார். சிற்றிலக்கிய சொற்பொழிவுகளில் **மாமணியின்** முகம் பத்திரிகையும், **பொன்னடியானின்** கவிதைச்சரமும், கவிஞர் **செங்குட்டுவனின்** கவிக்கொண்டலும், **மூவேந்தர் முத்தும்**, வா.மு. **சேதுராமனின்** தமிழ்ப்பணியும் விடுபட்டுப்போகின்றன.

ஒரு படைப்பைத் தீர்மானிப்பது காலமேயன்றி, ஆய்வாளர்கள் அல்ல. இந்த "ஆய்வுக் காலன்களை" நினைக்கும் போதெல்லாம் எனக்கு **பாரதி** பாடலே நினைவுக்கு வருகிறது.

**'காலா! இங்கே வா! உன்னை காலால் உதைக்கிறேன்'**

**புதிய கட்டுரை - 1999.**

# திராவிட இயக்கப் படைப்பாளிகள்

திராவிட இயக்கத்தின் இலக்கியத் தாக்கம், வகுப்பு வாதிகளால் மூடி மறைக்கப் பட்டது. மருந்துக்குக்கூட, இலக்கிய வரலாற்றில் சிறு கதைகளில் முத்திரை பதித்த, இந்த இயக்க எழுத்தாளர்களைப் பற்றி எவரும் குறிப்பிடுவதில்லை. இப்படிச் சொல்வதால் திராவிட இயக்கம் சிறுகதைத் துறையில் தக்காரும் மிக்காரும் இல்லாத தாக்கத்தை ஏற்படுத்தியது என்று சொல்ல வரவில்லை.

**பெரியார்–அண்ணா–கலைஞர்**

இந்த இயக்கத்தின் நிறுவன ரான தந்தை பெரியார் ஈ.வெ.ரா. ‘மதுரையை கண்ணகி எரிப்பதற்கு அவள் மார்பகம் என்ன பெட்ரோல் பங்கா?’ என்று கேட்டு, தமிழனை மூடத்தனமான இலக்கிய ரசனையில் இருந்து மீட்பதற்குப் பாடுபட்டார். ஆனால், திராவிட இயக்கமோ, காலம் செல்லச்செல்ல மூடத் தனங்களைச் சாடிக்கொண்டே, அதே சமயம் மூடத்தனம் மிக்க பழமை மீட்பு வாதத்தில் இறங்கியது. இதனால், இந்த இயக்கத்தினர் பதித்த சிறுகதை முத்திரைகளில் சேதாரம்

**அன்று ஆடு, மாடுகளை மேய்த்தவர்களின் வாரிசுகள் என்னைப்போன்ற வாசகப் படைப்பாளிகளாக வந்திருக்கிறார்கள். இலக்கியப் போக்கை தீர்மானிக்கும் நிலையிலும் இருக்கிறார்கள்.**

**இந்தப் பின்னணியில் திராவிட படைப்பிலக்கியங்கள் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் மறுவாசிப்பிற்காக மறு பதிப்பாய் கொண்டு வர வேண்டும். இதற்கு மிகச்சிறந்த வரவேற்பு கிடைக்கும். கூடவே அந்தக்கால சமூக இயக்க வரலாற்றை' அறிவதற்கும் உதவும்.**

வந்தது. ஆனாலும், இலக்கிய விமர்சகர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்பவர்கள் ஒதுக்குகிற அளவுக்கு இவர்கள் சோடை போனவர்கள் அல்ல. இவர்களின் படைப்புகளைப் படிக்காமல் எழுதப்படும் எந்த இலக்கிய வரலாறும் முழுமையானதாக இருக்க முடியாது.

### மூவர் தாக்கம்

தந்தை பெரியார் தமிழை பகுத்தறிவாக்கி கொண்டிருந்தபோது பேரறிஞர் அண்ணாவும், கலைஞர் கருணாநிதியும் தமிழை வீதிக்கி கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு சாதாரண தமிழனின் வாயிலும் தமிழ் அருவிபோல் ஆவதற்கு இவர்களே காரணம். அண்ணாவின் 'ரங்கோன் ராதா'வில் வருவதுபோல் ஒரு பெண்ணுக்கு பைத்தியப்பட்டம் சூட்டி அவளை ஆண்டுக்கணக்கில் ஒரு அறையில் அடைத்துப்போட்ட கொடூர நிகழ்ச்சி அண்மையில் செய்தியாக வந்தது. அண்ணாவின், 'பணத்தோட்டம்', 'நல்லதம்பி', இன்றைக்கும் பொருத்தி பார்க்கக்கூடிய படைப்புக்கள். கலைஞரின், 'பொன்னர் சங்கரும்', 'தென்பாண்டி சிங்கமும்', ஏராளமான சிறுகதைகளும் இன்றைய யதாத்தங்களாகவும் இருக்கின்றன. இந்த இருவரின் தமிழ்வீச்சு வடமொழியால் அமுக்கப்பட்டிருந்த தமிழை மீட்டியது. இது இலக்கியப்பணி இல்லையென்றால் · இது இலக்கிய வரலாற்றில் இடம்பெறக்கூடியது அல்ல என்று சாகித்ய அகாதமியின் முன்னைய அறிவுரைக்குழு முடிவெடுத்தது ஒரு மூடத்தனமான செயல்.

என்றாலும், அண்ணா, கலைஞர் என்ற ஆலமரங்களுக்கு அடிவாரத்தில் தோன்றிய திராவிட படைப்பிலக்கியங்கள் பேசப்படாமல் போயிற்று. இதற்கு பாதிக்காரணம் அண்ணாவையும், கலைஞரையும் முன்னெடுத்ததுபோல், இவர்களை கொண்டு செலுத்த ஆளில்லை. அதோடு திராவிட இயக்க எதிரிகளின் கையில் இலக்கிய வரலாற்றை தீர்மானிக்கும் பொறுப்பு இருந்ததும் ஒரு காரணம். மேல்நாடுகளில் தரமான கட்டுரைகளும், இலக்கியங்களாக கருதப்படுகின்றன. இங்கேதான் சமூகப் பிரக்ஞை உள்ள படைப்புகள் கூட, கட்டுரைத்தனமாக விமர்சிக்கப்படுகின்றன.

### அண்ணா வழிச் சிறுகதைகள்

இந்த இயக்கத்தில் ஊறித் திளைத்த ப. புகழேந்தி தொகுத்த 'அண்ணா வழிச் சிறுகதை'களை படிக்க நேர்ந்தது. இவரும் தமது முன்னுரையில் **"தெரிந்தோ, தெரியாமலோ ஒரு எல்லைக் கோட்டினுள் உலவும் ஒரு குறிப்பிட்ட சார்பு எழுத்தாளர்களின் கதைகளே தொகுக்கப்பட்டுள்ளன"** என்று ஆதங்கப்பட்டுள்ளார்.

சில முன்னுரைகளில், தமிழில் சிறந்த சிறுகதைகள் எழுதுவோர் என்ற பெயர்ப் பட்டியலில் **அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி**, டி.கே. சீனிவாசன், கே.ஜி. இராதாமணாளன் போன்ற பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பினும், அவர்களில் எந்த ஒருவரின் கதையும் அந்தத் தொகுப்புகளில் இடம் பெற்றிருக்கவில்லை" என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

அப்போதைய போக்கு இப்போதும் நீடிப்பதற்கு இந்த திராவிட இயக்கமும் ஒரு காரணம். இவர்களும் **அழகிரிசாமியையோ, புதுமைப்பித்தனையோ, வல்லிக்கண்ணனையோ** கண்டு கொண்டதில்லை. இந்தப் பாரம்பரியம் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகையால் சிந்தனையாளர் புகழேந்தி திராவிட இயக்கப் படைப்பாளிகள் விடுபட்டுப் போனதற்கு, வருத்தப்படுவதில் தவறில்லை.

காவியமான கோமதி

**புகழேந்தி** தொகுத்த **'அண்ணா வழிச் சிறுகதைகள்'** என்ற தொகுப்பு, மிகச் சிறப்பானது. பாமர மக்கள், பாட்டாளி மக்கள் ஆகியோரின் பழக்க வழக்கங்களையும், அழகுறச் சித்தரித்திருக்கிறது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், இத்தொகுப்பில் சிறந்த கதைகளில் ஒன்றாக எனக்குத் தோன்றுவது திருவனந்தபுரத்தில் வசிக்கும் எழுத்தாளர் **ஆ. மாதவன்** எழுதிய **'கோமதி'** என்ற சிறுகதை. இவர் எப்படி அண்ணா வழியில் வந்த திராவிட இயக்கக்காரர், என்பது புதிராக உள்ளது.

ஆனாலும், நல்ல 'கறுப்பியான-மதமதத்த உடம்புக்காரி, கோமதி என்ற பசு, கோட்டை, நகர பஸ் நிலையம், அரசமரத்தடி ஆகிய இடங்களில் சுதந்திரமாக சுற்றித் திரிந்தது என்பதையும், கண்டன் வாசுவும், ஜாலி மணியனும், தலைக்கட்டு வேலப்பனும், இதனோடு எப்படி குதூகலித்தார்கள் என்பதும் செம்மையாகக் கூறப்பட்டுள்ளது. இவர்களின் இந்த 'இஷ்ட தோழியை' மலடு என்பதற்காக வீட்டை விட்டு தள்ளி வைத்த ஒரு பிராமணரைப் பற்றியும், அவரது மனிதநேயத்தைப் பற்றியும் (பசுவைக் கசாப்புக் கடைக்குக் கொடுக்காமலிருப்பது ஒரு மனித நேயம் தானே) மாதவன் அழகுறச் சொல்கிறார். இறுதியில், கோமதியால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதை அறிந்த கார்ப்பரேஷன்காரர் அதைச் சுற்றி வளைக்கும்போது, கோமதி, கால்களை வெட்டி, வாயில் நுரை தள்ள வைத்து செத்துப்போனது போல் ஒரு பாவலா செய்துவிட்டு, பிறகு எல்லோரும் அசட்டையாக இருந்தபோது, ஜாலி மணியுடன் ஒரேயடியாய் ஓட்டம் போட்டதையும் "யாரப்பா பிடிங்க அந்த -தந்திரக்கார மூதேவியை"

என்று மற்றவர்கள் இயலாமல் கத்துவதையும் இந்தக் கதை ஒரு காவியம் போல் சித்தரிக்கிறது.

இந்தத் தொகுப்பின் முதல் கதை "சொல்வதை எழுதேண்டா" என்ற அண்ணாவின் கதை. ராகவாச்சாரி, திவான் பகதூர் தீர்த்தகிரி முதலியாருக்கு, அவரைப் பாராட்டி எழுதிய ஒரு கடிதமும், தனது மகனுக்கு, திவான் பகதூரை திட்டித் தீர்த்து எழுதிய கடிதமும், இருவருக்கும் இடம் மாறிப்போனதால் ஏற்பட்ட பிரச்சினையை அங்கத பாணியில் அழகாகச் சொல்லியிருக்கிறார். திவான் பகதூருக்கு, தனது மைத்துனியை 'இஸ்கு தொஸ்காகக்' கொடுத்த ராகவாச்சாரியார், அவளையே ஒரு பகடைக் காயாக்கி, அவளிடம் திவான் பகதூர் தவறாக நடந்து கொண்டார் என்று பத்திரிகைகளில் அறிக்கைகள் கொடுக்கிறார் என்று கதை முடிகிறது. இந்தக் கதையை எந்தவித இழிவும் இல்லாமல் மிக யதார்த்தமாக எல்லோருக்கும் புரியும்படி எழுதியிருக்கிறார், அண்ணா.

## பல்மொழி கண்ட குப்பைத்தொட்டி

கலைஞரின் 'குப்பைத் தொட்டி' என்ற கதை ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு சுமாராகத்தான் தெரிந்தது. இப்போது நவீனத்துவம், பின்நவீனத்துவம், மேஜீக்கல் ரியலிசம், அமைப்பியல் போன்ற இலக்கிய இசங்கள் பிரபலமான இந்தக் காலக்கட்டத்தில் இதன் மறுவாசிப்பு பிரமிக்க வைக்கிறது. ஒது குப்பைத் தொட்டி மூலம் சொல்வதுபோல் கலைஞர் சமுதாயத்தை விமர்சிப்பது மேஜீக்கல் ரியலிசத்திற்கு எடுத்துக்காட்டான கதை. இதனால் இது இடதுசாரி இலக்கிய இதழான செம்மலரில் சிகரங்களைத் தொட்ட சிறுகதை வரிசையில் பிரசுரிக்கப்பட்டது. தோழர் கு. சின்னப்பப்பாரதியை ஆசிரியராகக் கொண்ட, **'ILA'** என்ற மும்மாத இதழில் மொழி பெயர்க்கப்பட்டது. எனது 'வாடாமல்லி'க்கான ஆதித்தனார் விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலைஞரோடு மேடையை பகிர்ந்துகொண்ட நான் இந்தக் குப்பைத்தொட்டி பற்றி குறிப்பிட்டேன். உடனே, கலைஞர் தனது இறுதி உரையில், 'குப்பைத்தொட்டி இங்கே குப்பைத்தொட்டியாக ஒதுக்கப்பட்டாலும் பிற மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது என்று இங்கே நிலவும் இலக்கிய போலித் தனங்களை தோலுரித்துக் காட்டினார்.

'உங்களைப் போன்ற ஒரு மனிதாபிமானியைப் பார்க்கவே முடியாது' என்று நாடாளுமன்றத்தில் மக்களவைத் தலைவரால் போற்றப்பட்ட இரா. செழியன் 'ராஜாதி ராஜா' என்ற சிறுகதையை எழுதியிருப்பது எனக்குப் பெருத்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

சிந்தனையாளர்கள், தங்களது சக்தியை இலக்கிய வடிவுகளாகவும் ஆக்க முடியும் என்பதற்கும், சிறுகதை எழுதுவதற்கு என்று யாரும் தனியாகப் பிறக்க வேண்டியதில்லை என்பதற்கும், இந்தக்கதை ஒரு உதாரணம். இந்த இரா. செழியனையே சிறுகதை வரலாற்றில் பேசப்படவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

மாரி என்ற சேரிவாசி, கர்ணம் கை தவறி கீழே போட்டு, தொலைக்கும் அந்தக் காலத்து நாலணாவை எடுத்துத் திரும்பக் கொடுக்கும் அளவுக்கு நேர்மையானவன். ஆனால் அவனுக்கு ஒரு சோதனை. ஒரு நாயின் வாயில் வெள்ளையாகத் தெரிவதை வெள்ளி டப்பியாக நினைத்து துரத்துகிறான். புதர், புல்தரை, சுடுமணல், கல், முள் ஒன்றையும் பார்க்காமல் ஓடுகிறான். தாக்குப்பிடிக்க முடியாத நாயும், வாயிலுள்ள தேங்காய்த் துண்டைத் துப்பிவிட்டு ஓடிவிடுகிறது. அவனும் தேங்காயை நாயின் பற்கள் பதிந்த இடத்தைக் கடித்துத் துப்பிவிட்டு மீதியை வாய்க்குள் போட்டுக் கொள்கிறான். இதைப் பார்த்த குருக்கள் ஐயர், அக்கிரகாரத்திற்குப் பின்புறமாக வரவேண்டிய சேரிக்காரன், முன்புறமாக-அதன் மத்திக்கே வந்து விட்டதைக் கண்டு கத்துகிறார். தேங்காய் திருடிப் பட்டமும் சுமத்துகிறார். அம்பலக்காராரை வைத்து அடிக்க வைக்கிறார். ‘கூக்குரலைக் கேட்டு ஐயர் அசையாது நின்றார். புளிய மிளாறோ அசைந்தபடி இருந்தது’ என்று செழியன் விளக்கும் விதமே கண்களில் நீரை வரவழைக்கும். இப்படித் திருட்டுப் பட்டம் சூட்டப்பட்ட மாரியை அனைவருமே திருடன் என்கிறார்கள். அவனும், முற்றும் நனைந்தவர்க்கு ஈரமில்லை என்பதுபோல் திருடத் துவங்கி விடுகிறான். மனைவியிடம் ‘ராஜாடி ராஜா’ என்கிறான். இத்தகைய பழக்க வழக்கத்திற்கு புதிதான அவன் மனைவி, “நீ திருடும்போது யாரும் பார்த்தால் தெரியும்-ராஜாபாடு” என்கிறாள். உடனே நமது மாரி,

“இந்த ராஜாபாடு மட்டுந்தானா? நெசமாலும் ராஜா கூடத்தாண்டி சண்டையிலே தோத்துப்போனா, இன்னொரு ராஜா கையில் அடிபடுவான்,” என்று சொல்லிவிட்டுச் சிரிப்பாய்ச் சிரிப்பான். கதை என்றால் இதுதான் கதை. “மழையை லட்சியம் செய்யாத எருமை போல அலைந்தேன்”. ‘அடுப்பில் கஞ்சி கொதிக்கும் சத்தம் அஞ்சலைக்கு இன்னிசையாக இருந்தது’ போன்ற உதாரணங்கள் தனித்துவம் பெறுகின்றன; இப்போது அரசியல் ஓரங்கட்டப்பட்ட இரா. செழியன், அதுவும் நன்மைக்கே என்று நினைத்து இலக்கியத்திற்குத் திரும்ப வேண்டும். கண்டவர்கள் எல்லாம் இன்றைய அரசியலை யானை பார்த்த எவனோ போல கேளிக்கையாகச் சித்தரிக்கும் இந்தக்காலத்தில்,

திரு. இரா. செழின் நல்லதோர் அரசியல் நாவலைப் படைக்க முடியும்.

## இதர திராவிடக் கதைகள்

இந்தத் தொகுப்பில் இராம. அரங்கண்ணலின் 'உலகம் யாருக்கு?' என்ற சிறுகதை வசன பாணியில் உள்ளது. ஆனாலும், அந்தக் காலத்திலேயே ஒரு நாடோடிக் கும்பல்களில் நலிந்தவளான ஒரு குறத்தியை கதாநாயகியாய் ஆக்கியிருப்பது பாராட்டுதற்குரியது. சின்னப் பெரியார் என்று பாரட்டப்பெற்ற ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் "திருச்செந்தூர் முருகன்," முருக பக்தியை கிண்டல் செய்வதற்காக, எழுதப்பட்ட ஒரு சராசரிக்கதை. ஆனால், "ஒருவரை ஒருவர் ஆண் பெண் வித்தியாசமின்றி அத்வைத வேத அடிப்படையில் இடித்துக்கொண்டு ரயில் ஏறினர்" என்பது போன்ற வர்ணனை நன்றாக வந்துள்ளது. திராவிட இயக்கத்தில் மிகச்சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு. கே.ஜி. இராதாமணாளன் 'அந்தப் புன்னகை' என்ற சரித்திரக் கதையை எழுதியிருக்கிறார். திப்புவின் சேனாதிபதி அலிகாரால் கற்பழிக்கப்பட்ட ஒருத்தி, திப்புவின் யோசனைப்படியே, அவனையே திருமணம் செய்து முதலிரவிலேயே அவனைக் கொன்று போடுவதுதான் கதை. கர்நாடகத்தை ஒரு தளமாக எடுத்துக்கொண்டு இந்தக் கதையை மிக அழகாக எழுயிருக்கிறார்.

## அங்கத இலக்கியம்

இந்தச் சிறுகதைத் தொகுப்பில் வரலாற்று பூர்வமான கதையம்சத்திற்கும், அங்கத இலக்கியத்திற்கும் எடுத்துக்காட்டாக இருப்பது மலையாளத்திலும் தமிழிலும் வன்மை மிக்க ரா. இளஞ்சேரன் எழுதிய சரித்திரக்கதை. இந்தக் கதையை மேல்ஜாதியைச் சேர்ந்த ஒருவர் எழுதியிருந்தால், இந்நேரம் இதற்கு ஒரு அகில உலகப்புகழ் கிடைத்திருக்கும். ஆனால், இங்கே சோகம் என்னவென்றால், இளஞ்சேரன் என்ற ஒருவர், பாண்டியன் கொன்ற அபிராமி' என்ற சரித்திரச் சிறுகதை எழுதினார் என்பது மறந்து போனதுதான். இப்படி எத்தனை கதைகள்... எத்தனை ஆசிரியர்கள்..... மண்ணின் மணத்தை நுகர வைத்த படைப்பாளிகள். மறக்கடிக்கப்பட்டார்களோ? இந்தக் கதையில் தென்காசியிலுள்ள ஒரு மடத்தில் பெரிய சந்நிதானமும், சிறிய சந்நிதானமும், காம இச்சையில் ஈடுபட்டிருந்தும், முஸ்லிம்களின் படையெடுப்பிற்குத் தாக்குப் பிடிக்க முடியாத மதுரைப் பாண்டியர்கள் தென்காசிப் பக்கம் வந்ததும், பெண்கள் எப்படி தங்கள் வீரத்தைக் காட்டினார்கள் என்பதுமே கதை.

பாண்டிய மன்னனால், அபிராமி என்ற ஆரணங்கு ஏற்கனவே சந்நிதானங்களின் கண் பார்வைக்குத் தப்பித்து வந்த' அந்தப் பெண்ணழகி எப்படி கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள் என்பதே கதை. ஆனால், இளஞ்சேரன் அதைச் சொன்ன விதமோ தனிப்பாணி. எந்த எழுத்தாளராலும் காப்பி அடிக்க முடியாத நடை. இளைய தம்பிரான், சம்பங்கியிடம் சொல்வது போலவும், பெரிய தம்பிரான் இளைய தம்பிரானிடம் சொல்வது போலவும், இருவரிடமும் சம்பங்கி சொல்வது போலவும் கதை பின்னல் பின்னலாய்ப் பின்னப்பட்டு ஒரு மோகன வடிவம் பெறுகிறது. இடையிடையே அடைப்புக் குறிக்குள், பேசுபவர், பேசப்படுபவரிடம், அவருக்குத் தெரியாமல் வைத்திருக்கும் அபிப்பிராயம் அழகிய முறையில் சித்தரிக்கப்படுகிறது.

## மூழ்கிப்போன சேகரன்

'**தெய்வத் திருப்பணிகளையும்; தரும நீதிகளையும் சுல்தான்கள் பிரியாணியாக்கிச் சாப்பிட்டு விட்டார்கள்**' என்ற வாசகமும், '**கழுத்திலிருந்த நகக்குறியை மறைக்க பிணத்தின்மீது குங்குமத்தைப் பூசியவர்தானே நீர்?**'', 'கிளைகளிலிருந்து வேர்கள் இறங்கிய மாதிரி எல்லா மரங்களிலும் பிணங்கள் தொங்குகின்றன' என்ற உதாரணமும், 'விக்கிரகங்கள்' புதைந்த இடத்தைக்காட்டி விடாதீர்கள். அவ்வளவும் சொக்கத் தங்கத்தில் செய்த விக்கிரகங்கள்'' என்ற நையாண்டியும் இந்த சிறுகதையை இலக்கியத்துள் இலக்கியமாக்கி விடுகிறது. ஆனால், அந்த பரிதாகபரமான இளஞ்சேரன், எந்த இயக்கத்தில் தோன்றினாரோ அந்த இயக்கத்தாலேயே சொல்லப்படவில்லை. இவர், சமூக பிரக்ஞை கொண்ட ஒரு புதுமைப்பித்தன். சாமான்யர்களின் வழிகாட்டி. ஆனாலும் இவர் இலக்கியத்திலிருந்து ஒரு. 'வழி' செய்யப்பட்டு விட்டார்.

திராவிட இயக்கத்தில் சிறுகதை மன்னன் என்று சொல்லப் படுகிறவர் அது **டி.கே. சீனிவாசன்**. இதைவிட்டு விட்டு, அவருக்குத் தத்துவ மேதை என்று சம்பந்தமில்லாத ஒரு பட்டத்தைச்சூட்டி, அதில் அவரும் மயங்கி, சிறுகதையை விட்டுவிட்டார். இதனால் அவருக்கு நஷ்டமோ என்னமோ, சிறுகதை உலகிற்கே நஷ்டம்தான். இவரது '**ஆடும் மாடும்**' மிகச்சிறந்த நாவல். 'பொன்னி' இலக்கிய இதழில் பல சிறுகதைகளை எழுதியவர். இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இவரது '**துன்பக்கதை**' ஒரு காதலையும், கூடவே பொருந்தாத திருமணத்தையும் உள்ளடக்கியது. '**நான் என்று தொடங்கி எழுதப்படும் பெரும்பாலான கதைகளில் எப்படியோ சோகத்தின் சாயல் படிந்து விடுகிறது**' என்று

சுயசரிதையாகக் கதையைத் துவக்கும் இவர், இந்த 'நான்' தந்தையால், தாயின் ஊக்குவிப்போடு, அடிக்கப்படுவதைக் கண்டு நான் பேய்க்கும் பிடாரிக்கும் பிள்ளையாகப் பிறந்திருப்பேனோ' என்று சொல்ல வைப்பது நெஞ்சை நெகிழச் செய்கிறது.

இளமையிலேயே அவருடன் பழகிய சக்கு, அவர் தந்தையிடம் அடிபடும் போதெல்லாம் 'வலிச்சுதா' என்று கேட்கிறாள். பிறகு ஒரு கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு வாழ்க்கையைச் சருகாக்கிக் கொள்கிறாள். அப்போது அவளிடம் உரிமையோடு, சரசமாடப் போன, 'நானை' அவள் அடிக்கிறாள். கன்னத்தில் அறைந்த கையோடு வீட்டை விட்டு வெளியேறச் சொல்லுகிறாள். 'வலிக்குதா' என்று கேட்கவில்லை. இதுதான் கதை. இதைப் படிக்கும்போது நமக்கே வலிக்காதா? சரளமாக நடையில் தனித்துவமான கருத்துக்களைத் தெரியப்படுத்தியவர் டி.கே. சீனிவாசன்.

**தில்லை மறை முதல்வன்**

ஆயுதப்புரட்சி இலக்கியங்களெல்லாம் அங்கீகரிக்கப்பட்டு வரும் இன்றைய கால கட்டத்திற்கு முன்பே, அப்படி ஒரு கதையை எழுதியவர் தில்லை மறை முதல்வன். 'திராவிடன்' இதழில், 'சங்கப் பலகை' என்ற பெயரில், பல கருத்துக்களைச் சிறப்புற எழுதிய எழுத்தாளர் புகழேந்தியால் அறிமுகப்படுத்தப்படும் இவர், குடும்பத்தின் மீது பற்று பாசம் இருந்தாலும், அதற்கு பயன்பட முடியாமல் போன ஒரு புரட்சிவாதியையும், பிள்ளை பெண்டு என்று முடங்கிப்போன அவனது நண்பனையும் சித்தரிக்கும் சீரிய கதை. குமாரசாமி என்ற புரட்சிவாதி, மனைவியையும் பெற்றோரையும் விட்டுவிட்டுத், தலைமறைவாகி நண்பனிடம் வருகிறான்.

அந்த நண்பனின் அன்பான வேண்டுகோளின்படி, மீண்டும் குடும்பத்திற்குச் செல்ல முயற்சிக்கிறான். அதற்குள் அவன் ஆந்திராப் பக்கம் 'வழக்கமான வேலைக்கு' போவதென்று முடிவெடுக்கிறான். இறுதியில், நெருப்பின்றி வேள்வி நடத்த முடியாது என்பதை நினைவுபடுத்திக் குடும்பத்தின் வாழ்க்கையை அந்த வேள்வியில் தாரை வார்க்க அவன் தயங்கவில்லை. ஆனால், கல்லூரிக் காலத்தில் அவனோடு புரட்சி வேகம் கொண்டிருந்து நண்பனோ, நெஞ்சில் லட்சிய நெருப்பு கிளம்பாதிருக்க மனைவியின் உடல் நெருப்போடு ஒட்டிக் கொள்கிறான். கல்லூரிக் காலத்தில் லட்சியம் பேசிவிட்டு, பிறகு குடும்ப வாழ்க்கையில் அதை அலட்சியப்படுத்தும் முன்னாள் புரட்சிக் காரர்களுக்கு இது ஒரு அருமையான சவுக்கடி.

### தென்னரசின் முத்தாயி

எஸ்.எஸ். தென்னரசு, திராவிட நாவலாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் தென் மாவட்டங்களில் நிலவிய, இப்போதும் ஓரளவு நிலவும் ஆவேசப் போக்கையும், அதன் பின்னணியிலுள்ள அன்புப் பிரவாகத்தையும் 'முத்தாயி' என்ற சிறுகதையில் அழகாகச் சித்தரிக்கிறார். இந்தக் கதையில் அந்த மண்ணுக்கே இயல்பாயுள்ள வீரம் ஒளிர்கிறது. காதலுக்காக அனைத்தையும் அலட்சியப்படுத்தும் ஒரு வீராங்கனையின் ஆளுமை அழகாகச் சித்தரிக்கப்படுகிறது.

கருமுயலை திருமணம் செய்து கொள்கிறாள் முத்தாயி. இது அவள் அண்ணன் செந்தட்டிக்குப் பிடிக்கவில்லை. கருமுயல் கொலை செய்யப்படுகிறான். செந்தட்டி சிறைக்குச் சென்று பதினான்காண்டுகள் கழித்து, தான் கொலை செய்ததாகக் கோர்ட்டில் சாட்சியம் சொன்ன தங்கையின் தலையறுக்கச் சபதமிடுகிறான். ஆனால், அவள் திருமணம் செய்துகொண்ட வைரஊசி, தான்தான் கருமுயலைக் கொன்றதாகச் சொல்லுகிறான். இந்தக் கதையில் மண்வாசனைப் பெயர்கள். அதோடு கருமுயலைக் காதலித்துக் கைப்பிடித்த முத்தாயி, அவன் கொலையுண்டதும், வைரஊசியைத் திருமணம் செய்து கொள்ளும் யதார்த்தமான முடிவு. இப்படி மாறுபட்ட கதையைத் தென்னரசால் மட்டுமே சொல்ல முடியும்.

### புகழேந்தியின் உறவு

பேராசிரியர்கள் கதை எழுத வரக்கூடாது என்பதற்கு மிகச்சிறந்த சிந்தனையாளரான பேராசிரியர் நா. பாண்டுரங்கன் எழுதிய 'அரசியல்' என்ற சிறுகதை ஒரு உதாரணம். குடும்பத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒருவன், தந்தையால் விரட்டியடிக்கப்பட்ட நான்காவது பிள்ளை, எப்படி அரசனானான் என்பதே சிறுகதை. இதேபோல், தொகுப்பாசிரியர் ப. புகழேந்தி எழுதிய 'உறவு' ஒரு உறவைக் கொச்சைப்படுத்தினாலும், சிறிது வித்தியாசமானது. ஆண்மையிழந்த ஒருவனுக்கு மனைவியான ஏழைப் பெண் மீனாட்சி, மாமனார் மூலம் குழந்தை பெற்று இறுதியில் அவர் இறந்த பிறகு, அவருக்குத் தான் பெற்ற பிள்ளைகளைப் போல் தனது கணவனையும் ஒரு பிள்ளையாக நினைக்கிறாள் என்பதே கதை. இங்கே பொறுப்பற்ற மாமனார் மனிதாபிமானியாகச் சித்தரிக்கப்படுகிறார். என்றாலும், சிறுகதை என்பது குறிப்பிட்ட ஒரு சமூகக் கோட்பாட்டுக்குள் இயங்கலாகாது என்று எடுத்துக் கொண்டால் இது ஒரு நல்ல கதை.

## முரசொலிமாறனின் வால் நட்சத்திரம்

முரசொலி மாறன் 'வால் நட்சத்திரம்' என்ற சிறுகதையை எழுதியிருக்கிறார். நல்ல நடை, இயல்பான விறு விறுப்பு. 'காதல் வராத கதைகள் சோபிப்பதே இல்லை' என்பது அவரது பார்வை. புரட்சி வசியன் என்ற எழுத்தாளன் உயிரிழக்க அவனுக்கு அனுதாபக் கூட்டம் நடைபெறுகிறது. அவன் ஏற்படுத்திய சமூகத் தாக்கங்கள் பற்றி பத்திரிகை ஆசிரியர் கனவான் கருப்பையா முதலியார் பொரிந்து தள்ளுகிறார். அவரது பத்திரிகையிலேயே இதே புரட்சி வசியன் 'இன்பப்பித்தன்' என்ற பெயரில், "நிக்கல் நாணயத்திற்கு நிர்வாண அழகிகள்" என்பது மாதிரியான தொடர்கதைகளையும் எழுதியிருப்பது அவருக்கு மட்டுமே தெரியும். இப்படிப் புரட்சி படைப்பாளியாகவும், செக்ஸ் மன்னனாகவும் ரெட்டை வேடம் போடுகிறவனைப் பற்றியும், அப்படி அவனைப் போட வைக்கிற பத்திரிகை ஆசிரியரைப் பற்றியும், இப்படிப் போடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பது மாதிரி, சிறநத எழுத்தாளரான முரசொலி மாறன் சொல்லியிருப்பது சிறப்பாக இல்லை. ஆனாலும், வியாபாரப் பத்திரிகை ஆசிரியர்களின் பேச்சுக்குக் கட்டுப்படாமலும், அந்தப் பத்திரிகைகளுக்கு செக்ஸ் தீனி போடாமலும், சுயமரியாதையோடு எழுதும் ஒரு சில எழுத்தாளர்கள் இன்றும் இருக்கிறார்கள் என்பது முரசொலி மாறன் அவர்களுக்கும் தெரியும். ஆலடி அருணாவும், டாக்டர் தயானந்தன் பிரான்ஸிஸும் பல்வேறு திராவிட இயக்கக் கதைகளை எழுதியவர்கள்.

## திராவிட இயக்கக் கவிஞர்கள்

நான் கல்லூரிக் காலத்தில் தேசியவாதியாக இருந்தபோது பல்வேறு தி.மு.க. வாசக சாலைகளில் நம்நாடு, முரசொலி, இனமுழக்கம், தென்றல், திராவிட நாடு போன்ற எண்ணற்ற இயக்கப் பத்திரிகைகளை பொறாமையோடும், பொச்சரிப்போடும் படித்தவன். கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன், கா. வேழவேந்தன், பொன்னிவளவன், மதியழகனைப் பற்றி அண்ணா எழுதிய கவிதை, அண்ணா இறந்தபோது கலைஞர் எழுதிய கவிதை, ஆகியவை எனக்கு மிகவும் பிடிக்கும். தேசிய எரிச்சலோடு இந்த திராவிடக் கவிதைகளை ரசிப்பேன். தென்றலில் கண்ணதாசன் ஈற்றடி கொடுத்து வெண்பா எழுத வைத்தது சிறப்புக்குரிய செயல். கவிஞர் செங்குட்டுவன் கவிக்கொண்டல் என்ற பத்திரிகையை இதே பாணியில்தான் இப்போது நடத்துகிறார். இவர்கள் அல்லாது திராவிட இயக்கத்தின் பிற கவிஞர்களான பாரதிதாசன், கண்ணதாசன், சுரதா, நா. காமராசன், சாலய்

இளந்திரையன், ஈரோடு தமிழன்பன், இன்குலாப், அப்துல் ரகுமான், பொன்னடியான், நிர்மலா சுரேஷ், வைரமுத்து, பொன்மணி வைரமுத்து, கனிமொழி ஆகியோரது கவிதைகள் இப்போதும் எனக்கு கற்கண்டு மாதிரி. கடிக்கும்போதே இனிப்பதுபோல் படிக்கும்போதே பரவசப்படுத்துபவை.

## மறுபதிப்பும்-மறுவாசிப்பும்

இத்தகைய பெருமைமிக்க திராவிட இயக்க படைப்புகள் அனைத்தையும் மறுவாசிப்பு செய்வதற்கு வசதியாக மறுபதிப்புகளாக வெளியிடவேண்டும். அன்று ஆடு,மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்களின் வாரிசுகள், இன்று என்னைப் போன்ற படைப்பாளி வாசகர்களாய் திகழ்வதால் திராவிட படைப்புகளுக்கு மிகச்சிறந்த வரவேற்பு கிடைக்கும்.

இந்தக் கட்டுரையை முடிக்கும் இந்த தருவாயில் தேசியவாதியான என்னுடன் பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு தோழமையோடு பழகிய முன்னாள் அமைச்சர்களான கே.ஏ. கிருஷ்ணசாமி, விசுவநாதன், வேழவேந்தன், முன்னாள் சட்டப்பேரவை துணைத்தலைவர் பெ. சீனிவாசன், இப்போதைய அமைச்சர்களான என் மேடைக்கு எதிர்மேடை போட்ட எஸ்.பி. சற்குணம், இன்னும் என்னுடன் வாஞ்சையுடன் நடந்து கொள்ளும் துரைமுருகன், அண்மையில் பழைமைகளை பகிர்ந்துகொண்ட வழக்கறிஞர் ஜின்னா, பேச்சுப்போட்டிகளில் கலந்து கொண்ட பிரபல பின்னணிப் பாடகி வாணி ஜெயராம், ஏழிசை வல்லி போன்றோரை நினைத்துப் பார்க்கிறேன். கட்சி வேறுபாட்டிலும் அப்போது கண்ணியம் காக்கப்பட்டது. மாணவர்களிடையே ஒரு சமூகப்பொறுப்பும் சகோதரத்துவமும் நிலவின.

வாசுகி - 1994.

# நான் கண்ட காமராசர்-அண்ணா-பெரியார்

அப்போது எனது கிராமத்தில் ஆறாவது வகுப்பு படித்துக் கொண்டு இருக்கிறேன். திடீரென்று ஒரு நாள் எனது ஆசிரியர் 'டேய் பசங்களா! இனி மேல் நீங்கள் காலையில் மட்டும் பள்ளிக்கூடம் வந்தால் போதும்-மத்தியானம் உங்க பெற்றோர் சொல்கிற வேலையை செய்யுங்கள்' என்று ஆணை இட்டார். எங்களுக்கு எதுவும் புரியவில்லை. ஆனால், அந்த ஏற்பாடு, அரசின் ஆணை வருவதற்கு முன்பே செய்யப் பட்டதாக இப்போது அறிகிறேன்.

ஆசிரியர் சொன்னபடியே காலையில் மட்டும் பள்ளிக்கூடம் வந்துவிட்டு, மத்தியானம் வயல் வேலை பார்க்கப் போனேன். அதில் எனக்கு நாட்டமில்லை. எனது தாத்தா அடேய் சமுத்திரம்! நீ வயல் வேலை நல்லா பார்க்கிற... இனிமேல் பள்ளிக்கூடம் போய் கிழிச்சது போதும். கூலிக்கு ஆள் போட்டுக் கட்டாது... விவசாய வேலையைப் பார்' என்றார்.

**பெருந்தலைவர் காமராசருடன் பயபக்தியோடு பேசினேன். பேரறிஞர் அண்ணாவை பட்டறிவு ஞானத்தால் வாஞ்சையோடு நினைக்கிறேன்.**

**தந்தை பெரியாரை பார்த்து கையெடுத்துக் கும்பிட்டேன். கண்ணீர் மல்க அழப்போனேன். இந்த முப்பெரும் தலைவர்களும், கூடவே கலைஞரும் என் நெஞ்சில் நிறைந்த நிருற்றுக்கள்.**

**கலைஞரைப் பற்றி, தனியாக ஒரு நூல் எழுதப்போவதால் இங்கே அவரைக் குறிப்பிட வில்லை.**

எனக்கு அழுகை வந்தது. அந்த வயதிலேயே சிறப்பாகப் படித்து முன்னேற வேண்டும் என்று என்னுள்ளே இருந்த கனவு, பாதியிலேயே பறிபோகிறதே என்று வெம்பி வேதனைப்பட்டேன்.

**காமராசர் முதல்வரானதால்...**

நல்லவேளையாக ஒருநாள் எங்கள் ஆசிரியர் வீட்டுக்கு வந்து, இனிமேல் மாணவர்கள் வழக்கம்போல் காலையிலும், மாலையிலும் பள்ளிக்கூடம் வரலாம் என்று தெரிவித்தார். பிறகுதான் எனக்கு மெல்லமெல்ல புரிந்தது. முதலமைச்சரான மூதறிஞர் இராஜாஜி கொண்டு வந்த கல்வித் திட்டத்தால், பள்ளிக் கூடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட என்னைப் போன்ற ஏழை மாணவர்கள், பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சரானதால் மீண்டும் மறு வாழ்வுப் பெற்றார்கள் என்பது புரியத் துவங்கியது. அதிலிருந்தே காமராசர், என் கல்விக் கண்களைத் திறந்த கடவுளாகத் தென்பட்டார்.

**இலுப்பம் பூவான நான்...**

எடுத்த எடுப்பிலேயே என் மனதைக் கவர்ந்த 'பெருந்தலைவரின் காங்கிரசு இயக்கத்தில் என்னை அறியாமலேயே ஒரு பற்று ஏற்பட்டது. மாணவர்களின் நிறுத்தப்பட்ட படிப்பை நீடிக்கச் செய்த அவரை 'படியாதவர்-பாமரர்' என்று பலர் கிண்டலும் கேலியும் செய்தபோது, எனக்கு அவரிடம் ஓர் அனுதாபம் ஏற்பட்டது.

கல்லூரிக் காலத்தில் காமராசரை ஆதரிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தேன். "இல்லாத **ஊருக்கு இலுப்பம் பூ** சர்க்கரை" என்பதுபோல், நான் அந்தக் கட்சியின் முக்கியப் பேச்சாளர்களில் ஒருவரானேன். காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டில், என்பேச்சை பல்லாயிரக்கணக்கான மக்கள் அடிக்கடி கைதட்டி வரவேற்றார்கள். அப்போது பெருந்தலைவர் என்னை உற்றுப்பார்த்து மனதுக்குள் குறித்துக் கொண்டார் என்று நினைக்கிறேன். அவர் பேசும்போது என் பேச்சை முன்னுதாரணமாக எடுத்துக்காட்டினார். எனக்கு மெய் சிலிர்த்தது. ஆனாலும் அவரிடம் பேசப் பயம். அவரது செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமையோ, மனமோ எனக்கு இல்லை என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது.

அடிக்கடி சத்தியமூர்த்தி பவனில் அவரைப்பார்க்கும் வாய்ப்பு பலமுறை கிட்டியதுண்டு. சிலரை, 'எடுத்தேன், கவிழ்த்தேன்'

என்று பேசுவார். பிறகு விசாரித்தால் சம்பந்தப்பட்ட அவர்கள் சரியான பெருச்சாளிகள் என்பது தெரியவரும். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், பெருந்தலைவரைப் போலவே சிலர் பேசி கெட்டபெயர் வாங்கிக் கொண்டதுண்டு. காரணம், தொண்டர்கள் பெரியவ்ர் ஒருவருக்குத்தான் அப்படிப் பேச உரிமை கொடுத்திருந்தார்கள். எனக்குப் பெருந்தலைவரிடம் பல தடவை பேச வாய்ப்புக் கிட்டியும், என்னால் பேச இயலவில்லை.

## சித்தப்பாவின் அப்பாவித்தனம்

ஒரு தடவை, சென்னையில் வண்ணைப்பகுதியில், என் சித்தப்பா வீட்டில் அவருக்கும் எனக்கும் ஒரு விவாதம். அவர்தான் என்னைப் படிக்க வைத்தார். பேச்சு வாக்கில், "ஆனானப்பட்ட காமராசரே உன்னை வரும்படி ஆள் அனுப்பினார். உன் படிப்பைக் கெடுக்க நானா சம்மதிப்பேன். சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பிவிட்டேன்' என்று கூறினார். அந்த காமராசர மாதிரி பெண்டாட்டி-பிள்ளை இல்லாம உன்னை அலையவிடுவேனா? நான் யாராக்கும்? என்றார் பாமரத்தனமாக. அதில் அப்பாவித்தனமான பாசம் ஒலித்தது. அப்போதுதான் எனக்குப் புரிந்தது. எனது அப்பாவி சித்தப்பா, நான், காமராசருக்குத் துணையாகி அரசியலில் சேர்ந்தால் என் படிப்புக் கெட்டுவிடும் என்றும், பிரம்மச்சாரியாகவே இருந்துவிடுவேன் என்றும் மனப்பூர்வமாக நம்பியிருக்கிறார். அதற்குப்பிறகு பெருந்தலைவரை சந்தித்து நிலைமையை எடுத்துக்கூறும் துணிச்சல் எனக்கு இல்லை.

## கேள்வியும்-காட்டமான பதிலும்

கல்லூரிப்படிப்பு முடிந்தபிறகு, சென்னைக்கு அருகே உள்ள செங்குன்றத்தில் உயர்நிலைப்பள்ளி ஆசிரியராக வேலை கிடைத்தது. அப்போது டெப்டிக் கலெக்டர் தேர்வுக்கு நான் படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று வேலையில் சேர்ந்த பத்து நாள்களுக்குள், ஈக்குவார்பாளையம் என்ற இடத்திற்கு என்னை மாற்றிவிட்டார்கள்.

இந்த மாற்றம், என் தேர்வை கெடுக்கக்கூடியது. அதோடு மாவட்ட உயர் அதிகாரி ஒருவரின் மகனுடைய வசதிக்காக, என்னை மாற்றியது எனக்கு அதிகப்படியாகத் தெரிந்தது. ஆகையால், நான் ஆவேசத்துடன் காமராசரின் இல்லத்திற்கு நேராகச் சென்றேன். அவரும் என்னை அடையாளம் கண்டவர்போல் தலையாட்டினார். எங்களுக்கிடையே இப்படிப் பட்ட பேச்சு நடந்தது.

'என் பேரு சமுத்திரங்க'

'தெரியும். என்ன சேதி?'

'நான் செங்குன்றத்தில ஆசிரியரா வேலை பார்க்கிறேன். என்னை அநியாயமா ஈக்குவார்பாளையத்துக்கு மாத்திட்டாங்க. நீங்க தான் அத கேன்சல் பண்ணிக் கொடுக்கணும்.'

'நீ மேல் அதிகாரிகளுக்கு வேலையிலே சேரதுக்கு முன்னால மனுப்போட்டியா?'

'போட்டேங்க'

'மேல் அதிகாரிகளோட உத்தரவுக்குக் கீழ்படிவேன்னு அந்த மனுவில எழுதினியா?'

'ஆமாங்க'

'மேல் அதிகாரி உத்தரவு போட்டிருக்கான். அவன் சொன்னபடி ஈக்குவார்பாளையத்துக்குப் போ'

'அப்படியெல்லாம் சொல்லக்கூடாதுங்க'

'நீயே எனக்கு உத்தரவு போடறயா? போ... போ... அவனவன் வேற எதுக்கலாமோ வருவான் நீ என்னடான்னா...'

நான், வெறுமையா வெளியே வந்தேன். அப்போது செய்தியைக் கேள்விப்பட்ட நெல்லை ஜெபமணி அவர்கள், பெருந்தலைவர் கடைசியாகச் சொன்ன சொல்லுக்கு வியாக்கியானம் கொடுத்தார். அதாவது நான் ஐ.ஏ.எஸ், டெப்டி கலெக்டர் ஆகிய பதவிகளுக்காக அவரை அணுக வேண்டும் என்றும், பதவி மாற்றம் போன்ற சில்லறைக் காரியங்களுக்குப் போகக்கூடாது என்றும் பெருந்தலைவர் கருதுவதாகக் கூறினார்.

செங்குன்றத்தில் நான் பள்ளிக்கு சென்றபோது. தலைமையாசிரியர் உட்பட ஒரு பெரிய கூட்டமே என்னை எதிர் பார்த்துக் காத்திருந்தது. என்னை ஈக்குவார் பாளையத்துக்கு மாற்றிய உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டதாம்.

### பயமான பக்தி

நான் பெருந்தலைவரை மானசீகமாக வணங்கினேன். அவருக்கு நேரில்போய் நன்றி செலுத்த வேண்டும் என்ற புத்தி எனக்கு இல்லை டெப்டிக் கலெக்டர் தேர்வில் தேறினாலும், செல்வாக்கால் மட்டுமே தேறக்கூடிய நேர்முகத் தேர்வில் பெருந்தலைவரை அணுகுவதற்கு எனக்கு துணிச்சலும் இல்லை. ஆகையால், புதுதில்லியில் வானொலி நிலையத்தில்

தமிழ் செய்திப் பிரிவில் துணை ஆசிரியராக இடறி விழுந்தேன் அப்போது செய்திகளையும் வாசித்துக் கொண்டு இருந்தேன் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன பெருந்தலைவர் காமராசர் விருதுநகரில் தோற்றுவிட்டார் என்ற ஒரு செய்தி. எனக்கு, அழுகையும், ஆத்திரமுமாக வந்தது. மத்தியானம் செய்தி படிப்பதற்காக ஸ்டூடியோவிற்குள் சென்ற நான், அப்போதுதான் கிடைத்த பெருந்தலைவரின் தோல்விச் செய்தியைப் படிக்கும்போது அழுது விட்டேன். இதைத் தமிழகம் முழுவதுமே கேட்டது. இப்போதுகூட என்னைப் பார்க்கும் பெரியவர்கள் நான் அப்படி அழுததை சுட்டிக் காட்டுகிறார்கள்.

**மறையா உருவம்**

பெரியவர் தோற்ற ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு நான் நாடாளுமன்ற வளாகத்தில் அவரை சந்தித்தேன். உடம்பு பழுத்துப் போய் இருந்தது. ஆனாலும், அந்தக் கண்களிலே ஒரு பிரகாசம். நான் என்னை அறிமுகம் செய்து கொள்ளப் போனபோது - ‘உன்னை எனக்குத் தெரியாதா சமுத்திரம்? நான் தோத்தத அழுதுகிட்டே படிச்சியே, கிறுக்கா... அப்படியா படிப்பது?’ என்றார். சிறிது நேரம் என்னையே பார்த்துவிட்டு, ‘செய்தி படிக்கும்போது நம்மோட உணர்ச்சிய காட்டக்கூடாது தெரியுமா?’ என்று நான் ஐநூறு பக்கங்களில் படித்ததை ஒரேவரியில் சொன்னார். மீண்டும் என்னை உற்றுப் பார்த்துவிட்டு, ‘போகட்டும். ‘இதுக்காக ஒனக்கு மெமோ கொடுத்தாங்களா?’ என்று வினவினார். ‘இல்லீங்கய்யா. திட்டுனாங்க.’ என்றேன்.

நான் பெருந்தலைவரை வைத்த கண் வைத்தபடியே பார்த்தேன். அப்போது என் கண் வழியாக மனதுக்குள் பதிந்த அவரது உருவம் இன்னும் அப்படியே நிற்கிறது.

மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட இலஞ்ச லாவண்யமற்ற அந்த மாபெரும் மனிதரைப் பற்றி, மக்கள் இப்போது பூழுமையாக உணருவதைக் கேட்கும்போது, **‘கற்பூரமே... உன் வாசனையை இப்போது அனைவரும் உணர ஆரம்பித்து விட்டனர்’** என்று சொல்லிக் கொள்கிறேன். அவர் பெருந்தலைவர் என்பதை அப்போது மட்டுமல்ல இப்போதும் நிரூபித்துக் கொண்டு இருக்கிறார்.

**காங்கிரஸ் பேச்சாளனாய்...**

1962-**ஆம்** ஆண்டில் நடந்த சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் காஞ்சீபுரம் லோக்கல் பேச்சாளர்களில் நான்தான்

நட்சத்திரப் பேச்சாளர். காங்கிரஸ் வேட்பாளர் நடேச முதலியாருக்கு ஆதரவாகவும், அண்ணாவிற்கு எதிராகவும் தினமும் இரண்டு, மூன்று கூட்டங்களில் பேசுவேன். காஞ்சீபுரம் கல்லூரிக்கு போகும்போதும், வரும்போதும் அவரை அவர் வீட்டுமாடியில் பார்ப்பேன். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திரண்டு நின்று 'வாழ்க' போடுவார்கள். அவர் இயல்பாகவே நிற்பார். எளிமையாகப் பார்ப்பார். அன்பின் உயிர்ச்சக்தி அனைத்தும் அவர் முகத்தில் நடனமிடும். மேடைகளில் நான் அவரை அண்ணாத்துரை என்றுதான் அழைப்பேன்.

**அண்ணாத்துரை அண்ணாவானது...**

ஒருதடவை காங்கிரஸ்காரர்கள் மூன்று கேள்விகளுக்கு பதில்சொல்ல முடியுமா? என்று அவர் ஒரு மேடையில் கேட்டார். வெள்ளைக்காரன் வைத்துவிட்டுப்போன ஸ்டெர்லிங் நிதியை என்ன செய்தீர்கள்? என்பது முதல் கேள்வி. சுதந்திரத்திற்குப் பிறகு விலைவாசி ஏன் கூடியது? என்பது இரண்டாவது கேள்வி. மூன்றாவது கேள்வி எனக்கு நினைவில்லை. அண்ணாவின் தெருவிலேயே ஒரு கூட்டம். அவர் மாடியில் நின்று உற்றுக் கவனிக்கிறார். நான் பொருளாதாரப்பாட மாணவன். பல புள்ளி விபரங்களோடும், வேடிக்கையாகவும் அவரது கேள்விகளுக்கு பதில் சொல்கிறேன்.

மறுநாள் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தி.மு.க பேச்சாளர்கள், அண்ணாவின் முன்னிலையில் என்னை கண்டபடி ஏசியிருக்கிறார்கள். இறுதியாகப் பேசிய அண்ணா, 'அந்த இளைஞர் நல்லவர், வல்லவர், சிறந்த பேச்சாளர். சேராத இடத்தில் சேர்ந்திருக்கிறார். என்னிடத்தில் இருந்தால், அவரை எங்கேயோ வைத்திருப்பேன். ஆகையால், அவரை திட்டாதீர்கள். அவருக்காக அனுதாபப்படுங்கள்' என்று நயம்பட உரைத்திருக்கிறார்.

எனக்கு இந்த செய்தி வந்ததும் கிட்டத்தட்ட நான் நெகிழ்ந்தேன். குற்ற உணர்வில் தவித்தேன். எவ்வளவு பெரிய மனிதர்! எவ்வளவு பெரிய உள்ளம்! ஆனாலும் நான் அவர் பக்கம் போகவில்லை. அதேசமயம் மேடைகளில் அண்ணாத்துரை என்று சொல்லாமல் அறிஞர் அண்ணா என்றே அழைத்தேன்.

கவிஞர் பூ கணேசன் குடும்பநல திட்ட துணை இயக்குநராக இருந்த என் நண்பர். அண்ணாவிற்கு வேண்டியவர். அவரைப்பற்றி சொல்லுக்கு சொல் சொல்லுவார். அண்ணாவின் முன்னிலையில் நாம் இருக்கும்போது நமக்கு எந்த கெட்ட

எண்ணங்களும் வராது. அவரைப்போலவே அந்தச் சமயத்திலாவது நாம் சிறியென சிந்திக்கமாட்டோம் என்பார். இத்தகைய அற்புத மேதையோடு உறவாட முடியாமல் போயிற்றே என்கிற வருத்தம் இன்னும் என் நெஞ்சில் முள்ளாய் குத்துகிறது.

**கல்லூரியிலிருந்து வெளியேற்றம்...**

1962-ஆம் ஆண்டு அநேகமாக நவம்பர் மாதம்... வட சென்னையிலுள்ள சர் தியாகராயா கல்லூரியில் பி.ஏ. இறுதியாண்டு படிக்கிறேன். எம்.ஜி.ஆர். அவர்களை அறக்கட்டளை தலைவராகக் கொண்ட அந்தக் கல்லூரியில், நூற்றுக்கு தொன்னூற்றொம்பது சதவீத மாணவர்கள் கழகக் கண்மணிகள். நானும், எனது மூத்த சக மாணவருமான ச. ராஜாவும் (முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தலைவர் ச. செந்தில்நாதனின் அண்ணன்), ஆகிய இருவர் மட்டுமே காங்கிரஸ் மாணவர்கள். தேசிய முழக்கம், ஐக்கிய இந்தியா ஆகிய பத்திரிகைகளில், நேருதாசன், பகத்சிங், கரிகாலன், தர்மலிங்கம், ராஜா, அடியேன் ஆகியோர் ஆசிரியர் குழு உறுப்பினர்கள். தி.மு.க.வை கடுமையாக விமர்சித்தவர்கள். அப்படியிருந்தும் தமிழ்ப்பற்றால் அனைத்து மாணவர்களும் என்னை **தமிழ் மாணவர் மன்றத் தலைவர் ஆக்கினார்கள். ராஜாவை சரித்திர மாணவர் சங்க தலைவர் ஆக்கினார்கள்.** அந்தச்சமயத்தில் தெலுங்கு தமிழ் மாணவர் கெடுபிடிப்போர் நிலவியது. ஆசிரியர்களும் இருபிரிவாய் செயல்பட்டார்கள். ராஜா படிப்பை முடித்துவிட்டு போய்விட்டார். இப்போதைய அட்டர்னி ஜெனரல் மாசிலாமணி, முன்னாள் மாநகராட்சி உறுப்பினர் பசுபதி தன்ராஜ், சடகோபன், காங்கிரஸ் செயலாளர் அஜீஸ், தெய்வசிகாமணி போன்ற காங்கிரஸ் மாணவர்கள் பக்கமும் இந்த பத்திரிகை தேசியவாதிகள் பக்கமும் ஒரே சமயத்தில் பழகியவன் நான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தியாகராய கல்லூரியின் தெலுங்கு நிர்வாகம் ஒரு மாணவரை பழிவாங்கியபோது, நானும், இதர தோழர்களும் போராட்டத்தில் ஈடுபட்டோம். இதில் பெல், ரங்கநாதன், சிறில் டேவிட், அடியேன் ஆகிய நால்வரும் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்டோம்.

**கல்வி காத்த பெரியார்**

சக மாணவர் ரங்கநாதனின் தந்தை பெரியாருக்கு வேண்டியவர். பெரியார் பட்டப்படிப்பு மட்டும் படித்த ஒருவர்

காஞ்சீபுரம் தியாகராய கல்லூரியில் முதல்வராய் நியமிக்கப்படவேண்டும் என்று காமராசருக்கு பரிந்துரைத்திருக்கிறார். பல்கலைக்கழக வரலாற்றிலேயே பெரியாரின் முயற்சியால் முதுகலைப்பட்டம் படிக்காத, அதேசமயம் திறமையுள்ள ஒருத்தர் முதல்வராக நியமிக்கப்பட்டது முதுகலைப்பட்ட ஆசிரியர்களுக்கு பிடிக்கவும் இல்லை. பிடிபடவும் இல்லை. தந்தை பெரியார் அந்த முதல்வரிடம் எங்கள் நால்வரையும் சேர்க்கவேண்டும் என்று பரிந்துரைத்திருக்கிறார். உடனே' அந்த முதல்வரும் எங்களை சேர்த்துக்கொண்டார். ஒரு கல்வியாண்டில் இரண்டு பருவங்கள் தாண்டி இறுதிப்பருவத்தில் மாணவர்களை அதுவும் வெளியேற்றப்பட்ட மாணவர்களை சேர்ப்பது என்பது மிகப்பெரிய காரியம். இதை எளிதாகச் செய்து எங்கள் கல்வியை காப்பாற்றியவர் தந்தை பெரியார்.

1966-ஆம் ஆண்டு டெல்லி வானொலி நிலையத்தில் வேலையில் சேர்ந்துவிட்டு, 1968-ஆம் ஆண்டு வாக்கில் சென்னைக்கு வருகிறேன். எனது மாணவர் காங்கிரஸ் தோழரும், அப்போதைய சட்டப்பேரவை உறுப்பினருமான தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த க.பா. பழனி அவர்கள் பெரியாருக்கு மிகவும் வேண்டியவர். அப்போது பெரியார் சென்னை பொது மருத்துவமனையில் நோய்வாய்ப்பட்டு அனுமதிக்கப்பட்ட வேளை.

**அய்யா... அய்யாவே...**

தோழர் பழனி என்னை கூட்டிக்கொண்டு பெரியாரிடம் சென்றார். கட்டிலில் படுத்திருக்கிறார் பெரியார். சோகமே உருவாக அருகே அமர்ந்திருக்கிறார் மணியம்மை அம்மையார். என்னைப் பெரியாரிடம் அறிமுகம் செய்ததும் நான், எப்படி அவர் எனது கல்லூரிப் படிப்பை காப்பாற்றினார் என்று ஒரே மூச்சாக விளக்கினேன். பின்னர், 'அய்யா! காங்கிரஸ் இளைஞன் என்கிற முறையில உங்க கருத்தை எதிர்த்து நான் பிரச்சாரம் செய்திருக்கிறேன். ஆனால், டெல்லிக்கு போனபிறகுதான் உங்க அருமை எனக்குத் தெரிஞ்சது. அதோட ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தை ரத்து செய்த காமராசர் ஒரு கருவி. அதை கையாண்டவர் தாங்கள் என்பதை அறிந்தேன்'

'அய்யா! நீங்களும் காமராசரும் இல்லையானால் நான் இந்நேரம் ஒரு விவசாயியாகி வரப்பு வெட்டுகிறவனை

வெட்டியோ அல்லது அவனால் வெட்டப்பட்டோ கொலையாளியாக அல்லது சிறைவாசியாக இருந்திருப்பேன். என்னை காப்பாற்றிய தெய்வமே!'

என்னால் தொடரமுடியவில்லை. அழுகை முந்துகிறது. அந்தத் தந்தையை கையெடுத்து கும்பிடுகிறேன். அவர் பதிலுக்கு என் கைகளை பிடித்துக்கொண்டு 'இந்த நன்றியே போதுங்கய்யா! போதுங்கய்யா!' என்று குரல் தழுதழுக்க பேசுகிறார். என்னையே பெருமிதமாகப் பார்க்கிறார். பிறகு, 'மன்னிச்சிடுங்கய்யா, உங்கள எழுந்திருச்சு என்னால வரவேற்க முடியல' என்று அழாக்குறையாக கெஞ்சுகிறார். எழுந்திருக்கவும் முயற்சிக்கிறார். தோழர் பழனி என்னை தள்ளிக்கொண்டே போகிறார். அப்போது அழுததுபோல் இந்தக் கட்டுரை எழுதும் இந்த சமயத்திலும் நான் அழுகிறேன்.

**தமிழ் இளைஞர் பண்பாட்டுக் கழகம் - 1988**

**பின்குறிப்பு:**

இந்த கட்டுரையில் பல பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

# சு. சமுத்திரத்தின் படைப்புச் சுருக்கம்

பல பல்கலைக் கழகங்களில், பாட நூல்களாக வைக்கப்படுகின்றன
முனைவர், எம்.பில். பட்டங்களுக்காக ஆய்வு செய்யப்படுகின்றன

## நாவல்கள்

1. **ஒரு கோட்டுக்கு வெளியே**

   பதினான்கு இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப் படுகிறது. பதினான்கு மொழிகளில் வானொலியில் ஒலிபரப்பானது. கிறிஸ்தவ இலக்கியச்சங்கம். 1977; மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992.

2. **இல்லந்தோறும் இதயங்கள்**

   (ஒரு தொழுநோய் பெண்ணின் போராட்டம்)
   மணிவாசகர் பதிப்பகம், 1982.
   கங்கை புத்தக நிலையம், 1997.

3. **சத்திய ஆவேசம்**

   (தனியார் கல்லூரி சீரழிவுகளையும், மாணவர் போராட்டத்தையும் சித்தரிக்கும் படைப்பு)
   மணிவாசகர் பதிப்பகம், 1987.

4. **நெருப்புத் தடயங்கள்**

   (சிறுமை கண்டு சீறும் ஒரு பெண்ணியப் போராட்டம்)
   மணிவாசகர் பதிப்பகம், 1983.
   கங்கை புத்தக நிலையம், 1998.

5. **வெளிச்சத்தை நோக்கி**

   (ஒரு மனநோய் இளைஞனைப் பற்றிய சமூகப் பார்வை)
   மணிவாசகர் பதிப்பகம், 1989.

6. **ஊருக்குள் ஒரு புரட்சி**

   (கிராமிய திட்டங்களின் செயல்பாட்டுச் சித்தரிப்பு)
   தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது.
   மணிவாசகர் பதிப்பகம், 1980-1992 (ஐந்து பதிப்புகள்)

7. **வளர்ப்பு மகள்**

   (சொந்தப் பெற்றோருக்கும், வளர்ப்பு பெற்றோருக்கும் இடையே அல்லாடும் ஒரு இளம் பெண்ணின் கதை)
   மணிவாசகர் பதிப்பகம், 1980-1987 (ஐந்து பதிப்புகள்)
   தொலைக்காட்சியில் நாடகமாக ஒளிபரப்பப்பட்டது

8. நிழல் முகங்கள்

(இரயில்வே தொழிலாளர்கள் ரயிலிலேயே தத்தெடுத்து வளர்க்கும் ஒரு ஊமைச் சிறுவனைப் பற்றிய சித்தரிப்பு)
**தமிழ்ப் புத்தகாலயம், 1991.**

. சாமியாடிகள்

(கிராமங்களில் ஏற்படும் ஆடியோ-வீடியோ தாக்கங்கள்)
**மீனாட்சி புத்தக நிலையம் மதுரை, 1991.**

10. தாழம்பூ

(சாராயத் தொழிலில் இருந்து விடுபடும் ஒரு சேரிப் பெண்ணின். சிக்கல்கள் - சென்னை வானொலி ஒலிபரப்பு)
**மணிவாசகர் பதிப்பகம், 1992.**

11. மூட்டம்

(அயோத்தி மசூதி தகர்ப்பை அடுத்து ஒரு இஸ்லாமிய கிராம மக்கள் சந்தித்த இடர்பாடுகள்-சென்ற ஆண்டு, சென்னையில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் விடியல் கலைக் குழுவினரால் நாடகமாய் நடந்தது)
**அன்னம் வெளியீடு, 1994; ஏகலைவன், 1996.**

12. அவளுக்காக

(திரைப்பட தயாரிப்பு என்ற பெயரில் சீரழிந்த ஒருவனின் கதை)
**வானதி பதிப்பகம், 1992.**

13. வாடாமல்லி

(அலிகளைப் பற்றிய மனிதநேயச் சித்தரிப்பு - ஆதித்தனார் இலக்கியப் பரிசு பெற்ற படைப்பு)
**வானதி பதிப்பகம், 1994–1996.**

14. பாலைப்புறா

(ஒரு அப்பாவி எய்ட்ஸ் நோயாளிப் பெண்ணின் போராட்டக் கதை). சென்னை வானொலி நிலைய வாசிப்பு. **ஏகலைவன் பதிப்பகம், 1998.**

## குறுநாவல்கள்

1. புதிய திரிபுரங்கள் கேள்வித் தீ)

(ஒரு ஆன்மீகவாதி போராளியாவதையும், பள்ளிக்கூட நிர்வாகச் சீரழிவுகளையும் சித்ரிப்பவை.
**மணிவாசகர் பதிப்பகம், 1982.**
**கங்கை புத்தக நிலையம், 1997.**

2. சோற்றுப் பட்டாளம்
(+உயரத்தின் தாழ்வுகள்+காமனை அறிந்த ஈசன்)

(ஒரு கிழவருக்கு நிச்சயித்த இளம்பெண்ணின் போராட்டம். மலைமக்களின் போராட்டம், பாதுகாப்பின்மையை பாலியலாக கருதும் ஒரு பெண்ணின் மனச்சிக்கல் - சோற்றுப்பட்டாளம் சென்னை தொலைக்காட்சியில் முதன்முதலாக எடுக்கப்பட்ட முழு நீள நாடகம். கிறிஸ்தவ இலக்கியச்சங்கம், 1977.
மணிவாசகர் பதிப்பகம், 1982.
கங்கை புத்தக நிலையம், 1997.

3. வேரில் பழுத்த பலா (+ ஒரு நாள் போதுமா)

(அரசு அலுவலக சாதியங்கள், கட்டிடத் தொழிலாளர்களின் போராட்டம் சென்னை தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.)
சாகித்ய அகாதமி விருது பெற்றது
மணிவாசகர் பதிப்பகம், 1989-1994.

4. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டால் (+ பிற்பகல்)

(சத்தியம் ஒரு கேடயம் என்பதையும், முற்பகல் ஆக்கிரமிப்பு பிற்பகல் இன்னல்களாகும் என்பதையும் விளக்குபவை.
வானதி பதிப்பகம், 1982.

## சிறுகதைத் தொகுப்புகள்

1. குற்றம் பார்க்கில்

தமிழக அரசின் முதற்பரிசு
மணிவாசகர் பதிப்பகம், 1992.

2. காகித உறவு

மணிவாசகர் பதிப்பகம், 1979-1982.

3. ஒரு சத்தியத்தின் அழுகை

மணிவாசகர் பதிப்பகம், 1979-1985.

4. உறவுக்கு அப்பால்

மணிவாசகம் பதிப்பகம், 1979.

5. மானுடத்தின் நாணயங்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1982-1989.

6. பிணம் தின்னும் சாஸ்திரங்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1987.

7. சமுத்திரம் கதைகள்

மணிவாசகர் பதிப்பகம், 1983.

8. ஏவாத கணைகள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1990-1998.

9. மண்சுமை

தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது
மணிவாசகர் பதிப்பகம், 1991.

10. யானைப் பூச்சிகள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994.

11. காலில் விழுந்த கவிதைகள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994.

12. மனம் கொத்தி மனிதர்கள்

வானதி பதிப்பகம், 1992.

13. இன்னொரு உரிமை

வானதி பதிப்பகம், 1992.

14. பூநாகம்

வானதி பதிப்பகம், 1992.

15. பொய்யாய் புதுக்கனவாய்

கங்கை புத்தக நிலையம், 1997.

16. ஒரு மாமரமும், மரங்கொத்திப் பறவைகளும்

ஏகலைவன் பதிப்பகம், 1996.

17. கோரைப்புற்கள்

18. ஈச்சம்பாய்,

19. சிக்கிமுக்கிக் கற்கள்

20. ஆகாயமும் பூமியுமாய்....

(சு. சமுத்திரத்தின் வழக்கத்திற்கு மாறான வேறுபட்ட தளத்தில் - ஆன்மீக முற்போக்கு சிறுகதைகள்)
ஏகலைவன் பதிப்பகம், 1998-1999.

## கட்டுரைத் தொகுப்பு

1. எனது கதைகளின் கதைகள்,

(ஆசிரியரின் படைப்பிலக்கிய அனுபவப் பின்னணி) ஒவ்வொரு சிறுகதைக்கும், ஒவ்வொரு நாவலுக்கும் பின்தளமாக இருந்த அனுபவங்களை சுவையாகக் கூறும் கட்டுரைத் தொகுப்பு. குறிப்பாக இளம் படைப்பாளிகளுக்கு வழிகாட்டும் நூல்)
ஏகலைவன் பதிப்பகம், 1996.

2. சமுத்திரம் கட்டுரைகள்

(பல்வேறு கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் படைப்பு)
ஏகலைவன் பதிப்பகம், 1999.

## நாடக நூல்

1. லியோ டால்ஸ்டாய்

(இலக்கிய மாமேதை லியோ டால்ஸ்டாய்யின் எண்பத்தொன்பது வயது இறுதிக்கால வாழ்வை அவரது மனைவியான சோன்யாவிற்கும் நீதி வழங்கி, உள்ளது உள்ளபடியாய் வரலாற்று சாட்சியங்களோடு எழுதப்பட்ட நாடக நூல். இது, அப்போதைய சோவியத் கலாச்சார மையத்திலும், கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்திலும், கலைமாமணி பி.ஏ. கிருஷ்ணன் அவர்களின் குழுவினரால் நாடகமாக நடிக்கப்பட்டது.)
கிறிஸ்தவ இலக்கியச்சங்கம், 1979.
மணிவாசகர் பதிப்பகம், 1987.

## சு. சமுத்திரம் படைப்புகள் - ஆய்வு நூல்கள்:

1. சு. சமுத்திரத்தின் சிறுகதை இயக்கம் - முனைவர் நளினிதேவி. (பெரும்பாலான சிறுகதைகளின் ஆய்வு)
ஏகலைவன் பதிப்பகம், 1998.

2. சு. சமுத்திரம் படைப்புகளில் பெண்ணியம் - முனைவர் ச. தியாகமணியின் ஆய்வு நூல்.
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1993.



அதிகச் சுவையும், ஆழமும் கொண்டவை சு. சமுத்திரத்தின் படைப்பிலக்கியங்களா? அல்லது கட்டுரைகளா? என்று ஒரு பட்டிமண்டபமே நடத்தலாம். அந்த அளவிற்கு, இவரது கட்டுரைகளும் உன்னிப்பாக கவனிக்கப்படுகின்றன. தினமலர், தினத்தந்தி, ஆனந்தவிகடன், குங்குமம், கல்கி, குமுதம், நவசக்தி ஆகிய பிரபல பத்திரிகைகளிலும், செம்மலர் உள்ளிட்ட இலக்கியப் பத்திரிகைகளிலும், இவரது கட்டுரைகள் எடுத்தாளப்படுகின்றன.

**1941**-ஆம் ஆண்டு டிசம்பர் **15**-ஆம் தேதியன்று பிறந்து பெற்றோர் அற்ற பிள்ளையாய் பாட்டன், பாட்டி, வளர்த்தம்மா, தாய்மாமா, அத்தை ஆகியோரின் கிராமிய அரவணைப்பிலும், சித்தப்பா, சித்தி ஆகியோரின் நகரிய சேரி அரவணைப்பிலும், பட்டப்படிப்பை முடித்த இவர், பள்ளி ஆசிரியராகவும், கூட்டுறவுத் துறை மூத்த ஆய்வாளராகவும், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியாகவும், பின்னர் மத்திய அரசில் தொலைக்காட்சி-வானொலி செய்தி ஆசிரியர், களவிளம்பரத் துறையின் இணை இயக்குநர் ஆகிய பல்வேறு முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவர். பல தமிழ்ச் சிந்தனையாளர்களைக் கொண்ட 'வள்ளலார் மக்கள் நேயப் பேரவை"யை நிறுவியர்.

பல்வேறு இலக்கிய பரிசுகளைப் பெற்ற இவர், இதுவரை ஏராளமான படைப்புகளை உருவாக்கியிருக்கிறார். தமிழகத்தில் பெரும்பான்மையாக உள்ள வாய்மூடி மக்களின் மனச்சாட்சியாக எழுதியும், பேசியும், அதற்கேற்றபடி வாழ்ந்தும் வருகிறவர்.

- ஏகலைவன்